
பெருநாள்
பரிசு
ஜமீலா
கலைமகள் வெளியீடு
மணியம்

## அறிஞரின் பாராட்டு

"ஒவ்வொரு கதையும் மனித உள்ளத்துச் சிறந்த உணர்வு ஒவ்வொன்றை அடிப்படையாகக் கொண்டது. அந்த அந்த உள்ளமே போற்றி உணரத் தக்கது. மனிதரின் வாழ்வும் தொழிலும் வேறுபடலாம்; சமயமும் சாத்திரமும் வேறுபடலாம்; பழக்க வழக்கங்கள் வேறுபடலாம்; மொழியும் நடையும் வேறுபடலாம்; ஆயினும் உள்ளமும் அது உணரும் உணர்வும் வேறுபடுவதில்லை என்பதை இந்தக் கதைத்தொகுதி தெளிவாக்குகிறது. இந்தக் கதைகளில் வரும் முதன்மையான மாந்தர் எல்லாரும் இஸ்லாமிய மதத்தைச் சார்ந்த தமிழர் ஆதலின் அவர்களின் பழக்க வழக்கம், சமயம், சடங்கு முதலியன வேறுபடுதல் இயற்கை. ஆயினும் மதமும் சடங்கும் கடந்து மனித உள்ளம் இவற்றில் தெளிவாகப் புலனுகின்றது" என்று தமிழறிஞர் டாக்டர் மு. வரதராசனுர் 'ஜமீலா' வின் சிறுகதைகளைப் பாராட்டுகிருர்.

"வஞ்சகர்களையும் கொலையாளிகளையும் முரடர்களையும் காட்டி அவர்களின் உள்ளங்களிலும் அன்பும் தியாகமும் நேர்மையும் ஒளிவீசச் செய்துள்ளார்" என்று டாக்டர் மு. வ. சொல்வது முற்றும் உண்மை என்பது இந்தத் தொகுதியைப் படித்துப் பார்த்தால் விளங்கும்.

~~140~~ A/253

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
தி. க. சண்முகம் நூலகம்.

# பெருநாள் பரிசு

ACL-MKU
00750

12. 4. 1960

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
அவ்வை
தி.க. சண்முகம் நூலகம்.
தமிழியல் துறை.



'முத்தமிழ்க் கலா வித்துவரத்தினம்'

அமரர் அவ்வை சண்முகம் அவர்கள் நினைவாக

மதுரை காமராஜ் பல்கலைக் கழகத்துக்கு

அன்புடன் அளிக்கப்பட்டது.

**27-1-1979**

அவ்வை தி.க. சண்முகம் நூலகம்.
நூல் வரிசை எண்: 715
நன்கொடை எண்: 715

# பெருநாள் பரிசு

ஜமீலா

மதுரை காமராசர் பல்கலைக்கழக
அவ்வை
தி.க. சண்முகம் நூலகம்
தமிழ்த்துறை

கலைமகள் காரியாலயம்
மயிலாப்பூர் :: சென்னை-4

முதற் பதிப்பு — டிசம்பர் 1957

உரிமை பதிவு

விலை ரூ. 2—8—0

நவபாரத் பிரஸ், சென்னை-2

# சமர்ப்பணம்

'கலைமகளி'ன் வளர்ப்புப் பிள்ளைகளில் ஒருவராகச் சிறுகதை உலகில் பிரவேசித்த நன்னாளன்று அன்பும் ஆசிகளும் சொரிந்து அடியேனை வாழ்த்திய, தமிழ்த் தாயின் அருந்தவப் புதல்வரும் கவிஞரும் எழுத்தாளரும் பேராசிரியருமான **ஸ்ரீ கி. வா. ஜகந்நாதையர்** அவர்களுக்கு, இந்தச் சிறுகதைத் தொகுதியைத் தாழ்ந்த வணக்கத்துடன் நான் சமர்ப்பிக்கின்றேன்.

**ஜமீலா**

அவ்வை
சண்முகம் நூலகம்.

# கருத்துரை

மகன், மனைவியின் காதலால் கட்டுண்டு தாயையும் தங்கையையும் வெறுத்தபோதிலும், தாயின் பாசம் குறையுமா? அத்தகைய தாயின் தூய்மையான அன்பை விளக்கும் நல்ல சொல்லோவியம் '**பெருநாள் பரிசு**' என்னும் சிறு கதை.

'**பல்கீஸின் பதற்றம்**' இஸ்லாமியருள்ளும் பிறப்பால் அமைந்த சில பிரிவினைகள் காதலைத் தடுத்திடும் கொடுமைகளைக் காட்டுகிறது. ஆனால் இந்தக் கதையில் 'பதற்றம்' தோன்றிய போதிலும், கொடுமை இல்லாமற் போகிறது.

'**பயணச் சீட்டு**' அருமையான கதை. ''இனிமேல் இந்தப் போக்கிரி உனக்குத் துரோகியாக மாறமாட்டான்'' என்று ஒருவன் சொல்லும் சொல், போக்கிரியின் சொல் லாக இல்லை. கொலைவாள் ஏந்திய போக்கிரி, வாழ்வி லிருந்து திடீரென்று பண்பாட்டின் எல்லைக்கு உயர்ந்த ஒரு தியாகியின் உள்ளத்தை அடைந்ததை அந்தச் சொல்லில் காண்கிறோம். அவனையும் அவனை நம்பிய பர்மியப் பெண்ணையும் நெஞ்சம் வாழ்த்துகிறது.

'**காதலும் போட்டியும்**' என்னும் சிறுகதை, அதன் ஆசிரியர் 'ஜமீலா'வின் பரந்த உலக அநுபவத்திற்கு ஒரு

நற்சான்று. குத்துச்சண்டையைக் கலக்கச் சூழ்ச்சி செய்த தந்திரத்தை வாழ்த்துகிறோம். ஏன் எனில், அந்தச் சூழ்ச்சி ஒரு பெண்ணின் உயிரையும் உள்ளத்தையும் காப்பாற்றிய உதவியாக முடிகிறது.

**'இரங்கிய உள்ளம்'**, ஏழையின் நெடுங்காலக் கனவைப் பாழாக்கும் எல்லைக்குச் செல்கிறது. அவனுடைய கிச்சிலி வண்ண ஷேர்வானி சேறுபடிந்த போதிலும், அவனுடைய நெஞ்சம் மணம் மிக்க சந்தனக் குழம்பில் திளைக்கும் பேறு பெறுகின்றது எனலாம்.

வஞ்சத்தில் ஊறிய மனமும் கொலைவாள் ஏந்திய கையும் சமய உணர்வாலும் தொழுகையாலும் எப்படி மாறிவிட்டன! **'பாச்சாவின் வஞ்சம்'** என்ன ஆனது? அந்தக் 'கொடிய பாச்சா' ஊரைவிட்டு ஓடிப் போய் இருபது ஆண்டுகள் ஆனபிறகும் நம்முடைய நெஞ்சம் அவனை நினைந்து உருகுகின்றதே!

**'மனப் புயல்'** எதிர்பார்ப்பதற்கு மாருக முடிவுறுகிறது. விரும்பாத நோயாளிக் கணவனோடு வாழவேண்டியவள் ஆனாள் காத்தூன். விரும்பிய காதலனோ கள்ளனாய்த் திரிகிறான். ஒருநாள் திருப்பத்திற்கு வாய்ப்புக் கிடைக்கிறது. அவள் கள்ளனோடு ஓடிப் போவதைக் கண்டு இயற்கை நாணுகிறது, எள்ளுகிறது, வெறுக்கிறது; இறுதியில் கள்ளனை அழித்து அவளைக் காப்பாற்றிவிடுகிறது.

வரதட்சிணைக் கொடுமையை எதிர்த்து எழுந்த சொல்லோவியம் **'அடிமை'**. கொடுக்கும் பணத்துக்காக மருமகனாக வருபவனை 'அடிமை' என்று எள்ளுகின்றது உண்மை உணர்ந்த மாமனாரின் மனம்!

'**நஷ்டத்தின் ரகசியம்**' என்ற கதையைப் படிக்கும் போது, 'அத்தகைய பெரிய மனிதர்கள் பலர் தோன்ற உலகத்தில் இடம் இருக்கிறது; ஆனால் அவர்கள் அவ்வாறு உயர்வு அடையாமல், சாதாரண மனிதர் களாகவே செத்து மறைகிறார்களே!' என்று உள்ளம் வருந்துகிறது. ராவுத்தரின் உள்ளத்தில் கள்ளத்தனம் இருந்தது போலவே, பெருந்தன்மையும் இருந்ததால்தான் அவர் வீண் பெருமையை உதறிவிட்டு மன அமைதியை நாட முனைந்தார்.

நன்றியுணர்ச்சியின் காரணமாகத் தன் காதலைத் துறக்கும் மனம் ஒரு பெண்ணுக்கு வருமா? வேறொரு பெண்ணை மணந்துகொள்ளுமாறு காதலனுக்கு அறிவு புகட்டி இடித்துரைத்து அனுப்ப மனம் வருமா? '**ஜைனப்பீ**'க்கு அந்த மனம் வந்தது வியப்புத்தான்! காதல் தோற்க, நன்றியுணர்ச்சி வென்றது!

'**அழாத கண்**'களில் காணும் கிழவன் கல்மனம் உடையவன். அந்தக் கல்மனமும் நைந்திடச் செய்தது ஒரு பெண்ணுள்ளம். "நூற்றுக்கணக்கான சவங்களைப் புதைத்த அவனுக்கு அப்பொழுதுதான் மரணத்தின் கொடூரம் புலனாயிற்று." அந்த அப்பொழுது எது என நினைத்தால் நெஞ்சம் உருகுகிறது. அவன் இறுதிக் கடமையைச் செய்யத் துணிந்த துணிவுக்கு ஒரு தனிச் சான்றாய் இருந்த இடுகாட்டின் வருணனையும் ஆசிரியர் ஆங்காங்கே கையாளும் உவமைகளும் பல உண்மை களை எடுத்தோதுகின்றன.

"கணவனை இழந்த உன்போன்ற இளம்பெண் மறு விவாகம் செய்துகொள்வது ஓர் உத்தமமான காரிய

மாகும். நீ இஸ்லாத்தில் பிறந்தவள் என்பதை ஞாபகம் வை" என்று பழைய காதலன் அந்த விதவைப் பெண்ணுக்கு எடுத்துச் சொல்லி மனத்தை மாற்ற முயல்கிறன். ஆனால் உள்ளத்தின் ஆழ்ந்த கற்புணர்ச்சி மறுமணத்தை விரும்பாத துணிவைத் தந்துவிட்டது 'நஜ்மா'வுக்கு.

**'தமையன் அளித்த காணிக்கை'** அருமையான கதை. பரிசுப்பொருள் தன் விலை மதிப்பை அறிவுறுத்தவில்லை; அன்பின் மதிப்பையே காட்டுகிறது தங்கைக்கு! இறுதி வரையில் ஆவலைத் தூண்டிச் செல்லும் திறன் இந்தக் கதையில் நன்கு அமைந்துள்ளது.

**'வெள்ளிக்கிழமை'**யில் காணும் துறவி ஊரெல்லாம் போற்றும் பெறுமை பெற்றவர். ஆனால் இளமைத் துடுக்கால் அவர் செய்த குற்றங்கள் யாருக்குத் தெரியும்? அவரும் மறந்திருந்தார்! ஆனால் அலமந்து உருகும்படியான நெருக்கடி ஒன்று ஏற்பட்டுவிட்டது!

நல்ல சில உணர்வுகள்; அவை வாழ்வில் இயைந்துள்ள இயைபுகள்; அவற்றிற்கு அமைந்த தெளிவான கலைவடிவங்கள்; இவ்வாறு இயன்ற சிறுகதைகளின் தொகுப்புத்தான் இந்த நூல்.

ஒவ்வொரு கதையும் மனித உள்ளத்துச் சிறந்த உணர்வு ஒவ்வொன்றை அடிப்படையாகக் கொண்டது. அந்த அந்த உள்ளமே போற்றி உணரத் தக்கது. மனிதரின் வாழ்வும் தொழிலும் வேறுபடலாம்; சமயமும் சாத்திரமும் வேறுபடலாம்; பழக்கவழக்கங்கள் வேறுபடலாம்; மொழியும் நடையும் வேறுபடலாம்; ஆயினும், உள்ளமும்

அது உணரும் உணர்வும் வேறுபடுவதில்லை என்பதை இந்தக் கதைத் தொகுதி தெளிவாக்குகிறது. இக்கதைகளில் வரும் முதன்மையான மாந்தர் எல்லாரும் இஸ்லாமிய மதத்தைச் சார்ந்த தமிழர். ஆதலின், அவர்களின் பழக்கவழக்கம் முதலியன வேறுபடுதல் இயற்கை.சமயம், சடங்கு முதலிய துறைகளில் கையாளும் சொற்களும் வேறுபடுகின்றன. நிக்காஹ், துனியா, மவுத், லடாய், ஜுஹ்ரும் முதலிய சொற்கள் கதைமாந்தரின் வாயில் பயின்று வழங்குகின்றன. ஆயினும் மதமும் சடங்கும் சொல்லும் கடந்து மனித உள்ளம் தெளிவாகப் புலனாகின்றது.

இவற்றின் ஆசிரியர் 'ஜமீலா', பல்வேறு உணர்வுகளை நன்கு புலப்படுத்தியுள்ளார். இவ்வகையில் இவர் பெற்ற வெற்றி பாராட்டுக்கு உரியதாகும். வஞ்சகர்களையும் கொலையாளிகளையும் முரடர்களையும் காட்டி அவர்களின் உள்ளங்களிலும் அன்பும் தியாகமும் நேர்மையும் ஒளிவீசச் செய்துள்ளார். மனச்சான்று 'பிறைக்கொடி' நாட்டி விளங்கும் கதைகள் இவருடைய படைப்புக்கள். இவற்றில் பல முன்னமே பத்திரிகையுலகத்தில் பரிசுகள் பெற்று உலவின என்பது மகிழ்தற்குரியதாகும். வெல்க 'ஜமீலா'வின் கலைத்தொண்டு.

அமைந்த கரை,<br>
சென்னை 30,<br>
22-10-'57.

**மு. வரதராசன்.**

# முகவுரை

'யாதும் ஊரே, யாவரும் கேளிர்' என்ற அருமையான பண்பாட்டைக் கொண்ட நம் பைந்தமிழ் நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் வாழும் இஸ்லாமிய சமயத்தைச் சார்ந்த மாந்தரின் வாழ்க்கையில் நிகழும் நிகழ்ச்சிகளைச் சித்திரிக்கும் சிறுகதைகளின் தொகுதிதான் இந்த நூலாகும்.

'பயணச் சீட்டு', 'மனப்புயல்', 'அழாத கண்கள்' ('ஒருமித்த மனம்' என்ற தலைப்புடன் இதழில் வந்தது) என்ற கதைகள் 'கலைமகளில்' காட்சியளித்தவையாகும்.

'பெருநாள் பரிசு', 'பல்கீஸின் பதற்றம்', 'பாச்சாவின் வஞ்சம்', 'ஜைனப்பீ அளித்த தீர்ப்பு' ஆகிய இவைகள் 'ஆனந்த விகடனில்' தோற்றமளித்தன.

'இரங்கிய உள்ளம்' — 'கல்கி'யில் 'பிறைக் கொடி' நாட்டிற்று.

'காதலும் போட்டியும்', 'நஷ்டத்தின் ரகஸியம்' — 'சுதேசமித்திரனி'ல் நடமாடின.

'அடிமை' — இஸ்லாமிய மாத சஞ்சிகையான 'மணி விளக்கு' இதழில் சுடர் விட்டது.

**'நஜ்மா நாடிய பாதை'** — 1956-ஆம் ஆண்டு 'கலைமகள்' தீபாவளி மலரில் மணம் பெற்றது.

**'தமையன் அளித்த காணிக்கை'** — 'கல்கி'யில் மாதச் சிறுகதைப் போட்டியில் முதற் பரிசு ஒன்றைக் காணிக்கையாகப் பெற்றது. **'வெள்ளிக்கிழமை'** 'கலைமகள்' கிழமைப் போட்டியில் முதல் பரிசு ஒன்றைப் பெற்று 'நகாரா' முழக்கியது.

இந்தச் சிறுகதைத் தொகுதிக்குச் சிறப்பான கருத்துரையை மனமுவந்து வழங்கிய அறிஞர் **டாக்டர் மு. வரதராசனார்,** M.A., M.O.L., Ph.D. அவர்களுக்கு என் தாழ்ந்த நன்றி.

தமக்கே உரித்தான எழில் தவழும் வகையில் பிரசுரித்து இந்த நூலை வெளியிட்ட தமிழ் நாட்டுத் தலை சிறந்த பிரசுரகர்த்தர்களான கலைமகள் காரியாலயத்தாருக்கு என் மனமார்ந்த நன்றி உரித்தாகும்.

24, நாலாவது மெயின் ரோட்,<br>
ராஜா அண்ணாமலைபுரம்,<br>
**சென்னை—28.**<br>
29-11-1957

**ஜமீலா**

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
அவ்வை
தி.க. சண்முகம் நூலகம்.
தமிழியல் துறை.

# பொருளடக்கம்

| | பக்கம் |
|---|---|
| பெருநாள் பரிசு ... ... | 1 |
| பல்கீஸின் பதற்றம் ... ... | 7 |
| பயணச் சீட்டு ... ... | 23 |
| காதலும் போட்டியும் ... ... | 37 |
| இரங்கிய உள்ளம் ... ... | 52 |
| பாச்சாவின் வஞ்சம் ... ... | 61 |
| மனப் புயல் ... ... | 73 |
| அடிமை ... ... | 83 |
| நஷ்டத்தின் ரகஸியம் ... ... | 90 |
| ஜைனப்பீ அளித்த தீர்ப்பு! ... ... | 98 |
| அழாத கண்கள் ... ... | 113 |
| நஜ்மா நாடிய பாதை ... ... | 129 |
| தமையன் அளித்த காணிக்கை ... | 143 |
| வெள்ளிக் கிழமை ... ... | 156 |

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
அவ்வை
தி.க. சண்முகம் நூலகம்.
தமிழியல்துறை

# பெருநாள் பரிசு

அகலமான ஜரிகை பார்டர் போட்ட சிவப்பு நிற மதுரைச் 'சிந்தோடி' தாவணியைத் தன் துணைவிக்குப் பொறுக்கி யெடுத்தபோது அப்துல் காதரின் முகமெல்லாம் மலர்ந்தது.

அதற்காக அறுபது ரூபாயை அலட்சியமாக வீசி எறிந்துவிட்டு, அதன் சரிபாதி விலையில் ஜிமிக்கி போட்ட நாகூர்ப் புடைவையைத் தன் தங்கைக்காக அவன் பேரம் செய்தபோது அவன் முகம் ஏனோ சுளித்து விட்டது! மீதியிருந்த பணத்தில் தன்னைப் பெற்றெடுத்தவள் என்ற தோஷத்தின் காரணமாக ஒரு சாதாரண 'வாயில்' புடைவையைத் தன் தாய்க்காக மிக்க அலுப்புடன் வாங்கிக் கொண்டான். இந்த மூன்று பொருள்களையும் ஒரே மூட்டையாகக் கட்டிக்கொண்டு பல்லாவரம் போகும் பஸ்ஸில் ஏறிக்கொண்டான். காலியாக இருந்த பக்கத்து 'ஸீட்'டில் மூட்டையை வைத்துவிட்டு, நெற்றி வியர்வையை விரலினால் சுண்டிவிட்டான், பஸ் புறப்பட்டது. அப்துல் காதரின் சிந்தனை வேலை செய்யத் தொடங்கியது.

ரம்ஜான் 'குத்பா' பெருநாள் துரிதமாக வந்துகொண்டிருந்த சமயத்தில் அப்துல் காதர் அவதிப்பட்டது அசாதாரண விஷயமல்ல. என். ஜி. ஓ. பரம்பரையைச் சார்ந்த அவன், சொற்ப சம்பளத்தில் வீட்டை ஒருவாறு சமாளித்து வந்ததே ஆச்சரியத்திலும் ஆச்சரியமாகும்! மதினா ஹோட்டல் 'நாஸ்தா'வையோ காக்கா கடை 'கரம் சாயா'வையோ அவன் ஒரு முதல் தேதியாவது அநுபவித்ததை யாரும் பார்த்தது கிடையாது.

ஜுபைதா அவனுக்குப்'பீவீ'யாக வந்த பிறகு அவன் நிலைமை மோசமாகிவிட்டது. தாயையும், மணமாகாத தங்கையையும் ஆதரித்து வந்த வேளையில், 'நிக்காஹ்' செய்துகொண்டதன் விளைவாக மூன்ருவது நபரையும் சமாளிக்கும் பொறுப்பு அவன் தலையில் சுமையாக விழுந்தது. நாளடைவில் வீட்டில் நிலவிய சூழ்நிலை அடியோடு மாறத் தொடங்கியது. செலவுகள் மலைபோல் குவிந்தன. எதற்கு எடுத்தாலும் காரணமின்றிச் சள்சள்ளென்று அப்துல் காதர் வீழ்வது சகஜமாகி விட்டது. அவன் குணத்திலும் வடு ஏற்பட்டதைத் தாயும் மகளும் தெரிந்து கொண்டார்கள். 'பெண்சாதிப் பித்தத்தின் விளைவு' என்று முதலில் நினைத்த அவர்கள் நாளடைவில் 'காலத்தின் கோலம் எம் மொகய்யத்தினே!' என்ற பாடலின் அடியை நினைவில் கொண்டு பொறுமையுடன் காலத்தைக் கழிக்கலானுர்கள்.

பெருநாள் செலவிற்காக அலைந்தபோது எதிர்பாராத இடங்களில் அப்துல் காதருக்குக் கடனுகப் பணம் கிடைத்து விட்டது. அந்தத் தொகை முழுவதையும் பெருநாளன்று தன் பீவிமேல் கனகாபிஷேகம் செய்துவிட, அவன் துடித்ததில் நியாயம் இல்லாமல் இல்லை. புதிய மணத் தம்பதிகளுக்குள் இந்தவிதமான 'ஷாஜஹான் ஆசைகள்' எழுவது உலக இயல்புதானே!

ஆனுல், தன் இச்சையைப் பூர்த்திசெய்ய முடியாதவாறு இரு 'முட்டுக் கட்டை'கள் இருப்பதைக் கண்டு அப்துல் காதருக்குச் சற்று ஆத்திரம் வந்தது. 'ஏதோ நிக்காஹ் செய்துகொண்டோம். சில மாதங்களாவது இல்லக் கிழத்தியுடன் சந்தோஷமாகத் தனியாக கழிப்போமே என்ருல், இந்தப் பாழாய்ப்போன 'நஸீப்'-தலைவிதி- இப்படிச் சதி செய்கிறதே?' என்று எண்ணி, அநேக தடவை அவன் அங்கலாய்த்தது உண்டு. "பணம் கொஞ்சம் கிடைத்தது. நல்ல நாளன்று தன் 'லைலா'வைச் சிங்காரித்து மனமகிழப் பார்த்து ஆனந்த வெள்ளத்தில் நீச்சலடிக்கப் பார்த்தால், கடனுக வாங்கின அந்தப் பணத்திலும் தங்கைக்கும் தாய்க்கும் பங்கு போட வேண்டுமே!" என்று ஏங்கியதும் அவன் மனம் ஓலமிட்டது.

இந்தச் சூழ்நிலையிலே தத்தளித்துக்கொண் டிருந்த நிலையில்தான் பெருநாளுக்கு முதல் நாளன்று சைனுபஜா ரில் அப்துல்காதர் நடத்திய 'ஷாப்பிங்'கைப் பற்றி முன்பே சொல்லியாயிற்றே!

ஆயிரம் விளக்கு, தேனும்பேட்டையைக் கடந்து விட்ட பஸ்ஸானது சைதாப்பேட்டை ஸ்டாண்டை விட்டுக் கிளம்பினதுதான் தாமதம், "கண்டக்டர், ஸ்டாப் பிளீஸ்!......அட நிறுத்தப்பா...டிரைவர்" என்று பித்துப் பிடித்தவன்போல் அலறினான் அப்துல் காதர்! 'விஸில்'கள் பறந்தன. எல்லார் கழுத்துக்களும் வெடுக்கென்று திரும் பின. பஸ் தடாலென்று ஸ்தம்பித்து நின்றது.

"துணி மூட்டையைப் பக்கத்திலே வச்சிருந்தேன். யாரோ கிளப்பிக்கிட்டுப் போயிட்டான்!" என்று அப்துல் காதர் தழுதழுத்த குரலில் சொன்னதும், பஸ்ஸில் உட் கார்ந்திருந்தவர்கள் அனைவரும் தங்கள் தங்கள் பைகளைத் தொட்டுப் பார்த்துக்கொண்டார்கள்! பெண்மணிகளோ தங்கள் கழுத்துக்களையும் குழந்தைகளின் காதுகளையும் சோதித்துக்கொண்டார்கள். யாரும் அப்துல் காதரைக் கவனித்ததாகக் காணவில்லை!

"காதர்!...என்னப்பா நடந்தது?" என்று அவன் தெருவில் வசிக்கும் சிவசாமி, பின் ஸீட்டில் உட்கார்ந்த படியே பரிவுடன் விசாரித்ததும், அப்துல் காதரின் விழி களில் நீர் ததும்பியது. நண்பனிடம் 'கோட்டை' விட்ட தைப் பற்றிச் சொல்லி ஒரு குரல் அழுதான். 'ரைட்' என்று கண்டக்டரின் உத்தரவு பறக்கவே, குழப்பமும் பஸ்ஸும் ஒன்று சேர்ந்து பறக்கலாயின.

**வீ**ட்டிற்குள் காலடி வைத்ததும் அவன் விழிகள் அவன் மனைவியைத்தான் முதலில் தேடித் துழாவின. ஜுபைதா அங்கே இல்லாததைக் கண்டதும் ஏமாற்றம் அவனை வாட்டியது; நெஞ்சு கனத்தது. அறைக்குள் நுழைந்து தடாலென்று கதவைச் சாத்திவிட்டுத் தொப் பென்று கயிற்றுக் கட்டிலில் சாய்ந்தான். அவன் மனம் படாத பாடு பட்டது. கஷ்டப்பட்டுக் கைநீட்டிக் கடன் வாங்கிய பொருளும் கைவிட்டு நழுவியதை மறுமுறை

எண்ணியவுடன் அவன் உடல் வெலவெலத்தது; மதி மருண்டது. தன் மனைவிக்காகச் செலவு செய்த தொகையைக் காட்டிலும் தன் தங்கைக்காகவும் அன்னைக்காகவும் செலவழித்த பணந்தான் அவன் மனக்கண்முன் தனியாக வட்டமிட்டது. நினைவு வலுக்க வலுக்க ஒரு வெறுப்பு உணர்ச்சியும் எரிச்சலும் அவன்பால் எழுந்தன. தாயும் தங்கையும் தன் வாழ்க்கையைச் சீரழிக்கவேதான் தன்னை அட்டைபோல் ஒட்டி நிற்கிறார்கள் என்றுகூட நினைக்கலானான்!

கதவை யாரோ மெதுவாகத் தட்டும் அரவம் கேட்டது. "ஏதாவது வாங்கி வந்ததைக் கழுகுபோல் கொத்திச் செல்லத் தங்கையோ அல்லது தாயோ கதவைத் தட்டுகிறார்கள்" என்று எண்ணிய அப்துல் காதர், மேல் துண்டினால் முகத்தை மறைத்துக்கொண்டான்.

"என்ன பாய்ஜான்! ரொம்பக் களைச்சுப்போய் வந்திருக்கீங்களே?" என்று பாசத்துடன் கேட்ட தங்கையின் சொற்கள், அப்துல் காதரின் செவிகளில் நாராசம்போல் வீழ்ந்தன.

"என்னை நிம்மதியாகக் கொஞ்ச நாள் நீங்கள் விட்டு வைத்தால்தானே?" என்று அப்துல் காதர் வெடுக்கென்று சொன்னதும், தங்கையின் சாந்தம் பொலியும் வதனத்தில் கவலை ரேகைகள் படர்ந்துவிட்டன. கவிழ்ந்த சிரத்துடன் அறையை விட்டு நீங்கினாள்.

எங்கும் ஓரே அந்தகாரம் சூழ்ந்திருப்பதுபோல் அப்துல் காதருக்குத் தோன்றிற்று. போர்வையை இழுத்து நன்றாகப் போர்த்துக்கொண்டான்.

"காதர்...காதர்...!" என்று கனிவுடன் கூப்பிட்டுக் கொண்டே அவன் அருகில் வந்த தாயின் குரலைச் செவி மடுத்தும் அப்துல் காதர் எழுந்திருக்கவில்லை. அவனிடம் நிலைத்து நின்ற விறைப்பும் அலட்சிய மனப்பான்மையும் மங்கியதாகக் காணவில்லை.

"காதர்...எழுந்திரு, கண்ணு! ஏதோ நடந்துடுச்சு. அதை நினைச்சு வருத்தப்பட்டா முடியுமா?" என்று தாய்

பகர்ந்ததும் கருந் தேளினுல் கொட்டப்பட்டவன்போல் திகிலடைந்தான் அப்துல்காதர்.

"நஷ்டம் வந்தா ஒண்ணு மேலே ஒண்ணு வரும்டா கண்ணு. 'துனியா'லே (உலகத்திலே) சமாளிச்சுட்டுப் போகணும். அல்லாவோடே தமாஷா அது. நீ வீட்டுக்குத் திரும்பறப்போ, வாங்கிவந்த துணிகளைத் தொலைச்சுட் டேன்னு கேள்விப்பட்டேன்..." என்று தாய் சொன்னதும் அப்துல்காதர் கட்டிலைவிட்டு எகிறிக் குதித்தான். அவன் சப்த நாடிகளும் ஒடுங்கிவிட்டன.

"இது உனக்கு எப்படித் தெரியும்?" என்ருன் அவன் விழிகளைச் சுழற்றிக்கொண்டு.

"நம்ம தெரு முனை வீட்டு உன் 'தோஸ்த்' சிவசாமி யோடே அப்பா சொல்லிச்சு. நடந்த விஷயத்தை எல்லாம் சொல்லிட்டு, அவரு இப்போதான் கொஞ்சம் முந்திப் போனுரு" என்ருள் தாய் சாவதானமாக.

பஸ்ஸில் 'கலாட்டா' நடந்த சமயத்தில் சிவசாமி யிடம் பேசினது அப்துல் காதருக்கு ஞாபகம் வந்தது.

தொடர்ந்தாள் தாய்: "உன்னைவிட நானும் உன் தங்கச்சியுந்தான் ரொம்ப வருத்தப்பட்டோம். நஷ்டத் தைப்பற்றி அல்ல; அந்த வேளையிலே உன் மனசு எப்படி வாடிச்சோன்னு நினைச்சுத்தான். இந்தா, இதைப் பிடி!" என்று ஒரு காகிதக் கவரை நீட்டினுள்.

"என்னம்மா இது?" என்ருன் அப்துல் காதர் ஒன்றும் விளங்காதவனுக.

"பிடியேன் முதல்லே, சொல்றேன்!"

அதைப் பெற்றுக்கொண்டான் அப்துல் காதர்.

"அப்படி இப்படின்னு காசு காசாய் நானும் உன் தங்கச்சியும் இத்தனை வருஷமாச் சிட்டுக்குருவிகள் போல் சேர்த்துவச்ச பணம் எண்பது ரூபாய் இதிலே இருக்கு. இதை எடுத்துட்டுப் போய் உன் இஷ்டப்படி நல்ல அழ கான தாவணியும், 'சோலி'க்காக வெல்வெட் துணியும்

வாங்கிட்டு வந்து உன் பெண்சாதிக்குக் கொடுத்துவிட்டு மறு வேலே பாரு. பெருநாளன்னேக்கு அவள் சந்தோஷமா யிருந்தால்தானே என் மனசும் குளிரும்? சட்டுனு கிளம்பு, கடையைச் சாத்திடப்போருன்'' என்று தாய் சொல்லி முடித்ததும் அப்படியே அந்தப் பெற்ற தாயின் பாதங் களில் வீழ்ந்தான் அப்துல் காதர்.

''அம்மா...... அம்மா...... மன்னிச்சுடு''! என்று நாத் தழுதழுக்க உணர்ச்சியுடன் அவனுல் சொல்ல முடிந்ததே தவிர, மற்ற வார்த்தைகள் அவன் தொண்டையிலே சிக்கித் திக்குமுக்காடின.

'சுவர்க்கம்' என்று திருக் குரான் அறிவுறுத்தும் தாயின் அடிகளே இரு கைகளாலும் இறுகப் பற்றிக் கொண்டு பொல பொலவென்று கண்ணீர் பொழிந்தான் மைந்தன்.

# பல்கீஸின் பதற்றம்

டிபுடி கலெக்டர் ஷேக் பஷீர் சாஹேப் பள்ளி கொண்டா 'காம்பி'லிருந்து திரும்பியவுடன், முதல் காரிய மாக டபேதார் முனுசாமியைக் குஞ்சுமணி ஐயரின் பங்களாவிற்கு விரட்டிய பிறகுதான் தம் சிவப்பு நிறத் துருக்கிக் குல்லாவை வெடுக்கென்று கழற்றி அலமாரியில் வைத்தார்! அணிந்திருந்த 'அல்பாக்கா' ஷேர்வானியின் பத்துப் பொத்தான்களை அவர் விடுவிப்பதற்குள் அவர் விரல்கள் நொடிந்து தளர்ந்துவிட்டன. 'கம்மிஸ்'ஸைக் கழற்றுவதற்குள் சாஹேபிற்கு நெடுமூச்சு வாங்கியது. தொள தொளவென்று 'சுடிதார்' பைஜாமாவுடன் அவர் நின்ற எழில் மிகுந்த கோலம் அசல் ஒரு சோளக்கொல்லைப் பொம்மையை நேருக்கு நேராகப் பார்ப்பது போன்ற பிரமையை உண்டாக்கியது! "யா அல்லா!" என்று சொல்லிய வண்ணம் சாய்வு நாற்காலியில் சாய்ந்தார் ஷேக் பஷீர்.

தன் மணவாளனின் வருகையினால் பூரிப்பில் திளைத் திருந்த பல்கீஸ் ஒரு பீங்கான் தட்டில் 'பெவுஸீ' பணியா ரத்தையும் கோப்பை நிறையக் 'கரம் சாயா'வையும் எடுத் துக்கொண்டு அடக்க ஒடுக்கத்துடன் ஷேக் பஷீர் முன் வந்து நின்றாள்.

"அப்புறம் என்ன சேதி கிடைச்சுச்சு பேகம்?" என்று வினவினார் சாஹேப், ஒரே ஆவலுடன்.

"இடம் என்னமோ நமக்கு ஏற்ற இடந்தான். அதில் 'பில்குல்' (துளிகூட) சந்தேகமில்லே. மால் பைஸா

புரளற வீடுன்னு வேறே கேள்விப்பட்டேன்'' என்றாள் பல்கீஸ், சிரத்திலிருந்து நழுவிய தாவணியைச் சட்டென்று திருத்திக்கொண்டவளாய்.

''பொண்ணு எப்படியாம்?''

உங்க ரெவின்யூ இன்ஸ்பெக்டர் பக்கிரி முகம்மதின் பீவியை அந்த வீட்டுக்கு ஒரு நாள் சும்மா அனுப்பி வச்சேன். பொண்ணு 'கடல் பாசி' போல நல்ல அளகாக் கொழு கொழுன்னு வாட்டசாட்டமாய் இருக்குன்னு அது பார்த்து வந்து சொல்லுச்சு. நம்ம புள்ளேக்குச் சரியான ஜோடியாம். சித்துக் கோழி மாதிரி அடக்கமா வேறு இருக்காம்!''

''எந்த ஊராம்?''—மீசையின் வலது விளிம்பில் ஒட்டிக்கொண்ட பாலாடையை விரலினால் சுண்டி விட்டார் ஷேக் பஷீர்.

''விழுப்புரம் சொந்த ஊராம். மச்சுவீடும் மாந்தோப்பும் இருக்காம். முக்கியமான சமாசாரந்தான் இன்னும் நமக்கு வந்து சேரல்லே. அவங்களும் நம்ம போல் ஷேக் குடும்பந்தானா அல்லது சைய்யதா மொகல்லா பட்டாணா என்று துப்புத் துலக்குக் கிடைக்கணுமே!''

கணவனுக்கும் பேகத்திற்கும் நடந்துகொண் டிருந்த இந்த உரையாடல் மேலும் தொடராதபடி, ''எசமான், ஐயரு வந்துட்டாருங்க'' என்று வராந்தாவில் எழுந்த முனுசாமியின் குரல் ஒரு தடையாகக் குறுக்கிட்டது. அவ்வளவுதான்! பல்கீஸ் அவ்விடத்தை விட்டுப் புழக்கடைப் பக்கம் முயல் குட்டியைப்போல் ஓடிவிட்டாள்!

''என்ன சாஹேப்! காம்ப் கேம்ப் எல்லாம் ஒரு தினுஸாக முடிஞ்சுடுச்சா?'' என்று கேட்டுக்கொண்டே சிரித்த முகத்துடன் அறைக்குள் பிரவேசித்தார் குஞ்சு மணி ஐயர். அவர் ஓர் ரிடையர்டு இன்ஜினீயர்.

''அல்லாஹுத்தாலா மெஹராலே எப்படியோ 'இன்ஸ்பெக்ஷனை' முடிச்சுட்டு வந்து சேர்ந்தேன்'' என்றார் ஷேக் பஷீர், நண்பரின் கையைப் பலமாகக் குலுக்கிவிட்டு.

"இந்தத் தடவை 'காம்ப்' எப்படி? அதே நவாப் தர்பார்தானே!" — கல கலவென்று உரக்கச் சிரித்தார் குஞ்சுமணி.

"மிஸ்டர் ஐயர்! நான் சொன்னால் நீங்க நம்ப மாட்டீங்க. என் வாரிசு பரேஷானி (கவலை) என்னை சைத்தான்போல் புடிச்சுக்கிட்டு ஆட்டிடுச்சு. பேஜாராய்ப் போய் அரை குறையாகக் 'காம்ப்' முடிச்சுட்டு ஓடி வந்துட்டேன்!" என்றார் ஷேக் பஷீர். ஏமாற்றமும் ஏக்கமும் அவர் தொனியில் நெளிந்தாடின.

'வாரிசு' என்று சாஹேப் குறிப்பிட்டது தம் ஒரே மகனை ஷேக் மஜீதைத்தான். கரகரத்த அவர் குரலில் திக்குமுக்காடிக் கிளம்பிய 'பரேஷானி' என்ற சொல் மைந்தனுக்குச் செய்ய வேண்டிய வதுவை பற்றிய கவலையைச் சுட்டிக் காட்டியது.

"என்ன சாஹேப்! ஒரு பிள்ளையை வைத்துக் கொண்டு இப்படித் தத்தளிக்கிறீர்? என் நிலைமையை ஒரு நிமிஷமாவது நினைத்துப் பார்த்தீரா? மூன்று குட்டிகள், மூன்று தடியன்கள். அரை டஜன் சாஹேப்! போன ஜன்மத்திலே நான் ராமேச்வரம் போகாத பாவந்தானோ என்னவோ? அந்த ஸ்ரீ ராமசந்திரப் பிரபு மூன்று 'அல்சேஷியன்' மாப்பிள்ளைகளைச் செயினோடு என் கழுத்திலே கட்டி வேடிக்கை பார்க்கிறார் சாஹேப்! ஒருத்தன் குர்ரன்னு மற்றவன் ளொள் ளொள்னு மேலே விழுந்து பிடுங்கறான். கடைக் குட்டியின் கையைப் பிடித்தவன் மாத்திரம் சமயா சமயங்களில் வாலை ஆட்டிக் குழைகிறான்!"

குஞ்சுமணியின் சாந்தம் பொலியும் வதனத்தில் லேசாகப் படர்ந்த 'மாமனார் ரோதனை' ரேகைகளைக் கண்ட ஷேக் பஷீர் திரு திருவென்று விழித்தார். தொடர்ந்தார் குஞ்சுமணி. "சரி, .. நீங்க சொன்ன இடத்தைப் பற்றி நன்றாக விசாரித்து விட்டேன். பஸ்ட் கிளாஸ் சம்பந்தம் சாஹேப்! அந்த வீட்டிலே நிலவுகிற கரன்ஸி 'இன்பிலேஷனை'ப் பார்த்தால் அதற்குக் கன்டிரோலே கிடையாது போல் இருக்கு! பெண் அசல் பஞ்ச வர்ணக் கிளி மாதிரி—

என் கடைக்குட்டி சரோ மாதிரி—இருக்கிறாள் என்று என் வீட்டிலே சர்டிபிகெட் கொடுத்துட்டாள்னு பாருங்களேன்!"

"என் பேகமுக்குக்கூட இந்தச் சம்பந்தம் பிடிச்சுப் போயிடுச்சு."

"பின்னே ஏன் தாமதம்? சட்டபட்டுனு மேலே நடக்க வேண்டிய காரியங்களைப் பார்க்கக் கூடாதோ?"

"ஒரு முக்கியமான நாசுக்கான விஷயந்தான் தெரிந்து ஆகணும், மிஸ்டர் குஞ்சுமணி."

"அது என்னவாம்?"

"பெண் வீட்டுக்காரங்க 'ஷேக்'தானே?"

"அப்படீன்னு?"—வியப்பின் மேலீட்டால் வாயைப் பிளந்துகொண்டு நின்றார் குஞ்சுமணி.

"ஒண்ணுமில்லை. நாங்க ஷேக் குடும்பமாதலால், ஷேக் குடும்பத்தாரோடதான் கல்யாண சம்பந்தம் வைத்துக்கொள்வது வழக்கம்."

இதைக் கேட்டதும் குஞ்சுமணி ஐயர் அந்தரத்திலே ஓர் அந்தர் பல்டி அடித்தார்!

"அட ராமசந்திரா! உங்க சமூகத்திலேயும் இந்த உபத்திரவம் ஏதாவது கூத்தடிக்கிறதோ?" என்றார் குஞ்சுமணி ஒரே பரபப்புடன்.

"இந்த விஷயம் வேறு. என்னைப் போன்ற உருது பாஷை பேசுகிற தமிழ்நாட்டுப் பட்டாணி சாயபுமாருங்க இருக்காங்களே, அவர்களில் நாலு 'வகுப்பு' உண்டு: ஷேக், சைய்யத், மொகல், பட்டாண் என்று. அவைகளை 'கான்தானுக்கு'த் (குடும்பத்துக்குத்) தகுந்தாற்போல் வரிசைப் படுத்திச் சொல்லுவாங்க. கல்யாண விஷயத்திலே மாத்திரம் ஷேக் வீட்டுக் காளை ஷேக் வீட்டைத் தேடித்தான் உள்ளே நுழையும்! சையத் வீட்டுப் பூனை சைய்யத் 'இல்லத்தில்'தான் தாவிக் குதிக்கும்! இப்படியே

தான் மற்ற இரண்டும்'' என்றார் ஷேக் பஷீர் முறுவலித்துக்கொண்டே.

''அப்படியா சமாசாரம்?''

''இந்த விஷயத்திலே நான் ரெண்டு விரற்கிடை விட்டுக்கொடுத்தாலும், நம்ப வீட்டுக்காரி இருக்கிறாளே... அட அல்லாரே?...... ரொம்ப ஜபர்தஸ்த்! படே படே ஷேக் குடும்பத்திலிருந்து வந்த பேகம் அவள்!''

''சரிதான்!''

''புரிஞ்சுதில்லே!''

''பேஷாகப் புரிஞ்சுது! சரி...... நீங்க சொன்னபடி அந்தக் 'கேர்ல்' வீட்டுக்கு 'ஈவினிங்' ஒரு 'வாக்' போட்டுக்கிட்டு இந்த விஷயத்தைக் கேட்டு வர்ரேன்... என்ன...... வரட்டுமா!'' என்று சொல்லிவிட்டு, கையிலிருந்த 'வாக்கிங்–ஸ்டிக்'குடன் சேஷ்டைகள் புரிந்துகொண்டே அவ்விடத்தை விட்டு நீங்கினார் குஞ்சுமணி.

மணமகள் வீட்டுக்காரர்களும் ஷேக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்ற 'குஷ் கபர் (நல்ல செய்தி)' ஊர்ஜிதம் ஆனவுடன் ஷேக் பஷீரும் அவர் இல்லக்கிழத்தி பல்கீஸும் நிக்காஹ்விற்கு 'குபுல் (சம்மதம்)' என்று சொல்லித் தங்கள் சம்மதத்தை அறிவித்துவிட்டார்கள். அந்த வாரமே துல்ஹன் - மணமகள் - வீட்டிலிருந்து நிக்காஹ் பத்திரிகைகள் எண் திசைகளும் பறக்கலாயின.

புதுச்சேரி 'பாண்டு' ஜாம் ஜாமென்று முழங்க, ஆர்க்காட்டு 'நௌபத்' சங்கீதம் சக்கை போடு போட, துல்ஹன் வீட்டு விருந்தின் மனோகரமான சுகந்தம் தெருவெங்கும் அள்ளி வீச, அல்லாஹுத்தாலாவின் பேரருளால் நிக்காஹ் - மணம் - விமரிசையுடன் நிறைவேறியது.

துனியா - உலக - வழக்கப்படி மணத் தம்பதியின் 'கண்ணாமூச்சி விளையாட்டு' அதன் பிறகு ஆரம்பமாகத் தவறவில்லை! தன் துணைவியை உடன் அழைத்துக்கொண்டு நாகூர் சென்று காதர் வலி அவுலியா தர்க்காவிலே பாத்

தியா ஓதினான் ஷேக் மஜீத். முத்துப்பேட்டைக்குப் போய் அங்கே தர்க்காவிலே நடக்கும் 'பேயாட்ட'த்தைக் கண்டு களித்தான். அந்த உருஸ், இந்த உருஸ், அந்தச் சந்தனக் கூடு, இந்தச் சந்தனக் கூடு என்று ஒன்று விடாமல் ஊர் ஊராக ஜல்ஸா (மகிழ்ச்சி)வுடன் திரிந்த அந்த ஜோடிப் புறுக்கள் புனலோடு புனல் கலந்தாற்போல் ஐக்கியமாகி விட்டன.

தனக்கு மருமகளாக வந்த குல்ஸூம் அணிந்திருந்த விலையுயர்ந்த நகைகள்: செவிகளில் ஜிம்கிகள், புகு டோக்கள், நுதலை அலங்கரித்த 'டீலா' பதக்கம், கழுத்தில் 'சவின்ஸரா' மாலை, கரங்களில் கங்கன், புஹூன்ச்சி வளையல்கள்—பல்கீஸுக்கு அவ்வளவு ஆனந்தத்தை அளிக்கவில்லை. மாட்டுப் பெண்ணின் மதி போன்ற வதனத்தில் துளும்பிய மோகன முறுவல்கூட அவளுக்குக் களிப்பைக் கொடுக்கவில்லை. ஆனால் ஒன்று மட்டும் அவளை ஆனந்த வாவியில் மூழ்கடித்து விட்டது! தன்னைப் போலவே தன் மருமகளும் ஷேக் குடும்பத்தைச் சேர்ந்தவள் என்ற பெருமையினால் அவளுக்குத் தலைகால் புரியவில்லை. சதா அதைப்பற்றித்தான் எல்லோரிடமும் மிக்க 'ஷானோடு (பெருமையுடன்)' தலையை நிமிர்த்துப் பேசிப் பேசித் 'தில் குஷ் (சந்தோஷம்)' அடைந்தாள் பல்கீஸ்!

இந்தச் சூழ்நிலையில் ஜீ காயிதா, ஜீ ஹஜ், மொஹரம், சவ்வர் ஆகிய மாதங்கள் விடைபெற்றுக்கொண்டன.

டிபுடி கலெக்டர் ஷேக் பஷீர் தம் அலுவலக 'பைல்' களில் இரவும் பகலுமாக மூழ்கிக் கிடந்தார்.

"கேட்டீங்களா சங்கதியை? நாம் மோசம் போயிட்டோம்!" என்று அலறிப் புடைத்துக்கொண்டு, ஒரு நாள் அவர் அறைக்குள் பல்கீஸ் எதிர்பாராத வேளையில் திடீரென்று நுழைந்ததும், ஷேக் பஷீர் பலத்த அதிர்ச்சியுடன் எழுந்து நின்றுவிட்டார்.

"உங்க சம்பந்தி வீட்டுக்காரங்க நம்ம தலைகளை நல்லா மொட்டையடிச்சுக் குல்லா போட்டுட்டாங்க!" என்றாள் பல்கீஸ், கைகளை உதறிக்கொண்டு.

"என்ன நடந்தது பேகம். ஆற அமரச் சொல்லேன்" என்றார் ஷேக் பஷீர் நிதானத்தை இழக்காமல்.

"ஷேக் ஷேக்குன்னு ஷேக் குடும்பத்துப் பொண்ணை நம் புள்ளேக்காக இத்தனை வருஷங்களாக நாம் தேடி அலைந்தோமே? கடைசியில் என்ன ஆயிடுச்சுன்னு பாத்தீங்களா? இந்த வணு வாகிற உதவாக்கரைக் குட்டியை நம்ம மஜீத் தலையிலே நாம் கட்டிவிட்டோம்!", என்று சொல்லி, தன் தலையில் ஓங்கி அடித்துக்கொண்டாள் பல்கீஸ். சூறுவளியில் சிக்கிய காற்றாடிபோல் அவள் மனம் அலைக்கழிந்தது. பாரியாளின் மனப்பதற்றத்தைக் கண்ட ஷேக் பஷீர் திடுக்கிட்டார்.

"என்ன தப்பு நடந்துடுச்சு பேகம்?" என்றார் வியப்பும் அச்சமும் கலந்த தொனியில்.

"அட கேளுங்களேன், பூரா சமாசாரத்தை! நமக்கு மருமகளாக வந்த அந்தக் குட்டி ஷேக் குடும்பத்துப் பொண்ணு இல்லையாம்! நல்லா மோசம் போயிட்டோம்! அட அல்லாரே!"—அவள் இதயத்தைக் கீறிக்கொண்டு மேலேழுந்த சொற்கள் பிரலாபமாகப் பிரவாகம் எடுத்தன.

"இந்தக் 'கஹானி' (கதை) யெல்லாம் உன் காதிலே யார் போட்டார்கள்?"

"என் தங்கச்சி புருஷனை இப்போ விழுப்புரத்துக்கு மாற்றி விட்டாங்க. அங்கே போன பிறகு நம்ப சம்பந்தி வீட்டாரைப்பற்றி நல்லா விசாரிச்சாங்களாம். அப்போ தான் குட்டு வெளிப்பட்டுதாம்; அவங்க ஷேக் குடும்பம் இல்லை யென்று. இதோ பாருங்களேன் அவங்க எழுதின கடுதாசியை."—கையிலிருந்த லிகிதத்தைத் தன் 'காவிந்தி (நாயகனிடம்)'டம் நீட்டினாள் பல்கீஸ்.

கடிதத்தைப் படித்து விட்டுத் தம் பேகத்தை உற்று நோக்கினார் ஷேக் பஷீர்.

"விஷயம் இப்படியா இருக்கு!" என்ற அவர், மனம் ஒடிந்தவர்போல் தோற்ற மளித்தார்.

"ஆடு போல வளர்த்த நம்ம மஜீதை இந்தப் புளுக்கைக் குடும்பத்திற்குக் 'குர்பானி'—பலி—கொடுத்துட்டோமே! நம்ம இஜ்ஜத்—கெளரவம்—பெயர் எல்லாம் பாழாய்ப் போயிடுச்சே. இனி யார் வீட்டிலே நான் காலடி வைக்க முடியும்? யார் முகத்திலே நான் விழிக்க முடியும்? அல்லாரே!" என்று விக்கி விக்கி அழத் தொடங்கினாள் அந்தப் பேதை.

கண்யமும் கெளரவமும் கீர்த்தியும் கொண்ட தன் குடும்பத்தின் அந்தஸ்துக்குக் களங்கம் ஏற்பட்டதைச் சிந்திக்கச் சிந்திக்கப் பல்கீஸின் நெஞ்சு வெடித்துவிடும் போல் இருந்தது. அவள் மதி ஊசலாடியது. இதயம் பிரலாபித்தது. பொல பொலவென்று சாரலாக அடித்த கண்ணீரைத் துடைத்துத் துடைத்து அவள் தாவணி முழுவதும் ஈரமாகி விட்டது.

நல்ல வேளையாக இந்தப் பொல்லாத சமயத்தில் அவள் மகனும் மருமகளும் வீட்டில் இல்லை. நூறு மைல்களுக்கு அப்பாலுள்ள சென்னையில் கலங்கரை விளக்கத்தின் உச்சியில் அத்தம்பதி ஒருவரோடு ஒருவர் அணைந்தவாறு அமர்ந்துகொண்டு, விழிகள் சல்லாபிக்க, இந்தப் பிரபஞ்சத்தை அறவே மறந்து ஆனந்த வாரிதியில் நீந்திக் கொண்டிருந்தார்கள்!

ஒரு வாரம் கழிந்தது. ஏதோ ஒரு ஹிஜ்ரி வருஷம் மறைந்ததுபோல் ஷேக் பஷீர் உணர்ந்தார். வையம் பகலை இழந்து, வானம் ஒளியை இழக்கும் நேரத்தில் 'மக்ரீப்' நமாஸை முடித்துக்கொண்டு மசூதியின் தூண் ஒன்றில் சாய்ந்த வண்ணம் வீற்றிருந்தார் ஷேக் பஷீர். இல்லாளின் மனவேதனை அவர் இதயத்தைப் பிழிந்துகொண் டிருந்தது. இமைகளை இறுக மூடிக்கொண்டு 'தஸ்பீ' மணிகளை உருட்டிக்கொண்டு அருளாளனின் நாமத்தை ஜபித்துக் கொண்டிருந்தும் அவர் இதயப் படபடப்பு அடங்கின பாடு இல்லை. ரெவின்யூ இலாகாவின் எத்தனையோ பிரச்னைகளையும் சிக்கல்களையும் சின்னபின்னப் படுத்திய அந்த 'இரும்புத் தலை'ச் சிங்கம் தம் பேகத்தின் விவகாரத்தைக் கண்டு மலைத்துப் போயிற்று! அவர் நெற்றிச் சுருக்கங்கள்

நெளிந்தாடின. அதரங்கள் சுளித்துச் சுளித்து பற்பல கோணங்களைக் காட்டலாயின, இந்த அறிகுறிக ளெல்லாம் அவர் அறிவில் ஏதோ ஒன்று உருவாவதைப் பிரதிபலிக்கத் தவறவில்லை.

மகுதியின் சுவர்க் கடிகாரம் டங்கென்று ஓசையை எழுப்பியதும் டிபுடி கலெக்டரின் சிந்தனைத் தொடர் அறுந்தது. வெண்மையான தாடியை வெகு நாசுக்காக உருவிக்கொண்டார். 'தஸ்பீ' ஜபமாலையைக் கோட்டுப் பைக்குள் உதறிவிட்டு, 'பிஸ்மில்லாஹ்' என்று சொல்லிக் கொண்டே துள்ளி எழுந்தார்.

வீட்டிற்குள் காலடி எடுத்து வைத்ததும் ஷேக் பஷீர் அங்கே கண்ட காட்சி அவரை அதிர வைத்துவிட்டது. மின்சார விளக்குகள் எங்கும் பொருத்தப்பட்ட தமது மனையில். 'பெட்ரூம்' விளக்கு ஒன்று கண்ணைச் சிமிட்டிக் கொண்டு தன்னை வரவேற்றதைக் கண்டதும் ஷேக் பஷீர் தடுமாறிப் போனார். விழிகள் ரங்க ராட்டினம்போல் சுழன்றன. சோகமே உருவெடுத்தாற்போல் கண்ணீரும் கம்பலையுமாக அலங்கோலமாய் 'அவ்சோஸூடன்—கவலையுடன்—நாடாக் கட்டிலில் சயனித்திருந்த தம் மனைவியின் மீது அவர் திருஷ்டி திரும்பியதும், சாஹேபின் சப்த நாடிகளும் ஒடுங்கிவிட்டன. 'ஸ்விட்'சைப் போடுவதற்குச் சுவரை நோக்கி அவர் நகர்ந்ததும், "போடாதீங்கோ. எனக்கு வேண்டாம்" என்ற பல்கீஸின் கர்ஜனையைக் கேட்டு, நின்ற இடத்திலே நெடுமரம்போல் திகைத்து நின்றுவிட்டார்!

"பேகம்!...உன் 'ஹூக்கும் - கட்டளை'ப் - படியே. உளுத்துப்போனதை நினைச்சு நினைச்சு இப்படி நீ 'பிக்கிர்' பண்ணினால்-கவலைப்பட்டால்- மீதி ஜிந்தகி - வாழ்க்கை - யில் அநுபவிக்க வேண்டிய கஷ்டங்களை எப்படித்தான் நீ சமாளிக்கப் போகிறாயோ! உன் மகனும் மருமகளும் இன்று வந்து சேருவதாகச் சென்னையிலிருந்து தந்தி வேறு வந்திருக்கு" என்றார் ஷேக்பஷீர், தம் அருமைத் துணைவியின் குழலை அன்புடன் தடவிக்கொண்டே.

முதுகை நிமிர்த்தி உட்கார்ந்தாள் பல்கீஸ். கண்ணீரின் பீறிட்டெழுச்சியினால் அவள் அணிந்திருந்த ஜரிகைப் பூக்கள் போட்ட மஞ்சள் நிற வெல்வெட் சோலி நன்றாக நனைந்து நிறம் மாறியது.

"நீங்கள் என்னதான் சொன்னாலும் என் நொந்த மனசு ஆறவே ஆறாது. என் ஷேக் குடும்பத்துக் கௌரவத்துக்காக என் பாட்டனார் தம் உசிரைக்கூட விட்டிருக்கிறார். ஆ...மாம்! நம்மை நல்லா ஏமாற்றி மோசம் செஞ்ச உங்க சம்பந்தி குடும்பத்து மேல் வஞ்சம் தீர்த்தால்தான் என் நெஞ்சு ஆறும். என்னை அப்போது தான் உசிரோட நீங்க பார்ப்பீங்க" என்றாள் பல்கீஸ் மிக்க ஆவேசத்துடன். அவள் மேனியில் மின்னலின் வேகம் துவண்டது.

கைகளைப் பிசைந்துகொண்டு ஷேக் பஷீர் நின்றிருந்த கோலம் பார்க்கப் பரிதாபமா யிருந்தது.

மேலும் ஆர்ப்பரித்தாள் பல்கீஸ். "இனிமேல் உங்கள் மூதேவி மருமகளின் முகத்தில் நான் விழிக்கவே மாட்டேன். நம்ப ஷேக் குடும்பத்துக்குப் 'பத்னும் —கெட்ட பெயர்'— கொண்டுவந்த 'போக்கிரி' அவள். சரி... இனி நான் சொல்லப்போவதையாவது நீங்க காது கொடுத்துக் கேட்பீங்களா?"—அவள் தொனியில் பாசமும் பரிவும் எதிரொலித்தன. பார்வையில் ஆர்வம் சுடர் விட்டது.

"சரி......சொல்லேன்."

"இழந்த நம் குடும்ப கௌரவத்தைத் திரும்பக் காப்பாற்ற ஒரே ஒரு வழிதான் இருக்கு." அவள் அகன்ற மார்பை மேலும் கீழுமாக அழுத்தியது பெருமூச்சு.

"சொல்லு...பேகம்...சொல்லு."

"நம்ம மஜீத் அவன் பெண்சாதிக்குத் 'தலாக்'கொடுத்துவிட வேண்டும்!"

இந்தப் பயங்கர வேண்டுகோளைச் செவிமடுத்த ஷேக் பஷீர் ஸ்தம்பித்து நின்றுவிட்டார். அவர் அறிவு சூன்யமாகிவிடவே, கண்களில் அந்தகாரம் சூழ்ந்துகொண்டது.

"என்ன! வீட்டிற்கு விளக்குப் போல வந்த பெண்ணை உன் மகன் விவாகரத்துச் செஞ்சு விரட்டி விடவா சொல்றே பல்கீஸ்! உணர்வோடதான் நீ பேசுறியா! இந்தத் துனியாவிலேதான் நீ இருக்கிறீயா!" என்றார் ஷேக் பஷீர் ஒரே படபடப்புடன்! அவர் மேனியில் வேர்வை ஜலப் பிரளயமாக வழிந்தோடியது.

"நான் சொன்னபடிதான் ஆகணும். அந்தக் கேடு கெட்டவளை வீட்டை விட்டுத் துரத்தினால்தான் நம்மை ஏமாற்றிய அவள் தகப்பன்—உங்க சம்பந்தி, அந்தத் திருடன், 'தகல்பாஸ்' - முகத்திலே கரி பூசினாப் போல இருக்கும். அப்போதான் என் மனசுக்கு 'ஆராம்'(அமைதி) வரும்" என்று உணர்ச்சியுடன் சொல்லிக்கொண்டே தன் நாயகனின் இரு கரங்களையும் இறுகப் பிடித்து இழுத்து தன் மாம்பழக் கன்னங்களில் மாறி மாறி ஒற்றிக்கொண்டு, அவரை விழுங்கி விடுபவள்போல் கருவிள மலர்களைப் போன்ற கண்களை அகல விரித்து வெறிக்கப் பார்த்தாள் பல்கீஸ்.

"இது நடக்கக்கூடிய காரியமா!"—நாத் தழுதழுக்க மன்றாடினார் ஷேக் பஷீர்.

"என்ன தடை வந்துடுச்சாம், கேட்கிறேன்! இந்தக் குட்டி தொலைஞ்சா எத்தனையோ ஷேக் குடும்பத்து ராசாத்திகள் வெள்ளிக் காசோடும் அழகோடும் நம்ம மஜீத் காலிலே விழக் காத்துக் கிடக்குது. அந்தப் 'பொறுக்கி' இன்னேக்கு ஊருக்குத் திரும்புதுன்னு நீங்க சொன்னீங்க. அதுக்குள்ளே பள்ளி வாசல் இமாமை வரவழைச்சு, ஊர் ஜமாத்தைக் கூட்டி, உங்க சம்பந்தி வெட்கமில்லாமல் பொய் சொல்லிச் செஞ்ச இந்த அயோக்கியத்தனமான நயவஞ்சக, 'பேமாணி' வேலையைத் தம்பட்டம் அடிச்சு, இந்தத் 'தலாக்லைச்' சட்டுப்புட்டுனு இந்த வாரமே முடிச்சுடுங்கோ. சொல்லிவிட்டேன்... ஆமாம். என்நெஞ்சைப் பிளந்து என் விருப்பத்தைக் காட்டிவிட்டேன்!"—பல்கீஸ் ஆக்ரோஷத்துடன் கர்ஜித்த குரலில் ஆவேசமும் கண்டிப்பும் கொடூரமும் கொழுந்துவிட்டெரிந்தன.

சிரம் கவிழ்த்து நின்ற ஷேக் பஷீர் பெரும் யோசனை யில் ஆழ்ந்துவிட்டார். அவர் நெற்றிக் கோடுகள் சுருங்கி யும் விரிந்தும் நெளிந்தாடின. வெடுக் வெடுக்கென்று கழுத்தை நெரித்து, நெடுமூச் செறிந்துவிட்டு, "பல்கீஸ்! உன் வேண்டுகோளை நிறைவேற்ற நான் தயங்கவில்லை" என்று பகர்ந்துவிட்டு, தலையைத் தொங்கப் போட்டார்.

பல்கீஸின் வதனத்தில் களிப்பின் வெறி தாண்டவ மாடியது. தன் முன் நிற்பவரை இறுகத் தழுவிக்கொள்ள வேண்டும் என்ற விபரீத ஆசை அவள் நரம்புகளை முறுக்கி விடவே, மது அருந்தியவள்போல் அவள் தடுமாறினாள். நிலவிய கண நிசப்தத்தைக் கிழித்துக்கொண்டு கிளம்பியது ஷேக் பஷீரின் குரல்—"பல்கீஸ்! உன் மகன் தன்மனைவிக் குத் 'தலாக்' கொடுப்பதற்கு முன்னால், உனக்கும் எனக்கும் விவாகரத்து நடந்தாக வேண்டும்; ஆமாம்!" என்றது.

இதைக் கேட்டதும் கோடானு கோடி பேரிடிகள் ஒன்று சேர்ந்து ஊழிக்காலத்துக் கோஷத்துடன் தலைமீது விழுந்தன போல் பல்கீஸ் உணர்ந்தாள். குருதி ஓட்டம் நின்றுவிட்டதுபோல் செயலற்று வாயடைத்து நின்று விட்டாள்.

"என்னுங்க, இப்படிப் பேசுறீங்க!" என்றாள் அவள் ஜீவனற்ற தொனியில்.

"நான் சொன்னதில் குற்றம் ஒன்றுமில்லை! நம் நிக் காஹ் ஆகி இந்த இருபத்தைந்து ஆண்டுகளாக என் இத யத்தில் புகைந்துகொண் டிருந்த ரகசியத்தை உன் காதில் நானே போடும்படியான தருணம் இப்போது வந்து விட்டது."

"என்ன?"—கம்மிய குரலில் வினவிக் கைகளைப் பிசைந்தாள் பல்கீஸ்.

"அந்தக் காலத்தில் நடந்த தமாஷான கதையைத் தான் நான் சொல்லப்போகிறேன். ஷேக் குடும்பத்தில் பிறந்தவள் நீ உனக்காக உன்னைப் பெற்றெடுத்தவர் ஒரு ஷேக் குடும்பத்துக் காளையை எங்கெங்கேயோ தேடி

அலைந்தார். தம் ஷேக் குடும்பத்தின் கௌரவத்தையும் கீர்த்தியையும் நிலை நிறுத்த அவர் பட்ட தொல்லைகள் என் தந்தையின் காதில் விழத் தப்பவில்லை.

"அந்த வேளையில் நாங்கள் வாலாஜாபாத்தில் வசித்து வந்தோம். நான் ஸ்கூல் பைனல் முடித்துவிட்டு ரெவின்யூ இன்ஸ்பெக்டராக உள்ளூரிலே வேலை பார்த்து வந்தேன். நீ பெரிய பணக்கார வீட்டு ஒரே பெண் என்றும், நல்ல அழகானவள் என்றும், ஷேக் குடும்பத்தைச் சேர்ந்தவள் என்றும் அறிந்த என் தந்தை, உன்னை என் கழுத்தில் கட்டி விட்டால், என் எதிர்கால வாழ்வு கவலையின்றி இன்பமயமாகக் கழியும் என்று திடமாக எண்ணினார்.

"எந்தத் தகப்பனும் இப்படி நினைப்பது உலக வழக்கந்தானே! தன் எண்ணத்தை ஒருவருக்கும் வெளியிடாமல், குடும்பத்தை அழைத்துக்கொண்டு இரவோடு இரவாக ஊரை விட்டுக் கிளம்பி உன் ஊரான கன்னியம் பாடிக்கு வந்து சேர்ந்தார் அவர்.

"நாங்கள் 'அந்நியர்" என்று கல்யாணப் பேச்சு வார்த்தைகளை நடத்த உன் தந்தை முதலில் மறுத்துவிட்டார். ஆனால் என் அருமை 'அப்பா ஜானின்' மனம் தளர்ந்துவிடவில்லை. என்ன என்னவோ 'சக்கர் மக்கர்' தந்திரங்களையும் கோல்மால்களையும் தைரியமாகக் கையாண்டு நம் இருவர் கல்யாணத்துக்கும் உன் தந்தை தலை ஆட்டும்படி எப்படியோ அவர் செய்துவிட்டார்! அதன் பின் நம் நிக்காஹ்வையும் நடத்தி, உன்னை மருமகளாகத் தன் கண்களாலேயே பார்த்து மகிழ்ந்தும் விட்டார்! அப்படி அவர் செய்த ஒரு மங்கள காரியத்தின் பலனாக பெரிய பாவ மூட்டையை அவர் சுமந்துகொண்டு ஆண்டவனிடம் செல்லும்படியாகிவிட்டது, பல்கீஸ்!"

"பாவமா!"—பல்கீஸின் நேத்திரங்கள் ராட்டினம் போல் சுழன்றன. சித்த சலனம் வாட்டியது.

"பாவம் மாத்திரம் அல்ல. என் பொருட்டுப் பெரிய துரோகங்கூடப் புரிந்துவிட்டு என் தந்தை 'மௌத்' ஆனார் (இறந்தார்)!"

''துரோகமா? யாருக்கு?''—பல்கீஸின் உதடுகள் உலர்ந்துவிட்டன. பீதி அவள் நெஞ்சில் புரையோடிற்று.

''உனக்கும், உன் தந்தைக்கும், உன் சிறப்பான ஷேக் குடும்பத்துக்குந்தான்!''

''ஆ!'' வென்று அலறிவிட்டாள் பல்கீஸ். அவ்வணிதையின் மனம் படக் படக் என்று கௌளி அடித்துக் கொண்டது.

தொடர்ந்தார் ஷேக்பஷீர்: ''உன் ஊரான கன்னியம் பாடியில் குடியேறுவதற்கு முன்னால் நாங்கள் வாலாஜாபாத்தில் வசித்து வந்ததை உனக்கு முன்பே நான் சொல்லி விட்டேன். அப்பொழுது என் தந்தையின் பெயர் 'ஷேக்' அன்வர் அல்ல, வெறும் அன்வர்தான்! என் பெயர் 'ஷேக்' பஷீர் அல்ல. வெறும் பஷீர்தான்! உன்னை வலையில் சிக்க வைத்து உன் சொத்தை அநுபவிக்க உன் ஊரிலே நாங்கள் காலடி வைத்த பிறகுதான் என் தந்தை 'ஷேக்' என்ற பட்டத்தை எங்கள் பெயர்களுடன் சேர்த்துக்கொண்டார். உன்னைப் பெற்றவரை மோசம் செய்ய, 'ஷேக்' அன்வரின் மகனை நான் 'ஷேக்' பஷீராக மாறி விட்டேன். உண்மையில் நாங்கள் உன்னைப்போல் ஷேக் குடும்பத்தைச் சேர்ந்த பாக்கியசாலிகளே அல்ல!''

வாயை இறுகப் பொத்திக்கொண்டு பேந்தப் பேந்த விழித்தாள் பல்கீஸ்.

''நீங்கள்...ஷேக்...இல்லையா?'' என்று நடுங்கிய வண்ணம் ஹீனக் குரலில் கேட்டாள் அப் பேதை. முகம் விகாரமாகி ஏதோ கசையடி வாங்கியவள்போல் அவள் தோற்றம் அளித்தாள்.

''சில்லறை வியாபாரம் செய்துகொண்டு நாடோடிகளாகத் திரியும் சாயபுமாருங்க நாங்கள். என் எதிர்கால வாழ்வைக் கருதி என் அருமைத் தந்தை செய்துவிட்ட இந்தப் 'புரட்டல்' உன் தந்தையின் காதில் கடைசிக்காலத்தில் எப்படியோ விழுந்து விட்டது.

"ஆனால் இந்த விஷயம் தாம் காலமாகும் வரையில் வெளிவராத வண்ணம் காப்பாற்றி விட்டார் அவர். அந்த 'மர்ஹூமி'ன் ஆத்மா சாந்தியடைய நான் அல்லாஹுத்தாலாவிடம் 'துவா' செய்கிறேன்! எல்லாவற்றையும் வெட்ட வெளிச்சமாக்கிவிட்டேன். அதே மாதிரியான சம்பவந்தான் நம் வாழ்க்கையில் இப்போதும் நடந்துவிட்டது! இனி உன் மருமகளை நீ என்ன செய்யத் தீர்மானித்தாலும் சரி... சொல்லி விடு."

முகத்தை இரு கைகளினாலும் மூடிக்கொண்டு சிறு குழந்தைபோல் விக்கி விக்கி அழலானாள் பல்கீஸ். தன் ஷேக் குடும்பத்து ஆசைச் 'சுடர்' தன் கண் முன்பே அணைந்ததைக் கண்டு அவள் நெஞ்சு 'ஓ' வென்று ஓலமிட்டது. இதயப் படபடப்பு ஓங்காரமிட்டது. கண்கள் பஞ்சடைந்தன. கால்கள் நிலைதடுமாறின. அடிபட்ட வேங்கை கறுவுவது போல் ஏதோ முணு முணுத்துக்கொண்டே தாரைதாரையாகக் கண்ணீர் வடித்தாள்.

**வெ**ளிவாசலில் மாடுகளின் சதங்கை ஒலி எழுந்தது. அதைத் தொடர்ந்து வாசற் கதவை யாரோ இடிக்கும் அரவம் பலமாகக் கிளம்பியது. ஷேக் பஷீர் கதவைத் திறந்தார். கையில் மிட்டாய்க் கூடையுடன் மஜீதும் அவன் துணைவி குல்ஸூமும் வீட்டிற்குள் நுழைந்தார்கள். காலையில் அனுப்பிய தந்தியின்படி அவர்கள் அன்றைக்கே ஊருக்குத் திரும்பிவிட்டார்கள்.

தன் அருமை மாமியாரின் பாதார விந்தத்தைத் தொட்டு வணங்கிய குல்ஸூம் நிமிர்ந்ததும், அத் தளிர்க் கொடியை அப்படியே இறுகத் தழுவிக்கொண்டு பாசத்தின் பாஷ்பத்தைப் பொழிந்தாள் பல்கீஸ். இந்தத் திவ்யக் காட்சியை கண்களை அகல விரித்துக் கண்ட ஷேக் பஷீர் புரிபடாத புன்னகையை அதரங்களில் எழுப்பிக் கொண்டு, சுவரை நெருங்கி மின்சார விளக்குகளின் 'ஸ்விட்'சுகளைத் தட்டி விட்டதும் பேரொளி எங்கும் பரவி நின்றது.

தம் சஹதர்மிணியின் மேல் மறுமுறை திருஷ்டியைச் செலுத்திவிட்டு, கோட் ஸ்டாண்டிலிருந்த தொப்பியைத்

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
அவ்வை
தி.க. சண்முகம் நூலகம்.

தரித்துக்கொண்டு தம் பிரத்யேக அறையில் புகுந்தார் பஷீர். உள் தாழ்ப்பாள் போட்டுக்கொண்டார். கடந்த ஒரு வாரமாகத் தம் இல்லத்தில் தாண்டவமாடிய பயங்கரச் சூறுவளி ஓய்ந்து மடிந்ததற்கு நன்றியாக அல்லாஹுத் தாலாவிடம் இரண்டு 'ரக்காத்' நவ்வில் நமாஸ் தொழுது விட்டுக் கைகளை உயரே நிமிர்த்திப் பிரார்த்தனை செய்தார்.

'யா ரஹ்மான்! அமீர், பக்கீர் என்ற ஏற்றத்தாழ்வை அகற்றியும், வகுப்புப் பிரிவு என்ற பாகுபாட்டைக் களைந் தெறிந்தும் விளங்கும் இஸ்லாம் சமூகத்தில் குறுகிய மனப்பான்மை கொண்ட ஒரு பேதையை எனக்குத் துணை வியாக நீ அளித்துவிட்டாய்! பாவம் அறியாத ஒரு கன்னியின் இல்லற வாழ்க்கையைக் குலைத்துவிடத் துணிந்த மற்றொரு பெண்ணின் கொடூர எண்ணம் நிறைவேருது தடுக்க நான் கையாண்ட முறை பாவமும் பாதகமும் ஆகும் என்று என் நெஞ்சுக்குத் தெரியாமல் இல்லை. என் வீட்டிக்குள் காலடி எடுத்து வைத்த அந்தக் கொழுந்தைக் காப்பாற்ற இந்த முதுமைப் பருவத்தில் என் வாழ்க்கைத் துணைவி யிடம் பொல்லாத பொய்யைக் கூறி, புரட்டுக் கதையைப் புனைந்து, கபட நாடகம் ஆடிய இந்தக் கிழவனை மன்னித்து விடு! யா...அல்லா!" என்று மிக்க உணர்ச்சியுடன் கூறி விட்டு இடத்தைவிட்டு எழுந்து, இலவம் பஞ்சு போன்ற மீசையை நாஸுக்குடன் நெருடிக்கொண்டே வெளி வராந்தாவிற்குச் சென்றுவிட்டார் டிபுடி கலெக்டர் ஷேக் பஷீர் சாஹேப்!

# பயணச் சீட்டு

அந்தப் பயங்கரச் செய்தியைச் செவி மடுத்த ரூஹுல்லா பலத்த அதிர்ச்சியுடன் ஒரு கணம் செயலற்று நின்றுவிட்டான். அவன் மதி மருண்டதும் மூச்சுத் தடைப் பட்டது. ரத்த நாளங்கள் தெறித்துவிடும்போல் இருந்தன. விழிகள் அக்கினிப் பிழம்பாக மாறின. தலை கிறு கிறுத்தது. அடிபட்ட வேங்கைபோல் கறுவிக்கொண்டு, அடக்க முடியாத ஆவேசத்துடன் காசீம் ராவுத்தரின் மனைக்குள் பாய்ந்தான். திடுதிப்பென்று தன் முன்பு வந்து நின்ற அந்தக் கொடியோனைக் கண்டதும் காசீம் ராவுத்தரின் நெஞ்சைப் பீதி 'லபக்'கென்று கவ்வியது.

"உங்கள் முடிவு என் காதில் விழுந்துவிட்டது. உங்கள் அந்தஸ்துக்கு மருமகனாக வாய்ப்பதற்கு நான் அருகதையற்றவன் என்று எண்ணிவிட்டீர்கள். இருக் கட்டும், மாமூ!" என்று ஆத்திரமும் ஆவேசமும் சுடர் விடும் சொற்களை ரூஹுல்லா உதிர்த்ததும் காசீம் ராவுத் தர் நடுங்கி விட்டார். ஏதோ சொல்லுவதற்கு வாயெடுத் தவர் நாகூர் மினாராபோல் சமைந்து நின்றுவிட்டார்.

தொடர்ந்தான் அந்த முரடன்; "ஒன்று மாத்திரம் நிச்சயம், மாமூ. பரீதாவுக்கு உரியவன் என்னைத் தவிர வேறு எவனும் இல்லை."

திருதிருவென்று விழித்த காசீம் ராவுத்தர், "அடே, நான் சொல்வதைக் கொஞ்சம் கேளப்பா" என்று தட்டுத் தடுமாறி விடுத்த வேண்டுகோளைத் துளிகூட லட்சியம் செய்யாது மேலும் பேசலானான் அந்த இளைஞன் :

"எத்தனை வருஷங்கள் செத்தொழிந்தாலும் சரி. உங்கள் பெண் என் சொத்து! வேறு யாரும் அதை அநுபவிக்க முடியாது."

"நான் ஒன்றும் உயில் எழுதி உன் அம்மாவுக்கோ உனக்கோ கொடுக்கவில்லை, தெரியுமா?" என்று கதறினார் காசீம் ராவுத்தர் ஓரே எரிச்சலுடன்.

"அதையும் இப்போதே சொல்லிவிடப் போகிறேன். என் விருப்பத்திற்கு விரோதமாக மாத்திரம் ஏதாவது அசம்பாவிதம் நடந்துவிட்டால் இதே தெருவில் இரண்டு தலைகள் உருண்டோடும்."

"அட பாவி!" ஸ்தம்பித்து விட்டார் ராவுத்தர்.

"நான் சொன்னது நடந்தே தீரும்!" என்று ஆர்ப்பரித்துக்கொண்டு, பற்களிலும் விழிகளிலும் குரூரம் தெறிக்க எகிறிக் குதித்து இடுப்பில் செருகியிருந்த பிச்சுவாவை வெடுக்கென்று எடுத்துத் திண்ணைமீது ரூஹுல்லா சினத்துடன் வீசி எறிந்ததும், ராவுத்தரின் சப்த நாடிகளும் 'கப்சிப்' ஆகிவிட்டன. விழிகள் ரங்கராட்டினம் போல் சுழன்றன. வழுக்கைத் தலையில் பீரிட்டெழுந்த வேர்வை, கோடை வெள்ளம்போல் பிரவாகம் எடுத்தது.

நிலைப்படியைத் தாண்டிக் கூடத்தில் காலடி வைத்ததும் அங்கே அவர் கண்ட காட்சி அவரை அதிர வைத்து விட்டது. கண்ணீரும் கம்பலையுமாகக் கதவின் இடுக்கில் நின்றுகொண்டிருந்த தன் இல்லக்கிழத்திமீது அவர் மங்கிய பார்வை விழுந்ததும் ராவுத்தரின் மனம் படபடத்தது.

"கேட்டாயா, ஆமினா? உன் மகள், அவளுக்கு வருகிறவன் இவர்கள் உயிர்களுக்கு உலை வைக்கப் போகிறானும் அந்தச் சைத்தான் பயல்" என்று காசீம் ராவுத்தர் ஜீவனற்ற தொனியில் பேசியதும் அந்த அரிவையின் குவளைக் கண்கள் கலுழ்ந்தன.

"பரீதா பெண்ணாகப் பிறந்து இப்படி நம்மைக் கொடுமைப் படுத்துகிறாளே. அட அல்லாவே!" என்று மனமொடிந்து பிலாக்கணமிட்ட ஆமினாவின் கண்களி

லிருந்து மளமளவென்று மடை திறந்த வெள்ளம்போல் கண்ணீர் மல்கிற்று.

தேங்காய்க்கடைக் காசீம் ராவுத்தருக்கு அவருடைய சகோதரியின் மகன் ரூஹுல்லா மருமகனாக வாய்க்கப் போகிறான் என்று ஓயாது பேசிக்கொண்டிருந்த தம்பிக் கோட்டையில் உள்ள கிழத் 'துப்பட்டிகள்' நிகழப் போகும் அந்த நிக்காஹ்வின் நறு மணம் கமழும் புலவுச் சோற்றை உண்டு களிக்க ஆவலுடன் காத்துக்கொண்டிருந்தன. என்றைக்குப் பரீதா பேகம் குவா குவா என்ற குதலைக் கூப்பாட்டை இந்தக் குவலயத்தில் எழுப்பினாளோ, அந்தச் சுபவேளையில் அம்மதலையின் செவிகளிலே 'அல்லாஹு அக்பர், அல்லாஹு அக்பர்' என்ற தெய்விகச் சொற்களை உள்ளூர்ப் பள்ளிவாசல் மோதினார் வார்த்தபின், பேரீச்சம்பழத்தைப் பாலிலே தேய்த்து அக்குழவியின் மாதுளை நாவிலே நாஸுக்காக உராய்ந்தவுடன் அப் பார்ப்பின் பளிங்கு வதனத்திலே தெய்விக மந்தகாசம் கிளர்ந்து மறைந்தது.

தாயின் பக்கத்தில் கிடந்த அந்தச் சேயைப் பாத்திமா பீ அன்போடு வாரியெடுத்து அதை மார்போடு அணைத்துக்கொண்டதும், அந்த வெள்ளரிப் பிஞ்சு தன் ஓலத்தைக் கிளப்பிற்று.

"அடி என் பெண்ணே! அப்படி ஏன் கீச்சென்று கத்துகிறாய்? உன்னை எதிர்பார்த்துத் தானே மூன்று வருசங்களுக்கு முன்பே உன் ரூஹுல்லாவைப் பெற்றெடுத்து வைத்திருக்கிறேன்!" என்று களிப்புடன் கூறி, பரீதாவின் ரோஜாக் கன்னங்களில் கணக்கில்லாத முத்தங்களைச் சொரிந்தாள் பாத்திமா பீ.

"வாயை மூடாமல் அப்படியே நில்லுங்கள், ஆச்சி. உங்கள் எண்ணம் ஆண்டவன் அருளால் நிறைவேறட்டும்" என்று நல்வாழ்த்துப் பகர்ந்து ஒரு பிடி அஸ்காச் சர்க்கரையைத் தன் நாத்தனாரின் வாயில் போட்டுவிட்டாள் குழந்தையின் தாய். 'அச்சிக்' என்ற வெண்கல ஒலியுடன் மங்களத் தும்மலை உதிர்த்த அந்தக் குழந்தையும் தன் கால்களை உதறிக்கொண்டது.

இந்தச் சுப வைபவம் நிகழ்ந்து பதினாறு வருஷங்கள் தத்தித் தத்தி மறைந்துவிட்டன. தன் மாமனின் இல்லத்தில் ரூஹுல்லா தங்கு தடையின்றி அவிழ்த்துவிட்ட ஞமலிபோல் தாராளமாக நுழைவதும், அங்கே திரை மறைவில் இருந்த மான்குட்டியுடன் கண்ணு மூச்சி விளையாடுவதும், இவர்களுடைய கேளிக்கை, வரம்பை மீறுவதும், அப்போது ராவுத்தர் தம் கில்லாடி மாப்பிள்ளையை, "அட போக்கிரிப் பயலே, போடா வெளியே!" என்று பெருமையுடன் விரட்டி அடிப்பதும்-இத்தகைய நேத்திரானந்தமான காட்சிகளைப் புகையிலை அசை போட்டுக் கொண்டு பொல்லாப்புகளை ஒலி பரப்பித் திரியும் பாட்டிமார்கள் கவனித்து வரத் தவறவில்லை.

தம் செல்வியின் வதுவையை விரைவில் முடித்துவிடக் காசீம் ராவுத்தர் துடித்துக்கொண் டிருந்த வேளையில் கலிபுருஷனுக்கு நிகரான 'சைத்தான்' தன் கொடுமைச் சேஷ்டைகளைத் தொடங்கலானான்.

"சாயபு, ஒன்றே ஒன்று, கண்ணே கண்ணு என்று ஓரே ஒரு கிளியை அந்தச் சுவாமிமலை வடிவேலன் உங்களுக்கு அருளியிருக்கிறான். அந்த மாணிக்கத்தைப் பெறுவதற்கு நாகூருக்கும் முத்துப்பேட்டைத்தர்க்காக்களுக்கும் நீங்கள் அடித்த பயணங்கள் இன்னும் எனக்கு ஞாபகம் இருக்கின்றன. நிலைமை அப்படி இருக்க வெள்ளையப்பன் புரளுகிற கௌரவமான இடமாகப் பார்க்காமல், பாசி பிடித்த குட்டையிலே பிள்ளையைத் தள்ளிவிடப் பார்க்கிறீர்களே! இது நியாயமா என்று கேட்கிறேன்?" என்று காசுக்கடைக் கும்பகர்ண முதலியார் ஒரு தீப்பொறியை ஊதிவிட்டதும், ராவுத்தரின் நெஞ்சு சுரீலென்று தகித்தது. குடும்ப நண்பர் மொழிந்த சொற்களில் பொதிந்து கிடந்த உண்மையை அவர் புரிந்துகொள்ள ஓர் இமைப் பொழுதே பிடித்தது.

காலாடிகளின் கூட்டத்திற்குக் காவலனாகவும் சோதாக்களின் சங்கத்திற்குப்போஷகனாகவும் ரூஹுல்லா தன் வாழ்க்கையைப் போக்கி வருவதை ராவுத்தா கவனித்துத்தான் வந்தார். சுற்றுப்புறம் உள்ள குக்கிரா

மங்களில் இரண்டோர் ஆசைநாயகிகள் அவனுக்கு இன்பப் போதையை ஊட்டி வந்ததாகவும் அவர் செவிகளில் லேசாக வீழ்ந்தது. அது மட்டும் அல்ல. 'கொட்டைப் பாக்கு வீட்டு மௌல்வி சாஹேப் உள்ளூர்ப் பள்ளி வாசலில் ஜமா நமாஸை நடத்த லாயக்கானவரா?' என்ற தாடிகள் சிலிர்க்கும் பிரச்னையை வலுப்படுத்திச் சாந்தம் நிலவும் ஊரையே இரு கோஷ்டிகளாகப் பிரித்துத் தன் திறமையான திருப்பணிகளை ரூஹுல்லா காட்டத் தொடங்கியதும், காசீம் ராவுத்தர் உண்மையிலேயே நடு நடுங்கி வெலவெலத்துப் போனார்.

ரூஹுல்லாவின் மூர்க்கத்தனமும் போக்கிரித்தனமும் நாளடைவில் பொசுங்கிவிடும் என்று நினைத்த அவர், அவனுக்கு 'நிக்காஹ்'வை முடித்துவிட்டால் வாலிப வேகம் வாடிவிடும் என்று நம்பியும் வந்தார். ஆனால் குடும்ப நண்பர் இடித்துக் கூறிய விஷயம் அவரை ஆழ்ந்த அவந்தரையில் மூழ்கடித்து விட்டது. பதினேழு வருஷங்களாகக் கட்டி வந்த மனச் சுவரை இடித்துத் தள்ளுவதா? கூடப் பிறந்த சகோதரிக்கு, வாக்குக் கொடுத்த தான் எந்தத் தைரியத்துடன் அதை மீற முடியும்? ராவுத்தரின் அறிவு குழம்பியது. சிரத்தைப் பலமாக அழுத்திக் கொண்டு சித்தப்பிரமை கொண்டவர்போல் வீட்டிற்குள் நுழைந்து, வாசற்கதவைத் படீரென்று பலமாகச் சாத்தினார்.

"ஆமினா, பெற்றவர்களாகிய நாமே பரீதாவின் எதிர் காலத்தை நினைக்காவிட்டால், வேறு யார்தாம் சிரத்தை காட்டுவார்கள்?" என்று தொடங்கிய காசீம் ராவுத்தர் தம் சிநேகிதர் கூறிச் சென்றதைத் தம் நாயகியின் காதில் போட்டும் விட்டார்.

"இஸ்லாத்தில் பிறந்த நாம் கொடுத்த வாக்கை அழிப்பது நல்லதாகுமா?" என்றாள் துணைவி.

"அதுதான் என்னையும் வாட்டி வதைக்கிறது."

"பெண் பிறந்த நேரத்திலே உங்கள் அக்கா காட்டிய ஆசையை மறந்துவிட்டீர்களா? அந்த வேளையில் இதே

என் கையாலே அவர்கள் வாயில் ஒரு பிடி சர்க்கரை போட்டேனே!''

''அதற்கு என்ன செய்வது?'' கைகளைப் பிசைந்தார் ராவுத்தர்.

''நாம் தவறி நடந்துவிட்டால் அந்த நல்லவளின் ஆவி நிம்மதியில்லாமல் அலையுமே. அந்தப் பாவம் நமக்கு வேண்டாம். ஊரார் நாக்கு நூறு உளறும். ரூஹுல்லா வுக்கே முடிச்சிடுங்கள்'' என்று குலவிளக்கு மன்ருடி முடித்ததுதான் தாமதம், தடாலென்று வாசற் கதவைத் திறந்துகொண்டு திடுமென்று உள்ளே புகுந்த ரூஹுல்லா கதவின் பின்புறத்தில் இரண்டு நிமிஷங்கள் தங்கிவிட்டு மறுபடி வெளியே பொய்விட்டான். எதிர்பாராத விதமாக நடந்த இந்த விபரீதத்தைக் கண்ட ராவுத்தர் சட்டென்று மிதியடிக் கட்டைகளை மாட்டிக்கொண்டு வெளிவாச லுக்கு உடனே விரைந்தார். நாலைந்து தடியன்கள் அங்கும் இங்கும் ஓடுவதனுலும், அண்டை வீடுகளின் கதவுகளும் சாளரங்களும் சடசடவென்று மூடிக்கொள் வதனுலும் உண்டான பேரிரைச்சலைக் கேட்டு ராவுத்தரின் நெஞ்சு திக்கென்றது.

''எசமான், நிலைமை மோசமாகப் போய்விட்டது. ஒரு கேடு கெட்ட கூத்தி விஷயமாக உங்கள் மருமகப்பிள் ளைக்கும் மரவக்காடு ஆசாமிகளுக்கும் அடிதடி வந்து விட்டது. கௌரவமான வீட்டுப் பிள்ளையின் புத்தி ஏன் இப்படி மேயப்போகிறதோ! எசமான்'' என்று அங்க லாய்த்தான் வண்டிக்கார முனிசாமி.

உன்மத்தம் பிடித்தவர்போல் வீட்டிற்குள் பாய்ந் தார் ராவுத்தர். ''ஆமினு......ஆமினு!'' என்று கூரை வீழ்ந்துவிடும்படி அவர் கர்ஜித்ததும், அலறிப் புடைத்துக் கொண்டு அடுக்களையிலிருந்து ஓடிவந்த அவர் மனைவி, தன் கொழுநனின் கோலத்தைக் கண்டு மலைத்துப் போனுள்.

''உன் மகள் எங்கே?'' என்று அலறினுர் ராவுத்தர், வெறி பிடித்தவர்போல்.

"கொல்லைப் புறத்திலே மீனை ஆய்ந்துகொண்டிருக்கிருள்."

"அவளை அப்படியே தூக்கிக் கிணற்றிலே போட்டுவிடு. உன்னுலே முடியாமற்போனுல் நானே அதைச் செய்து முடித்துவிடுகிறேன்."—ராவுத்தரின் உடல் பதறியது.

தொடர்ந்தார். "ஒரு போக்கிரி, துரோகி, வெட்கங் கெட்டவனுடைய காலில் பரீதாவை லாடமாக அடித்து அவள் வாழ்வைக் குட்டிச்சுவ ராக்குவதைவிட இதைச் செய்துவிட்டால் நமக்கு மோட்சம் கிடைத்துவிடும்."

"பதருதீர்கள்!" என்று கணவனைச் சாந்தப்படுத்திஞள் குலதெய்வம்.

"நீயும் உன் நாத்தியும் ஹைதர் காலத்திலே பேசிக் கொண்டதை அடுப்பிலே போட்டுப் பொசுக்கு. உனக்கு மருமகனுக வரப் போகிறவனின் இரு கால்களையும் வெட்டிப்போட நாலைந்து வேட்டை நாய்கள் நம் தெருவிலே அலைகின்றன, ஆமிஞ. அந்தக் கேடு கெட்ட மிருகம் நமக்கு வேண்டாம். வேண்டவே வேண்டாம்."—ராவுத்தரின் கண்கள் குளங்களாயின. மனைவியின் தோளைப் பற்றிக்கொண்டு தள்ளாடித் தள்ளாடி நடந்து, 'யா அல்லா!' என்று ஹீனக் குரலில் கூறிக்கொண்டே கட்டிலின்மீது தடாலென்று சாய்ந்தார்.

காசிம் ராவுத்தர் செய்த முடிவு காட்டுத் தீப்போல் ஊரெங்கும் பரவினதும், ரூஹுல்லா திகைத்துவிட்டான். அவமானம் அவன் இருதயத்தைத் துண்டு துண்டாக வெட்டியது. ஏமாற்றம் அவன் உடலை நறுக்கித் தள்ளியது. வஞ்சப் பசி நெஞ்சிலே உருவாகியது. தன் மாமனை நேரில் சந்தித்துப் பயமுறுத்தியபின் ஊரில் உள்ளோரை மிரட்டித் தனக்கு உரியவளை வேறு எவனும் கவராதபடி ஏற்பாடு செய்துவிட்டுத் தான் மாயமாக மறைந்தான் அந்த மூர்க்கன்.

ரங்கூனைப் போய் அடைந்த ரூஹுல்லா இரண்டொரு மாதங்கள் ஏதேதோ சில்லறைப் பணிகளைச்

செய்து வந்தான். ஊதியமாகக் கிடைத்த வெள்ளிகள் அவன் சிற்றுண்டிக்கும் பீடிகளுக்குமே சரியாக இருந்தன. அவன் அக்கரையில் காலடி எடுத்துவைத்த நோக்கமோ, நன்ருக உழைத்துச் சம்பாதித்துப் பணமூட்டையுடன் தாயகத்திற்குத் திரும்பித் தன் மாமன் மகளை எப்படியாவது அடைந்தே தீர வேண்டும் என்பதுதான். அதற்காகக் கையாள வேண்டிய அசகாய முறைகளை அவன் தீவிரமாகச் சிந்தித்துக்கொண் டிருந்த வேளையில், முறுக்கிய மீசையுடன் கொழுகொழுவென்றிருந்த அவன் கட்டுமஸ்தான உடலின் வனப்பிலும் மிடுக்கிலும் நையாண்டிப் பேச்சிலும் ஓர் மாடப்புரு தன் இள நெஞ்சைப் பறி கொடுத்துவிட்டது; விதி புரிந்த திருவிளையாடல் என்று தான் சொல்ல வேண்டும்.

சிங்லீ தனக்குச் சொந்தமான கடைகளின் வாடகையை வசூலிப்பதற்கு ரூஹுல்லாவை வேலையில் அமர்த்தியபோது, அந்த இளைஞனுடன் நெருங்கிப் பழகுவதற்கு அந்தப் பர்மாப் பதுமைக்குப் பல அருமையான சந்தர்ப்பங்களைக் காலதேவன் தாராளமாக வழங்கலானுன். செல்வத்தில் புரளும் தன் எசமானியின் விசித்திர மனப் போக்கைப் புரிந்துகொண்ட அந்தத் தம்பிக்கோட்டைச் சிங்கம் வலுவில் தன்னை அடையும் சுந்தரியைத் தன் சுயநலத்துக்குத் துஷ்பிரயோகம் செய்யத் திட்டமிடலானுன். அபிமானம் என்ற ஊஞ்சலில் அவளை வைத்துத் தாலாட்டி நயவஞ்சக அரவணைப்பில் இன்ப மூட்டிக் கிடைத்ததைச் சுருட்டிக்கொண்டு கப்பல் ஏறிவிட வேண்டும் என்ற திட்டத்தை அவன் அறிவு உருவாக்கிக்கொண் டிருந்த பொல்லாத நேரத்தில், "ரூஹு, நீங்கள் வந்து நான்கு மாதங்கள் தாம் ஆகின்றன. எனக்கு என்னவோ நான்கு வருஷங்களாகப் பழகிவிட்டதுபோல் தோன்றுகிறது. இந்தப் பிணைப்பு நிரந்தரமாக அமைய வேண்டும் என்பதுதான் என் ஆசை" என்று சிங்லீ கொவ்வை இதழ்களில் குறுநகை தவழ, தன் இச்சையை மறைமுகமாக வெளியிட்டதும் ரூஹுல்லாவின் மனம் அலைபாய்ந்தது.

"ஏதோ உங்கள் தயவினால் இந்தத் தமிழன் வயிறு வளர்க்கிறான்" என்றான் ரூஹுல்லா அடக்கமாக.

"என் தயவு இன்றுடன் முடிந்துவிட்டது. இனி உங்கள் தயவுக்குத்தான் இந்த ஏழை ஏங்கி நிற்கிறாள்!" கிள்ளைமொழி பேசி, அந்த ஆண்மகனின் கொள்ளை அழகை மானசிகமாகப் பருகி, கள்ள விழியை அந்த எழிலரசி வீசினதும் ரூஹுல்லா தடுமாறினான்.

அவள் தொடர்ந்தாள், "நீங்கள் புரிந்த சேவைக்கு என் நன்றியை எந்த விதத்தில் காட்டுவது என்று தெரியாமல் தவிக்கிறேன், ரூஹு."

"ஒன்றுக்கு மூன்றாக என் ஊதியத்தை உயர்த்திவிட்டீர்களே!"

"அதையும் நிறுத்திவிடப் போகிறேன்."

"வேலைக்குச் சீட்டா...?"

"ஆமாம்" என்று கலகலவென்று சிரித்துக்கொண்டே அந்த ஆண்மகனின் இரும்புத் தோள்களிலே தன் தளிர்க் கரங்களை வீசி, "ரூஹு, என் உள்ளத்தைக் கிள்ளி எடுத்துக்கொண்ட நீங்கள், இந்த அபலையை உங்கள் வாழ்க்கைத் துணைவியாக ஏற்றுக்கொள்ளத் தயங்கக் கூடாது என்று நெடுமூச்செறிந்த வண்ணம் கொஞ்சிய அந்த அஞ்சுகம், அணைப்பை மேலும் இறுக்கிய வுடன், குபீரென்று ஓர் கட்டுக்கு அடங்காத உணர்ச்சி அவன் நரம்புகளில் ஊர்ந்தது. அந்த இளைஞனுடைய உதடுகளுடன் உறவாட அவள் செம்பவழ அதரங்கள் துடித்தன. சரசமாட அவள் விழிகள் ஏங்கின. மேலும் பேசலானாள் அந்த அணங்கு, "உங்கள் நாட்டிலிருந்து எத்தனையோ பேர்கள் இங்கே வருகிறார்கள். அவர்களில் இரண்டொருவர் என்போன்ற பேதைகளின் உள்ளங்களைத் தூண்டில் போட்டுச் சிக்கவைத்து விடுகிறார்கள். சில காலம் கூடிக் குலாவி மகிழ்ந்துவிட்டு நன்றாக அநுபவித்து இறுதியில் எங்களைப் புறக்கணித்துவிட்டு மறைந்து விடுவதும் சகஜந்தான். அப்படிப்பட்ட துரோகத்தை உங்களிடம் நான் எதிர் பார்க்க மாட்டேன். வேண்டு

மானால் என் நெஞ்சிலே கத்தியைப் பாய்ச்சி என் உயிரை யும் அன்புடன் எடுத்துச் சென்றுவிடுங்கள்'' என்று மிக்க உணர்ச்சியுடன் வேண்டிக்கொண்ட கட்டழகு தாலாட்டும் பட்டு நிகர் மேனி கொண்ட அந்த வனிதை ரூஹுல்லாவின் காலடிகளில் வீழ்ந்தாள்.

காதலன் விருப்பப்படியே இஸ்லாம் மதத்தைத் தழுவி, 'குல்ஸூம்' என்ற புதிய நாமகரணத்துடன் ரூஹுல்லாவின் பீவியாக மாறிய சிங்ளீ, தன் எட்டாவது மாத இல்லற வாழ்க்கையைக் கடத்தி வந்த சமயத்தில் ஒரு விபரீதம் தலைகாட்டியது. பரீதாவுக்குப் பரிசம் போட்டு விட்டதாகவும் இன்னும் இரண்டு வாரங்களில் நிக்காஹ் நடத்திவிடப் போவதாகவும் அறிவித்த-தம்பிக்கோட்டை யிலிருந்து கடல் கடந்து வந்த-நண்பனின் கடிதம் ரூஹுல் லாவை அவலக் கடலில் மூழ்கடித்து விட்டது. அவன் சித்தம் கலங்கியது. உதிரத்தின் ஓட்டம் உறைந்துவிட் டது. 'எனக்குச் சேர வேண்டியவளை வேறு ஒருவன் என் கண் முன்பே தட்டிக்கொண்டு செல்வதா?' என்று எண்ணியதும் ஏக்கமும் அனல் மூச்சும் அவன் உடலை உலுக்கிவிட்டன.

''எப்படியாவது இந்தக் கல்யாணம் நடைபெருமல் நிறுத்திவிட வேண்டும். அப்படித் துரதிருஷ்ட வசமாக முடியாவிட்டால், மணத் தம்பதிகளின் உயிர்களை உறிஞ்சி வஞ்சப் பசியைத் தீர்த்துக்கொள்ள வேண்டும்!'' என்ற பிரதிக்ஞை உள்ளத்தில் குமிழியிட்டதும், அவன் கரங்களும் தொடைகளும் கட்டுக்கு அடங்காத உணர்ச்சிப் பெருக்கத்தால் வெடவெடவென்று அடித்துக்கொண்டன. பித்துப் பிடித்தவன்போல் ஏதோ முணுமுணுத்துக் கொண்டே பெட்டியைத் திறந்தான். அதில் இருந்த துணிமணிகளை வெளியே வீசி எறிந்தான். பெட்டியின் அடித்தளத்தில் கிடந்த பொருள்களின்மீது அவன் கொடூ ரப் பார்வை வீழ்ந்ததும் விழிகள் ரங்கராட்டினம்போல் சுழன்றன. தடித்த உதடுகளில் கிளர்ந்த முறுவல் கலைக் கூத்தாடிற்று. தன் லட்சியம் நிறைவேருது போனால் என்ன விபரீதம் விளையும் என்று தன் மாமனை முன்பு ஒரு நாள் எந்த ஆயுதத்தை எடுத்துக்காட்டிப்

பயமுறுத்தினானோ, வஞ்சம் தீர்ப்பதற்காக இத்தனை நாட்களாக எந்தப் பொருளைப் பாதுகாத்து வந்தானோ, பளபளத்த அந்தப் பிச்சுவாவை அவன் பெட்டியிலிருந்து வெளியே எடுத்தபோது அவன் மேனி சிலிர்த்தது. தன்னையும் அறியாது உரக்கச் சிரித்துவிட்டான். பெட்டியையும் படுக்கையையும் எடுத்துக்கொண்டு துறை முகத்தை நோக்கி ஆவேசத்துடன் புறப்பட்டான்.

யுத்தகால மாதலால் ஒன்றுக்கு இரண்டாக வெள்ளிகளை லஞ்சமாக வாரியிறைத்துப் பயணச் சீட்டைப் பெறுவதில் அவன் 'பிறைக்கொடி' நாட்டியதும், தன் மாமன் மகளின் குழலும் தன் பிடிக்குள் சிக்கிக்கொண்டதாக மனப்பால் பருகிச் செருக்கோடு நின்றான். துறைமுகத்தை விட்டுக் கப்பல் கிளம்புவதற்கு மூன்று மணி நேரம் தாமதமாகும் என்று அறிந்தவுடன் வதனம் எங்கும் வெற்றிப் புன்னகை தாண்டவமாட, வஞ்சப்பசி அடி வயிற்றைக் கலக்க, நெஞ்சு படக் படக்கென்று கௌளி அடித்துக் கொள்ள, சித்தப் பிரமை பிடித்தவன்போல் மனமும் கால்களும் சென்ற திக்கெல்லாம் அலைந்தான். கால்கள் சோர்ந்தவுடன் அருகில் கிடந்த சிமெண்ட் பெஞ்சில் மிக்க அலுப்புடன் சாய்ந்தான். மற்றோர் ஓரத்தில் எவனோ வேறு ஒரு பிரயாணி வீற்றிருப்பது அவன் பார்வையில் வீழ்ந்தது. உடுத்திருந்த உடையின் மூலம் அவனும் தன்னைப்போல் தஞ்சைவாசி என்று ஊகித்துக்கொண்டான். "அண்ணே, நீங்களும் கப்பல் ஏறுகிறீர்களா?" என்று கம்மிய குரலில் வினவினான் ரூஹுல்லா.

"ஏற வேண்டியதுதான், தம்பி. ஆனால் என் பாழும் விதி என் நெஞ்சிலே ஈட்டியைப் பாய்ச்சிவிட்டது!" என்று மனம் வெதும்பி அந்த ஆசாமி பதிலளித்ததும், ரூஹுல்லாவுக்கு என்னவோபோல் இருந்தது.

"நானும் நீங்களும் ஒரே மண்ணில் பிறந்து, ஒரே ஆற்றுத் தண்ணீரைக் குடித்தவர்கள்தாம்! அல்லவா? மனசிலே பாரமாகக் கப்பியிருக்கும் கவலைச் சுமையை இறக்க வேண்டுமானால், நடந்ததை வாய்விட்டுச் சொல்லுங்கள், அண்ணே" என்றான் ரூஹுல்லா.

கழுத்தைச் சுற்றியிருந்த பட்டுக் கைக் குட்டையினால் நீர் துளித்த நேத்திரங்களைத் துடைத்துக்கொண்டு, "இந்தக் கப்பலில் மட்டும் நான் கிளம்பாவிட்டால் எவ்வளவோ அனர்த்தங்கள் அக்கரையில் நடந்துவிடப் போகின்றன" என்றான் அந்த ஆசாமி, மிகவும் மனம் ஒடிந்தவனாய்.

"பாஸ்போர்ட், வீசாத் தகராறு?"

"அதெல்லாம் ஒன்றும் இல்லை. நாசமாய்ப் போகிற டிக்கெட்தான் சமயத்தில் கிடைக்காமல் ஏமாற்றி விட்டது.

"அடுத்த பதினைந்தாம் தேதிக் கப்பலிலே ஏறுங்களேன்!"

"அது என்றைக்குப் புறப்படுகிறதோ அன்றைக்கு என் ஊரிலே கல்யாணம் நடக்கப் போகிறது!"—மிக்க வேதனையுடன் தன் தலையில் ஓங்கி அடித்துக்கொண்டான் அந்த ஆசாமி.

"கல்யாணமா! யார் நிக்காஹ்?"

"அந்தத் துரதிருஷ்ட மாப்பிள்ளை நான்தான் தம்பி! எல்லாம் என்னைப் பெற்றவர்கள் செய்த வேலை இது. அம்மாவுக்கு உடம்பு சரியில்லையாம். என் 'நிக்காஹ்'வை நடத்திப் புலவுச் சோற்றை உண்டு களித்து, மருமகளைக் கண்ணால் பார்த்துவிட்டுக் கண்ணை மூட வேண்டுமென்று அவர்களுக்கு ஆசை திடீரென்று வந்துவிட்டதாம். எனக்குக்கூட முன்னும் பின்னும் தெரிவிக்காமலே எல்லா ஏற்பாடுகளையும் செய்து, 'நிக்காஹ்' நாளும் குறித்துச் செய்தியை மாத்திரம் அனுப்பியிருக்கிறார்கள். கூத்தைப் பார்த்தீர்களா! இந்த உலகில் எல்லாம் தலைகீழாகப் போய்விட்டன."

"அப்படிச் சொல்லாதீர்கள். பெற்றவர்கள் வைத்த ஆசைக்கு என்ன செய்வது? சரி, பார்த்த இடம் எந்த ஊராம்?" என்று சாவதானமாகக் கேட்டுப் பீடியைப் பற்ற வைத்தான் ரூஹுல்லா.

"அந்த வேடிக்கையையும் கேளுங்கள். ஊர் பேர் தெரியாத இடத்திலே போய் ஒரு பொம்மையை எனக்குப் பிடித்திருக்கிறார்கள். நானோ கொரடாச்சேரி வாசி. பதினைந்தாம் தேதி கல்யாணம். கப்பலிலே இடம் இல்லை. நானோ மாப்பிள்ளை. அழுவதா சிரிப்பதா என்று தெரியவில்லை. நான் சொல்வது நிசமா இல்லையா என்று இதைப் பார்த்தால் தெரிந்துவிடும்" என்று நெஞ்சு இரு கூறுகளாகப் பிளந்துவிடும்போல் ஏளனப் புன்னகையுடன் கதறிக்கொண்டு குல்லாவை வெடுக்கென்று கழற்றி அதில் செருகியிருந்த மஞ்சள் நிறப் பத்திரிகையை எடுத்து நீட்டினான், அவலத்தில் அவதிப்பட்ட அந்த மாப்பிள்ளை.

அந்தப் பத்திரிகையில் அடங்கிய செய்தியை ரூஹுல்லா படித்ததுதான் தாமதம்; அவன் ஸ்தம்பித்து விட்டான். நாடித் துடிப்பு ஒரு கணம் நின்றுவிட்டுப் பலமாக அடிக்கத் தொடங்கியது. சித்தம் துடித்தது. ரத்தம் கொதித்தது. நெற்றி வேர்த்தது.

"அப்படியென்றால் அந்தப் பயல் நீதானா? எவ்வளவு மன அழுத்தம் உனக்கு இருக்க வேண்டும்!" என்று ரூஹுல்லா, விழிகள் தீவட்டிகளாக மாற, ஆத்திரம் மேலிட ஆரவாரித்ததும் அந்த ஆசாமி விதிர்விதித்துப் போனான்.

"என்ன சொல்கிறீர்கள், அண்ணே?" என்றான், அந்த அப்பாவி ஒரே பீதியுடன்.

"அட துரோகி, என் கண்ணைப் பிடுங்கிவிட்ட உன்னைக் குழி வெட்டி உயிரோடு புதைக்க வேண்டும்" உன்மத்தம் கொண்டவன்போல் நாத் தழுதழுக்கக் கதறிவிட்டுப் பற்களை நறநறவென்று ரூஹுல்லா கடித்துக் கொண்டதும் அந்த ஆசாமி விரல்களை நொடித்துக் கொண்டு திருதிருவென்று விழித்தான்.

"தாறுமாறாக என்ன என்னவோ பேசுகிறீர்களே, அண்ணே! என்ன ஆச்சு உங்களுக்கு?" என்றான் அந்தப் பிரயாணி, ஒரே குழப்பத்துடன். பயங்கரமான

மயான அமைதி சில விநாடிகள் அவ்விடத்தில் குடி கொண்டு கலந்தபின் ரூஹுல்லாவின் சிரம் தொங்கி விட்டது. அவனிடம் கொழுந்து விட்டெரிந்த ஆவேசம் பொசுங்கிச் சாம்பராயிற்று. கண்கள் பஞ்சடைந்தன. காதுகள் மந்தமாயின. கால்கள் பின்னிக்கொண்டன. எதிரில் நிற்பவனைத் தலை நிமிர்ந்து பார்க்க அவனுக்குத் தைரியம் இல்லாமல் போயிற்று.

"என்ன என்னவோ பேசிவிட்டேன். என்னை மன்னித்து விடு, அண்ணே. உனக்கு ஓர் உபகாரம் செய்யப் போகிறேன். எந்தப் பயணச் சீட்டை நான் வாங்கினேனோ, அதை எடுத்துக்கொண்டு இந்தக் கப்பலிலே நீ ஏறிவிடு" என்று நாக்குழற ஜீவனற்ற குரலில் தட்டுத் தடுமாறிச் சொல்லிய ரூஹுல்லா, தன் டிக்கெட்டை எடுத்து அந்த ஆசாமியின் கையில் திணித்தான்.

"இதற்கு எவ்வளவு பணம் ஆச்சு? நான் கொடுத்து விடுகிறேன், அண்ணே!" என்று குதூகலம் தாளாது குதித்த அந்த ஆசாமி வினவிக்கொண் டிருக்கையில், ஒரு வார்த்தையும் பதில் கூறாமல் நேத்திரங்களிலே நீர் மல்க, நெஞ்சிலே அவலம் கொழுந்துவிட் டெரிய, இருதயத்திலே ஓங்காரம் பிலாக்கணமிட, தள்ளாடித் தள்ளாடி நடந்து, காரிருளிலே மறைந்துவிட்டான் மனமொடிந்த அந்தத் தம்பிக்கோட்டை வஸ்தாத்.

"இவ்வளவு களைத்துப் போய்விட்டீர்களே. எங்கே போயிருந்தீர்கள்?" என்று, கணவனின் பரிதாபக் கோலத்தைக் கண்டு மனம் பதைத்த சிங்கீ ஈனக் குரலில் கேட்டாள்.

"இனிமேல் இந்தப் படுபாவி உனக்குத் துரோகியாக மாற மாட்டான். இது சத்தியம்!" என்று உணர்ச்சியுடன் கூறிக்கொண்டு துணைவியின் மருங்கில் சோர்வுடன் அமர்ந்த ரூஹுல்லா தாரை தாரையாகக் கண்ணீர் வார்த்தபொழுது, தன் காதலன் நடத்திவிட்ட கபட நாடகத்தை அறியாத அந்தக் கர்ப்பிணி ஒன்றும் விளங்காமல் பேந்தப் பேந்த விழித்தாள்.

# காதலும் போட்டியும்

இலுப்பூர்ப் பயில்வான் இடியப்ப பிள்ளையிடம் சிட்சை பெற்று, 'சிறுத்தைப் புலி' சிங்காரத்தின் முந்திரிப் பழ மூக்கை ஓர் உலுக்கு உலுக்கிவிட்ட தார்பாட்டா பரம் பரையைச் சேர்ந்த ஜாம்பஜார் 'பாயின்டிங் பாக்ஸர்' சுல்தானுக்கும், 'சண்டைச் சேவல்' சர்தார் முனியப்ப பயில்வானின் ஆசீர்வாதம் பெற்று வீரமுத்துவின் விலா வெலும்பைப் பதம்பார்த்த நாக்அவுட் புகழ் 'காட்டுக் கரடி' மைக்கேல் காளிமுத்துவுக்கும் ஏழு ரவுண்டு 'பாக்ஸிங் குத்துச் சண்டை'—சிந்தாதிரிப்பேட்டையை அடுத்துள்ள 'ஜோ லூயி' திடலில் வருகின்ற செவ்வாய்க் கிழமை நடக்கப்போவதை அறிவித்த துண்டுப் பிரசுரங் கள் 'நறுமணம்' கமழும் கூவம் நதிக்கு இருபக்கங்களிலு முள்ள சந்து பொந்துகளில் வட்டமிட்டுப் பறக்கத் தொடங்கியதும், சென்னை மாநகரம் அல்லோலகல்லோலப் பட்டது! டீக் கடைகளிலும், மிலிட்டேரி ஹோட்டல்களி லும், பீடா பெட்டிக் கடைகளிலும் இந்தக் குத்துச் சண்டையைப் பற்றி ஓயாத பேச்சாக இருந்தது. 'தார் பாட்டா' சுல்தான் கெலிச்சுத் தமுக்கடிக்கப் போகிறான் என்று ஒரு சாராரும், 'காட்டுக் கரடி' ஜயித்து டமாரம் அடிக்கப் போகிறது என்று பிறிதொரு கோஷ்டியினரும் சவால்களும் எதிர்ச் சவால்களும் வாய்வீச்சுகளும் சவடால்களும் அவுட்டுகளும் மனம்போன போக்கில் தாராளமாகப் பிரயோகிக்கலானார்கள்.

நிகழப் போகும் இந்தக் குத்துச் சண்டையின் மிக காஸுக்கான விஷயம் என்னவென்றால், 'தார்பாட்டா'

வும் 'காட்டுக்கரடி'யும் இதற்குமுன் எந்தப் 'பாக்ஸிங் ரிங்'கிலும் யம கண்டத்திலுங்கூட நேருக்கு நேர் சந்தித்த தேயில்லை! இறுதி ஆட்டத்திற்கு முண்டியடித்துக் கொண்டு அவர்கள் வருவதற்குள் ஒருவன் மூக்கு உடை பட்டு, ராயபுரம் ஆஸ்பத்திரிக்கும், மற்றவன் இரண்டு பற்களை மனமின்றிப் பறிகொடுத்துவிட்டு சைனுபஜார் சங்-சிங்-சுங் என்ற நாமகரணத்தைக்கொண்ட சீனு பல் வைத்தியரிடமும் விஜயம் செய்துவிடுவது வழக்கமாயிருந் தது. இந்தத் தடவை அது தடம் புரண்டுவிட்டது! விதி விளையாடிய சதி ஒரு புறமிருக்க, இந்தப் பகாசுரர்கள் நேருக்கு நேர் சந்திக்கும்படியாகச் சகல ஏற்பாடுகளையும் செய்தவர் வேப்பேரியில் 'லாட்டரி அடித்து'வந்த ஜானி வாக்கர் என்ற சட்டைக்காரர் என்று பலருக்குத் தெரியா மல் போகவில்லை!

காலாடிப்பேட்டைக் 'காட்டன் மார்க்கெட்' போஷகர் களும், மூர்மார்க்கெட் வஸ்தாதுகளும்,சைனுபஜார்க் கத்த ரிக்கோல் நிபுணர்களும் இந்தக் குத்துச்சண்டையின் முடி வைப்பற்றி என்ன என்னமோ ஹேஷ்யங்களை ஒலிபரப்பிக் கொண்டிருந்தார்கள். 'சைட் பெட்டிங்' விவகாரங்களில் வாழ்நாள் முழுவதையும் செலவழித்த அந்தச் செம்மல்கள் செவ்வாய்க்கிழமையின் நல்வரவை ஆவலுடன் எதிர்பார்த் துக்கொண் டிருந்தார்கள்!

இந்தக் களேபரம் நகரெங்கும் கூத்தடிக்க, மீர்ஸாப் பேட்டையில் குணங்குடி மஸ்தான் சந்திலுள்ள மூன்றுவது மச்சு வீட்டில் இரு இளம் உள்ளங்கள் காதல் வேதனையால் அவஸ்தைப் பட்டுக்கொண் டிருந்தன!

"என் மனசு டபக், டபக்குன்னு அடிச்சுக்குது. ஒண் ணுமே தோணுல்லே" என்று ஸலீமா தழுதழுத்த குரலில் சொன்னதும், அவ்வனிதையின் கலவர ரேகைகள் படர்ந்த மதிவதனத்தைக் கலங்கிய விழிகளால் நோக்கினுன் 'தார் பாட்டா' சுல்தான்.

"இந்தக் குத்துச் சண்டையில் எனக்கு ஏதாவது ஆபத்து வரும்னு 'காப்ரா' ஆயிட்டியா? அடி பயித்தியக் காரப் பெண்ணே! சுல்தான் என்ற பெயருடன் வாழும்படி

பாழாய்ப்போன 'நஸீப் (விதி)' என் விஷயத்தில் சிலம் பாடி யிருக்கிறதே தவிர, பிறவியிலேயே இந்த நாட்டுச் சுல்தானுக நான் பிறந்திருக்கவேண்டியவன்! தெரியுமா?'' என்று வீராப்புடன் பகர்ந்து, பளபளத்த தன் ஹிட்லர் மீசையை நைஸாகத் தடவிக்கொண்டான் சுல்தான். அக்காரிகையின் உள்ளத்திலே உண்டான கொந்தளிப்பு அடங்கினதாகக் காணும்!

''எனக்கு உங்கள்மேல் நம்பிக்கை இல்லையா? ஆனுல் அப்பாஜான் போட்ட ஜபர்தஸ்த் கண்டிஷனை நினைச்சா என் நெஞ்சு பகீருங்குது!' -கைகளை விறு விறுவென்று பிசைந்துகொண்டு, திரு திருவென்று விழித்தாள் அந்த அழகுப் பிழம்பு.

''உன் அப்பாஜான் கண்டிஷனு!''—திடுக்கிட்டான் 'தார்பாட்டா'.

''எல்லாம் இந்தக் கேடுகெட்ட குத்துச் சண்டையால் வந்த விளைவுதான்.''—கொவ்வை அதரங்களைப் பிதுக்கினுள் அவள்.

''என்ன அப்படிப் பேசறே! உன் அப்பாவே பெரிய குஸ்திப் பயில்வான் ஆச்சே!''

''அதுதான் என் தலையிலே இடியைப் போட்டுடுச்சு. என்ன செய்வேன்? எப்படிச் சொல்வேன்?'' பிரலாபித்த அந்த நங்கை மேலும் தொடர்ந்தாள்: ''நம்ம நிக்காஹுக்கு இந்தச் சைத்தான் சண்டையா சோதனையாக வந்து நடு விலே நிற்கணும்? அல்லாரே!''

ஒன்றும் தோன்ருது பேந்தப் பேந்த விழித்தான் சுல்தான்.

''உன் நிக்காஹுக்கும் இந்தக் குத்துச் சண்டைக்கும் என்ன சம்பந்தம் ஸலீமா? ஆவணி அவிட்டத்துக்கும் அப் துல் காதருக்கும் முடிச்சுப் போடாதே!''-ஒரே குழப்பத் துடன் கத்திவிட்டான் சுல்தான்.

மௌனம் சாதித்த தன் ரோஜா குல்கந்தைக் காணக் காண அவன் சப்தநாடிகளும் ஒடுங்கிவிட்டன.

"என்னைக் கைவிட்டுடாதிங்கோ!" — விம்மினாள் காதலி.

"என்ன!"

"இந்தக் குத்துச் சண்டையில் தாங்கள் ஜெயித்தால் தான் உங்களுக்கு என்னைக் கல்யாணம் செய்துகொடுப்பாராம் அப்பாஜான்!"

"இல்லாட்டிப் போனால்......?"

"இந்த அபலையை நீங்கள் அடியோடு மறந்துடும்படியாக ஆயிடும்!"—விக்கி விக்கி அழுதாள் அப்பேதை.

"ஸலீமா! என் முகத்தைப் பார்! இலுப்பூர் ஸர்தார் இடியப்ப பிள்ளையின் இந்தச் 'சேலா (சிஷ்யன்)' எந்தக் கோதாவிலாவது அந்தர்பல்டி அடிச்சிருக்கானா?"

தன் மார்பைத் தடதடவென்று தட்டிக் காட்டிக் கொண்டே, கடகடவென்று உரக்கச் சிரித்தான் அந்தக் கில்லாடிப் பயல்.

"அல்லாதான் காப்பாத்தணும்!"

"பயப்படாதே! இந்த ஜாம்பஜார் சிங்கலடி சிங்கம் பிறைக்கொடி நாட்டிவிட்டு, இரண்டு ஜோடிக் கோழிகளோடு திரும்பி வந்து சேரும். உன்னைப் பெற்றவனின் பாசிபிடித்த காதிலே இந்தச் சேதியை உரக்கப் போட்டு வை" என்று மிக்க உணர்ச்சியுடன் நிதானமாகச் சொல்லி, தன் 'பியாரி (காதலி)'யின் மாதுளைக் கன்னங்களை ஆசையோடு தடவி ஒரு கிள்ளுக் கிள்ளிவிட்டு நகர்ந்தான் சுல்தான்.

வழிநெடுகிலும் அவன் இதயம் ஓலமிட்டுக்கொண்டிருந்தது. 'தன் காதலியின் தகப்பனோ அசல் ஹய்வான்—மிருகம். முரடன் நம்பர் ஒன்; ஒரு பேச்சுக்காரன். துர் அதிர்ஷ்டவசமாக ஏதாகிலும் தலைகீழாக நிகழ்ந்துவிட்டால்? தன் இதய ராணியை இழக்கும்படி சந்தர்ப்பம் சதிசெய்துவிட்டால்?'...எண்ணத் தரங்கங்களிடையே சிக்கி, அவன் சொல்லொணா அவதிப்பட்டதும் மதி மருண்டது. கண்கள் இருண்டன. சித்தம் தவித்தது. 'அட...

சட்! நானு பயந்தாங்கொள்ளி? இந்தச் சுல்தானுக்கா ஹிம்மத்—தைரியம் இல்லை? அட சட்... ருஸ்தும்! ஜல்தி சலோ!' என்று தன்னையும் அறியாது ஏதோ வீரமொழிகளை உளறிவிட்டு நவாப் நடையைப் போட்டுக்கொண்டு புறப்பட்டான் சுல்தான்.

இனி சைதாப்பேட்டையில் செயின்ட்ஜார்ஜ் தெருவிலுள்ள எட்டாம் நம்பர் வீட்டில் உக்கிரத்துடன் நடந்து கொண்டிருந்த 'குட்டி லடாய்'மீது நமது கவனத்தைத் திருப்புவோம்.

நடுக் கூடத்திலிருந்து கிளம்பி வந்த காரசாரமான சம்பாஷணையை வாசலை நோக்கிய அறையின் ஜன்னல் ஓரமாக ஒட்டி நின்று, செவிகளை நன்ருகத் தீட்டிக்கொண்டு கேட்ட வண்ணம் ஏங்கி நின்றுகொண் டிருந்தான், 'காட்டுக் கரடி' மைக்கேல் காளிமுத்து.

''ஏ...லில்லி இதைக் கேட்டுடு. இந்த வஸ்தாத் சொன்னது சொன்னதுதான். அது மாதிரி நடந்தால், அவன் இங்கே வரட்டும். தலையைத் தொங்கப் போட்டுட்டு, இங்கே வந்து கெக்கேபிக்கேன்னு ஏதுனுச்சும் சால்ஜாப்பு அவன் சொன்னுன்னு, அவன் முகத்திலே தார்பூசிக் 'கல்தா' கொடுத்து அனுப்பத் தயங்கமாட்டேன். ஆ...மா...'' என்று கர்ஜித்துவிட்டுத் துள்ளிக் குதித்தான் அந்தோனிசாமி.

''இது என்னப்பா விதண்டாவாதம்?''—மன்ருடினுள் மகள்.

''உன் 'டாடி'க்கு நீ புத்தி கூறத் தேவையில்லை. தவிர உனக்குத் தகுதியில்லை''—சீறினுன் கிழவன்.

''என் 'மாரியேஜ்' அதுபாட்டும் நடக்கட்டும். இந்தப் 'பாக்ஸிங்' இதுபாட்டும் நடக்கட்டும். அப்பா.'' மனமொடிந்து கதறினுள் லில்லீ.

''ஸ்டாப் நான்சென்ஸ்! உன் கல்யாணமாவது மண்ணுங்கட்டியாவது! இந்த மட்டிப்பயல் இல்லாதபோனுல்

எத்தனையோ 'ஹீரோக்கள்' மோதிரங்களோட ஊட்லே நுழையக் காத்திருக்காங்க வில்லீ! எனக்கு மருமகனாக வரப்போகிறவன் என் 'ஸ்டாண்டர்டு' படிதான் இருக்கணும். அந்தக் 'குல்லாவுக்கு' நாக்அவுட் கொடுத்துட்டு, வெள்ளிக் கோப்பையுடன் வந்தால்தான் உனக்கு அவன் சொந்தம் என்று 'ஐடியா' வச்சுக்க; சொல்லிட்டேன்!' என்று இறுதி எச்சரிக்கையை விடுத்துவிட்டு அந்தோனி சாமி அவ்விடத்தைவிட்டு அகன்றதும் மக்களின் மாசுகளைத் துடைத்து, பரமபிதாவிடம் மன்னிப்புக் கோரும் ஏசுநாதரின் படத்தின்முன் மண்டியிட்டுத் தேம்பித் தேம்பிக் கண்ணீர் சொரிந்தாள் வில்லி. இந்த சோகக் காட்சியைச் சாளரத்தின் வழியாக நோக்கிக்கொண்டிருந்த அவள் காதலன் 'காட்டுக்கரடி' காளிமுத்துவின் கண்களும் குளங்களாகிவிட்டன!

''அழாதெ...டார்லிங்...அழாதே'' என்று உணர்ச்சியுடன் ஹீனக் குரலில் அவன் கூறினதும், வில்லி திடுக்கிட்டாள். ஜன்னல் கம்பிகளைப் பிடித்துக்கொண்டு ஏங்கி நிற்கும் தன் கண்ணாளனின்மீது மங்கிய பார்வை வீழ்ந்ததும், அந்த வஞ்சிக்கொடி துவண்டு போயிற்று.

''உன் தகப்பன் சொன்ன யாவற்றையும் காது புளிக்க நான் கேட்டுவிட்டேன்! உன்னைக் கைவிட மாட்டேன்... அஞ்சாதே!' என்று காளிமுத்து ஆறுதலளித்ததும், அந்த அணங்கு மேலும் கலக்கமடைந்தாள்.

''டியர்! ஏதாச்சும் அசம்பாவிதமாக நடந்துவிட்டால், என் உள்ளம் இரண்டாகத் துண்டு விழுந்துவிடும், டார்லிங்!' அந்தக் கர்த்தர்தான் நம்மைக் காப்பாற்றணும்.'' —பிலாக்கணமிட்டது மனமொடிந்த மாடப்புறா.

''பதறாதே வில்லி! அந்த ஜாம்பஜார் சாயபுவுக்குக் குத்து மதிப்பா நாலு கும்மாக் குத்துக்களைக் கொடுத்து, அவனைக் கிறிஸ்துமஸ் கேக் மாதிரி பண்ணிவிட்டு, ஹிப் ஹிப் ஹுர்ரே!' என்ற கோஷத்துடன் திரும்புவேன்!''

''உள்ளே வரக்கூடாதா டியர்?''—கெஞ்சினாள் வில்லி நீர்சுரந்த விழிகளுடன்.

"தன்மான உணர்ச்சிகொண்ட, கழுத்திலே சிலுவையைச் சூடிய இந்தக் கிறிஸ்தவன், உன் தகப்பன் போட்ட சவாலுக்குச் சவுக்கடி கொடுத்துவிட்டுத்தான் இந்த வீட்டின் நிலைப்படியைத் தாண்டுவான். உன்னைப் பெற்ற அந்தப் பெரியவர்மீது எனக்கு ஒரு துவேஷமும் கிடையாது லில்லி! கோடையிடி குப்புராவ் பயில்வான் பரம்பரையில் வந்த 'பாக்ஸர்' அவர். அவர் லக்ஷ்யத்தை நிறைவேற்றுவேன். உன் இதயத்தில் குடியேறுவேன் டார்லிங்!" என்று வீரமுழக்கம் எழுப்பிவிட்டு, தெனலி வெண்ணெயை ஒத்த தன் காதலியின் கன்னங்களை மானஸிகமாகச் சுவைப்பதுபோல், தன் உள்ளங் கையிலே ஈர உதடுகளை ஒத்திச் சைகை காட்டிவிட்டு, ஜூலியட்டிடம் "டாட்டா..."வென்று சொல்லி விடைபெற்றுக்கொண்டு மறைந்தான் அந்தச் சைதாப்பேட்டை 'ரோமியோ!'

உண்மையை எடுத்துரைக்கப் போனால், மைக்கேல் காளிமுத்துவின் இதயத்தின் ஓர் முடுக்கில் பீதி புகைந்து கொண்டிருந்தது.

'இவ்வளவு சூரத்தனமாகப் பேசிவிட்டுக் கிளம்பிவிட்டோமே. ஒருகால் அந்தப் பொல்லாத சாயபு என்னை நசுக்கிப்' 'பொடிமாஸ்' பண்ணிவிட்டால், என் 'லவ்' தன் பிடியை விட்டு நழுவிவிடுமே!' இந்தப் பயங்கர எண்ணம் அவனைப் பைத்தியமாக்கிவிட்டது.

'காதலியா அல்லது கானகமா?' என்ற கடும் பிரசனையில் தத்தளித்த இந்த இரண்டு வஸ்தாதுகள் பட்டபாடு போதும் போதும் என்று ஆகிவிட்டது! நாட்களும் சடசடவென்று மறைந்தன. செவ்வாய்க்கிழமை வைகறையும் பொல பொலவென்று புலர்ந்தது!

அன்று அந்தி மயங்கும் நேரத்தில் 'ஜோலூயி' திடலின் முன் ஒரு பர்லாங்கு நீளமுள்ள 'க்யூ' நெளிந்து கொண்டிருந்தது. கொட்டகைக்குள் அண்ணன்மார்கள் தங்கள் உதடுகளைக் குவித்து எழுப்பிய சீட்டிகளும், தம்பிமார்கள் ஆர்ப்பரித்த 'டேய்...டேய்' என்ற வீரக்கூப்பாடு

களும் ஒன்று சேர்ந்து ஒரு சிறிய பூகம்பத்தை உண்டாக்கி விட்டன.

குத்துச் சண்டை நடைபெறப் போகும் மேடையின் மருங்கில் போடப்பட்டிருந்த முதல் வகுப்பு நாற்காலி களில் ஆரணி பிச்சுமணி ஐயரும், மஞ்சள் மோகன சுந்தர கிராமணியாரும் அமர்ந்திருந்தார்கள்.

"என்ன கிராமணியாரே! ஏதோ மல்லாக்கொட்டை பாக்டரிக்காக டீஸல் இன்ஜின் வாங்கப் பட்டினம் வந்த என்னை, இந்த நரகத்துக்கு இழுத்துவந்து விட்டீர்களே!" என்று பிச்சுமணி ஒரே படபடப்புடன் சொன்னதும், தம் நண்பரை மேலும் கீழும் ஒரு மாதிரியாகப் பார்த்தார் கிராமணியார்.

"குத்துச் சண்டையை இப்போதுதான் முதல் தடவை யாக நீங்க பார்க்கிறதுபோல் இருக்கிறது!" என்று கிரா மணியார் சாவதானமாகப் பதிலளித்ததும், பிச்சுமணி தலையை ஓர் வெட்டு வெட்டி, நாக்கை உள்ளே இழுத்துக் கொண்டார்.

"ஆட்டம் ஆரம்பிக்கிறதுக்கு முன்பே இந்தச் சண் டையைப் பற்றி ஒரு நாலு வார்த்தைகள் நீங்கள் சொல்லி விட்டால், எனக்குப் பார்க்கச் சௌகரியமா யிருக்கும்" என்றார் ஐயர், கெஞ்சிய பாவனையில்.

"இந்த மேடையிருக்கே......பதினெட்டுச் சதுர அடி சைஸ் இருக்குமில்லியா?" என்ற கேள்வியைப் போட்ட வண்ணம் தொடர்ந்தார் கிராமணியார்.

"கிட்டத்தட்ட இருக்கலாம்!'

"இந்த மேடையைத்தான் 'ரிங்'ன்னு சொல்லு வாங்கோ. இங்கேதான் குத்துச் சண்டை நடக்கும். சரி...... இந்த ஆட்டத்திலே குதிக்கப் போறாங்களே அந்தச் சூரர்களைக் காலையிலே 'தராசிலே' போட்டு நிறுத் திடுவாங்க!"

"அப்படீன்னா!"—வியப்பினால் வாயைப் பிளந்தார் பிச்சுமணி.

"ஒரே நிறை உள்ளவர்களைத்தான் ஜதையாகச் சேர்த்து 'பாக்ஸிங்' போட அனுமதிப்பாங்க. பேச்சுக்குச் சொல்றேன் கேளுங்கோ.—112 பவுண்டு கனம் இருக்கிறவர்களைப் 'பிளைவெயிட்' என்று குறிப்பிடுவாங்க. 119 பவுண்டாக இருந்தால், 'பாண்டம் வெயிட்'ன்னு பிரிப்பாங்க. இப்படியே கனம் ஜாஸ்தி ஆக ஆகப் 'பெதர் வெயிட்', 'மிடில் வெயிட்' 'ஹெவி வெயிட்' என்று தனித் தனியாகப் பிரிச்சுடுவாங்க. புரிஞ்சுதா?"

"அதைக் கேட்பானேன்? பேஷாகப் புரிய வச்சுட்டீங்க! சரி... இப்போ சண்டை போடப்போறுளே...... அவர்கள்...?" என்று பிச்சுமணி இழுத்தார்.

"அவங்களா 'பாண்டம் வெயிட்' ரகத்தைச் சேர்ந்தவங்க; 119 பவுண்டு" என்று சொல்லிவிட்டு, வேஷ்டியின் நுனியால், தம் வைர மோதிரத்தை நன்ருகத் துடைத்து அது 'டால்' அடிக்கிறதா என்று பார்த்துக்கொண்டார், மோகனசுந்தர கிராமணியார். தொடர்ந்தார், "சண்டை போடுறதுக்கு முன்னுலே இந்த வீரர்கள் கையிலே தோல் உறைகளை மாட்டிக்குவாங்க, அதுக்குப் பேர் 'கிளவ்ஸ்'. ஆச்சா?"

"ஆகட்டும். மேலே போங்கோ!"

"இன்றைக்கு ஏழு ரவுண்டு குத்துச் சண்டைன்னு நோட்டீஸிலே போட்டிருக்கான். ஒரு ரவுண்டுன்னு மூன்று நிமிஷ ஆட்டம் என்று அர்த்தம் இந்த ரவுண்டுக்குள்ளே யார் இருபது மார்க்குகள் முதல்லே வாங்குகிறாரோ, அவருக்கு அந்த ரவுண்டு ஜயம் என்று அர்த்தம்."

"கிராமணியாரே! மார்க்குன்னு சொன்னீர்களே, அதை எப்படிக் கணக்குப் போடுவா?"—பிச்சுமணிக்குக் குஷி கிளம்பிவிட்டது!

"ஒரு மார்க்குன்னு ஒரு பாயின்ட். அதாவது ஒரு நல்ல செம்மையான குத்து என்று அர்த்தம். இந்த விதமாக இருபது குத்துகள் ஒரு ரவுண்டிலே வுளுந்துடும்."

"அட ராமசந்திரா!" பிச்சுமணிக்கு வியர்த்தது. தொடைகள் வெடவெடவென்று அடித்துக்கொண்டன.

"கேளுங்கோ! இந்த மாதிரியான ரொம்ப ஷோக்கான ஆட்டம் வேறு எதுவும் இல்லிங்க. கட்டுறீங்களா?" என்று கேட்டார் கிராமணியார் ஒரே பரவசத்துடன்.

"எதைக் கட்டணும்? நடையைக் கட்டச் சொல் றிங்களா!" பிச்சுமணிக்கு ஒன்றுமே புரியவில்லை; பேந்தப் பேந்த விழித்தார். "நீங்க ஒண்ணு; அப்பாவி மனுஷருங்க! சைட் பெட்டிங் பந்தயப் பணம் கட்றீங்களான்னு கேட் டேன்" என்று கூறிக் கலகலவென்று உரக்கச் சிரித்து விட்டார் கிராமணியார். தொடர்ந்தார்: "இந்த ஆட்டத் திலே தலை முதல் இடுப்புப் பெல்ட் வரை எதிரி மேலே எங்கே வேண்டுமானாலும் குத்துக்களை ஜோராக விடலாம், ஐயரே! முதுகு மேலேயும், பெல்ட்டுக்குக் கீழேயுந்தான் அது விழக்கூடாது. எதிரியைக் காலாலே உதைக்கக் கூடாது. தலையாலே முட்டக்கூடாது. முண்டாவாலே தள்ளக்கூடாது. ஆ...மா! அப்படித் தவறிச் செஞ்சுட்டா அது 'பவுல்'..."

"சரி...... இவர்கள் சரியாகக் குத்துக்கள் விட்டுக் கொள்ளுகிறார்களா என்று கவனித்துக்கொள்ள ஆசா மிகள் உண்டோல்லியோ?"—வாய் குழறியது

"இல்லாமலா! ஒரு ரெப்ரியும் மூன்று நீதிபதிகளும் மேல்பார்வை பார்த்துக்குவாங்க. இதில் நாஸுக்கான விசயம் என்ன வென்றால், ரெப்ரி இருக்காரே...அவர் பாடு படா பேஜார், தொல்லை! ஒவ்வொரு சமயம் இந்தக் குத்துச்சண்டை வீரர்கள் கண்களை மூடிக்கிட்டு அடி அடின்னு குத்துகளை ஆவேசத்தோடு விட்டுக்கொள் வாங்க. அந்தப் பொல்லாத வேளையில் இந்த ரெப்ரி அவுங்க நடுவிலே விழுந்து, இரண்டு பேர்களையும் விடு விக்கிறதுக்குள்ளே அந்த அப்பாவி மனுஸர் மேலேயும் நாலைஞ்சு குத்துக்கள் தவறிப் பலமாக வீழ்ந்துடும். அப்போ பார்க்கணுமே அவர் நிலைமையை!...கோவிந்தா! கோவிந்தா!"

மோகனசுந்தர கிராமணியார் உணர்ச்சி தாளாது, 'கோவிந்தா' கோஷத்தை உரக்கப் போட்டு உரையாடலை முடிப்பதற்கும், ரெப்ரீயும் குத்துச்சண்டை வீரர்களும் மேடையில் தோன்றுவதற்கும் சரியாக இருந்தது! கைகளில் 'க்ளவ்ஸ்' உறைகளும், கால்களில் கான்வாஸ் ஷூக்களும், கறுப்பு நிஜாரும் தரித்து நின்ற ஆட்டக்காரர்களைக் கண்டு கூட்டம் கடல்போல் ஆர்ப்பரித்தது. 'தார்பாட்டா' சுல்தான் தன் இடுப்பைச் சுற்றிச் சிகப்பு நிற பெல்ட்டை அணிந்திருந்தான். 'காட்டுக்கரடி' காளி முத்துவின் இடுப்பில் ஊதா நிற பெல்ட் பளிச்சிட்டது.

'ரிங்' வளைவின் வலது கோடியில் சுல்தானும், இடது கோடியில் காளிமுத்துவும் தங்கள் தங்கள் உடலுக்கு முறுக்கேற்றியவண்ணம் பிரமாத ஸ்டைலுடன் நின்று கொண்டிருந்தார்கள். 'டங்' கென்று மணியோசை எழும்பியது. 'பாக்ஸ்' என்று ரெப்ரீ பிரகடனப் படுத்தியது தான் தாமதம், இரு குத்துச் சண்டைச் சூரர்களும் காளைகளைப்போல் ஒருவரோடொருவர் மோதிக்கொண்டு சடசட படபடவென்று குத்துகளை அநாயாஸமாகப் பரிமாறிக்கொண்டார்கள். சண்டைச் சேவலைப்போல், கழுத்தை நெறித்து நெறித்துச் சுல்தான் முன்னேறவும், பச்சைத் தவளைபோல் தாவித்தாவிப் பின் வாங்கினான் காளிமுத்து. ஒருவன் பூச்சிகாட்டவும், மற்றவன் ஜாலக் காட்டவும், இந்த நிலை ஒரு நிமிஷத்துக்கு மேல் நிலைத்திருக்கவில்லை. அடிபட்ட வேங்கையைப்போல் கறுவிக் கொண்டு சடாரென்று பாய்ந்த சுல்தான் 'வால்காட்' குத்துகளைக் காளிமுத்துவின் முகத்தில் விட்டதுதான் தாமதம், 'காட்டுக்கரடி' தன் இடது கரத்தைத் தற்காப்புக்காக மடக்கிக்கொண்டு வலது கை முஷ்டியினால் கும் கும்மென்று 'ஜோலூயி' குத்துக்களைத் 'தார்பாட்டா' முகத்தில் சரமாரியாகப் பொழியலானான். இந்தத் திடீர் எதிர்த்தாக்குதலைச் சமாளிக்க முடியாது திணறிப்போன ஜாம்பஜார் சிறுத்தை ஒவ்வொரு நரம்பிலுமுள்ள வலுவையெல்லாம் ஒன்று திரட்டி முஷ்டிகளில் தேக்கிக்கொண்டு, குபீரென்று காளிமுத்துவின்மீது பாய்ந்து, இரண்டு 'கன்போட் ஜாக்' குத்துகளையும் ஒரு 'ராக்கி மார்சியானோ'

குத்தையும் சேர்த்து விட்டதும், காளிமுத்து தடுமாறிப் போனான். மேலைநாட்டு 'அஸ்திரங்களை'க் கைகழுவிவிட்டு உள்ளூர்ச் சரக்கைக் கையாளத் திட்டமிட்டு, ஒரு பெரு மூச்சைப் புகையுடன் விட்டுவிட்டுக் கொத்தவால்சாவடிக் கும்மாக் குத்துக்களை ஒன்றன்பின் ஒன்றாகச் சுல்தான்மீது விட்டான் காட்டுக்கரடி. 'தார்பாட்டாவும்' சளைத்ததாகக் காணோம்! 'ஜாம்பஜார்' குத்து, 'மந்தைவெளி'க் குபீர்குத்து ஆகிய இரண்டையும் ஒரே கணத்தில் அவன் அளித்ததும், காளிமுத்துவின் கண்களுக்குத் தீப்பொறிகள் தென் பட்டன. மதுவருந்தியவன்போல் முன்னும் பின்னும் தடுமாறிக்கொண்டு ஒருகணம் ஸ்தம்பித்து நின்று விட்டான்.

'தார்பாட்டா' சுல்தான் முதல் மூன்று ரவுண்டையும், 'காட்டுக்கரடி' காளிமுத்து அடுத்த மூன்று ரவுண்டையும் ஜயித்ததாக ரெப்ரீ அறிவித்ததும், கூட்டத்தினரின் திகைப்பு, கட்டுக்கு அடங்காமல் போயிற்று. இனி மிஞ்சி நிற்பது ஒரே ஒரு ரவுண்டுதான்! ஏழாவது ரவுண்டு! அந்த மூன்று நிமிஷகாலம் இந்தச் சூரர்களின் விதியை நிர்ணயித்துவிடப் போகிறது! இந்தப் பீதியும் காதலி களின் நினைப்பும் எதிர்பாராத அந்தப் பொல்லாத நேரத்தில், அவர்கள் உள்ளங்களில் மின்னலிட்டதும் சூறுவளியில் சிக்கிய முருங்கைமரம்போல் அவர்கள் வெல வெலத்துப் போனார்கள். தொடைகளும் வெடவெட வென்று அடித்துக்கொண்டன. இவர்கள் நிலைமையையும் மிஞ்சிவிடும்படி படுமோசமான நிலையில் இருந்தனர், காலரியின் மேல் வரிசையில் வீற்றிருந்த இரு ஜீவன்கள்! 'தார்பாட்டா' சுல்தான் ஜயிப்பான் என்று பக்கிரிசாமி தன் நண்பனிடம் ஐந்து ரூபாய் பந்தயம் கட்டியிருந்தான். அதற்குப் போட்டியாகக் 'காட்டுக்கரடி' மீது டபுள் கட்டி விட்டான் 'சொண்டிச் சோறு' சோணாசலம்! தன் 'பேவரைட்' காளிமுத்து மிக்க சோர்வடைந்து நிற்பதைக் காணக்காணச் சோணாசலத்திற்குத் தலை கிறுகிறுத்தது; உதிரம் உறைந்தது. ஒவ்வொரு தடவையும் சாயபுவிட மிருந்து காளிமுத்து பெற்றுக்கொள்ளும் குத்துக்கள் ஏதோ தன்மீதே விழுவதுபோல் அவனுக்குப் பிரமை

உண்டாயிற்று! எங்கே தன்னை நம்பினவனை அவன் கைவிட்டு விடுவானோ என்ற கிலி அவன் நெஞ்சைக் கௌவியது. பக்கிரிசாமி தன் பந்தயப் பணத்தைத் தட்டிக்கொண்டு போய்விடுவானோ என்ற எண்ணம் குமிழியிட்டதும் அவனுக்குப் பகீரென்றது?

மணி அடித்தவுடன் ஏழாவது ரவுண்டுக் குத்துச் சண்டை ஆரம்பமாயிற்று. 'வாழ்வா சாவா?!' என்ற மனப்பான்மையுடன் சுல்தானும் காளிமுத்துவும் மிக்க ரோஷத்துடன் குத்துக்களைப் பரிமாறிக்கொண் டிருந்தார்கள். 'பாக்ஸிங்' ஆட்டத்திலுள்ள சகலவிதமான கும்மாக் குத்துக்களையும் அவர்கள் கையாளத் தொடங்கினார்கள். ஆசனங்களை விட்டெழுந்து நின்றவண்ணம் இந்தப் பயங்கர 'யுத்தத்தை'க் கண்கொட்டாது நெஞ்சு படபடக்கப் பார்த்துக்கொண் டிருந்தனர் கூட்டத்தினர். 'மாரோ... மாரோ...' என்று வீரகோஷம் போட்டுக்கொண்டு எதிரி மீது பாய்ந்த சுல்தான் ஒரு 'ஸுகர் ராபின்ஸன்' குத்தை மிக்க ஜபர்தஸ்துடன் விட்டதும், ரயில் பெட்டியிலிருந்து பிளாட்பாரத்தில் தூக்கி எறியப்பட்ட 'ஹோல்டால்' படுக்கையைப்போல், தடாலென்று கீழே சாய்ந்தான் காளிமுத்து! அவன் மூக்கிலிருந்து ரத்தம் கடகடவென்று கசிந்தது. ரெப்ரீ அவனருகில் ஓடிச்சென்று ஒன்று, இரண்டு, மூன்று என்று ஒவ்வொரு விநாடிக்கு ஓர் எண்ணிகை உரக்க எண்ணத் தொடங்கினார். அவர் பத்து என்று சொல்லி முடிப்பதற்குள் காளிமுத்து எழுந்து நின்றுவிட வேண்டும். இல்லாவிடில், 'நாக் அவுட்' புகழுடன் வெற்றி சுல்தானுக்குப் போய்ச் சேர்ந்துவிடும். நான்கு, ஐந்து, ஆறு என்று ரெப்ரீ தொடர்ந்து எண்ணியும், காளிமுத்து அசைவதாகக் காணோம்! ஏழு எட்டு என்று ரெப்ரீ மேலும் தொடர்ந்த சமயத்தில் ஒரு காகித உருண்டை மேடை மீது வந்து வீழ்ந்தது. மறு கணத்தில் 'படா'ரென்று இடியோசையுடன் அது வெடித்ததும், அந்த இடம் உண்மையிலே நரகமாக மாறிவிட்டது. பீதியடைந்த கூட்டத்தினர் குய்யோ முறையோ என்று அலறிப் புடைத்துக்கொண்டு வெளியே ஓடலானார்கள். தீபாவளிப் பட்டாசுகளைப்போல் நாற்காலிகளும்

காலரிகளும் சடசடவென்று நொறுங்கின. இந்தக் களே பரத்தில் மாட்டிக்கொண்ட பிச்சுமணி ஐயர் அப்போது பிடித்த ஓட்டம், பெங்களூர் மெயிலில் தொத்திக் கொண்டு, காட்பாடி ஸ்டேஷனில் இறங்கி, பஸ்ஸில் ஏறி, தம் ஊரான ஆரணிக்குப் போய்ச் சேரும்வரை நிற்கவே யில்லை! மோகனசுந்தர கிராமணியார் ஒரு துளி பதற்றங் கூட இல்லாமல் சாவதானமாகத் தன் தேன்கூடு போன்ற மீசையை அசைத்துக்கொண்டு கோயில் யானை போல மெதுவாக ஆடி அசைந்துகொண்டு வெளியே வந்தார்! சரேலென்று கூட்டத்தை ஊடுருவிக்கொண்டு பாய்ந்த பத்துப் பதினைந்து 'சிகப்புத் தொப்பிகள்' கையில் குண் டாந்தடிகள் துலங்க மேடையை நெருங்கி இரு குத்துச் சண்டை வீரர்களையும் ரெப்ரியையும் அலக்காகத் தூக் கிக்கொண்டு வெளியேறினார்கள்.

''ஏதோ நல்ல வேளையாக நாம் தப்பிப் பிழைச்சோம் பிரதர்ஸ்!'' என்று ஹாஸ்யமாகச் சொல்லிவிட்டு, ''நம்ம குத்துச் சண்டையை ஒரு முடிவும் இல்லாமல் 'கான்ஸல்' செய்யும்படியாக ஆயிற்று! சபாஷ்...சபாஷ். நம்ப மீது யாரும் பழி போட முடியாது. தப்பிப் பிழைச்சோம் பிரதர்ஸ்!'' என்று மிக்க குஷியுடன் கூறி, சுல்தான், காளிமுத்து ஆகிய இவர்களின் கைகளை இறுகப் பிடித் துக் குலுக்கினார், ரெப்ரீ ஜாணிவாக்கர். குத்துச் சண்டை வஸ்தாதுகளின் உச்சி குளிர்ந்துவிட்டது. ஏதோ பெரிய கண்டத்திலிருந்து தாம் தப்பிவிட்டதை நினைத்ததும், அவ்விருவரும் ஒருவரை ஒருவர் தழுவிக்கொண் டார்கள். இனி தம் காதலிகளையும், முரட்டுப் பிடிவாதம் கொண்ட 'மாமனார்'களையும் தைரியமாகச் சந்திக்கலா மென்று—உத்ஸாகம்—உண்டானதும், மீர்ஸாப் பேட் டையை நோக்கித் 'தார்பாட்டா'வும், சைதாப்பேட்டை நோக்கிக் 'காட்டுக் கரடியும்' ராஜநடை போட்டுக் கொண்டு வீராப்புடன் புறப்பட்டார்கள்.

அந்த மாதக் கடைசி வாரத்தில் சுல்தானின் நிக்காஹ் வும், காளிமுத்துவின் திருமணமும் நிறைவேறின. உலக வழக்கப்படி இந்தக் குத்துச் சண்டை வீரர்கள் தங்கள்

வஸ்தாத் சேஷ்டைகளைக் காதலிகளிடம் காட்டத் தொடங்கத் தவறவில்லை!

நாகூர் அவுலியா தர்காவிலே 'பாத்தியா' ஓதித் தன் நன்றியைத் தெரிவிக்கத் தனது 'லைலா'வுடன் ரயிலேறினான் சுல்தான். அவன் அங்கே போய்ச் சேர்வதற்கு முன்பே, வேளாங்கண்ணியிலுள்ள மாதா கோவிலில் மண்டியிட்ட வண்ணம் தங்கள் நன்றியை ஆனந்தக் கண்ணீரின் மூலம் வெளிக்காட்டிக்கொண்டிருந்தனர் மைக்கேல் காளிமுத்துவும் அவன் இதயத்தைத் திருகி எடுத்துக்கொண்ட காதலி லில்லியும்!

ஒரு அதிமுக்கியமான விஷயத்தை மட்டும் இந்தக் குத்துச்சண்டை வீரர்கள் அறிந்திருப்பார்களேயானால், அவர்கள் சென்னையை விட்டுப் புறப்படுவதற்கு முன், 'ஜோ லூயி' திடலில் நடந்த குத்துச் சண்டையின் ஏழாவது ரவுண்டு கண்டத்திலிருந்து தங்களைக் காப்பாற்றிய அந்த மனித தெய்வத்தின் காலடிகளில் கட்டாயம் நெடுஞ்சாண் கிடையாக வீழ்ந்து வணங்கியிருப்பார்கள். 'காட்டுக் கரடி' காளிமுத்து தடாலென்று மேடையிலே வீழ்ந்ததுதான் தாமதம், பக்கிரிசாமியிடம் கட்டிய 'டபுள்' பந்தயப் பணம் தன் மடியைவிட்டு நழுவி விடப் போகிறதே என்று 'காப்ரா' அடைந்த 'சொண்டிச்சோறு' சோணாசலம் மட்டும் தன் சட்டைக்குள் மறைத்து வைத்திருந்த வெங்காய வெடியை மேடையின்மீது வீசியெறிந்து, ஆட்டத்தைக் குழப்பத்தில் முடித்திருக்காவிட்டால், நமது குத்துச்சண்டை வீரர்களின் 'காதல் லக்ஷ்யம்' நிறைவேறியிருக்குமோ இராதோ? அந்த ஆண்டவன் தான் அறிவான்! இந்தச் சேதி அந்த வஸ்தாதுகளுக்குத் தெரியாமற் போனதைக் காலதேவன் புரிந்துவிட்ட தமாஷாக்களில் ஒன்றாகத்தான் கொள்ளவேண்டும்!

# இரங்கிய உள்ளம்

எந்த இன்பகரமான நாளை நஸீருத்தீன் இத்தனை மாதங்களாக எதிர்பார்த்து வந்தானோ, அந்தப் புனித மான பண்டிகை நாளும் பலபலவென்று புலர்ந்தது.

"பிஸ்மில்லா!" என்று ஜபித்துக்கொண்டு வைகறை யில் துயிலெழுந்த அந்த இளைஞன் முதல் காரியமாகச் சுவரை ஒட்டி நின்ற பெட்டியை மெல்லத் திறந்து அதற் குள் நேர்த்தியாக மடித்து வைக்கப்பட்டிருந்த கிச்சிலி வர்ண ஷேர்வானியைத் தன் கண்குளிரக் கண்ட பிறகு தான் முகத்தைக் கழுவுவதற்குப் புழக்கடைப் பக்கம் சென்றான்.

முழங்கால் வரையில் தவழ்ந்தாடும் ஷேர்வானியைப் பெருநாளன்று தான் அணிந்துகொள்ள வேண்டும், பள்ளி வாசலுக்குச் சென்று 'நமாஸில்' கலந்துகொள்ள வேண் டும், அதன்பின் தன் நண்பர்களைச் சந்தித்து அளவளாவ வேண்டும்,அவர்கள் அந்த ஷேர்வானியைக் கண்டு பிரமிப் படைய வேண்டும் – இத்தகைய ஆசைகள் அந்த யுவனின் இள நெஞ்சிலே பல காலமாக ஆர்ப்பரித்துக்கொண் டிருந் தன. அவை யாவும் வரப்போகின்ற பெருநாளன்று 'பிறைக்கொடி'யை நாட்டப் போகின்றன என்பதை நினைத்ததும் நஸீருத்தீனின் கழுத்து, பூரிப்பினால் நிமிர்ந்தது.

நஸீருத்தீன் வாழ்க்கைக் கோட்டையைச் சுற்றி வறுமை என்ற பச்சை மண்தான் பூச்சாக நின்றது என்று நாக்கூசாது கூறிவிடுவதில் தப்பு ஒன்றுமில்லை. சமூகமே

ஒப்புக்கொள்ளும் காரணம் அதற்கு அடிப்படையாக நின்றதென்றால் எதிர்வாதத்துக்குப் பிரச்னை இல்லாது போயிற்று!

அவன் ஒரு என். ஜி. ஓ.

ஒவ்வொரு மாதமும் கிடைக்கும் சொற்ப ஊதியத்தில் தாயார், இரு சகோதரிகள், ஊனம் அடைந்த தம்பி ஆகிய இவர்களைச் சமாளித்து வந்த நஸீருத்தீன் தன் குடும்பக் கப்பல் கவிழ்ந்துவிடாதபடி ஊதியம் என்ற பாய்மரத்தை யும், செலவு என்ற நங்கூரத்தையும் ஜாக்கிரதையாகக் கையாண்டு வந்தான்.

எப்படியாவது பெருநாளன்று ஒரு புதிய ஷேர்வா ணியை அணிந்துகொள்ளத்தான் வேண்டும் என்ற தீர்மா னம் அவன் நெஞ்சில் ஸ்திரமாக நின்றுவிட்டது. அதற் காகக் 'காகா சாஹிப்' கடை நாஸ்தா, ஆபீஸ் கான்டீன் சாயா, நாயர் கடையில் வாங்கும் சிகரெட்டுகள் ஆகிய இவைகளுக்குச் சலாம் போட்டுவிட்டு, மாதந்தோறும் ஐந்தைந்து ரூபாயாகச் சேர்க்கலானான். எட்டு மாதங்கள் மாயமாக மறைந்தவுடன் நாற்பது ரூபாய்கள் தன் ஜேபியில் அடைக்கலம் புகுந்ததைக் கண்டு அவனுக்கு ஓரே திகைப்பா யிருந்தது.

நேரே சைனா பஜார் சென்றான். ஒவ்வொரு துணிக் கடையாக நுழைவதும், விழிகளை நான்கு பக்கங்களிலும் மேய விடுவதும் படிகளை விட்டு இறங்குவதும் அவன் ஜோலியாக இருந்தன! துணி நன்றாக இருந்தால், நிறம் பிடிக்கவில்லை.

இரண்டும் மனத்துக்குப் பொருத்தமாக இருந்த போது ஜேபியிலுள்ள பணத்தில் மூன்றில் ஒரு பங்கை ஏப்பமிடக் காத்துக்கொண் டிருந்த தையற்கூலி அவனை உஷாரப் படுத்தியது! எப்படியோ ஒரு விதமாக நான்கு கஜம் துணி வாங்கி, அதை ஷேர்வானியாகத் தைப்பதற் குக் கொடுத்துவிட்டுச் சோர்வடைந்த உடலுடன் இல்லத் துக்குத் திரும்பினான். இந்தச் சுப வைபவம் நிகழ்ந்தது பெருநாளுக்கு முதல் வாரத்தில்தான். மூன்றே நாட்களில்

தைத்துக் கொடுப்பதாக வாக்கும் உத்தரவாதமும் கொடுத்த தையற்காரத் திப்பு சுல்தான் பெருநாளுக்கு முதல் நாள்கூட அதைக் கொடுக்க மாட்டான்போல் தெரிந்ததை உணர்ந்ததும் நஸீருத்தீனின் நெஞ்சு படாத பாடு பட்டது. ராயப்பேட்டைக்கும் சைனுபஜாருக்கும் ஆறேழு தடவைகள் அலைந்த பின்புதான் அந்த ஷேர்வானி அவன் கைக்கு ஒருவிதமாக வந்து சேர்ந்தது!

இத்தகைய சோதனைகளுக்கு உட்பட்ட அந்தக் கிச்சிலி வர்ண ஷேர்வானியைப் பார்த்துப் பார்த்து மனத்துள் மகிழ்ச்சியோடு முறுவலித்துக்கொண்டே குழாயடிக்கு நஸீருத்தீன் சென்றான்.

ஃ ஃ ஃ

அன்று பெருநாள் பண்டிகை!

சன்மார்க்க உயர்வுக்காகவும் ஆத்மார்த்த உன்னதத்துக்காகவும் ரம்ஜான் மாதத்தில் முப்பது நாட்கள் அல்லும் பகலும் நோன்பு நோற்ற பின் தம் கடமையை நிறைவேற்றியதற்காக அல்லாஹுத்தாலாவிடம் நன்றியைச் செலுத்தும் அந்த ஒப்பற்ற நாள் விடிந்தது! முன்னாள் இரவில் விண்ணில் பிறை தென்பட்டவுடன், மறுநாள்—பண்டிகை நாளன்று—திருவல்லிக்கேணியிலுள்ள பள்ளி வாசலில் காலை பதினொரு மணிக்கு 'நமாஸ்' ஆரம்பமாகும் என்று நகரத்துக் காஜி சாஹேப் முன்கூட்டியே அறிவித்து விட்டார்.

ஸ்நானத்தை முடித்துக்கொண்டு சகோதரிகள், தம்பி ஆகிய இவர்களுடன் ஒரே பாயில் அமர்ந்து 'கண் கண்ட தெய்வ'மான அன்னை சமைத்துவைத்த அறுசுவை உண்டியை ஆனந்தமாகச் சாப்பிட்டான் நஸீருத்தீன். பெட்டியைத் திறந்து அந்தப் புது ஷேர்வானியை எடுத்து அவன் அணிந்துகொண்டபோது களிப்பினால் அவன் முகம் தாமரையாக மலர்ந்தது. துருக்கிக் குல்லாவைத் தலையில் தரித்து, நிலைக்கண்ணாடி முன்னின்றதும் அசல் ஆர்க்காட்டு நவாபுபோல் தான் தோற்றமளித்ததைக் கண்டதும் அவ

னிடம் உண்டான மகிழ்ச்சி கிளர்ச்சி செய்தது. புட்டியைத் திறந்து அத்தரைப் பூசிக்கொண்டான். பெற்றவளின் சிரடிகளைக் குனிந்து வணங்கிவிட்டு, புதிதாக வாங்கிய காபூலி செருப்புகளை மாட்டிக்கொண்டான். நிலைப்படியைத் தாண்டிவிட்டு மசூதியை நோக்கிக் கிளம்பினான். நேர்வழியாகச் செல்லாது பல்வேறு சந்துகளில் புகுந்து அவன் போனதற்கு உண்டான விபரீத காரணம் என்னவென்றால், தான் அணிந்திருந்த ஷேர்வானியை யாவரும் பார்க்க வேண்டும் என்று அவன் உள்ளத்தில் தலைதூக்கி நின்ற ஆசைதான்!

அவன் நடை, நவாப் நடையாக மாறி, ஜோராக இருந்தது. பளபளப்பான குல்லாக்களுடன், பஞ்சவர்ண ஆடைகளைத் தரித்த சாயபுமார்க்ள்,சிறுர்கள் பின்தொடர மசூதியை நோக்கிச் சென்றுகொண்டிருந்த நேத்திரானந்தமான காட்சி நஸீருத்தீனைத் திக்கு முக்காடச் செய்தது. இந்தக் கூட்டத்துக்கிடையில் வெள்ளைத் தலைப்பாகையும், பொன்னிற ஷேர்வானியும் அணிந்த ஒரு பெரியவரை ஏற்றிச்சென்ற ரிக்ஷா தன் முன்னுல் ஊர்ந்துகொண்டிருந்ததை நஸீருத்தீன் கண்டான். கடிகாரத்தைப் பார்த்தான். பதினெரு மணி அடிப்பதற்குப் பத்து நிமிஷங்கள்தாம் எஞ்சி நிற்கின்றன என்பதை அறிந்ததும் அவன் நெஞ்சு பகீரென்றது.

மசூதியில் 'நமாஸ்' எங்கே தொடங்கிவிடுமோ என்ற பீதி அவனை வெளவியது. நரம்புகளில் தேங்கிக் கிடந்த சக்தியையெல்லாம் ஒன்று திரட்டி நடையைத் துரிதமாக்க அவன் முயன்றபோது ஒரு விபரீதம் நிகழ்ந்துவிட்டதைக் கண்டு நஸீருத்தீன் ஸ்தம்பித்து விட்டான். முன்னுல் சென்றுகொண்டிருந்த ரிக்ஷாவில் அமர்ந்திருந்த அந்தப் பெரியவர் தடாலென்று நடுரோட்டில் விழுந்துவிட்டார். உடனே நஸீருத்தீன் ஓடி, அந்தக் கிழவரை இரு கைகளாலும் அப்படியே தூக்கி ரிக்ஷாவில் அமரச் செய்தபோது அவனுக்கு நெடுமுச்சு வாங்கியது. அந்த முதியவர் பிரக்ஞை இழந்த நிலையில் இருப்பதை உணர்ந்ததும் அவன் சித்தம் ஒன்றும் தோன்ருமல் ஊசலாடிற்று.

"இந்தாப்பா ரிக்ஷா! இவரை இப்படியே வீட்டுக்குத் திருப்பிக் கொண்டுபோய்ச் சேர்த்துவிடு" என்றான் நஸீருத்தீன் நாக்குக் குழற.

"வீடு தெரியாமல் இல்லே! ஆனால் இவரைத் தனியாக வைச்சுக்கிட்டு எப்படி வண்டியை இழுத்துக்கிட்டுப் போறது?" என்றான் ரிக்ஷாக்காரன் விரல்களை நொடித்துக்கொண்டு.

"இந்தாப்பா! இன்னும் ஐந்து நிமிஷத்தில் மசூதியில் தொழுகை ஆரம்பிச்சிடுவாங்க. நான் போய்த்தான் ஆகணும். எப்படியாவது இவரை அழைத்துக்கொண்டு போய்ச் சேர்த்துவிடு" என்றான் நஸீருத்தீன் மிகவும் கெஞ்சிய குரலில்.

"சரிதான், ஐயா! சாயபுக்குப் பேச்சு மூச்சே இல்லியே! 'சப்போர்ட்' இல்லாட்டிப் போனால் அவரு மறுபடியும் சாய்ஞ்சு விழுந்துட்டா?" என்றான் ரிக்ஷாக்காரன் தடுமாறிய வண்ணம்.

அன்றோ பெருநாள்!

வருஷத்துக்கு ஒரே ஒரு முறை வரும் பண்டிகைப் பெருநாள்!

அந்நாளில் நடைபெறும் புனிதமான தொழுகையில் கலந்துகொள்வதைப் போல் சிறந்தது வேறொன்றும் இல்லை. இந்த எண்ணங்கள் ஒருபுறம் வாட்டி வதைக்க, கடமை உணர்ச்சி மறுபக்கம் தாக்க, இந்த இக்கட்டான நிலையில் திருதிருவென்று விழித்துக்கொண்டிருந்த நஸீருத்தீன் ஒன்றும் தோன்றாமல் கைகளைப் பிசைந்துகொண்டு நின்றான். பெரியவரின்மீது அவன் நாட்டம் திரும்பியது. அவர் வதனத்தில் நிலவிய சாந்தமும் அமைதியும் தெய்விகக் களையும் அந்த இளைஞனின் இதயத்தைத் தொட்டுவிட்டன.

"சரி. நானும் ஏறிக்கொள்கிறேன். அவர் வீட்டை நோக்கி விடு" என்று படபடத்த மனத்திலும் நிதானத்தை இழக்காது பகர்ந்துகொண்டே ரிக்ஷாவில் ஏறிக்கொண்

டான். கிழவரைத் தன் மார்போடு தாங்கிக்கொண்டு உட்கார்ந்தான். நுதலில் கசிந்த வியர்வை இமைகளின் மீது சொட்டுச் சொட்டாக வீழ்ந்தும், அதைத் துடைத்து நீக்க அந்த இளம் தியாகிக்கு அவகாசம் இல்லாமற் போய் விட்டது!

ரிக்ஷா அப்பெரியவரின் மனையை அடைந்தது. முதியவரை ஜாக்கிரதையாகக் கீழே இறக்கி, வீட்டா ரிடம் ஒப்படைத்துவிட்டு, பள்ளி வாசலை நோக்கி ஓட எத்தனித்தபோது ஓர் எதிர்பாராத சம்பவம் நிகழ்ந்துவிட் டதை அறிந்ததும் நஸீருத்தீனின் நெஞ்சு பகீர் என்றது. தான் அணிந்திருந்த ஷேர்வானியின் பின்புறம் ஒரே சேறாக இருந்ததைக் கண்டதும் அவன் உள்ளம் இரு கூறு களாகப் பிளந்துவிட்டது. ரிக்ஷாவிலிருந்து அப்பெரியவர் சாய்ந்தபோது, சாலையில் இருந்த சேற்றில் தவறி விழுந்து விட்டதும், அவரைத் தூக்கி அவ்வாகனத்தில் ஏற்றிய போது தன் உடை அசுத்தமானதும் அவனுக்கு இப் போதுதான் புரிந்தன. துயரம் அவனை வாட்டவே, கண் கள் கலங்கின. ஷேர்வானியின்மீது அவன் மங்கிய பார்வை விழுந்ததும், இத்தனை நாட்களாகத் தான் கட்டிய ஆசைக்கோட்டைகள் துகளாக இடிந்து வீழ்ந்ததை நினைத்து மனம் சஞ்சலித்தது.

நயனங்களிலே நீர் கொப்பளிக்க, இதயத்திலே எஞ்சி நின்ற ஈரமும் ஆவியாகிவிடவே, கவிழ்ந்த சிரத்துடன் பரிதாபக் கோலத்தில் தன் வீட்டை நோக்கித் தள்ளாடி நடக்கலானான் அந்த ஆண்மகன்.

எந்த ஷேர்வானிக்காக அவன் இத்தனை மாதங்கள் அல்லல்பட்டானோ, அதை அவன் கழற்றும்போது கண் கள் குளங்களாயின. அதரங்கள் உலர்ந்தன.

அணிந்த ஆடை போனதோடு மல்லாமல் பெருநாள் தொழுகையும் தவறிவிட்டதை நினைத்ததும் அவன் மேனி, காய்ந்த ஆலிலைபோல் துவண்டது. சொல்லொணாத் துயரம் வாட்டிற்று.

வீட்டில் தங்குவதற்கு அவனுக்கு இருப்புக்கொள்ள வில்லை. நல்ல நாளன்று மசூதி வரையிலாவது போய் வருவதற்கு அவன் மனம் பிடிவாதம் செய்தது. எந்த ஒட்டுகள் போட்ட கோட்டை அவன் சர்வசாதாரணமாக உபயோகித்து வந்தானோ, அதை எடுத்து மாட்டிக் கொண்டபோது இதயத்தைக் கீறிக்கொண்டு மேலெழுந்த பெருமூச்சு அவன் உடலை உலுக்கியது.

பள்ளிவாசலின் வாயிலை அடைந்தபோது, அங்கே நிலவிய காட்சி அவனைத் தூக்கி வாரிப் போட்டது. குழுமியிருந்த ஆயிரக்கணக்கான மக்கள் ஏதோ தன் வருகைக்காகக் காத்துக்கொண் டிருப்பதுபோல் தோன்றி யதும், நஸீருத்தீன் மலைத்துப் போனான். விழிகள் சுழல, மனம் படபடக்க, அடிமேல் அடி வைத்துப் படிக்கட்டுக் களில் ஏறினான். தன்னை எதிர் நோக்கி நாலைந்து பேர்கள் விரைவாக வருவதைக் கண்டதும் அவனுக்குத் 'திக்' கென்றது.

"என்ன அவர் வந்து விட்டாரா?" என்று அவர் களில் ஒருவர் வினவியதும், நஸீருத்தீனுக்கு ஒன்றும் புரியவில்லை.

"எதைக் கேட்கிறீங்க? 'நமாஸ்' முடிந்துவிட்டதா?" என்றான் நஸீருத்தீன் ஒரே குழப்பத்துடன்.

"சரியாய்ப் போச்சு. தொழுகை இன்னும் ஆரம் பிக்கவே இல்லையே!" என்று மற்றவர் சொன்னதும் அவன் தலை கிறுகிறுத்தது.

"நிசந்தானா? நேரம் அப்பொழுதே ஆயிடுச்சே!" நஸீருத்தீனின் உள்ளம் அலைக்கழிந்தது. சொற்கள் தொண்டையிலிருந்து திக்குமுக்காடிக் கிளம்பின.

"பதினொன்றுக்கு மேலே பத்து நிமிஷங்கூட அதிக மாகப் போயிடுச்சு. என்ன செய்வது? நம்ம டவுன் காஜீ சாஹேப் இன்னும் வந்து சேர்ந்த பாடில்லை! ஒவ்வொரு வருஷமும் அவர்தானே இந்தப் பெருநாள் தொழுகையை முன்னின்று நடத்துவது வழக்கம்? அவருடைய வருகையை

எதிர்பார்த்துத்தான் கூட்டம் அப்படியே நிற்கிறது. ஏதாவது சேதியை நீங்கள் கொண்டுவந்திருப்பீர்கள் என்று நினைத்து உங்களைக் கேட்டோம்!'' என்றார் நகரப் பிரமுகர் ஒருவர்.

''எனக்கு அதைப்பற்றி ஒன்றும் தெரியாது. ஏதோ வந்தேன்'' என்றான் நஸீருத்தீன் நெற்றியை இறுகப் பிடித்துக்கொண்டு.

''சரி; இனித் தாமதிப்பதில் நியாயமில்லை. பத்து நிமிஷம் வேறு விரயமாகி விட்டது. நம்ம சின்ன காஜீ சாஹேபே இந்த 'நமாஸை' முன்னின்று நடத்தட்டும்'' என்று அந்தப் பிரமுகர், குழுமியிருந்தோரை நோக்கி உரத்த குரலில் நவின்ற மறுகணத்தில் கூட்டத்தினர் வரிசை வரிசையாக அணிவகுத்து, தோளோடு தோளாக நின்றனர். 'அல்லாஹு அக்பர், அல்லாஹு அக்பர்' என்று எழுந்த தெய்விக ஒலியை மசூதி மண்டபம் எதிரொலிக்கவே, பெருநாள் தொழுகையும் ஆரம்பமாயிற்று.

'நமாஸ்' ஆன பிறகு, சின்னக் காஜீ சாஹேப் தொடங்கிய உபந்நியாசம் ஒருவாறு முடிந்த பின் கூட்டம் கலையலாயிற்று.

யாவரும் அவ்விடத்தை விட்டு நீங்கியபின் நஸீருத்தீன் மண்டபத்தை விட்டு வெளியே வந்தான். அவனுக்கு யாவும் ஒரு பகற்கனவுபோல் தோன்றிற்று. மேற்குத் திசையை நோக்கிக் கைகளை உயர்த்தி, 'யா அல்லாஹு! உன் கருணைக்கும் தயாளத்துக்கும் ஈடுண்டோ? ஓர் அற்ப ஜீவனுக்காக ஆயிரக்கணக்கான உன் அடியார்களை நிறுத்தி வைத்து விட்டாய். இந்த எளியனும் கலந்து கொள்ளும்பொருட்டு இந்த ஒப்பற்ற பெருநாள் தொழுகையைக்கூடத் தாமதப்படுத்தி விட்டாய்! உன் செயலே செயல்! யா ரஹ்மான்!' என்று தன்னையும் மறந்து அந்த இளைஞன் வாய்விட்டு உணர்ச்சி தாளாது கதறியதும் அவன் நயனங்கள் ஆனந்த பாஷ்பத்தைப் பொல பொல வென்று சொரிந்தன. ஈடு இணையற்ற அந்த அருளாளன் புரிந்துவிட்ட மற்றொரு வேடிக்கை என்னவென்றால், நடு ரோட்டில் ரத்த அழுத்த வியாதியால் மயக்கமுற்று

விழுந்து கிடந்த எந்தக் கிழவருக்கு நஸீருத்தீன் கை கொடுத்துத் தன் பெருநாள் தொழுகையையும் புதிய ஷேர்வானியையும் தியாகம் செய்துவிட்டானோ, அந்தப் பெரியார்தான் அன்று மசூதியில் பெருநாள் தொழுகையை முன்னின்று நடத்தவேண்டிய டவுன் பெரிய காஜீ சாஹேப் என்பது அந்த இளைஞனுக்கு இன்று வரையில் தெரியாமல் இருப்பதுதான்!

# பாச்சாவின் வஞ்சம்

அரசியலும் தத்துவமும் விவகாரமும் பிரதிபலிக்கும் சொற்களைத் தன் வாடிக்கைக்காரர்களிடம் தாராளமாகப் பரிமாறிக்கொண்டு, ஒன்பது வருஷ காலமாகக் கசாப்புக் கடையை நிம்மதியாக நடத்தி வந்த பாச்சாவின் வாழ்க்கை, தடம் புரண்டது. தனிக்காட்டு நவாபாக அவன் தர்பார் நடத்தி வந்த இடத்தில் ஓர் 'ஜபர்தஸ்த்' சுல்தான் படையெடுக்கலானான்! என்றைக்கு மஜீத் கசாப்புக் கடையை அந்த மார்க்கெட்டில் திறந்தானோ அன்றைக்கே பாச்சாவின் வியாபாரத்தில் ஒரு திருப்பம் ஏற்பட்டு விட்டது.

பாச்சாவோ முரடன். அவனுக்கு முற்றும் மாறுபட்டவன் மஜீத். கலகலவென்று சிரித்த வண்ணம், எல்லோருடனும் நையாண்டியாகப் பேசிக் காலத்தைக் கழிக்கும் குஷிப் பேர்வழி. தன் கடையில் பண்டம் வாங்குபவர்களுக்குப் பீடிகளைக் கொடுத்து உபசரித்தும், கடனாகக் கொடுத்தும் அவன் வியாபாரத்தைப் பெருக்கி வந்ததனால், பாச்சாவின் வாடிக்கைகாரர்கள் ஒவ்வொருவராக மஜீத்தை ஒட்டிக்கொள்ளத் தொடங்கினார்கள். மஜீத் கையாண்டு வந்த 'தில்லுமுல்லு'களைக் கண்ட பாச்சாவின் உள்ளம் கொந்தளித்தது. அவனுடன் வலுவில் 'லடாய்' செய்யப் பல தடவைகள் முயன்ற போதிலும் பாச்சாவின் பாச்சா பலிக்காமல் போயிற்று! நாளொன்றுக்கு மூன்று ரூபாய் லாபத்தைக் கண்ட மஜீத்தின் கடை, நாளடைவில் பத்து ரூபாய்க்கும் மேல் ஏறி விட்டது.

இந்த ஒரே கவலையினால் அங்கோரா ஆடுபோல் இருந்த பாச்சா அம்மாப்பேட்டைச் செம்மறியாடுபோல் உருமாறி இளைத்துவிட்டான். பிரம்மசாரிகளாக இருந்த இந்த இரண்டு 'கிடாக்'கள் ஒன்றோடொன்று முட்டிக்கொள்ளாத வண்ணம் அந்த மார்க்கெட்டிலிருந்த சில கிழ 'ஆடுகள்' கண்காணித்து வரத் தவறவில்லை.

தான் வசிக்கும் அபுல்கலாம் ஆஸாத் சந்திலே மஜீதும் குடியேறி விட்டான் என்ற செய்தியைக் கேட்டதும் பாச்சாவிற்குத் தூக்கி வாரிப் போட்டது. தன் வியாபாரத்திற்குப் பாதகம் விளைவித்த அந்தப் 'பத்மாஷ்', தான் வசிக்கும் சந்திலும் நுழைந்துவிட்டதால் மேலும் என்ன 'ஜுலூம்கள் (அக்கிரமங்கள்)' பண்ணப் போகிறானோ என்ற கிலி அவனை ஆட்டி வைத்தது.

புதிதாகக் குடிவந்த வீட்டு முற்றத்தில் ஹாய்யாக உட்கார்ந்துகொண்டு, மேல் அட்டை கிழிந்த ஒரு பழைய நாடகப் பாட்டுப் புத்தகத்தைப் பிரித்து ஏதோ ஒரு பாட்டை மிக்க சுவாரஸ்யமாகப் பாடிக்கொண் டிருந்தான் மஜீத். அந்தப் பாட்டின் மெட்டு அவனைக் கவர்ந்து விட்டது. கைகள் வெகு ஜோராக ஓலைப்பாயில் தாளம் போட, அந்த ஒரே பாட்டை ஏழாவது தடவையாக அவன் மிக்க குஷியாகப் பாடிக்கொண் டிருந்தபோது, கொல்லைப்புறக் கதவின் வழியாக உள்ளே புகுந்த ஆட்டுக் குட்டி ஒன்று அவன்மேல் திடீரென்று துள்ளிக் குதித்தது. சட்டென்று அதன்மீது தாவி அதைப் பிடித்துக்கொண்டான் மஜீத்.

''அந்தக் குட்டியை இங்கே கொடுங்களேன்'' என்று கொல்லைப்புற வாசலிடமிருந்து தவழ்ந்து வந்த மெல்லிய குரலைச் செவி மடுத்த மஜீத் திடுக்கிட்டான். பூக்கள் போட்ட மஞ்சள் நிற ஜிமிக்கி தாவணி காற்றில் தவழ்ந்தாட, வெல்வெட் 'சோலி' விழிகளை வௌவ, ஒரு சௌந்தர்யப் பிழம்பு அங்கே நிற்பதைக் கண்டதும், மஜீதின் ரத்த ஓட்டம் நின்றுவிட்டது.

''யாரும் புள்ளே, நீ?'' என்று வினவினான் மஜீத், தயக்கத்துடன்.

"எங்க வூட்டு ஆட்டுக்குட்டி, இங்கே நுழைஞ்சுடுச்சு. அதைப் புடிச்சுப் போக வந்தேன்" என்று சங்கோஜத்துடன் சொல்லிச் செம்பவழ இதழ்களை விரித்தாள் அவ்வனிதை.

"நீ மூதெல்ல யாருன்னு சொல்லேன்?" என்று பீடிகை போட்டான் அந்த நம்பி.

"ஹூம்" என்று உறுமி விட்டு, தாவணியின் தலைப்பை இழுத்து முகத்தை மூடிக்கொண்டாள் அவள்.

"சரி, நீ சொல்ல வேண்டாம். அங்கேயே நில்லு; நான் இந்தக் குட்டியை இளுத்துக்கிட்டு அங்கே வர்ரேன்" என்று சொல்லி, ஆட்டுக் குட்டியைச் சிரமப்பட்டுத் தூக்குவதுபோல் பாவனை செய்தான் மஜீத். "அடி ஆத்தே! இது ஆட்டுக் குட்டியா...ஆனைக்குட்டியா! இளுத்தாச் சண்டித்தனம் பண்ணுது. தூக்கினா முதுகெலும்பு முறியுது. நீயே உள்ளே வந்து இதை அழைச்சுட்டுப் போயேன்!" என்றான் சுவாதீனமாக.

மேலெழுந்த சிரிப்பை அடக்க முடியாது 'களுக்' கென்று கொட்டிவிட்டாள் அவள். மஜீதின் கட்டுமஸ்தான உடலமைப்பும், பரிகாசப் பேச்சும் அவள் உள்ளத்தை ஈர்த்தன.

"சும்மா, பயப்படாமே உள்ளே வா" என்று ஆசையுடன் வரவேற்றான் மஜீத். கட்டை விரலைத் தரையில் தேய்த்துக்கொண்டும், நகங்களைக் கதவிலே உராய்ந்து கொண்டும் நின்ற அந்தப் பாவை, பார்வையை அக்கம் பக்கங்களில் ஓட்டிவிட்டுச் சரேலென்று வீட்டிற்குள் புகுந்தாள்.

"சட்டுனு கொடுங்க கயிற்றை! நான் போவணும்" என்று துரிதப்படுத்திய அக் காரிகையின் குரல் மஜீதின் செவிகளில் வீழ்ந்தனவோ இல்லையோ!

"என்ன சொன்னே?" என்று கேட்டான் மஜீத் கலக்கத்துடன்.

"கயிற்றை நீங்க புடிச்சிக்கிட்டுருந்தா ஆட்டைக் கூட்டிக்கிட்டு நான் எப்படிப் போகிறது?"

"ஓஹோ......கயிறு கேட்டே? இந்தா" என்று சொல்லிக் கயிற்றை நீட்டினான். அதை அவள் பெறும்போது அவன் கையை அவள் காந்தள் விரல்கள் தீண்டி விட்டன. மறு கணத்தில் மஜீதின் பிடியில் சிக்கித் தவித்தது அவள் கரம்.

"ஐயோ, அல்லாவே! உடுங்கோ கையை!" என்று அலறிப் புடைத்து, கையை உதறி விடுவித்துக்கொண்டு அவனை எரித்து விடுபவள்போல் கண்களை அகல விரித்துப் பார்த்தாள்.

"இந்தாம் புள்ளே. உன் ஆட்டுக் குட்டி மாதிரி நீயும் ஏன் குதிக்கிறே? உன் கையை அறுத்து கசாப்புக் கடையிலே விக்கவா போறேன்!" என்று சொல்லி, "சரி... நீ எங்கே இருக்கே?" என்று கேட்டான் மஜீத் தாழ்ந்த குரலில்.

"பக்கத்து வீடு."

"உன் பெயரைச் சொல்லேன்?"

"குல்ஸூம்."

"இந்தா, இந்தக் குட்டியைப் புடிச்சுட்டுப் போ."

"நம்மை யாராச்சும் பார்த்துட்டாங்களா?" என்றாள் அவள் ஒரே பீதியுடன்.

"சே...இங்கே ஒருத்தரும் வரவுமில்லை, உன்னைப் பார்க்கவுமில்லை" என்றான் மஜீத், லேசாக முறுவலித்த வண்ணம்.

"நான் போறேன்."

"யாரு உன்னைத் தடுத்தது? பேஷாப் போ. ஆனால் இந்த ஆட்டுக் குட்டியை மாத்திரம் தினமும் இங்கே அனுப்பிச்சிட்டிரு!" என்று சொல்லி உரக்கச் சிரித்தான் மஜீத்.

தாவணியைச் சரிப்படுத்திக்கொண்டு, கருவிளை மலரைப்போன்ற கண்களால் அவனை மருள மருளப் பார்த்துக்கொண்டவாறே பின் கதவைத் தாண்டி மறைந்தாள் குல்ஸூம்.

ஒன்றும் தோன்ருது சஞ்சல மனத்துடன் மஜீத் ஸ்தம்பித்து நின்றுகொண் டிருந்தபோது வாசற் கதவை யாரோ பலமாகத் தட்டும் அரவம் அவன் செவிகளில் வீழ்ந்தது.

மஜீத் கதவைத் திறந்தான். "எப்போ பிடிச்சுக் கூப் பிடுகிறேன். என்ன செஞ்சுட்டிருந்தே?" என்று கூறிக் கொண்டே உள்ளே பிரவேசித்தாள் அவன் தாய் காத்தூன் பீ.

"ஆட்டுக் குட்டியொன்று உள்ளே வந்து கடபடா பண்ணிடிச்சு. அதை விரட்டியடிக்கிற சந்தடிலே உன் குரலைக் கேட்கலே" என்று மழுப்பினுன் மஜீத்.

"பக்கத்து வீட்டுக் குட்டியா யிருக்கணும்."

"பக்கத்து வீடா!"

"அதான், நம்ப ஷேக்மீரா ராவுத்தர் வூட்டேச் சொல் றேன்."

"அவர் யாரம்மா?"

"ஆட்டு வியாபாரம் பண்ருரு. அவர் பொஞ்சாதியை எனக்கு ரொம்பப் புடிச்சிருக்கு, தங்கமான மனசு. அவங்களுக்கு ஒரே பொண்ணுதான் இருக்கு."

மஜீத் மௌனம் சாதித்தான். தொடர்ந்தாள் காத் தூன்பீ: "பொண்ணு ராசாத்தி மாதிரி இருக்கும். அது பெயரு குல்ஸூம்!"

"சரிதான்!"

"உன் கடைக்குப் பக்கத்துலே கடை வச்சிருக்கானே, பாச்சா" என்று காத்தூன்பீ தொடங்கியதும் மஜீத் திடுக்கிட்டான்.

"ஆமாம்."

"அந்தப் பாச்சாவோட மாமாதான் ஷேக்மீரா ராவுத்தர். அவனுக்குத்தான் குல்ஸூமைக் கொடுக் கணும்னு, அது பொறந்த நாளாச் சொல்லிக்கிட் டிருக் காங்களாம்."

"இதெல்லாம் உனக்கு எப்படியம்மா தெரியும்?"

"இதுவரைக்கும் அவங்க வூட்லேதான் இருந்தேன். குல்ஸூம் என் முன்னுலே வரவேயில்லே. ரொம்பப் பயந்த சுபாவம்!"

அந்தப் 'பூனை'யின் குணுதிசயத்தை அன்னையின் வாயினுல் கேட்ட மஜீத் தனக்குள் சிரித்துக்கொண்டான். தொடர்ந்தாள் காத்தூன்பீ: "பேசிக்கிட்டே இருந் தோம். திடும்னு பாச்சா வந்தான்." மஜீதின் மனத்தைப் பயம் வௌவியது.

"அவன் வந்தவுடனே துப்பட்டியைப் போட்டுக் கிட்டு ஓடியாந்துட்டேன். முறை மாப்பிள்ளை. அதான் தாட்பூட்னு அந்த வூட்டுக்கு வர்ரான், போருன்."

மஜீத் வாயடைத்து நின்ருன்.

"முறை மாப்பிள்ளைக்கு முடிச்சுப் போட்டுட்டாங் களா, அம்மா?" என்று கேட்டான் தயக்கத்துடன்.

"பரிசம் போடக் கொஞ்ச நாள் ஆகுமாம். குல்ஸூம் அம்மா சொல்லிச்சு. யார் 'நஸீப் -விதி-' எப்படி இருக்கோ? அல்லாவுக்குத்தான் தெரியும்."

குல்ஸூமுடன் மஜீதின் முதல் சந்திப்பு இப்படி ஓர் அதிர்வெடியுடன் ஆரம்பித்தது!

**ஷ**வ்வால் மாதம் கழிந்தது.

காத்தூன் பீ வீட்டில் இல்லாத வேளைகளில் ஷேக் மீரா ராவுத்தர் வீட்டு ஆட்டுக் குட்டி மஜீத் வீட்டிற்குள் நுழைவதும், அதைத் தொடர்ந்து ஒரு மான்குட்டி துள்ளி

ஓடி வருவதும், இந்த இரண்டுடன் வீட்டிற்குள்ளிருந்த ஓநாய் உறவாடுவதுமான நிகழ்ச்சிகள் 'ஜல்ஸா'-மகிழ்ச்சி-யுடன் நடந்துகொண்டுதான் இருந்தன!

"மஜீத்...கேட்டியா சங்கதி!" என்று பேச்சை ஆரம்பித்தாள் காத்தூன் பீ. வாயருகே அன்னத்தை எடுத்துச் சென்ற மஜீதின் கை மரத்து நின்றுவிட்டது.

"நம்ம பக்கத்து வூட்டுக் குல்ஸூமை அந்தப் பாச்சாவுக்கே கொடுத்துவிடப் பேச்சு வார்த்தை நடந்தது; அல்லா ஹூத்தாலா தயவாலே காரியம் முடிஞ்சுடுச்சாம்!" என்று அவள் சொல்லி முடித்ததும், மஜீதின் தலையில் பேரிடி வீழ்ந்ததுபோல் ஆயிற்று. மதி மருண்ட அவனுக்கு, தான் இருண்ட பாதாளத்தில் உருண்டு வீழ்ந்தது போல் பிரமை உண்டாயிற்று. அன்னத்தை உதறிவிட்டுச் சட்டென்று எழுந்தான்.

"ஏன் அதுக்குள்ளே எழுந்திட்டே? இன்னும் கொஞ்சம் ஏதாவது சாப்பிடேன்" என்று கெஞ்சினாள் அப்பேதை.

"வயிறு நிரம்பிடுச்சம்மா!"

"கை கழுவரத்துக்கு முன்னாடி எல்லா விசயத்தையும் கேட்டுட்டுப் போயேன். கழுத்துக்கு ஆறு பவுன்லே அவத்திக்காய்ச் சுவடி மாலையும், மூணு பவுன்லே சிகப்புக் கல் போட்ட கிள்ளட்டிகையும், கைக்கு நாலு நாலு பூட்டுக் காப்பும் பொண் வீட்டுக்காரங்க போடறதாகப் பேசி முடிச்சாங்களாம் பாச்சா நல்ல ராசிக்காரன் போ.!"

நீண்ட பெருமூச்சொன்று மஜீதின் இதயத்தைக் கீறிக்கொண்டு வெளிக் கிளம்பியது.

"அடுத்த வாரம் பரிசம் போடப் போறாங்கொ. மாசக் கடெசிலே நிக்காஹை வச்சுடப் போறாங்கோ. மஜீத்...நீ வீட்டைப் பார்த்துக்கோ. நான் கொஞ்சம் வெளியே போய் வர்ரேன்" என்று சொல்லிவிட்டு, குல்ஸூம் கல்யாணச் செய்தியைத் தன் சகாக்களிடம் டமாரம் அடிக்கச் சென்றுவிட்டாள் காத்தூன்பீ.

வெளிக் கதவைப் பலமாகச் சாத்திவிட்டு முற்றத்தில் வந்து உட்கார்ந்தான் மஜீத். அவன் கண்கள் எங்கும் அந்தகாரம் சூழ்ந்திருப்பதைக் கண்டன. அவன் தன், மருங்கில் காலடி யோசையைக் கேட்டுச் சிரத்தையின்றி விழிகளை மேலே ஓட்டினான். குலுங்கிக் குலுங்கி விம்மி அழுதுகொண்டு நின்ற குல்ஸூமைக் கண்டதும் அவன் உள்ளம் ஊசலாடிற்று.

"என் மனசுக்கு விரோதமா அப்பாவும் அம்மாவும் இப்படிச் செஞ்சுட்டாங்க" என்றாள் அவள், தழுதழுத்த குரலில்.

"உனக்கு வரப் போறவன் உன் அத்தை மவன் தானே? முறை மாப்பிள்ளை கூட" என்றான் மஜீத்.

"என் மனசை நோக வைக்காதிங்க, அந்த முரடன் யாருக்கு வேணும்!" "ஹய்வா'ளு (மிருகம்) ச்சே."

"நல்லா அறிஞ்சுதான் பேசறியா குல்ஸூம்?"

"இத்தென நாளா என்னோடு பழகிட்டு, இன்னுமா என்னை நீங்க தெரிஞ்சுக்கில்லே?"

"பாச்சா வேண்டாமென்றால் உன் வாப்பாகிட்டேச் சொல்றதுதானே?"

"என் புலம்பலை யார் கவனிக்கப்போறா? வாய் தவறி வந்துட்டா, கன்னத்துலே அறைதான் வுளும். பொண்ணுப் பொறந்துட்டா வாயைத் தைச்சுடுறாங்களே!"

"இப்போ என்னை என்ன செய்யச் சொல்றே?"

"நீங்க ஆம்புளே, உங்களுக்கு ஒரு பொண்ணு சொல்லணும் யோசனை?"

"எனக்கு ஒண்ணுமே விளங்கலே குல்ஸூம்."

"என் மனசையும் உசிரையும் ஒண்ணுப் பறிச்ச நீங்க என்னைக் கைவிடாதீங்க."

"எல்லாம் முடிஞ்சுடுச்சே குல்ஸூம்."

"உங்களோட நான் வாழ முடியாட்டிப்போனு கொல் லெப்புறக் கிணத்துலேதான் என் பிணத்தைப் பார்க்கப் போருங்கொ."

அவளுடைய இதயத்தின் அடித்தளத்திலிருந்து உணர்ச்சியுடன் வெளிக்கிளம்பிய அச் சொற்களைக் கேட்ட மஜீத் மதி மருண்டு நின்முன். அவள் பேசிய தோரணையும் வீசிய பார்வையும் அசைக்க முடியாத மனத் திண்மையை எடுத்துக் காட்டின.

"இந்த வூட்டையும் ஊரையும் விட்டுக் கிளம்பிடு வோம்" என்ருள் குல்ஸூம்.

"எங்கே?" என்ருன் மஜீத் திகில் அடைந்தவனுய்.

"எந்தக் காட்டுக்கோ, கபரஸ்தானுக்கோ! (மயானத் துக்கோ!")

"குல்ஸூம்...!"

"இத்தெனை நாளா உங்க மனசுக்குள்ளே என்னைக் குடிவச்ச நீங்க என்னை அழைச்சுக்கிட்டு எங்கேயாச்சும் போயிடுங்கோ" என்று மிக்க உணர்ச்சியுடன் சொல்லி, அவன் இரு கைகளையும் இறுகப் பிடித்துக்கொண்டு பொல பொலவென்று கண்ணீர் சொரிந்தாள் அவள்.

மஜீதின் மனக் கதவு திறந்துகொண்டது!

கோணிகளாலும் படுதாக்களாலும் மறைக்கப் பட்ட கதவுகளையும் ஜன்னல்களையும் கொண்ட கூடத் தில், சுதந்தரத்தையும் காதலையும் எதிர்பார்த்து ஏங்கிக் கிடந்த மாடப்புரு, தெருக்கோடியிலுள்ள பஞ்சாயத்து லாந்தரை ஏற்றிவைத்த சமயத்தில் பறந்தோடிவிட்டது.

மறுநாள் அபுல்கலாம் ஆஸாத் சந்து அலமந்து காணப் பட்டது. 'ஷேக் மீரா ராவுத்தர் மகளை மஜீத் 'கடத்திச் சென்ற' விஷயத்தை ஊரார் ஓயாது பேசிக்கொண்டிருந் தார்கள்.

இந்த அவச் செய்தி பாச்சாவின் செவிகளில் வீழ்ந்ததும் அவன் ஸ்தம்பித்துவிட்டான். அவமானம் அவன் நெஞ்சைத் துண்டு துண்டாக நறுக்கித் தள்ளியது. பழி வாங்கும் எண்ணம் பேய்போல் அவனைப் பிடித்துக் கொண்டது.

"மாமூ! எந்தச் சண்டாளன் என் மானத்தை வாங்கினானோ, எந்தப் பேமானிப்பயல் எனக்கு வரவேண்டியவளின் கையைப் பிடித்து இழுத்துக்கொண்டு ஓடினானோ அந்தப் பாதகனின் இரண்டு கைகளையும் துண்டித்து விட்டுத்தான் மறுவேலை!" என்று ஷேக் மீரா ராவுத்தர் முன்பு ஆவேசத்துடன் அலறிவிட்டு மறைந்தான் பாச்சா.

நிக்காஹ் செய்துகொண்டு கற்பொழுக்கத்தில் இறங்கி வாழ்க்கை நடத்த விரும்பி மறைந்த காதலர்களைத் தேடிக்கொண்டு பழிவாங்கும் யாத்திரையைத் துவக்கினான் பாச்சா. எங்கெங்கேயோ வெறிபிடித்த நாய் போல் அலைந்துவிட்டு, உடலின் களைப்பினாலும் உள்ளத்தின் சோர்வாலும் உருமாறி, பெருத்த ஏமாற்றத்துடன் இரண்டு மாதம் கழித்து ஊருக்குத் திரும்பினான்.

அன்று வெள்ளிக்கிழமை.

பாச்சா தன் கடையில் வெகு மும்முரமாக வியாபாரம் செய்துகொண் டிருந்தான்.

"பாச்சா! கொஞ்சம் வர்ரியா" என்று அவன் தோழன் தோஸ்த் முகம்மது எதிர்பாராத வேளையில் அவனைக் கூப்பிடவே, பாச்சா கல்லாப் பெட்டியை விட்டுக் குதித்து அவனிடம் சென்றான்.

"சங்கதி தெரியுமா?" என்றான் தோஸ்த் முகம்மது.

"என்ன!"

"அவன் ஊருக்குத் திரும்பிவிட்டான்!"

"அந்தச் சண்டாளனா?"

"நேற்று ராவு ரெண்டு மணி இருக்கும். மூணு சீட்டு முடிச்சுட்டு வந்துட்டிருந்தேன். மாட்டு வண்டி உன் சந்

துலே நுழைஞ்சிச்சு. வண்டியெ விட்டு இறங்கினான் மஜீத். அப்புறம் உன் மாமன் மவளும் இறங்கிச்சு. சரி ஒரு பீடி கொடு.''

தோஸ்த் முகம்மது பீடியைப் பற்றவைத்தது மல்லாமல் பாச்சாவின் நெஞ்சிலே சாம்பர் பூத்துக் கிடந்த பழி வாங்கும் எண்ணத்தையும் கொழுந்துவிட் டெரியும்படி கிளறிவிட்டு மறைந்தான்.

வேங்கைபோல் கடைக்குள் பாய்ந்தான் பாச்சா. தராசைப் பிடுங்கிப் படிக்கட்டுகளோடு பெட்டிக்குள் வீசியெறிந்தான். எந்தப் பொருளைத் தன் பரம வைரியின்மீது பழி வாங்குவதற்குப் பக்குவப்படுத்திப் பாதுகாத்து வந்தானோ அந்தச் 'சத்ருக்' கத்தியை வெளியே எடுத்து வைத்தான். வாழ்நாள் முழுவதும் செங்குருதியிலே தோய்ந்த கைகளால் அதைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு குந்தாக் கட்டையின்மீது நன்றாகத் தீட்டினான். அதன் பளபளப்பு அவன் விழிகளைப் பறித்தது. அதை இடுப்பில் செருகி, ஜிப்பாவினால் மறைத்தான். கடையை விட்டு மிக்க வீராப்புடன் அவன் கீழே குதித்ததுதான் தாமதம். டமடமவென்று மசூதி நகாராவின் பேரோசை காற்றில் தவழ்ந்து வந்து, அன்றைய வெள்ளிக்கிழமைத் தொழுகையை நினைவூட்டிற்று.

'நமாஸை' முடித்துவிட்டுக் காரியத்தில் இறங்கலாமென்று தீர்மானித்து, பள்ளி வாசலை நோக்கி நடையைக் கட்டினான் பாச்சா.

தொழுகை முடிவடைந்ததும் எல்லோருக்கும் முன்பே இடத்தை விட்டெழுந்து வெளியே செல்ல அவன் காலடி வைத்ததும், ''பாச்சா பாய்!'' என்று எப்பொழுதோ கேட்ட பரிச்சயமான குரல் பின்புறத்திலிருந்து எழுந்ததைக் கேட்டு, வெடுக்கென்று தலையைத் திருப்பினான். புன்னகை பொலியும் வதனத்துடன் முன் நீட்டிய கரங்களுடன் கூட்டத்தைவிட்டு விலகித் தன்னை நோக்கி வந்த மஜீதைக் கண்டதும் பாச்சாவுக்குத் தூக்கி வாரிப் போட்டது. ''உன்னையும் என்னையும் படைத்த அல்லாஹுத்

தாலாவின் இல்லத்திலே நாம் சந்திக்கும்படி அந்த அருளாளன் கருணை புரிந்துவிட்டான். உணர்ச்சியின் எழுச்சியினால் நடந்துவிட்ட சம்பவத்தை மறந்துவிட்டு, என்னை மன்னிப்பாய் பாச்சா!'' என்று உணர்ச்சியுடன் சொல்லிப் பாச்சாவை மார்போடு இறுகத் தழுவினான் மஜீத்.

பாச்சா ஸ்தம்பித்து நின்றுவிட்டான். அவன் விழிகளில் மிதந்த கொடூரம் அங்கே துளிர்த்த நீரிலே கரைந்துவிட்டது. தன் முன் நிற்பவனை நிமிர்ந்து பார்க்க அவன் கண்கள் கூசின. சிரம் தொங்கிக் கவிழ்ந்தது. கால்கள் தள்ளாடின. ஒரு வார்த்தையும் கூறாது அவ்விடத்தை விட்டுத் தத்தித் தத்தி நடந்து, மசூதியின் படிக்கட்டுகளை விட்டு இறங்கி அவன் மறைந்த பின் இருபது வருஷங்களுக்கு மேல் ஆகிவிட்டன. அவ்வூரைச் சூறாவளி இரு தடவை சூறையாடி விட்டது. மஜீத் தன் பேரனை அழைத்துக் கொண்டு கசாப் கடைக்குச் செல்லும் நாட்களும் வந்தன. ஆனால் பாச்சா அவ்வூருக்குத் திரும்பவேயில்லை. அவனைப்பற்றி ஓர் தகவலும் கிடைக்கவேயில்லை!

# மனப் புயல்

**வ**ருணனும் வாயுவும் ஒருவரோடு ஒருவர் போட்டி போட்டுக்கொண்டு பலப் பரீட்சையில் இறங்கியபோது, உயிருக்கும் பயிருக்கும் உலைவைக்க வேண்டுமென்ற குலை நடுங்கச் செய்யும் நயவஞ்சக எண்ணத்துடன் உருவாகிக் கொண்டிருந்த புயலை அந்தத் தேவர்கள் அறவே மறந்து விட்டார்கள்! இயற்கையின் பிரதிநிதிகளாகிய அந்தப் பரோபகாரிகளே இத்தகைய கேவலமான நிலைமையை அடைந்து விட்ட போது மனித வர்க்கத்திலே முளைக்கும் சுயநலக்காரர்களைக் கண்டிப்பதற்கு இனி யார்தாம் துணிவார்கள்?

விர் விர்ரென்று காற்றுப் பலமாகச் சுழன்று சுழன்று வீசத் தொடங்கியவுடன், சுளீர் சுளீரென்று ஜயகோஷத்துடன் மழை தாக்க ஆரம்பித்ததுதான் தாமதம். திருத்துறைப்பூண்டி, தரித்திரப் பூண்டியாக மாறத் தொடங்கியது. பூரிப்பில் திளைத்து நின்ற புன்செய், புகலிடம் காணாது புலம்பியது. அறுவடையை எதிர்நோக்கி நெளிந்தாடிய நன்செய், தான் நிர்மூலப் பாதையில் உந்தப்படுவதை நினைந்து நடுங்கித் தலை சாய்த்தது.

கரைகள் உடைந்தன; கூரைகள் சரிந்தன; ஓடுகள் சல்லிகளாயின; ரோடுகள் மேடுகளாயின. 'ஏ வருணா! நீயா கருணை பொழிபவன்?' என்று பிரலாபித்துக் கொண்டே தென்ன மரங்கள் சாய்ந்தன.

'அட வாயு, போதுமப்பா உன் வெறியாட்டம்!' என்று ஓலமிட்டு வாழைமரங்கள் சிதறி வீழ்ந்தன.

ஊழிக் காலத்து நிகழ்ச்சிகள் வெளியுலகில் நிகழ்ந்து கொண்டிருக்கையில் மனம் அஞ்சாது அறிவு கலங்காது புயலின் அட்டூழியங்களை வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தாள் காத்தூன். 'இதுவும் ஒரு புயலா!' என்ற எண்ணம் அவள் உள்ளத்தில் குமிழியிட்டுக் கிளம்பியதை அவள் அதரங்களில் மிதந்து மறைந்த முறுவல் பறை சாற்றிற்று. உள்ளத்திலே உருவான சண்டமாருதத்தில் அவதிப்பட்ட அவள் தடுமாற்றத்துடன் பனைமரத் தூணை இறுகப் பிடித்துக்கொண்டு திண்ணையில் நின்றுகொண்டிருந்தாள்.

''காத்தூன், எங்கே போயிட்டே? ஊம்!'' என்ற ஓர் ஆணின் மெல்லிய குரல், மழையின் பேரிரைச்சலை ஊடுருவிக்கொண்டு குடிசைக்குள்ளிருந்து வெளியே வந்தது. அதைக் கேட்ட காத்தூனின் முகம் சுருங்கியது. எரிச்சலும் வெறுப்பும் அவள் நுதலில் கூத்தாடின.

'என் வாழ்வு தளிர்க்கும்போதே அதைக் கிள்ளிவிட்டார்களே என்னைப் பெற்றவர்கள். அந்த மஸ்தானுக்கே வாழ்க்கைப்பட்டிருந்தால் என் வாழ்வு இந்தச் சீரழிந்த நிலையிலா இருந்திருக்கும்?'

நெடுமூச்சு அவள் புண்பட்ட நெஞ்சைக் கீறிக் கொண்டு கிளம்பியது.

''காத்தூன், கொஞ்சம் என் அருகில் வாயேன்'' என்று உட்புறத்திலிருந்து எழுந்த அந்த ஆணின் வேண்டுகோள் அவள் செவிகளில் நாராச ஒலிபோல் வீழ்ந்தது.

'மஸ்தானுக்கு என்ன குறைச்சல்? இப்போது என் குரல்வளையைப் பிடித்திருக்கும் ஒன்றுக்கும் உதவாத புருஷனைக் காட்டிலும் எவ்வளவோ மேல்! அவர் அந்நியர் கூட இல்லையே. மாமன் மகன்தானே! சிறு குழந்தை முதல் அவருக்குத்தான் என்னை முடிச்சுப் போடப் போவதாக ஆசை வார்த்தைகள் சொல்லிச் சொல்லி என்னைக் கடைசியில் ஏமாற்றிவிட்டார்களே அப்பாவும் அம்மாவும்! ஒருவேளை மஸ்தான் வீட்டில் இல்லாவிட்டால் அவரைத் தேடிக்கொண்டு வரும்படி எனக்குத்தானே

அவர்கள் கட்டளையிடுவார்கள்? நானும் எவ்வளவோ குஷியுடன் குதித்துக்கொண்டே வெளியே ஓடிச் சாயாக் கடையில் பீடி குடித்துக்கொண் டிருக்கும் அவரைக் கையோடு அழைத்து வருவேன். வழியெல்லாம் என்ன என்னவோ தமாஷாகப் பேசிக் கலகலவென்று என்னைச் சிரிக்க வைப்பாரே அவர்!'

அவள் மேனி துவண்டது. வாடி வதங்கிய வதனம் ஜொலித்தது. அங்கமெல்லாம் ஒரு புத்துணர்ச்சி ஊடுருவிப் பாய்ந்தது. காற்றில் சிக்கி மது அருந்தியவர்போல் சுழன்றாடும் தென்னமரங்கள் தன் இன்ப நாட்களை எண்ணி ஆடுவதாக நினைத்தாள். சரேல் சரேலென்று அடிக்கும் சாரல் கைகொட்டி எக்களிப்பதாக எண்ணினாள்.

"ஏ காத்தூன், நான் 'மௌத்' ஆயிட்டேன்னு நினைக்காதே. என் உசிரு இன்னும் இழுத்துக்கிட்டுத்தான் இருக்கு. உன் புருசன் கெஞ்சுறதைக் கேட்கிறியா? கிட்டவந்து உதவி செய்யேன்" என்று அந்த ஆண்குரல் மிக்க வேதனையுடன் மன்றாடுவதைக் காத்தூன் செவி மடுத்ததாகக் காணோம்.

'மஸ்தானோ அநாதை. அவரைக் கட்டுப்படுத்த யாரும் இல்லாமற் போனார்கள். கயிறு கட்டாத காளை போல ஆகிவிட்டார். கெட்ட சகவாசம் அவரைக் கெடுத்துவிட்டது. காலாடிகள் தொடர்பு அவரைச் சமூகத்திலிருந்து 'கல்தா' கொடுத்தது. வாலிபப் பருவம். அவர் என்ன செய்வார்! மீன்காரி ஹஸீனாபீயைச் சொல்ல வேண்டுமா? எத்தனையோ மீன்களைச் சிக்கவைத்த சிறுக்கி அவள்! இந்தச் சுறாமீனும் அவள் மோகவலையில் வீழ்ந்து விட்டதில் என்னதான் ஆச்சரியம் கண்டார்களோ! ஊரார் சிரித்தார்கள். வாப்பாவும் அம்மாவும் தமுக்கடித்து வாய்விட்டுச் சிரித்தார்களே! கடைசியில் என்ன நடந்தது? தலை கவிழ்த்துக் கைகளைப் பின்னால் கட்டிக்கொண்டு என் வீட்டின் முன்னாலே வந்து நின்றார். உண்மையான அன்பு என்னிடம் இருந்ததால்தானே அவர் அப்படிச் செய்தார்? இதை ஏன் என் வாப்பா புரிந்துகொள்ள

வில்லே? 'அயோக்கியன், பேமானிப் பயல்!' என்று அதட்டிக் கதவைத் தடாலென்று சாத்திவிட்டாரே!'

அவள் மனமொடிந்து நின்றாள். காற்றின் உக்கிரத்தில் தத்தளித்த தென்ன மட்டைகள் ஒன்றோடு ஒன்று மோதிக்கொண்டு இரைச்சலை உண்டாக்கின.

"காத்தூன், எத்தனை தடவை நான் கூப்பிடுவேன்? எனக்குத்தான் கை இல்லை; கால் இல்லை. உனக்குமா அப்படி ஆகிவிட்டது? இந்த நோயாளிமீது பார்வையைத் திருப்பேன்" என்று அந்த ஆண்குரல் கெஞ்சி ஓலமிட்டது.

பட்டுப்போன சம்பவங்களை அவள் மனக்கண் துழாவித் துழாவி நோக்கிக்கொண் டிருந்தபோது புறக் கண்கள் உண்மையிலே பார்வையை இழந்த நிலைமையில் இருந்தன.

'அவர் ஆண்பிள்ளை. ரோசக்காரர். வாப்பா கதவைச் சாத்தியவுடன் வாசற்படியை விட்டு இறங்கிச் சென்று விட்டார். நான்கு மாதங்களாகியும் அவர் திரும்பவே இல்லை. நானும் பொறுத்திருந்தேன். அந்தப் பயங்கரச் செய்தி என் காதில் விழுந்த பிறகுதான் அவர் போதாத காலத்தில் தவிக்கிறார் என்று தெரிந்துகொண்டேன். ஹமீது, 'கேடி' என்பது இந்தச் சீமை பூராவும் தெரிந்த விஷயம். அவன் கள்ள நோட்டுகள் போட்டால் இவர் ஏன் அச்சடிக்கத் தம் வீட்டைக் கொடுத்தாரோ? ஹமீதுக்கு இரண்டு வருஷம் கொடுத்தது அநியாயம். இருபது வருஷம் கொடுத்தாலும் என் மனம் ஆறாது. மஸ்தான் நழுவி விட்டாரே! எத்தனை நாள்தான் போலீசுக்கு 'டிமிக்கி' கொடுக்க முடியும்? யோசித்துத்தான் ஓடினாரா? என்னை அடியோடு மறந்துவிட்டாரா?'

அவள் உள்ளம் விடை காணமல் தவித்தது.

"காத்தூன், கூரையிலிருந்து ஒழுகும் தண்ணீர் என் படுக்கை முழுவதையும் நனைச்சுடுச்சு. என்னைத் தூக்கி அப்புறப்படுத்தேன். எங்கே தொலைஞ்சே நீ? உன் புருசன் இன்னும் கொஞ்ச நாளிலே குழியிலே இறங்கி

விடுவான். அப்புறம் நீ எங்கேயாவது போய்விடு'' என்று ஆண்குரல் எரிச்சலுடன் பிரலாபித்தது.

'தலைமறைவாக இருந்த மஸ்தான் வருவார் வருவார் என்று எத்தனையோ நாள் காத்திருந்தேன். எனக்குக் கல்யாணம் வேண்டாம் என்று எத்தனையோ தடவை வாப்பாவுக்கு எதிராக நின்றேன் பலன் என்ன? ஊர் பேர் தெரியாத நாடோடி போல வந்த ஒருவருக்கு என்னை நிக்காஹ் செய்து கொடுத்துவிட்டார் பைத்தியக்கார வாப்பா. குணம் தங்கமென்று சொல்லிப் பசப்பினர். அது பீங்கான் என்று தெரிந்துகொண்டேன். யோக்கியன் என்றார். பாதி ராத்திரியிலே படுக்கையை விட்டு மறைந்து போனதைப் பார்த்தேன். அவரோடு நான் நடத்திய ஒரு வருஷ வாழ்வு ஒன்பது வருஷ வாழ்வுபோல அலுத்துவிட்டது.

'இதே மாதிரி அன்றொருநாள் மழை விடாது அடித்துக்கொண் டிருந்தது. பாதி ராத்திரியிலே போனவர் காலையில் வெளித் திண்ணையிலே வெறுங் கட்டாந் தரையிலே படுத்திருப்பதைப் பார்த்தேன். கூப்பிட்டேன். ஜவாப் கொடுக்கவில்லை. சைகை காட்டினர். வலது காலும் வலது கையும் முடங்கிக் கிடந்ததைக் கண்டு மனம் பதறி அலறினேன். அது பாரிச வாயுவாம். அன்று ஆரம்பித்த அழுகை இன்னும் ஓயவில்லை. ஒரு காசும் சம்பாதிக்க முடியாதவர், நடக்கவும் புரளவும் முடியாதவர்— இந்த நோயாளிப் புருசனைக் கட்டிக்கொண்டு என் காலமெல்லாம் கழிக்க வேண்டுமே, அல்லாவே!

''எதிர் வீட்டு ஆயிஷா என் வயசுதான். அவளுக்கும் அதே மாசத்திலேதான் நிக்காஹ் ஆச்சு. எவ்வளவு சந்தோஷமாக அவளும் அவள் புருஷனும் வாழ்கிறார்கள்! என் பாழும் விதி இப்படியா முடிய வேண்டும்? இந்த மரக் கட்டையை எப்பொழுதும் என் தலையிலே சுமக்கும்படி செய்துவிட்டாயே, யா ரஹ்மான்!

''அந்த மஸ்தானோடு வாழ்வேன். அவர் வருவார். என்னை நெருங்குவார். நான் கொல்லைப்புறம் ஓடுவேன். பின் பக்கமாக வாசற் பக்கம் நுழைந்து அவர் முதுகைத்.

தட்டுவேன். என் மேலே அவர் தாவுவார். என் கன்னங்களைச் சிவக்கச் செய்வார். என் உதடுகளை ஈரமாக்குவார். அவர் பிடியிலே நான் கெளுத்தி மாதிரி துள்ளுவேன். இப்படி யெல்லாம் கனுக் கண்டேனே. அந்தக் கனுவெல்லாம் 'வனு' ஆகிவிட்டதே!''

அவள் மிக்க வெறுப்புடன் நெற்றியிலே ஓங்கி அடித்துக்கொண்டாள். வெளியில் பெய்யும் மழைக்குப் போட்டியாக அவள் விழிகளிலிருந்து நீர் பொலபொலவென்று வழிந்தோடியது.

''வருத்தப்படாதே, காத்தூன்'' என்று ஆறுதலளித்த குரலைக் கேட்டுத் திடுக்கிட்டு நிமிர்ந்து நின்றாள். எந்த ஆண்மகனுக்காகக் கள்ள மனத்துடன் ஏங்கி நின்றாளோ அவன் கொட்டுகிற மழையில் நனைந்த வண்ணம் அவள் எதிரில் காட்சியளித்தான்!

''எப்படி வந்தீங்க?'' என்றாள் காத்தூன் மதி மருண்டவளாய். நரம்புகள் வெடித்து விடும்போல் ரத்த ஓட்டம் அவள் உடலெல்லாம் பீறிட்டெழுந்தது.

''உன்மீது நான் வைத்த அசைக்க முடியாத ஆசை தான் சொல்லும்'' என்றான் மஸ்தான். ''உன்னையும் என்னையும் அநியாயமாகப் பிரித்த பாதகர்களுக்கு நம் இரண்டு பேருக்குமுள்ள அன்பை எடுத்துக் காட்டத்தான் இந்தப் புயல் கிளம்பியிருக்கிறது, காத்தூன். என் போதாத காலம், மறைந்து மறைந்து ஓர் ஊர்விட்டு ஓர் ஊர் போய் வாழும்படி யாயிற்று. கெட்ட சகவாசம் செய்துவிட்ட காரியம், காத்தூன்! இந்த அல்பக் காரணத்தை வைத்துக்கொண்டு என்னை உதறிவிட்டு உன்னைச் சாக்கடையில் தள்ளிவிட்டார் உன் வாப்பா. என்ன அக்கிரமம்! உனக்கு வாய்த்தவனின் நடத்தை எனக்குத் தெரியாத சமாசாரமல்ல. இப்போது அவன் படுகிற கஷ்டங்கூட எனக்குத் தெரியும். உன் வாழ்வைக் குட்டிச்சுவராக்கிவிட்ட உன் வாப்பாவும் அம்மாவும் சொந்தக்காரர்களும் எங்கே?

''நீயே நினைத்துப் பார். உன் மீதி நாட்களை நீ பாழாக்கிக் கொள்ளக் கூடாது என்றுதான் இந்தப் புயலையும்

எதிர்த்துப் பல மைல்கள் நடந்து வந்தேன். எந்தப் படு பாவிகள் உன்னை ஏமாற்றி உன் வாழ்வை நாசமாக்கினுர் களோ அவர்கள் கண்ணிலே மண்ணைத் தூவி நீயும் தமாஷா பார் என்னுடன் கிளம்பு. எங்கேயாவது போய் விடுவோம்'' என்று உணர்ச்சி வசத்தில் சிக்கியவன்போல் சொல்லி அவளை வெறிக்கப் பார்த்தான்.

வீடு, வாசல், புருஷன், புயல் எல்லாம் காத்தூனின் அகக் கண் பார்வையில் மங்கி உருத் தெரியாமல் போய் விட்டன. ஆழ்ந்த சிந்தனையில் லயித்திருந்த அவள் ஏதோ ஒரு தீர்மானத்திற்கு வந்தவள்போல் அவள் நின்ற தோற் றம் பிரதிபலித்தது. தூணைப் பிடித்திருந்த அவள் பிடி தளர்ந்தது. வீட்டை விட்டு இறங்கி மஸ்தானை நெருங்கி அவனுடன் நடையைத் துவக்கினுள். ஐம்பது வருஷ கால மாக நின்றுகொண் டிருந்த பிரம்மாண்டமான ஆலமரம் சட சட சடாரென்று அவர்கள் முன்னுல் முறிந்து வீழ்ந்த பீதி தரும் காட்சி அவர்களுக்கு அச்சத்தை விளைவிக்க வில்லை. அவர்கள் போவதைக் கண்ட செடிகளும் கொடி களும் சலசலப்பை உண்டாக்கி ஏளன நகை புரிந்தன. வெட்கம் தாளாது வாழை மரங்கள் குலைகளுடன் சிரம் கவிந்தன. அந்த அவலட்சணக் காட்சியைக் காணச் சகி யாத கரு முகில்கள் தாவித் தாவி ஓட்டமெடுத்தன.

எங்கும் ஓரே வெள்ளக்காடு. முழங்கால் உயரம் தண்ணீர்த் தேக்கம். கொட்டுகிற மழையையும் முழுப் பலத்துடன் வீசுகிற காற்றையும் துளிகூட லட்சியம் செய்யாமல் அவர்கள் சென்றுகொண் டிருந்தார்கள். நேராக நெடும்பலத்தை அடைந்து, அங்கிருந்து வங்கம் சென்று, பிறகு குறுக்கு வழியாக முத்துப் பேட்டையை அடைந்துவிட வேண்டும் என்ற திட்டம் மஸ்தானின் அறிவில் உருவாயிற்று.

அவர்கள் ரெயில்வே கேட்டைத் தாண்டி ஊரின் வரம்பைக் கடந்தபோது ஒரு பயங்கர இருள் எங்கே பார்த்தாலும் சூழ ஆரம்பித்தது. சாலையிலே ஒரு மதகு எதிர்ப்பட்டது. அதன் குறுக்கே ஏதோ கம்பிகள்

கிடந்து மின்னுவதை மின்னலின் ஒளியில் கண்டான் மஸ்தான்.

"காத்தூன், நீ இங்கேயே இரு. அந்த வேலியை அப்புறப்படுத்திவிட்டு வருகிறேன். நான் அதைத் தாண்டி விடுவேன். ஆனால் நீ கால் தடுக்கி வீழ்ந்து விடுவாய் என்றுதான் பயப்படுகிறேன்!" என்று சொல்லிவிட்டு விடுவிடென்று நடந்தான். அந்த 'வேலி'யை அவன் தீண்டியதுதான் தாமதம்; தடாலென்று எகிறிக் குப்புற வீழ்ந்து விட்டான்.

"சரியாப் போச்சு! நீங்களே குட்டிக்கரணம் போட்டுட்டிங்களே!" என்று ஹாஸ்யமாகச் சொல்லி, உரக்கச் சிரித்துவிட்டாள் காத்தூன்.

"இந்த மழையிலே எங்கே புறப்பட்டே?" என்று பரிசயமான குரல் பின்னால் எழுந்ததைக் கேட்ட காத்தூன் திடுக்கிட்டாள். வெடுக்கென்று அவள் கழுத்துத் திரும்பியது. தன் அண்டை வீட்டுப் பாச்சா மியான் அங்கே நின்றுகொண்டிருப்பதைக் கண்டதும் அவள் தலை கிறுகிறுத்தது. விழிகள் சுழன்றன. உடம்பெல்லாம் வெலவெலத்தது.

"எங்கேம்மா புறப்பட்டே, காத்தூன்?" என்றார் அந்தக் கிழவர் மறுமுறை.

"அவருக்கு மருந்து வாங்க" என்று மழுப்பினாள் காத்தூன், ஒரே பீதியுடன் நாக்குக் குழறியது.

"ஆஸ்பத்திரி எங்கே இருக்கு! நீ போற வழி எங்கே?"

காத்தூனின் ரத்த ஓட்டம் உறைந்துவிட்டது.

"வா, வீட்டுக்குத் திரும்பு" என்று அந்தக் கிழவர் சற்றுக் கடுமையாகச் சொன்னவுடன் காத்தூன் கலவரமடைந்தாள். அந்தச் சொற்களை மீறுவதற்கு அவளுக்குத் தைரியமில்லாமல் போயிற்று.

"நடந்த விஷயம் தெரியுமா?" என்றார் கிழவர் கம்பிய குரலில்.

"என்ன?"

"உன் வீடு இடிந்து வுளுந்துடுச்சு."

"ஆ! அவர் என்ன ஆனார்?" என்று நெஞ்சு பிளந்து விடும்படி அலறிவிட்டாள் காத்தூன்.

"பொல்லாத நேரத்தைப் பாரு. அந்தச் சமயத்திலே நீயும் இல்லே, நானும் அங்கே இல்லே. ஓசையைக் கேட்டுட்டு என் வீட்டுக்காரி அங்கே ஓடி உன் புருசனை அப்படியே இரண்டு கையாலே தூக்கிக்கிட்டு என் வீட்டிலே கொண்டு வந்து போட்டுட்டாள். அந்தக் கிளவிக்கு எப்படித்தான் அவ்வளவு துணிச்சல் வந்துச்சோ! உசிருக்கு ஆபத்தில்லே, காத்தூன்."

தன் தலையில் வானமே வீழ்ந்து விட்டது போன்ற பிரமை காத்தூனுக்கு உண்டாயிற்று. அவள் மேனி சிலிர்த்தது. உள்ளம் படபடத்தது. சிறுகுழந்தை போலத் தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்தாள்.

"நான் பெரும் பாவி, அல்லா! மன்னிக்க முடியாத குற்றம் செய்துவிட்டேன். நீ இந்தப் பைத்தியக்காரியை மன்னிச்சுடு, மன்னிச்சுடு!" என்று வானத்தை நோக்கிக் கைகளை உயர்த்திக் கதறிக்கொண்டே பித்துப் பிடித்தவள் போல் வீட்டை நோக்கி ஓடினாள். கடகடவென்று எரிச்சலுடன் குமுறிக்கொண்டு கருமேகங்கள் தங்கள் அருவருப்பை அவள்மீது காட்டத் தொடங்கின. காற்றுத் தன் திசையை மாற்றிக்கொண்டு 'ஹோ!' என்ற ஓலத்துடன் அவளை விரட்டி விரட்டி ஆறுதலடைய எத்தனித்தது.

இரண்டு நாட்களுக்குப் பிறகு வந்த தினசரியில் திருத்துறைப்பூண்டி நிருபர் பின்வரும் செய்தியை அனுப்பியிருந்தார்.

"கடந்த இரண்டு நாட்களாக அடித்த புயல் திருத்துறைப்பூண்டியைத் துவம்சம் செய்துவிட்டது. ஏராள

மான மரங்களும் வீடுகளும் வீழ்ந்துவிட்டன. கால்நடைகளுக்குப் பலத்த சேதம். முதல் நாளன்றே மின்சார மெயின் கம்பங்கள் விழுந்துவிட்டன. முதலியார் மதகிடம் அழுகிப்போன கருகிய பிணமொன்று அகப்பட்டது. பிரபலமான கள்ள நோட்டுக் கேஸில் ஈடுபட்டவரும், தலைமறைவாக இருந்தவருமான மஸ்தானின் உடல் அது என்று கண்டுபிடிக்கப்பட்டது. மதகிடம் கிடந்த மின்சாரக் கம்பி அவரைத் தாக்கியதால் மரணம் ஏற்பட்டதாகப் பஞ்சாயத்தார் முடிவு செய்திருக்கிறார்கள்.''

# அடிமை

**வா**னத்தில் அங்குமிங்கும் சிதறிக் கிடந்த மேகங்கள் தங்கள் விளையாட்டை நிறுத்திவிட்டு ஒன்றுகூடிக் கருமுகிலாகத் தோற்றமளித்தன. பளிச் பளிச்சென்று நெளிந்துகொண்டு பாய்ந்த மின்னல்களுக்கிடையே இடியின் குமுறல் ஆங்காங்கு எழுந்துகொண்டிருந்தது. காற்றின் வேகம் அதிகரித்தவுடன் சாரல், சுழன்று சுழன்று அடிக்கத் தொடங்கியது. சிறிது நேரத்திற்குள், 'சோ' வென்று விம்மிக்கொண்டிருந்த அச்சாரல், 'ஹோ' வென்று பிலாக்கணத்தை யெழுப்பிக்கொண்டு மழையாகப் பொழிய ஆரம்பித்தது. இயற்கையின் விசித்திர விளையாடல்கள் வெளியுலகில் நிகழ்ந்துகொண்டிருக்கையில், ஜன்னலின் துருப்பிடித்த இரும்புக் கம்பிகளை இறுகப் பிடித்துக்கொண்டு சோகமே உருவெடுத்து அறையில் நின்றுகொண்டிருந்த பாத்திமாவின் உள்ளத்தில் கொந்தளித்த சிந்தனை அலைகள் ஒன்றோடொன்று ஆவேசத்துடன் மோதிக்கொண்டு மூர்க்கப் போராட்டத்தை உருவாக்கிக்கொண்டிருந்தன. அவ் வனிதையின் விழிகளிலிருந்து ததும்பி வழிந்தோடிய கண்ணீர் புறத்திலே சக்கைபோடு போட்டுக்கொண்டிருந்த மாரியைக் கண்டு ஏளனமாக சிரித்திருக்கவேண்டுமென்று சொல்லி விடலாம். சுழன்று வீசும் கடுங்காற்றின் உக்கிரத்தில் சிக்கிக்கொண்டு படார் படாரென்று அடித்துக்கொண்ட ஜன்னல் கதவுகளின்மீது அவள் பார்வை வீழ்ந்த போதெல்லாம், அவள் நெஞ்சை யாரோ கோடரியால் பிளப்பதாக உணர்ந்து கலங்கி நின்றாள். குமுமியிருந்த

உறவினர்களின் சந்தடி, முதியோர்களின் கிண்டல் பேச்சுகள், வெங்கலப் பாத்திரங்களின் கடபடா சப்தம், 'வாண்டுகளின்' கூச்சல் இவை வீட்டிற்குள் அமர்க்களப் பட்டுக்கொண்டிருந்தபோது பாத்திமா ஒன்றையும் செவிமடுக்கவில்லை. சொல்லொணு வேதனையும் மனக்கசப்பும் அவள் மதிவதனத்தில் மாறிமாறிப் பிரதிபலித்தன. உடலிலே ஓர் நடுக்கம்! நெஞ்சிலே ஓர் பதற்றம்! அறிவிலே ஓர் குழப்பம்.

"பாத்திமா...ஜன்னலை மூடாமே என்ன செஞ்சுட்டிருக்கே...நல்ல குழந்தே!" என்று அன்பு ததும்பும் குரல் அவள் செவிகளில் லேசாக வீழ்ந்ததும் கம்பிகளின்மீது சாய்ந்திருந்த அவள் சிரம் சற்று அசைந்தது. பிடித்திருந்த பிடி தளர்ந்தது. தந்தையின் சாந்தம் பொலியும் முகத்தை அண்ணுந்து பார்த்தாள். மறுகணத்தில் அவரை இறுகக் கட்டிக்கொண்டு கண்ணீர் தாரை தாரையாக உகுத்தாள்.

"எனக்காக எவ்வளவு கஷ்டங்களை நீங்கள் அநுபவிக்க வேண்டியிருக்கு வாப்பா" என்று நாக்குழற அவள் கதறியதும், இப்ருஹீம் குழப்பமடைந்து ஸ்தம்பித்து நின்றுவிட்டார். அலங்கோலமாகக் கிடந்த மகளின் குழலைத் திருத்திவிட்டு, "உலகத்திலே எப்போ பொறந்துட்டோமோ, படவேண்டியதெல்லாம் பட்டே தீரணும், பாத்திமா" என்று சாந்தமாகச் சொல்லிக்கொண்டே ஜன்னல் கதவுகளை மூடினுர்.

"உங்களுக்கு மகளாக நான் பிறந்திருக்காவிட்டால் எவ்வளவு நல்லதாய் இருக்கும்" என்ருள் பாத்திமா மிக்க வேதனையுடன்; துக்கம் அவள் தொண்டையை அடைத்தது.

"சே, அப்படி ஏம்மா பேசறே? அல்லாஹ்வின் கருணை மீதா பழி போடுறே? நம்ப சமூகத்தெ மனமார ஏசு!" இப்ருஹீமின் சொற்களில் எரிச்சலும் வெறுப்பும் கிளர்ந்து மறைந்தன. பாத்திமா மௌனம் சாதித்தாள்.

"யாரோ ஒருவன் பைத்தியக்காரக் காரியத்தைச் செஞ்சுட்டா, அதற்கு நம்ப சமூகம் தாளம்போட்டுக் கும்மாளம் அடிக்குதே! அதை நினைச்சா என் வயிறு எரியுதம்மா!" என்றார், மிக்க வெறுப்புடன்.

இப்ராஹீம் இடித்துக் கூறிய அந்தப் பைத்தியக்காரக் காரியத்தைச் செய்தவர் மஸ்தான் ஸாஹிப். அக்கரையில் ஏராளமாகச் சம்பாதித்த அவர், சமீபத்தில்தான் கிராமத்துக்குத் திரும்பினார். செல்வத்தில் திளைத்தவராதலால், தமது ஆறு பெண்களின் திருமண விஷயங்களை முடிக்கும் பணி அவருக்குக் கிள்ளுக் கீரையாக இருந்தது. சில மாதங்களுக்கு முன் அக் கிராமத்தில் ஓர் 'அடாத' காரியத்தை அவர் செய்துவிட்டார்.

ஊரே ஆச்சரியத்தில் ஆழ்ந்துவிட்டது. பலருக்கு வெகு நாட்கள் வரை புரியாத புதிராக அது நிலைத்து நின்று விட்டது. தம் மூத்த மகள் நிக்காஹ் விஷயத்தில் மஸ்தான் ஸாஹிப் நடந்துகொண்ட விபரீதப் போக்கு, கிராமத்தில் பரபரப்பை உண்டாக்கிவிட்டது. கல்யாண நாளன்று தமக்கு வரப்போகும் மருமகனுக்கு அவர் ஆயிரம் ரூபாய், கூலியாக, தம் காணிக்கையாக அளித்துவிட்டார். அதுமாத்திரம் அல்ல. தாம் செய்துவிட்ட பரோபகாரச் செயலை ஊராரிடம் பறைசாற்றியும் விட்டார். இச் செய்தி யாவரையும் திடுக்கிடச் செய்தது. இம்மாதிரியான சம்பவம் அக் கிராமத்தில் அதற்கு முன் நடைபெற்றதில்லை என்று எண்பது வயது ஹுஸேன் பாவாகூடச் சொல்லிவிட்டார். தாம் மருமகனுக்குக் காட்டிய பெருந்தன்மை கிராமத்தில் விபரீதத்தை உண்டாக்கி விட்டதை அவர் பின்னால்தான் தெரிந்துகொண்டார்.

மணமகனுக்கு அவரளித்த 'காணிக்கை' நாளடைவில் கட்டணத் தொகையாக மாறிக் கிராமத்தில் தலைவிரித்தாடியது. பெண்களைப் பெற்ற பாக்கியவான்கள் மனம் பதறினார்கள். நிக்காஹ் என்ற மங்கல நிகழ்ச்சி மார்க்கட் நிலவரம்போல் குடும்பங்களில் அமைந்துவிட்டது.

மஸ்தான் ஸாஹிப் தோண்டி வைத்த படுகுழியில் வீழ்ந்து தத்தளித்த குடும்பங்களில் இப்ராஹீம் குடும்பமும்

ஒன்றுகும். தம் மகள் பாத்திமாவின் நிக்காஹ்விற்கு எல்லா ஏற்பாடுகளையும் இப்ருஹீம் செய்து முடித்திருந்தார். தம் நிலைமைக் கேற்றபடி நகைகளையும் துணி மணிகளையும் வாங்கி வைத்திருந்தார். கல்யாண தினத்தன்ரே, அன்றி அதற்கு முன்பாகவோ முன்னூறு ரூபாய் 'கட்டணமாக' மணமகனுக்குக் கொடுத்து ஆசீர்வதிக்கும் படி சம்பந்தி வீட்டார் தாக்கீது அனுப்பியிருந்தார்கள். அதற்கும் இப்ருஹீம் உடன்படும்படி நிலைமை ஏற்பட்டது. ஆனல் அவர் எதிர்பார்த்த பணம் கடைசி நேரத்தில் காலைவாரிவிட்டதைக் கண்டு அவர் திகிலடைந்தார்.

வேறு ஒருவழியும் அவருக்குப் புலப்படவில்லை. கல்யாண தினம் நெருங்கிக்கொண் டிருந்தது. பணம் கிடைக்கா விட்டால் தம் கதி அதோகதி யென்று அவர் அறியாமலில்லை. ஒரு வேளை நிக்காஹ்வே முறிந்து விடலாம் என்ற பீதி அவருக்கு உண்டாயிற்று. அதனல் விளையும் கேடுகள், ஊராரின் புரளிப் பேச்சுக்கள், குடும்ப கௌரவத்தின் தாழ்வு, தம் மகளின் எதிர்கால வாழ்வின் சீரழிவு இவையெல்லாம் ஒன்றன் பின் ஒன்ருக அவரைப் பயமுறுத்தின. அங்குமிங்கும் ஓயாமல் அலைந்ததால் அவர் மிதியடிக் கட்டைகள் தேய்ந்துவிட்டன. ஏமாற்றமும் ஏக்கமும் போட்டி போட்டுக்கொண்டு அவரை வாட்ட அவர் உயிர் ஊசலாடிற்று.

"பாத்திமா...இனி உனக்கு ஒரு கவலையும் இல்லை; உன் வாழ்வையும் என் மானத்தையும் காப்பாற்றிவிட்டேன்" என்ருர் இப்ருஹிம் சற்று வீராப்புடன்.

"பணம் கிடைச்சுச்சா வாப்பா?" என்று வியப்புடன் கேட்டாள் பாத்திமா.

"அதைப்பத்தி நீ ஏன் அலட்டிக்கிறே? ஒரு கதவை ஒருத்தன் மூடிட்டா அறுபது கதவுகளை அல்லாஹ் திறக்க மாட்டாஞ? பணமும் கிடைச்சுடுச்சு. நாளை நிக்காஹ் விலே ஜமாஅத் முன்னலே அதையும் வச்சுடுவேன்."

"பாத்திமா...'குலாம்' என்று நம்மவங்க சொல்றதே நீ கேள்விப் பட்டிருப்பே. அது யாரைக் குறிப்பிடும்னு

உனக்குத் தெரியுமா?'' என்று கேட்டார் இப்ருஹீம், கம்மிய குரலில்,

தந்தையாரிடமிருந்து கிளம்பிய அர்த்தமற்ற எதிர் பாராத இந்தக் கேள்வி பாத்திமாவை ஒரு உலுப்பு உலுப்பி அவளுக்கு ஒன்றும் புரியவில்லை.

''ஏன் வாப்பா அப்படிக் கேக்குறிங்கே?'' என்ருள் சாந்தமாக, வலுவில் வரவழைத்த புன்முறுவல் அதரங் களில் தவழ.

''ஒன்றுமில்லேமா...அந்தக் காலத்திலே அடிமை வழக் கம் இருந்துச்சுன்னு சொன்ஞங்க. நம்ம ரஸூலுல்லாஹ் (தீர்க்கதரிசி) அதெல்லாம் ஒழிச்சிட்டாங்க என்று சரித்திரம் சொல்லுது. ஆனுல் அதை நான் நம்பமுடிய வில்லே பாத்திமா'' என்ருர் இப்ருஹிம்.

பாத்திமா வாயடைத்து நின்ருள். மேலும் தொடர்ந்து இப்ருஹிம், ''நாளேக்கு நிக்காஹ் கூடத்திலே உக்காரப் போறவன் உன் கழுத்திலே கருவமணி உளுந்தவுடனே உன் கணவனுகப் போகப் போருன் இல்லியா? அவனே மருமகன்னு உன் தாய் பெருமையா எல்லார் கிட்டயும் பேசப் போவுது. உன் தங்கச்சி அவனே மச்சான்னு செல் லமாக் கூப்பிட்டு விஷமம் செய்யும். மாப்பிள்ளேன்னு மத்தவங்க அவனேத் தலேமேலே வச்சு ஆடுவாங்க. ஆனுல் எனக்கு அவன் என்ன முறை தெரியுமா பாத்திமா?'' என் ருர் ஆர்வத்துடன் விழிகள் வெளியே வந்து விடும்படி.

கைகளேப் பிசைந்துகொண்டு திக்பிரமையுடன் நின்றுகொண் டிருந்தாள் பாத்திமா.

''சொல்லு குழந்தே...வாய்விட்டுச் சொல்லேன்'' என் ருர் இப்ருஹீம் பொறுமை யிழந்தவராய்.

''வாப்பா...எனக்கு ஒண்ணும் தோணலே'' என்று சொல்லிச் சிரங்கவிழ்த்து மௌனமாக நின்ருள் பாத்திமா.

''இதோ நானே சொல்லிவிடுகிறேன் பாத்திமா, நாளேக்கு உனக்குக் கணவனுக வரப்போகும் அவன் நான்

பேரம் செய்யப் போகும் அடிமை, குழந்தே!" என்றார் இப்ராஹீம் ஆவேசத்துடன், வரட்டுச் சிரிப்பை யெழுப்பி விட்டு.

மேலும் தொடர்ந்தார். "இந்த மூந்நூறு ரூபாய்ப் பிச்சைக் காசுக்கு அவன் விலையாகப் போய்விட்டான். நாளைக்கு அந்த நிக்காஹ் ஜமாஅத் முன்னாலே, பணத்தை அவன் அப்பன் முகத்திலே வீசிவிட்டு, அவனை அடிமை யாக வாங்கப் போறேன் பாத்திமா. அவன் மதிப்பு அவ்வ ளவுதான்!" என்றார் இப்ராஹீம் மிக்க உணர்ச்சியுடன். அவர் உடல் நடுங்கிற்று. பெருமூச்சு அடிவயிற்றிலிருந்து மேலெழுந்தது.

"வாப்பா...நான்தான் பாவி. உங்களுக்கு மகனாகப் பிறக்காமே மகளாகப் பிறந்துவிட்டேன்" என்று சொல்லித் தேம்பித் தேம்பிக் கண்ணீர் சொரிந்தாள் பாத்திமா.

"மற்றதையும் சொல்லிவிடுகிறேன். இப்பவே கேட்டு விடு" என்று பேச்சைத் தொடந்தார் இப்ராஹீம்: "எது எப்படிப் போனால் என்ன...? இந்தக் கிழத்தே விட்டு விட்டு நாளைக்கு அவனோடே நீ போயிடப் போறே. எந்த வீட்டில் என் ஜீவனத்தை ஆரம்பிச்சேனோ, எந்த வீட்டிலே உன்னைப் பெற்று வளர்த்து இந்த நிலைக்குக் கொண்டு வந்தேனோ, எந்த வீட்டிலே உன் நிக்காஹ்வையும் நாளைக்கு முடித்துவிடப் போகிறேனோ, அந்த வீட்டை இந்தக் கட்டணப் பணத்திற்காக இன்று விற்றுவிட்டேன் குழந்தே! இனிமேல் இந்த உடம்பு புரளக்கூட இடமில் லாமல் போயிடுச்சு!" என்று தழுதழுத்த குரலில் சொல்லி விட்டு, பொக்கை வாயைத் திறந்துகொண்டு சிறு குழந்தை போல் தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்தார் அவர்.

பாத்திமாவின் உள்ளம் வெதும்பியது. நெஞ்சம் குழைந்தது. தந்தையின் பாதங்களைத் தன் தளிர்க் கரங்க ளால் தொடுவதற்குக் குனிந்தாள். தந்தையின் சீரடிகளை மகளின் ரத்தக் கண்ணீர் கழுவிவிட்டது.

"பாத்திமா, நீ சுகமாக வாழ வழிசெய்துவிட்டேன். இனி நான் சொல்லப் போவதை எப்போதும் ஞாபகம் வைத்துக்கொள். உன் இல்லற வாழ்வில் நீயும் பல குழந்தைகளைப் பெற்றுத் தாயாகப் போகப் போறே. உனக்கும் எனக்கும் நேர்ந்த இக்கதி அக் குழந்தைகளுக்கு நேராமல் பார்த்துக்கொள்" என்று உணர்ச்சி பொங்கச் சொல்லிவிட்டு, அவ்விடத்தைவிட்டு அகன்றார் இப்ருஹிம்.

தந்தையின் கடைசி வார்த்தைகள் பாத்திமாவின் இருதயத்தில் ஆழமாகப் பதிந்துவிட்டன என்பதை அவள் நின்றிருந்த கோலம் பறை சாற்றியது. அவ்வார்த்தைகளைக் காப்பாற்ற அவள் கைக்கொண்ட வைராக்கியத்தை அவள் வதனம் பளிச்சென்று எடுத்துக் காட்டியது. ஜன்னலைத் திறந்து இரும்புக் கம்பிகளைப் பிடித்துக்கொண்டு வெளியுலகத்தைப் பார்த்தாள். கைம்மாறு கருதாது மழை பொழிந்து உலகத்தை வாழ்விக்கும் கார்மேகங்கள் கலைந்த வண்ணம் இருந்தன. இன்முகத்தோடு எதிர்கொண்டு அவளை அழைப்பதுபோல் இளந் தென்றல் அவள் முகத்தில் களிநடனம் புரிந்து தவழ்ந்தோடியது. மழைக்கு அஞ்சி, மரங்களிலும் செடிகளிலும் அடைக்கலம் புகுந்த பறவைகள் கிரீச் கிரீச்சென்று கானத்தை எழுப்பிக் கொண்டு தங்கள் கூடுகளை நோக்கி ஆனந்தமாகப் பறந்து சென்றுகொண்டிருந்தன.

# நஷ்டத்தின் ரகசியம்

அன்வாரி தெரு மசூதி பழுது பார்ப்பதற்குப்பத்தாயி ரம் ரூபாய், உள்ளூர் அரபு மதராஸாவிற்கு ஆறாயிரம், பாத்திமா பீ அநாதை விடுதிக்கு ஐயாயிரம்-இம்மாதிரி யாக ஏராளமான நன்கொடைகள் தாராளமாக அளித்த ஷேக்மீரா ராவுத்தரிடம் ஆண்டவன் காட்டிவிட்ட சோத னைகள் என்னைத் திக்குமுக்காடச் செய்துவிட்டன. ஐந்து 'வேளை 'நமாஸ்' தவறாதவரும், எதற்கெடுத்தாலும், 'அல்லாஹுத்தாலாவின் செயல்' என்று பல்லவி பாடு பவருமான ராவுத்தருக்கு உண்டான இன்னல்கள் எனக்கோ அல்லது என் குடும்பத்திற்கோ நேர்ந்திருந்தா லும் நான் அவ்வளவு வாட்டம் அடைந்திருக்க மாட்டேன்.

மக்காவிற்கு 'ஹஜ்' யாத்திரை கிளம்ப ராவுத்தர் ஏற்பாடுகள் செய்துகொண் டிருந்ததாக என் காதில் விழுந்தது. அவர் பம்பாய்க்குச் சென்று கப்பலேற ஒரு மாதகாலந்தான் இருந்தது. அந்த இடைக்காலத்தில் ராவுத் தரின் வாழ்க்கையில் பல பூகம்பங்கள் தொடர்ச்சியாக நிகழ்ந்துவிட்டன. செய்கோனில் பலே ஜோராக நடந்து வந்த அவர் வியாபாரம் தடாலென்று படுத்துவிட்டதாகக் 'கேபிள்' பறந்தது. பர்மாவில் பெகு நகரிலிருந்த அவர் கடை, கொள்ளைக்காரர்களால் சூறையாடப்பட்டதாகச் செய்தி செவிகளில் வீழ்ந்தது. ஏராளமாகப் பணத்தைப் போட்டு வைத்திருந்த உள்ளூர்ப் பாங்க் தலைமுழுகி, தீபாவளி கொண்டாடிவிட்டது. ராவுத்தருக்கு வலது கை போன்றவனும், அவர் கைலிக் கடையை நிர்வகித்து

வந்தவனுமான கரூர் கந்தசாமி, கிடைத்ததைச் சுருட்டிக் கொண்டு கம்மென்று கம்பி நீட்டிவிட்டான். ராவுத்தர் ஐ.பி. ஜாப்தாவில் சேர்ந்துகொள்ள எத்தனிப்பதாக ஹேஷ்யம் நிலவியது.

நாணயமும் நேர்மையும் கொண்ட தர்மப் பிரபுவாகிய ஷேக் மீரா ராவுத்தருக்கு, அதுவும் அவர் புண்ணிய யாத்திரையைத் தொடங்கும் சமயத்திலே, இத்தகைய ஜபர்தஸ்த் 'அடிகள்' விழுமென்று யாரும் எதிர்பார்க்க வில்லை. அவருக்கு நெருங்கிய நண்பனும், ஆலோசனை யாளனுமான நான், (அடியேன் ஒரு ரிடையர்டு சப் ரிஜிஸ்ட்ரார் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.) ராவுத்தரின் மோசமான நிலைமையைக் கேள்விப்பட்டு, மதி மருண்டு, சுதி கலங்கினேன். நேரிலே சந்தித்து ஆறுதலளிக்க வாக்கிங்-ஸ்டிக்கை எடுத்துக்கொண்டு புறப்பட்டேன்.

''அஸ்ஸலாமுவாலேகும், நாயுடுகாரு! ஏது, திடீர் விஜயம் விடியகாத்தாலே?'' என்று புன்சிரிப்புச் சிரித்த வண்ணம் என்னை வரவேற்றார் ராவுத்தர்.

அவர் வதனத்தில் சலனமோ உடலில் நடுக்கமோ பேச்சில் குழப்பமோ இல்லாததைக் கண்டு, எனக்கு என்னவோபோல் இருந்தது.

''சும்மாப் பார்த்துட்டுப் போக வந்தேன்'' என்று சொல்லி, ஹி...ஹி...என்று வழக்கம்போல் சிரிப்பினால் என் மழுப்பலை இருட்டடித்தேன்.

''வந்தது நல்லதாய்ப்போச்சு. இன்றைக்கு ராத்திரியே கிளம்பி, பம்பாய் போய்விடத் தீர்மானித்துவிட்டேன். அடுத்த வாரம் ஏதோ ஒரு கப்பல் கிளம்புதாம் ஜெட்டாவிற்கு...''

எதிர்பாரத தாக்குதல்களிலிருந்து மீள முடியாத ராவுத்தர், திடீரென்று இப்படி முடிவு செய்துவிட்டார் என்பது எனக்கு விளங்கிவிட்டது.

"ஏதோ ஆண்டவன் கட்டளைபோலும். தன் திரு விளையாடல்களுக்கு அப்பாவியாகிய உங்களையும் ஓர் இலக்காக வைத்து அந்த ரங்கநாதன் பரீட்சித்து விட்டானே! அதுதான் எனக்குப் புரியவில்லை" என்று தழு தழுத்த குரலில் சொல்லி, விஷயத்தில் நேரடியாக இறங் கினேன். ராவுத்தர் வாய்விட்டுக் கடகடவென்று சிரித் தார்.

"உங்களைப்போன்ற, நாணயமும் நேர்மையும் உடைய வர் வாணிபத் துறையில் இருப்பார்களா என்று எனக்குச் சந்தேகம் சாயபு. ஒரு பாவமும் அபவாதமும் புரியாத உங்களுக்கு, இந்தக் கஷ்ட காலம் வந்தது ஏதோ நாங்கள் சொல்லுவதுபோல் பூர்வஜன்ம பலாபலன்களின் கோளா றுதானே?" என்றேன் நான், உணர்ச்சியுடன்.

"நாயுடு, இப்போ நீங்க சொன்னீங்களே, அதில் தான் நீங்கள் பிசகு செய்துவிட்டீங்க" என்று ராவுத்தர் சொன்னதும், எனக்குத் தூக்கிவாரிப் போட்டது.

"என்ன!" என்றேன் நான் ஒரே திகைப்புடன்.

"பூர்வஜன்ம பலாபலன் இல்லை நாயுடு. இந்த ஜன்மத் திலே செய்துவிட்ட காரியந்தான் காரணம்" என்று சொல்லி ராவுத்தர் தொடர்ந்தார்: "நல்லா சம்பாதிச்சேன். ஆடம்பரமாக வாழ்ந்தேன். நான் விரும்பியபடியே, கடைசியாக இப்படி நடந்தது என் மனசுக்கு நிம்மதி கொடுத்துச்சு நாயுடு!"

"நிம்மதியா!" திகைப்பினால் வாயைப் பிளந்து நின்றேன் நான்.

"பரிபூர்ணமான நிம்மதி நாயுடு! எப்படின்னு சொல் றேன் கேளுங்க" என்று நிதானமாகச் சொல்லிவிட்டு, ராவுத்தர் தொடர்ந்தார்.

* * *

"சுமார் இருபது வருஷத்திற்கு முன்னாலே நம்ம சிந்தாதிரிப்பேட்டையிலே நடந்த சம்பவம் நாயுடு! கிழிந்த கைலியையும், சல்லடை போன்ற கோலாலம்பூர்ப் பனியனையும் உடுத்திக்கிட்டு, பீடி சுருட்டிப் பிழைச்சிட்டிருந்தேன். ஆயிரம் பீடி சுருட்டினா அரை ரூபாய் கிடைச்சுடும். அது செஞ்சு முடிக்கிறதுக்குள்ளே இரண்டு உள்ளங் கைகளும் சிவந்து ரத்தம் கக்கிவிடும். அப்படி ஆரம்பிச்ச சீவனம் நாயுடு! அப்போ என்னைப் பார்த்தவங்க, 'அதோ போறான் குண்டன்!' என்று பெருமையாகச் சொல்லுவாங்கோ. அப்படி மாலிஷ் பண்ணிக் கொழுகொழுன்னு வளர்த்தேன் இந்த உடலை. மொஹரம் பண்டிகையிலே புலி வேஷம் போட்டா அசல் வரிப்புலி மாதிரி பாஞ்சு பாஞ்சு ஆடுவேன். ஆ...மா!...ரெளடிங்க கூட்டத்தோட நான் பழகினாலும் ஒரு கெட்ட குணம் என்னை ஒட்டவில்லை. ஆயிரம் பீடி சுருட்டுவேன். ஒரு பீடிகூடப் பிடிக்கமாட்டேன்; தப்பு தண்டாக்களுக்குத் தப்பித் தப்பி வாழ்ந்தேன். அப்படி இருந்தது என் வாழ்வு. ஒரு நாள் சாயந்தரம், சூரியன் அஸ்தமிக்கிற நேரம். வேலையெல்லாம் முடிச்சிட்டு, சிங்கண நாய்க்கன் தெரு வழியாக வீட்டுக்குத் திரும்பிக்கிட்டிருந்தேன். எனக்கு ஒரு பத்துக் கஜத்துக்கு முன்னாலே ஒரு கிழவி தள்ளாடித் தள்ளாடிப் போயிட்டிருந்தாள். தெருவிலே ஜனநடமாட்டம் ஜாஸ்தியில்லை. வலது பக்கத்திலே திண்ணையிலே உட்கார்ந்திருந்த யாரோ ஒரு தடியன் பாய்ந்தான். கிளவி தொபக்னு கீழே விழுந்துவிட்டாள். அவளிடமிருந்த சின்ன டிரங்க் பெட்டியை எடுத்துக்கொண்டு, அந்தப் பயல் ஓட்டமெடுத்தான். அந்தக் காட்சியைக் கண்ணாலே பார்த்துக்கிட்டிருந்த இந்தச் சிங்கலடி சிங்கம் சீறாமல் இருக்குமா? சும்மா வேங்கைபோலத் துரத்தினேன். அவன் ஓட, நான் துரத்த, கடைசியிலே அந்தத் தடிப்பயல் ஒரு வளைவு கொடுத்து, அய்யா முதலித் தெருவுக்குள்ளே புகுந்து அங்கேயிருந்த ஒரு மசூதிக்குள்ளே நுழைஞ்சுட்டான். நானும் அவன் பின்னாலே புகுந்தேன். மக்ரீப் நமாஸ் முடிஞ்சு போனதாலே பள்ளி வாசல்லே யாருமில்லை; அந்தக் கயவன் அந்த இடத்திலே மாயமா மறைஞ்சுபோனது ஒரே ஆச்சரியமாக இருந்தது. இந்தக் கலாட்டா இங்கே நடக்க,

அந்தக் கிழவியும் பெரிய கூட்டமும் மசூதிக்கு முன்னாலே நின்னுக்கிட்டு ஒரே கூச்சல்போட ஆரம்பிச்சுடுச்சு. எல்லோரையும் வெளியே நிற்கும்படி சொல்லிவிட்டு, நான் மசூதி முழுவதும் தேட ஆரம்பிச்சேன். இடது கோடியிலே ஒரு சின்ன அறை இருந்தது எனக்குத் தெரியும். அங்கேதான் ஏணி, சுண்ணாம்புச்சட்டி, லோட்டா, டப்பா வைப்பாங்க. இரண்டு பெருச்சாளிகூட அங்கே குடி வைச்சிட்டிருந்தது. அந்தப் பேர்வழி அதுக்குள்ளே ஒளிஞ்சிருப்பான்னு நினைச்சு, உள்ளே காலடி வைத்தேன். அவன் சுவரோடு சுவராக மூலையிலே நின்னுட்டிருந்ததைப் பார்த்தேன். 'அத்தரிப்பாச்சா கொழுக்கட்டை' என்று வீர கோஷம் போட்டுக்கிட்டு இரண்டு முண்டாக்களையும் தட்டிக்கொடுத்துட்டு, அவன் மேலே பாய்ஞ்சு, அவன் பரட்டைத் தலையை இறுகப் பிடிச்சுக்கிட்டேன். தொபக்னு கையிலே இருந்த பெட்டியை அவன் கீழே போட்டுட்டான். அவ்வளவுதான். அவன் வயிற்றிலேயும், முதுகிலேயும் இரண்டு கைகளாலும் 'கும்மா'க் குத்துக்களை மாறி மாறிக் கொடுத்தேன். அவன் மசியவில்லை. கடைசியாக, என் சொந்த ஊர்ச் சரக்கான கூத்தாநல்லூர் குத்து ஒண்ணு காண்பிச்சேன்! அவன் அப்படியே என் காலடிலே விழுந்துட்டான்.

"இனிமே என்னை அடிக்காதிங்க. போன வாரம் தான் ஜெயிலிலிருந்து வந்தேன். கூடப் பொறந்த பாழாய்ப்போன குணம், மறுபடியும் இந்தத் தொழிலிலே இறங்கும்படி செஞ்சுடுச்சு. என்னை மன்னிச்சு என்னைக் காப்பாத்துங்க. சாயபுமார் ஆலயத்திலே கெஞ்சுறேன்" என்று சொல்லி விக்கி விக்கி அழுதான். என் மனசு இளநீர்போல இளகிப் போச்சு. 'ஏதோ போறுத காலம். மறுபடியும் திருடிவிட்டான். எத்தனை வருஷம் கம்பி எண்ணப் போறானோ! தொலைஞ்சு போகட்டும்'னு நெனைச்சு அவனை விட்டுவிடத் தீர்மானித்தேன். அதே அறையிலே பின் தெருவுக்குப் போக ஒரு கதவு இருந்தது. அதை ஒரு ஏணி மறைச்சிருந்தது. அதை அப்புறப்படுத்தி, கதவைத் திறந்து அவனை அனுப்பிவிட்டேன். அப்புறம் என் உடம்பிலே இருக்கிற வியர்வையைத்

துடைச்சிக்கிட்டு, கைலியை இறுகக் கட்டிக்கிட்டுப் பெட்டியை எடுத்துக்கிட்டு வெளி வாசலுக்கு நான் வருவதற்குக் கால் மணி நேரம் ஆயிடுச்சு. டிரங்க் பெட்டியை அந்தக் கிழவி கிட்டக கொடுத்தேன்.

"என்னைப் பெத்த ராசா? நீ நல்லா இருப்பேடா" என்று வாழ்த்தினுள் அவள். கூட்டம் அப்படியே என்னை அலக்காகத் தூக்கிக்கிட்டு ஜே கோஷம் போட்டுச்சு. "திருடன் எங்கே?" என்று கேட்டாங்க.

"அவன் சுவரேறி ஓடிவிட்டான்" என்று சொல்லி, நான் மழுப்பினதுதான் தாமதம். "அட, பாவி மவனே! என் கடைசிச் சொத்தைக்கூட அடிச்சிக்கிட்டுப் போயிட்டானே! கடன்காரன் என் குடிசையைப் பிடுங்கிக்கிட்டான். இருந்த ஒரே புடைவையையும், என் வீட்டுக்காரர் பண்ணிப் போட்ட மோதிரத்தையும் இந்தப் பெட்டியிலே போட்டுக்கிட்டுக் கிளம்பினேன். மோதிரத்தை விற்று, அந்தப் பணத்திலே இடியாப்பம் சுட்டு வயிறு வளர்க்கலாம்னு நினைச்சேன். அதை எடுத்துக்கிட்டுப் போயிட்டானே அந்தப் படுபாவி. அவன் உருப்பட மாட்டான்!" என்று கிழவி கூச்சல் போட்டு ஓவென்று அழுதாள். விஷயம் புரிஞ்சுடுச்சு. 'பயல் முக்கியமான பொருளைக் கிளப்பிக்கொண்டு டிமிக்கி கொடுத்துட்டான்' என்று எல்லோரும் பேசிக்கிட்டாங்க. நான் வாயை மூடிக்கிட்டுக் கைகளைப் பிசைந்துக்கிட்டு லாந்தர்க்கம்பம்போல் நின்னுட்டேன். அந்த ஒரு சம்பவந்தான் நான் இப்போ நடுத் தெருவிலே நிற்கிறதற்குக் காரணம் நாயுடு!" என்ருர் ராவுத்தர், நாசுக்காகத் தாடியைக் கோதிவிட்டு.

"சாயபு, நீங்களோ உபகாரம் பண்ண அவ்வளவு துணிச்சலோட போனீங்க. விஷயம் வேறு விதமாக நடந்துடுச்சு. அதுவா ஒரு பாவம்?" என்றேன் நான் சற்று வியப்புடன்.

"அதுதான் நான் செஞ்ச பாவம் நாயுடு!"

"என்ன சாயபு, தலைகீழாகப் பேசுறீங்க? உபகாரத்தை அபகாரம் என்று நீங்களே முடிவு கட்டிட்டீங்

களே. இது நல்லதா?'' என்று சொல்லி, ராவுத்தரை மேலும் கீழும் ஒரு மாதிரி பார்த்தேன்.

''அந்தக் கிழவி பறிகொடுத்தாளே...''

''அதைத்தான் அந்தக் கேடிப் பயல் அடித்துக் கொண்டு போயிட்டானே.''

''அதுதான் இல்லே நாயுடு!''

''என்ன?''

''செஞ்சவன் வேறு ஒரு அயோக்கியன்!''

''யார் அவன்?''

''நேர்மையும் நாணயமும் கொண்ட தர்மப்பிரபுன்னு சர்டிபிகேட் கொடுத்தீங்களே, அந்தப் பிரபுவாகிய நான் தான் நாயுடு''.

''நீங்களா!''

அந்தரத்திலே ஓர் அந்தர் பல்டி அடித்ததுபோன்ற ஒரு பிரமை எனக்கு உண்டாயிற்று.

தொடர்ந்தார் ராவுத்தர்; மசூதியிலே அந்த அறையின் கதவைத் திறந்து பின்வழியாக அந்தத் தடியனை வெளியே அனுப்பிவிட்டேன் என்று சொன்னேனல்லவா?''

''ஆமாம்.''

''அவன் போனபிறகு என் குணம் எப்படி மாறிடுச்சு தெரியுமா? அந்தப் பெட்டியைத் திறந்து அதற்குள்ளே என் கை துழாவ ஆரம்பிச்சுது! மோதிரம் சிக்கியதும் ஓசைப்படாமல் இடுப்பிலே செருகிக்கொண்டு பரம யோக்கியன்போல் மசூதி வெளி வாசலுக்கு வந்தேன். சைத்தான் புத்தி என்னை எப்படி ஆட்டி வச்சுது பாருங்கோ? கலாட்டா முடிஞ்சு ஒரு வாரத்திற்கப்புறம் அந்தப் பொருளை விற்றேன். முப்பது ரூபாய் கிடைச்சுது. அந்தப் பணத்தை முதலாகப் போட்டுத்தான் இப்போ நடக்

கிற கைலி வியாபாரத்தை ஆரம்பிச்சேன். அதிர்ஷ்டம் அடிச்சுது. வியாபாரத்திலே பணம் மலைபோல் குவிஞ்சுது. நீங்கள் எல்லோரும் என்னை வாயாரப் புகழ்ந்தீங்க. ஆனால், அந்தக் கிழவியின் சாபம் என்னைச் சும்மா விட்டு வைக்குமா? அந்தப் பழிதான் பழி வாங்காது இருக்குமா? செல்வத்திலே புரண்ட என்னை, மண்ணிலே புரளும்படி இப்போ செஞ்சுடுச்சு நாயுடு!''

ராவுத்தரின் விழிகளின் விளிம்பிலே நீர்த்திவலைகள் ததும்பின. மேலும் தொடர்ந்தார்: ''நிலத்தைப் பண் படுத்தி, உரம் போட்டு, மரத்தை வளர்த்து, பழத்தைப் பறித்துத் தானம் கொடுத்துட்டாப் போதுமா? போட்ட விதை கசப்பு ஜாதியில்லாமல் பார்த்துக்கொள்ளணும் நாயுடு! ஹஜ் முடிச்சபிறகு எந்த மசூதியிலே அந்தப் பாவம் செஞ்சேனோ அதே இடத்தில் பாங்கொலி கூவும் மோதினார் வேலை செய்யத் தீர்மானித்துவிட்டேன். அப் போதுதான் என் பாக்கி நாட்களை அமைதியாகக் கழிக்க முடியும்'' என்றார் ராவுத்தர்.

*　　　*　　　*

ஏதேதோ வேதாந்த எண்ணங்கள் குமிழியிட்டு என் அறிவிலே எழும்பின. வழியெல்லாம் அதே யோசனையில் ஈடுபட்டு, ஆடுபோல் தலையை அசைத்துக்கொண்டே, வாக்கிங்-ஸ்டிக்கை எட்டி எட்டி வைத்து நான் வீடு திரும்புவதற்குள், என் நிலைமை போதும் போதும் என்று ஆகிவிட்டது.

# ஜைனப்பீ அளித்த தீர்ப்பு!

திருமணப் பத்திரிகையைப் படித்து முடிப்பதற்குள் பொல பொலவென்று நீர் சிந்திய கண்களை ஜைனப்பீ தாவணியின் தலைப்பினால் ஏழாவது தடவை துடைத்துக் கொண்டாள். நெஞ்சின் அடித்தளத்திலிருந்து கொந்தளித்து எழுந்த நெடுமூச்சு அந்த நங்கையின் உடலை உலுக்கி விட்டது. எந்தப் பிஞ்சு உள்ளம் பல மாதங்களாகக் 'கற்பனைச் சுவர்க்கத்தில்' களிப்புடன் மிதந்ததோ அதே உள்ளம் நடுங்கிக்கொண் டிருந்த விரல்களுக்கிடையே சலசலத்த மஞ்சள் நிறப் பத்திரிகை தெரிவித்த செய்தியினால் துயர சாகரத்தில் மூழ்கிவிட்டது. முகத்தைக் கைகளில் பொதிந்துகொண்டு விசித்து விசித்து அழுத வண்ணம், சிரத்தை ஜன்னல் கம்பிகளின்மீது சிரத்தையின்றி மோதவிட்டாள்.

சுமார் பத்து வருஷங்களுக்கு முன் இப்ராஹீம் சாஹேபின் பெயர் முத்துப்பேட்டையின் சந்து பொந்துகளில் அடிபட்டதற்குக் காரணம், அவர் மக்காவிற்கு 'ஹஜ்' யாத்திரை செய்துவிட்டு 'ஹாஜி' என்ற அடைமொழியைத் தம் நாமகரணத்துடன் சேர்த்துக்கொண்டு தாயகத்துக்குத் திரும்பியதுதான்! அப்பொழுது அவருக்குக் கிடைத்த புகழை மங்கச் செய்து விட்டது 'ரஜப்' மாதம் நிகழ்ந்த நிகழ்ச்சி!

அந்தக் காலத்திலே மரைக்காயர்கள், ராவுத்தர்கள், லெப்பைகள் ஆகிய இவர்களின் குடும்பங்களில் உதித்த காளை யொருவன் பல 'மக்கர்'கள் காட்டிவிட்டு, பள்ளிக்கூடத்தில் சேர்ந்து, பரீக்ஷை 'கோதா'வில் இறங்கி, பல்டி-

கள் பல போட்டுவிட்டு ஆருவது படிவம் கடந்து விட்டால் போதும். அல்லாவே! ஊரே திமிலோகப்பட்டு விடும். பையன் பாடு ஒரே குஷி! பலவிதப் பணியாரங்களை அருமை மைந்தனின் வயிற்றிலே நாள் பூராவும் அன்பின் காணிக்கைகளாகத் திணிப்பார்கள் பெற்ருேர்.

முத்துப்பேட்டை இப்ராஹிம் மகன் நயினு முகம்மது பி. ஏ. பாஸ் பண்ணி விட்டான் என்ற சுபச் செய்தி வந்ததும், ஊரிலுள்ள ஆடவரும் பெண்டிரும் ஒன்று திரண்டு வந்து அந்தப் 'பகதூரை'க் கண்ணுரக் கண்டு, தரிசித்து, நல்லாசிகள் அருளி, அவ்வீட்டிலே உண்டுவிட்டு நடையிலே திரும்பிப்போக முடியாமல் தடுமாறினர்! தம் மகன் செய்துவிட்ட 'ருஸ்தும்' சாதனையை நினைக்க நினைக்க இப்ராஹிமுக்குத் தலைகால் புரியவில்லை. ஓயாது அலைந்ததனுல் அவர் மிதியடிக் கட்டைகள் தேய்ந்துவிட்டன.

ரஜப் மாதம் விடைபெற்றுக் கொண்டது. மிக்க சுவாரஸ்யத்துடன் அறந்தாங்கிச் சுருட்டை 'இழுத்து'க் கொண்டு இப்ராஹிம் திண்ணையில் உட்கார்ந்திருந்தார்.

"என்ன சாயபு! யோசனை பலமாயிருக்கே?" என்று சட்டென்று நடையை நிறுத்திவிட்டு வாசற்படிகளில் ஏறினுர் பேட்டை சாம்பசிவையர். தில்லைவிளாகத்திலிருந்து கத்திரிப் பிஞ்சுகளை வாங்கிக்கொண்டு பேட்டைக்குத் திரும்பிக்கொண் டிருந்தார் அவர்.

"நம்ப புள்ளே ராத்திரி பட்டணம் போவுது" என்ருர் இப்ராஹிம். அவர் வதனத்திலே புன்னகை நெளிந்தாடினுலும், கரகரத்த குரலிலே ஏக்கம் தொனித்தது.

"என்ன விசேஷமோ?"

"பி. ஏ. பாஸ் பண்ணிடிச்சுல்லே. அதுக்குப் பட்டம் கொடுக்கிருங்களாம். அதை வாங்கத்தான் போவுது. ஒரு வாரத்திலே திரும்பிடும்."

"பின்னே ஏன் கவலைப்படுகிறீர்? சரி... சாயபு! உம்ம கிட்டெ ஒரு விஷயம் பேசலாம்னு ரொம்ப நாளா ஆசை."

"சொல்லுங்கோ."

"எல்லாம் உங்கள் மகனைப் பற்றித்தான். ஏதோ நீங்க செய்த புண்ணியம், அவன் பி. ஏ. பாஸ் பண்ணி விட்டான். இந்தத் தஞ்சை ஜில்லாவிலே அதுவும் உங்க சமூகத்திலே இவ்வளவு படித்தவன் வெகு அபூர்வம் சாயபு. சரி...பிள்ளையை என்ன செய்யப் போகிறீர்?"

"அதான் தெரியாமெ முழிக்கிறேன். நம்ம பல சரக்குக் கடையிலே உட்கார வச்சுட்டா என்னென்னு பார்க்கிறேன்!"

"அட ராமசந்திரா! இந்த 'ஒண்டர்புல்' எண்ணமா வச்சிருக்கிறீர்! வேண்டாம் சாயபு......வேண்டாம். படிச்ச பையன் அவன். தாலூகா ஆபீஸிலே தள்ளுங்கோ! அடுத்த ஐந்து வருஷத்திலே திருத்துறைப்பூண்டி மாஜிஸ்டிரேட்டாக அவன் வராமல் போனால் கேளுங்கோ!"

"நீங்க சொல்றதிலும் நல்லது படுது. இன்ஷால்லா... பார்ப்போம்."

"பையன் கல்யாணத்துக்கு ஏதாவது பந்தோபஸ்துச் செய்தீர்களா?"

குல்லாவை எடுத்து வழுக்கைத் தலையை நாஸூக்காகத் தடவினார் இப்ராஹிம்.

"சாயபு! சொல்லிவிட்டேன். காலம் பொல்லாத காலம். நம்ப தாவுத் மகன் என்ன செய்தான்? அவனும் படிச்சவன்தான்! பர்மாக் குட்டி ஒருத்தி போட்ட வலையிலே அந்தக் கோம்பை சிக்கிக்கிட்டு, போன இடமே தெரியவில்லை. ஜாக்கிரதை! பையன் விஷயத்தை முதலிலே கவனியுங்கோ."

"நம்ப பையன் அப்படி வழி தப்பிப் போறவன் இல்லிங்கோ!"

"எனக்கா சொல்லணும்? நம்ம ஊர் ஷேக் தாவுத் அவுலியா தர்க்காலே 'பாத்தியா' பண்ண ஆலத்தம்பாடி ஹமீது சுல்தான் சாயபு குடும்பத்தோடு இங்கே வந்திருக்

கிருர். பேட்டையிலேதான் முகாம் போட்டிருக்கிருர், அவருக்கு ஒரே பெண்ணும்; கிளிமாதிரி இருக்கும்னு என் அகத்துக்காரி சொன்ஞள். படிச்சவளாம்'' என்று சொல்லிவிட்டு, குட மிளகாய் போன்ற மூக்கிலே ஒரு சிமிட்டா பொடியைத் திணித்தார் சாம்பசிவையர்.

குடும்ப நண்பர் பொடி மட்டையைக் காலி செய்த வண்ணம் பொடி வைத்துப் பேசிய ஆலத்தம்பாடிக் கல்யாண விஷயம் இப்ராஹீமின் மூளையிலே நெடியேறியது.

நண்பர்களின் உரையாடல் வாசலிலே நடந்துகொண்டிருந்த அதே சுப வேளையில் ஆடு திருடின கள்ளன் போல் அங்கும் இங்கும் பார்வையை ஓட்டி விட்டு ஓசைப் படாது அடுப்பங்கரைக்குள் காலடி எடுத்து வைத்தான் நயினு முகம்மது! 'வாணலில்'-இரும்புச் சட்டியில்-அகத்திக் கீரையைச் சுண்டிக்கொண் டிருந்த ஜைனப்பீ அவனைக் கண்டதும் எகிறிக் குதித்து ஒதுங்கி நின்ருள்.

''பி.ஏ. படிச்ச நவாபுங்க நீங்க! இந்தக் கலீஜ்-அசுத்த மான-இடத்திலே கால் வைக்கலாமா?'' என்ருள் ஜைனப், புன்சிரிப்புடன்.

''இதைக் கேளு முதல்லே. இன்று ராத்திரி பட்டணம் போறேன் ஜைனப்'' என்று நயினு முகம்மது சொன்னதும் ஜைனப்பின் நெஞ்சு திக்கென்றது.

''ஏனுங்க?''—விழிகளைச் சுழற்றிஞள்.

''என் படிப்பு விஷயமாத்தான். ஒரு வாரத்திலே திரும்பிடுவேன். வரும்போது இரண்டு டஜன் 'ஜிக்ஞு' வளையல்கள் கொண்டுவந்து உன் கரங்களிலே பூட்டு வேன்!'' என்று சொல்லிக்கொண்டே அவள் கொய்யாக் கனிக் கன்னங்களை ஆசையுடன் கிள்ளிஞன். மேலும் தொடர்ந்து, ''ஜைனப்...எப்படியோ வாழ்வின் பெரிய பள்ளத்தை 'அத்தரிபாட்ச்சா கொழுக்கட்டை'ன்னு சொல்லிக்கொண்டு தாண்டிவிட்டேன். இனி ஒன்று தான் பாக்கி. உன் கழுத்திலே கருவமணி இந்த மாதத் திலேயே விழுந்துவிட வேண்டும், அவ்வளவுதான்!''

"நீங்களோ பெரிய பணக்கார வூட்டுப் புள்ளேங்க. உயர்ந்த படிப்புப் படிச்சவங்க. படிச்ச அழகான பெண்களோடு பழகினவங்க. நானோ திக்கற்றவள். ஏழை-எதீம்" என்று சொல்லி, உதடுகளைப் பிதுக்கினாள் ஜைனப்பீ.

"இவ்வளவு நாட்களாக உன்னோடு ஒட்டிப் பழகிய பின்பும் என்னை இன்னும் நீ புரிந்துகொள்ளவில்லை. வருஷக் கணக்காக நாகரிகத்தில் மூழ்கிக் கிடந்து, கல்லூரிகளில் பருவத்தையும் பெற்றோர் பணத்தையும் பாழ்படுத்தும் நாரீமணிகளை நான் நன்றாகப் பார்த்துவிட்டேன். அவர்களுடன் நீ உன்னை ஒப்பிட்டுக்கொள்வது தமாஷாவிலும் தமாஷாதான்! அதெல்லாம் குப்பை! என் ஜைனப் மாணிக்கமாயிற்றே! உன்னை நான் கைவிட மாட்டேன்" என்று உணர்ச்சியுடன் சொல்லிக்கொண்டு அவளை அணைத்துக்கொண்டான். கரும்புகை சூழ்ந்த அந்த மடவறை அப்போது காதலர் பூங்காவாக மாறிக் காட்சி அளித்தது!

* * *

இரண்டாவது உலக யுத்த வெறிக்குப் பர்மா இலக்கானபோது அங்கே குடியேறிய தமிழ் மக்களுக்கு நேர்ந்த இன்னல்களை விவரிக்கக் கைப் பிடித்த பேனாவே கதறி அழுதுவிடும். ஜப்பான்காரன் ஜபர்தஸ்த் ஒரு புறம் பர்மாக்காரனின் கத்தி விளையாட்டு மற்றொரு புறம். இவர்களுடைய 'ஜூ ஜூ' விளையாட்டில் சிக்கிய நூற்றுக் கணக்கான குடும்பங்களில் காதர்பாச்சா குடும்பமும் ஒன்றாகும். முதல் குண்டு வீச்சிலே பெகுவில் இருந்த அவர் வீடு நிர்மூலமானவுடன் அவர் பீவியின் ஆவியும் பறந்தோடி விட்டது. மறு நாளே அவர் கடையை விஷமிகள் சூறையாடி விட்டார்கள். தன் மகள் ஜைனப்பீயை எப்படியோ தாயகத்துக்குச் செல்லும் கப்பலில் ஏற்றிவிட்டு, காதர் பாச்சா அங்கேயே தங்கி விட்டார். நாகையில் இறங்கிய ஜைனப்பீ முத்துப்பேட்டையை அடைந்து, தன் ஒன்று விட்ட மாமன் வீட்டில் அடைக்கலம் புகுந்ததும் அல்லாமல் நயினா முகம்மதின் உள்ளத்திலும் தஞ்சம் அடைந்தாள்!

"பாழாய்ப் போன சண்டை ஒரு தினுசாக முடிஞ் சுடுச்சாம். ரங்கூனுக்குக் கப்பல் கிளம்புகிறதாம்" என்று கூறிக்கொண்டே தாயக் கட்டையை உருட்டினாள் ஆமீனாபீ.

"வாப்பா என்னவானார்?' என்று ஆவலும் திகிலும் கிளர்ந்த குரலில் கேட்டாள் ஜைனப்பீ.

"அவர் பத்திரமா யிருக்கிறாராம். சேதி வந்திருக்கு."

தாவணியின் தலைப்பைத் தலையிலே இழுத்துக் கொண்டு, சுபச் செய்திக்காக அல்லாஹுத்தாலா காட்டிய கருணையை நினைத்துத் 'துவா' - பிரார்த்தனை-செய்து தன் நன்றியை வெளிக்காட்டினாள் ஜைனப்பீ.

"என்ன...கப்பலேறி ரங்கூன் போயிடலாம்னு நினைக் கிறியா?" என்றாள் ஆமீனாபீ லேசாகச் சிரித்துக்கொண்டு.

"ஆமாம், மாமி...ஆனால் இருந்து..."

"ஏன் தயங்குறே! சொல்லேன்!"

"இன்னும் கொஞ்சநாள் இருந்துட்டுப் போறேன்."

"அல்லாவே! எங்கே வாப்பா நினைவு வந்துட்டவுடனே பருந்து மாதிரி நீ பறந்துடுவியோன்னு பயந்துட்டேன்."

"நயினா முகம்மது நிக்காஹ்வைப் பார்த்துட்டு, புலவு சோறு சாப்பிட்டுத்தான் நீ போவணும், ஜைனப்" என்று ஆமீனாபீ சொன்னதும், ஜைனப்பீயின் தலையிலே பேரிடி வீழ்ந்தது. நாடி ஒரு விநாடி நின்றுவிட்டு மறுபடி அடிக் கத் தொடங்கினதுபோல் பிரமை உண்டாயிற்று. இருண்ட பாதாளத்தில் தான் உருண்டு வீழ்வதுபோல் மதிமருண்டு போனாள்.

"ஏன் முகவாட்டமா யிருக்கே, ஜைனப்! ரங்கூன் ஞாபகம் வாட்டுதுபோல் இருக்கு! கேளேன் விசயத்தை! புள்ளே பட்டணத்திலேந்து வந்தவுடனே 'நிக்காஹ்' நடக் கிறுப்பிலே உன் மாமூ எல்லா ஏற்பாடுகளும் பண்ணிட் டார். பொண்ணு மூக்கும் முழியுமா வெள்ளை வெளேர்னு

'வக்கா' மாதிரி இருக்கு. படித்திருக்கு; ஆலத்தம்பாடிக் 'கொடுவாபட்டி'க் குடும்பத்துப் பொண்ணுதான். ஏதோ நம்ப ஊர் அவுலியா துவாவாலே நல்ல இடம் நயினுக்கு அகப்பட்டுச்சு, ஜைனப்!''

''நான் ஊருக்குப் போறேன், மாமி''—ஜைனப்பின் கண்கள் கலங்கிக் காட்சியளித்தன.

''என்ன அப்படித் தலைபோகிற அவசரமோ, ஆண்டவனே!'' விரல்களை நொடித்தாள் ஆமீனுபீ.

''அடுத்த வாரம் சின்ன வாப்பா அக்கரைக்குப் போறாராம். அவரோடு நானும் கப்பலேறிடுறேன்; அப்புறம் ஆள் துணை கிடைக்காது, மாமி.''

''சரியாப் போச்சு, போ! 'நிக்காஹ்'வும் அடுத்த வாரந்தான்! வீட்டுக் காரியங்களை ஒன்கிட்டே ஒப்படைக்க நினைச்சேன். ஆட்டுக் குட்டி மாதிரி நீ குதிக்கிறே!''

''நான் கிளம்பித்தான் ஆகணும், மாமி. என்னைத் தடுக்காதிங்கோ'' என்று ஆவேசத்துடன் சொல்லி, தாயக்கட்டையையும் சோழிகளையும் உதறி விட்டு எழுந்த ஜைனப்பீ விறுட்டென்று அறைக்குள் நுழைந்தாள். வறு நிலத்தில் வீழ்ந்த இடிபோல் தடாலென்று கயிற்றுக் கட்டிலின்மீது வீழ்ந்து நெஞ்சு பிளந்து விடும்படி ஓவென்று கதறி யழுதாள்.

ஒரு வாரம் கழிந்தது.

''புள்ளே வந்த நாள் முதல் சரியாகவே பேசமாட்டங்கறது. காலம்பரக்கூடப் பசியாறச் சாப்பிடலாமே தேங்காய்ப் பால் புட்டையும், பிராசாப்பத்தையும் அரை குறையாய்ச் சாப்பிட்டு எழுந்திடுச்சு. என்னமோ தெரியவில்லை'' என்று தன் கணவனிடம் முறையிட்டாள் ஆமீனுபீ.

''நானுந்தான் ஒரு கண்ணு கவனிச்சுட்டு வர்ரேன், என்னைக் கண்டாலே 'டோகர்' கொடுத்து மறைஞ்சுடு

ருன் அவன்'' என்ருர் இப்ராஹிம், தாடியை நெருடி விட்டு. பிறகு தொடர்ந்தார்; ''நிக்காஹ்வைப் பற்றி ஏதாச்சும் அவன் காதிலே போட்டியா, புள்ளே?''

''சொன்னேன்.''

''அப்புறம்?''

''இப்படி ஹோ வென்னு மாறிடுச்சு!''

''ஏனும்?''

''அதுக்குப் புடிக்கல்லே''—முகத்தைச் சுளித்துக் கொண்டாள் ஆமீனுபீ.

''எது? பொண்ணு?''

''கண்ணாளமே வேண்டாமாம்!''

''கட்டணத் தொகை, 'மஹர்' வரிசை எல்லாம் பேசி முடிச்சுட்டு, பரிசம் போட்டு 'நிக்காஹ்' தேதியை நிச்சயம் பண்ணிட்டு, பத்திரிகை போட்டதை உன் மவன் காதிலே ஊதினியா, ஆமீனு?'' என்ருர் இப்ராஹிம் பொறுமை இழந்தவராக.

''எல்லாம் சொல்லி அழுதாச்சு. இங்கிருந்து ஓடுச்சே அந்தக் குட்டி......''

''ஜைனப்பா! அதுக்கும் இதுக்கும் என்னும் புள்ளே சம்பந்தம்?''—எரிச்சலுடன் இரைந்தார் இப்ராஹீம்.

''அந்தச் சிறுக்கி பெரிய சூது பண்ணிட்டுப் போயிடுச்சு.''

''என்ன உளர்றே?''

''என்ன சொக்குப் பொடியை எந்த 'ஆனத்'திலே போட்டுப் புள்ளேக்குக் கொடுத்துட்டாளோ, பாவி! அல்லாதான் அறிவான்.''

''விஷயத்தைத் தெளிவாகச் சொல்லித் தொலையும் புள்ளே.''

"அம்மாவை விழுங்கிட்டு, அப்பனையும் பொசுக்கிட்டு வந்த அந்தக் கழுதையைத்தான் கட்டிக்குவேன்னு உங்க புள்ளே நூறு தடவை சொல்லிட்டான்."

கணவனை நோக்கிப் பேந்தப் பேந்த விழித்தாள் ஆமீனுபீ!

மிதியடிக் கட்டைகளைக் கழற்றிவிட்டு, குல்லாவை மாடத்திலே வைத்துவிட்டு, கயிலியை இறுகக் கட்டிக் கொண்டு நயினு முகம்மதின் அறைக்குள் புகுந்தார் இப்ராஹிம்.

"முகம்மது! உனக்கு நல்ல இடத்திலே ஏற்பாடு செஞ்சா, நீ அம்மாகிட்ட என்னென்னமோ தாறுமாறாகப் பேசினியாம்" என்றார் இப்ராஹிம் கனத்த குரலில், இடுப்பிலே கைகளை வைத்துக்கொண்டு.

"வாப்பா!"

"பிள்ளை நன்மைக்குத் தானே பெற்றவங்க பாடுபடுறாங்கோ? உன்னைக் கெடுக்க எங்களுக்கு மனசு வருமா? நீ சொல்லு!"

"வாப்பா, இந்த நிக்காஹ் விஷயத்தை நீங்க எனக்கு முன்பே தெரியப்படுத்தி யிருக்கணும்."

"இப்போ தெரிஞ்சா போதாதா! உனக்குக் கல்யாணம் செய்து வைப்பது எங்கள் பொறுப்புத்தானே?"

"எனக்கும் ஒரு வார்த்தை சொல்லிவைப்பது உங்கள் கடமையல்லவா, வாப்பா?"

"வாப்பா, அம்மா சொல்றபடி புள்ளேங்க நடக்கணும்னு நம் 'ஹதீஸ்' சொல்லலியா? நீ நமாஸ் பண்றவன். குரான் பூராவும் படித்தவன்."

"நான் நியாயமாகத்தான் கேட்கிறேன்!"

"பெத்தவன் கிட்டே புள்ளெயே நியாயம் பேசுவது! இந்தத் துனியாவுக்குக் 'கியாமத்' -முடிவு- வந்திரிச்சுப் போலிருக்கு!... ஹூம்... உன் கல்யாணம் நிச்சயமாயிடுச்சு;

பத்திரிகையும் அனுப்பியாச்சு; ஊராருக்கு 'தாவத்து'ம் சொல்லியாச்சு, என் மானம், என் 'இஜ்ஜத்' -கௌரவம்- எந்த நிலைமையில் இருக்கும்னு நீயே நினைச்சுப் பாரு!"— சொற்கள் பிரலாபமாக வெளிவந்தன.

"என் மனசிலே ஒன்று இருக்கும்போது நான் எப்படிச் சம்மதிப்பேன்?"

"அப்படி என்னும் புள்ளே உள்ளுக்குள்ளே ஒளிச்சு வச்சிருக்கே?" பற்களை நறநறவென்று கடித்துக்கொண்டார் இப்ராஹிம்.

"இத்தனை வருஷமா நம்மோடு வாழ்ந்த, அந்தப் பாவம் அறியாத அபலையை நீங்க விரட்டிட்டிங்கோ, வாப்பா."

"அந்த மூதி, அவளே போயிட்டாள். நாங்கள் என்ன செய்வோம்?"

"எங்கே போனாளோ......பாவம்!"

"எந்தக் குட்டையிலும் வுளுந்து சாகலே. என் தம்பி ஊட்டுக்கு நெருப்பு வைக்கத்தான் பக்கத்துத் தம்பிக் கோட்டைக்குப் போயிருக்காள். உங்க இரண்டு பேரு விஷயம் என் காதுலே விழாமல் இல்லே, உன்மீது எவ்வளவு நம்பிக்கை வைத்திருந்தேன் நான்!"

"என் மீது நம்பிக்கை வைத்த அந்த ஜைனப்புக்கு நான் துரோகம் செய்யலாமா வாப்பா?"

"பெரிய மௌலி சாயபுபோல 'வாஸ்' -உபந்நியாசம்- பண்றேதே, முகம்மது. எனக்குக் கெட்ட கோபம் வரும். உனக்குக் கொடுத்த அந்த 'வனு'வாகிற படிப்பு இப்படி உன்னைச் 'சைத்தான்' மாதிரி ஆட்டி வைக்குது."

"வாப்பா!"

"இந்த 'ஹாஜி' இவ்வளவு சொல்லியும் நீ இடுக்குப் பண்றே! எனக்குப் புத்திமதி வேறு சொல்ல ஆரம்பிச்சுட்டே. என் பேச்சை நீ மீறத் தீர்மானித்தால், வாசற் கதவு திறந்திருக்கிறது, பார்த்துக்கொள்."

இப்ராஹிமின் சொற்களில் கண்டிப்பும் ஆவேசமும் சுடர்விட்டன.

"ஜைனப்பை நான் கைவிட முடியாது, வாப்பா" என்று நயினு முகம்மது சொன்னதும், இப்ராஹிம் வெகுண்டு எழுந்தார். பளீச்சென்றது மின்னல்! அதைத் தொடர்ந்தது கட கடவென்ற இடி!

"வீட்டை விட்டு உடனே போய்விடு. போய்விடு!" என்று வீடே கிடுகிடுக்கும்படி கர்ஜித்தார் இப்ராஹிம். பேரிரைச்சலைக் கேட்ட ஆமீனுபீ புழக்கடைப் பக்கத்திலிருந்து ஓடோடி வந்து கணவனுக்கும் மகனுக்கும் நடுவிலே நின்றுகொண்டாள்.

"புள்ளேமீது சீறி வுளாதிங்கோ! ஏதோ அறியாப் பருவம். புத்தி மோசம் போச்சு" என்று தன் மணவாளனைச் சமாதானப்படுத்தினாள்.

"ஆமீனு! இந்தச் சொத்தையெல்லாம் மசூதிக்கோ மதராஸாவுக்கோ எதிம்கானுவுக்கோ -அநாதை விடுதி- எழுதிவிட்டு, நாம் ஒரே திரியாக 'ஹஜ்' போயிடுவோம். உன் மவன் எந்த 'தோஸக்குள்ளே' -நரகம்- வுளுந்தாலும் சரி. புள்ளேயாம் புள்ளே...தென்னம் புள்ளே!...ஹும், அணிப் புள்ளே!" என்றார் இப்ராஹிம் மிக்க மனம் ஓடிந்தவராய்.

மறுமொழி கூறாது அவ்வீட்டைவிட்டு நீங்கிய நயினு முகம்மது தம்பிக்கோட்டை ஸ்டேஷனில் இறங்கிச் சின்ன வாப்பா வீட்டை அடைந்தான்.

சோகமே உருவெடுத்தாற்போல் கண்ணீரும் கம்பலையுமாக ஜன்னல் கம்பிகளிலே சிரத்தைச் சாய்த்துக் கொண்டு நின்ற ஜைனப்பீயைக் கண்டதும், நயினு முகம்மதின் சப்த நாடிகளும் ஒடுங்கிவிட்டன. அவள் காலடியில் கிடந்த திருமணப் பத்திரிகையின்மீது அவன் பார்வை திரும்பியதும் அவன் வெலவெலத்துப் போனான். நெஞ்சு படபடத்தது.

"என் ஆசை ஜைனப்! அவ்வளவு 'பத்மாஷ்' -மூர்க்கன்- நானென்று நினைத்துவிட்டாயா? குற்றமற்ற அப்பாவி நான். என் கண்களைக் கட்டிவிட்டு நடந்துவிட்டது வேலை, ஜைனப்" என்று நாக்குழற, தடுமாறிக் கொண்டு சொன்னான் நயினா முகம்மது.

"உங்களுக்கு 'அதிர்ஷ்டம்' வேறிடத்தில் காத்துக் கொண்டிருக்கும்போது இந்தத் தரித்திரம் ஏன் குறுக்கே நிற்க வேண்டும்?" என்றாள் ஜைனப். அவள் நீர் நிறைந்த விழிகள் தரையை நோக்கி வெறிக்கப் பார்த்தன.

"சொற்களை உளியாக மாற்றிக்கொண்டு என் நொந்த நெஞ்சைச் செதுக்கவேறே தொடங்கிவிட்டாய்!"

"இந்தச் சீமைக்குப் பெரிய சலாம் போட்டுவிட்டு, இன்று ராத்திரி நான் நாகப்பட்டினம் போகிறேன்· நாளைக்குக் கப்பல் புறப்படுது."

"நல்ல வேளையாக ஓடோடி வந்தேன்."

"ஏன் இந்த மனவேதனை! எல்லாம் 'தக்தீர்' -விதி-படிதானே நடக்கும்?"

"தக்தீர் தக்தீர்னு சொல்லி மனித சாதி செய்யும் அக்கிரமங்களை மறைக்கப் பார்க்காதே, ஜைனப்? உன் கையைக் கோத்துக்கொண்டு நானும் உன்னோடு கிளம்பி விடுகிறேன். இந்த ஒரே லட்சியத்தோடுதான் நான் இங்கே வந்து சேர்ந்தேன்."

திகைத்து நின்ற ஜைனப்பீ ஒருவாறு தன்னைச் சமாளித்துக்கொண்டாள். கலகலவென்று சிரித்து விட்டாள்.

"இந்த லட்சியமா உங்களுக்கு? சாமான்களை மூட்டை கட்டி எடுத்து வந்தீர்களா?" என்றாள் சாவதானமாக.

"என் மனச் சுமைப் பாரத்தைத் தாங்கி வந்ததே பெரிய காரியம்!"

"மாமாவும் மாமியும் சந்தோஷமாக உங்களை வழி அனுப்பினார்களா?"

"பெற்றவங்க முகங்களைக்கூடத் திரும்பிப் பார்க்காமல் வந்துவிட்டேன், ஜைனப்! என் இதய ராணி இங்கே இருக்கும்போது எனக்கு என்ன கவலை? எல்லாம் உதறி விட்டு வந்த என்னை அழைத்துக்கொண்டு எந்தப் பாலை வனத்திற்கோ சென்றுவிடு!" என்று மன்றாடினான் மிக்க உணர்ச்சியுடன்.

பித்துப் பிடித்தவள்போல் சிரித்தாள் ஜைனப்பீ. "இந்த அதிசயத் தீர்மானத்துடன் வந்த உங்களுக்கு ஆண்டவன் 'நெஞ்சு' ஒன்று வைக்க மறந்துவிட்டான் போலும்!"

நயினு முகம்மது திடுக்கிட்டான்.

தொடர்ந்தாள் அவள்: "இந்த விஷயம் உங்கள் வாப்பா காதில் விழுந்தால் அவர் உயிர் வைத்திருப்பாரா? பத்துப் பெண்டுகளுக்கு முன்னால் மாமி, முகத்தை எப்படிக் காட்டுவாங்கோ! உங்களுக்கு நிச்சயித்த அந்தக் கல்யாணப் பெண்ணின் கதியை நினைச்சுப் பாத்தீங்களா?"

"ஜைனப்!"

"இத்தனை வருஷங்களாக உங்கள் வீட்டுச் சோற்றை உண்டதற்கு இந்தப் பாவத்தை நான் சுமந்து செல்ல எனக்குப் புத்தி சொல்ல வந்தீங்களே!"

"ஜைனப்!"

"அடுத்த வாரம் நடக்கப் போகும் உங்க நிக்காஹ்..."

"அது 'வனு'வாகி நாசமாகட்டும்!" என்று கத்தினான் நயினு முகம்மது.

"ஆமீனாக -சுபமாக- முடியட்டும் என்று அந்தப் 'பர்வாதிகாரி'டம் -ஆண்டவன்- 'துவா' -பிரார்த்தனை- செய்கிறேன் நான்."

"ஜைனப்! இந்த உபதேசங்களைக் கேட்கத்தான் எல்லாவற்றையும் உதறிவிட்டு நான் இங்கே வந்தேனா? மனம் ஒடிந்து வந்த என்னை நீயும் புறக்கணித்துவிட்டாய். இனிமேல் இந்தத் துனியாவும் என்னை வெறுக்கும்போல்

தெரிகிறது. உன் இஷ்டப்படி எங்கே வேண்டுமானாலும் நீ போய்விடு. உன் கப்பல் செல்லும் அதே கடலிலே இந்த உடல் மிதந்துகொண்டு எப்படியாவது ரங்கூன் கரையை உன் பின்னால் அடைந்தே தீரும்'' என்று உணர்ச்சியுடன் நயினா முகம்மது பகர்ந்ததும், ஜைனப்பீ அசந்துவிட்டாள்.

''இது என்ன பைத்தியக்காரக் கிறுக்குப் பேச்சு! என் இருதயம் இரு துண்டுகளாகப் பிளந்து, வாழ்வு கசந்து போனபோதும் உங்கள் வீட்டை விட்டுக் கிளம்பிய பெண்ணாகிய நான் வாழத்தான் புறப்பட்டேன், சாவதற்கு இல்லை. நீங்கள் 'ஜவான்' -ஆண்பிள்ளை-, படிச்சவங்க, இஸ்லாத்திலே பிறந்தவங்க. வந்த வழி திரும்பிப் போங்கள். வாப்பா, அம்மா கால்களிலே விழுந்து மன்னிப்புக் கேளுங்கள். உங்களுக்கு வரப்போகிறவளுடன் சந்தோஷமாகக் குடும்பம் நடத்துங்கள். நான் விடை பெற்றுக் கொள்ளுகிறேன்.''

ஜைனப்பீ பேசிய தோரணையும், நின்ற கோலமும், வீசிய பார்வையும் நயினா முகம்மதைத் திக்குமுக்காடச் செய்தன. அவன் நின்ற கோலத்தைப் பார்க்கப் பரிதாபகரமாயிருந்தது.

''ஜைனப்! நீதான் பேசுகிறாயா?''

''இல்லை! மனச்சாட்சி பேசுகிறது.'' தொடர்ந்தாள் ஜைனப்பீ: ''வண்டி வந்துவிட்டது. உங்கள் கல்யாணப் பந்தலிலே நான் இல்லாதபடி 'நஸீப்' சதிசெய்து கண்ணாமூச்சி விளையாடினாலும், அந்த நல்ல வேளையிலே கப்பலிலே இருந்துகொண்டு உங்களுக்காகவும் உங்களுக்கு வரப்போகும் கல்யாணப் பொண்ணுக்காகவும் அல்லாஹுத்தாலாவிடம் நமாஸ் தொழுது மனம் குளிர்ந்து 'துவா' செய்வேன்.

சாமான்களை ஏற்றிய பின் வில் வண்டியில் ஏறிக் கொண்டாள் ஜைனப்பீ. துப்பட்டியை வண்டியின் பின்

புறத்தில் திரையாகத் தொங்கவிட்டுத் தன் உருவத்தை அவள் மறைத்துக்கொண்டதும், நயிஞ முகம்மதின் கண் களில் அந்தகாரம் சூழ்ந்துகொண்டது. வண்டிக்குள் ளிருந்து வெளிக் கிளம்பிய நெஞ்சை உலுக்கிவிடும் விம் மலைக் கேட்டதும் அவன் ஸ்தம்பித்துவிட்டான்!

வண்டி நகர்ந்தது!

# அழாத கண்கள்

சமர்களும் சம்பவங்களும் விபத்துக்களும் ஒன்றன் பின் ஒன்ருகக் காளான்கள்போல் கிளம்பும் நிம்மதியற்ற இந்தப் பிரபஞ்சத்தில் சிறிது அமைதி நிலவுகின்ற இடமொன்று இல்லாமல் இல்லை. அரசியலில் அதிர்ச்சியை உண்டாக்கியவர்களும், குடும்ப விவகாரங்களில் தாடிகளைப் பிணைத்துவிட்டுக் கும்மாளம் அடித்தவர்களும், வானளாவிய மனக்கோட்டைகளைக் கட்டி வயிறு புடைக்கச் சிரித்தவர்களும், வறுமையிலே வதங்கியவர்களும், அமீர்களும், அவர்களிடம் யாசகம் பெற்ற பக்கிரிகளும் தங்கள் தங்கள் வாழ்நாட்களை ஒருவாறு தட்டிக் கழித்துவிட்டு இறுதியில் அடைக்கலம் புகுவது அந்த ஓர் இடத்தில்தான். உயர்வு தாழ்வு என்ற வேறுபாடுகள் அவ்விடத்தில் இல்லை. ஆண் பெண் என்ற பிரிவினை அங்கே இல்லை. ஆனல் சாதி, மதம் என்ற பாகுபாடு மாத்திரம் அவ்விடத்தில் நிலைத்து நின்றுவிட்டது. 'குவா குவா' என்ற குதலைச் சொல்லை வீரிட்டுக் கிளப்பியது முதல் உலகத்தாரிடம் இறுதி 'ஸலாம்' வைத்துவிட்டு மறையும் வரை இஸ்லாம் என்ற மதத்தை ஆலிங்கனம் செய்து நின்ற ஜீவன்களுக்குத்தான் அங்கே தஞ்சம் உண்டு. மற்றவர்களுக்கு அந்தப் பாக்கியம் கொடுத்து வைக்கவில்லை.

அடர்ந்த இலைகளைக் கொண்ட பரந்த கிளைகளையுடைய வாதுமை மரங்களும் இலுப்பை மரங்களும் அவ்விடத்தைச் சுற்றி வரம்பாக நின்றன. ஹோவென்று அலறிக்கொண்டு வீசும் அனற்காற்றில் அவதியுற்ற இலை

கள் ஒன்ருேடு ஒன்று உராய்ந்து எழுப்பிய பயங்கரச் சல சலப்பு அங்கு நிலவிய அமைதியை மெதுவாகக் கலைக்கத் தொடங்கியது. அந்தச் சோக ஒலியைக் கேட்ட ஆந்தை கள் மரப் பொந்துகளின் வெளியே தங்கள் கழுத்துக்களை நீட்டி வெடுக்கு வெடுக்கென்று நெரித்துத் தங்கள் வெறுப் பைக் காட்டத் தொடங்கின. இரைச்சல் பேரிரைச்ச லாக மாறியதும் அங்கும் இங்கும் கல்லறைகளும் சமாதி களும் சிதறிக் காணப்பட்ட அந்த இடத்தில் பீதியை உண்டாக்கும் சூழ்நிலை வியாபித்தது.

வெய்யோனின் கொடுமையினுலோ, அன்றி ஜன்ம பலாபலன்களின் விளைவினுலோ சமாதிகள் சரிந்தும் பிளந்தும் மயிர் சிலிர்க்கும் கோரக் காட்சியைத் தோற்று வித்தன. மடிந்த பின் மண்ணேடு மண்ணுகியும் மாநில மக்கள் மறவாதிருக்க நாமகரணங்களும் 'மெய்க் கீர்த்தி' களும் சூட்டிக்கொண்ட கல்லறைகள் கவிழ்ந்தும் உடைந் தும், 'இதுதான் உன் முடிவு!' என்ற மறுக்க முடியாத உண்மையை மனிதப் பிறவிக்குப் பறைசாற்றித் தெரிவித் துக்கொண் டிருந்தன.

காலடிச் சுவடுகளினுல் ஏற்பட்ட ஒற்றையடிப்பாதை யொன்று வளைந்தவண்ணம் அங்குமிங்கும் ஓடி ஓர் பாழ டைந்த கிணற்றை அடைந்தது. கிணற்றருகில் சோகமே உருவெடுத்தது போல் நின்ற கொய்யா மரத்தின் கிளை யொன்றில், வாதாங்கொட்டையை மிக்க சுவாரசியமாகச் சுவைத்தபடி வெளவால் ஒன்று ஹாய்யாகத் தொங் கிக்கொண் டிருந்தது. தேடாத தருக்களை யெல்லாம் தேடித் திரிந்த அதன் காதலன் அதைக் கண்டவுடன் சரே லென்று பாய்ந்து காதலியை எழுப்பிக் கொள்ள எத்தனித் தான். 'கிரீச் கிரீச்' என்று அந்தக் காதலர்கள் குஷியுடன் பரிமாறிக்கொண்ட காதல் மொழிகள் மரத்தின் நிழலிலே கல்லறை ஒன்றை மஞ்சமாக அமைத்துக்கொண்டு கவலை ரேகைகள் படர்ந்த வதனத்துடன் படுத்திருந்த கிழவனின் செவிகளில் நாராச ஒலிபோல் வீழ்ந்தன. அவன் அண் ணுந்து பார்த்தான். வட்டமிட்டுத் திரியும் வெளவால் களைத் துண்டு துண்டுகளாக வெட்டிவிடத் துடித்தான். கைகளைப் பிசைந்துகொண்டு எழுந்தான். வெறுப்பும்

எரிச்சலும் அவன் முகத்தில் மாறிமாறித் தோன்றி மறைந் தன. பலத்த போராட்டம் அவன் உள்ளத்தில் உருவாகிக் கொண்டிருந்ததை அவனுடைய நிலைமை பளிச்சென்று எடுத்துக் காட்டியது.

சப்பி எறிந்த மாங்கொட்டையைப் போன்ற கன்னங் கள்; சுருக்கங்கள் படிந்த குறுகிய நெற்றி; இலவம் பஞ் சைப் போன்ற தாடி. கிழிந்த 'பினுங்' பனியன் ஒன்று அவன் அகன்ற மார்பை மறைத்திருந்தது. பஞ்ச வர்ணக் கயிலியை இடுப்பில் இறுகக் கட்டி அதைச் சுற்றி அகல மான தோல் பெல்ட்டைக் கட்டியிருந்தான்.

அவன் வாழ்க்கையே ஒரு விசித்திரம். அந்த இடந் தான் அவன் ஜீவனத்தின் அஸ்திவாரமென்று கூறிவிட லாம். ஆறடி நீளமும் நாலடி அகலமும் எட்டடி ஆழமும் கொண்ட பள்ளத்தை அந்த இடத்தில் அவன் தோண்டி விட்டால் இரண்டு ரூபாய் கூலியாக அவனுக்குக் கிடைத்து விடும். தவிர உடுத்துக்கொள்ள ஆறு முழம் 'துப்பட் டா'த் துண்டை அவனுக்கு 'ஜகாத்'தாகக் கொடுத்துவிடு வார்கள். அவ்விடத்திற்கு அவன் காவலனுக இருந்த தால் தினம் ஒன்றுக்கு இரண்டு படி அரிசி அவனுக்குக் கிடைக்குமாறு மகூதியின் 'ஜமாத்' ஏற்பாடு செய்திருந் தது. சமாதிகளையும் கல்லறைகளையும் சுத்தப்படுத்தி, தண்ணீர் தெளித்துப் பூச்செடிகளை வளர்ப்பது அவன் முக்கிய வேலையாகும். ஏதாவது ஒரு கல்லறையை உட் காருவதற்கு ஆசனமாக அமைத்துக்கொள்வான். தரை யில் கிடக்கும் வாதுமை இலைகளைக் கால்களினுல் அப்புறப் படுத்தி அங்கு ஒளிந்திருக்கும் ஓணன்களை விரட்டுவது அவன் பொழுது போக்காகும்.

அவன் உள்ளத்தில் வீசிக்கொண்டிருந்த சூருவளியின் உக்கிரம் தணிய ஆரம்பித்தது. வேப்பம் பழங்களைத் தேடிக்கொண்டு சமாதிகளின்மீது துள்ளித் திரியும் அணில் கள் அவன் கண்களுக்குத் தென்படலாயின.

''காசிம்!'' என்று ஹக்கீம் எழுப்பிய உரத்த குரல் அவன் செவிகளில் லேசாக வீழ்ந்தது. எழுந்து நின்ருன்.

"இனிமேல் அல்லா ஹூத்தாலா மெஹரில்தான் வுட்டுடவேணும். செய்ய வேண்டியதெல்லாம் செஞ் சாச்சு" என்றார் ஹக்கீம். அவர் நாட்டு வைத்தியர்.

"எனக்கு ஒண்ணுமே புரியல்லே" என்றான் அந்தக் கிழவன் தழுதழுத்த குரலில், கைகளைப் பிசைந்து கொண்டு.

"நமக்கெல்லாம் மேலே ஆண்டவன் ஒருத்தன் இருக் கானென்பதை மறந்துவிடாதே. மனிதன் கையிலே என்ன இருக்கு? நாடி தளர்ந்து போச்சு. இனிமே நடக்க வேண்டிய வேலையைப் பாரு. உன் மாமூ, காலா, சச்சா இவங்களை வரச்சொல்லி ஆள் அனுப்பிடு. ரொம்பத் தொலைவிலிருந்து அவர்களும் வரவேண்டியதாயிருக்கு. நான் போய் நாளைக் காலை - 'ஸபரு' - வர்றேன். தைரியமா இரு!" இவ்வாறு ஆறுதல் மொழிகள் கூறிவிட்டு மறைந் தார் ஹக்கீம்.

சுற்றி நிற்கும் கல்லறைகளுக்கிடையே அந்தக் கிழவ னும் ஒரு கல்லறை போல் ஸ்தம்பித்து நின்றுவிட்டான். குடிசையை அடைந்தான். உள்ளே எட்டிப் பார்த்தான். திக்குமுக்காடித் திணறிக்கொண்டு அவன் துணைவியின் அடிவயிற்றிலிருந்து மேலெழுகின்ற பெருமூச்சு அவன் செவிகளில் தெளிவாக வீழ்ந்தது. அருகில் அமர்ந்து அவள் சிரத்தை அன்புடன் எடுத்துத் தன் மடியின்மீது வைத்துக்கொண்டு நீண்டதொரு பெருமூச்சு விட்டான். சிக்குகள் கொண்ட அவள் கேசத்தை அவன் விரல்கள் தடுமாற்றத்துடன் கோதிவிட்டுக்கொண்டிருந்தன. அவன் மாசற்ற மனம், கடந்த நிகழ்ச்சிகளை ஒன்றன்பின் ஒன்று கப் புரட்டிப் பார்க்கத் தொடங்கியது. முப்பத்தாறு வரு ஷங்களுக்கு முன் அவன் வாழ்க்கையில் நடந்த சம்பவம் அப்பொழுது அவன் நினைவுக்கு வந்தது.

* * *

அந்தக் காலத்தில் அவன் கட்டுக்கு அடங்காத காளை. அவன் பரந்த மார்பையும், கொழு கொழுவென் றிருந்த புஜங்களையும், ஒளி வீசும் விழிகளையும் கண்டு

அவ்வூராரே பெருமைப்பட்டார்கள். மண்வெட்டியைக் கைகளினுல் எடுப்பதுதான் தாமதம், பத்தே நிமிஷங்களில் ஒரு பள்ளத்தைத் தோண்டிவிடுவான். ஒரு சமயத்தில் அவ்வூரில் காலராவிற்கு அநேகர் பலியானுர்கள். அவர்களை அடக்கம் செய்யும் பொறுப்பு அவன் தலையில் வீழ்ந்தது. நாளொன்றுக்கு நாற்பது குழிகளைத் தோண்டும்படியான நிலைமை ஏற்பட்டபோதிலும், வெகு எளிதாகச் சமாளித்துவிட்டான். அவ்வளவு பிணங்களையும் தன் கைகளினுலேயே புதைத்தானே! வாழ்நாளில் ஒரு தடவையாவது மனந்தாளாது அவன் நயனங்கள் கலங்கினவா? கண்கள் அழுதனவா? இல்லவே இல்லை! அவன் திறனைக் கண்டு 'குழிதோண்டிக் காசீம்' என்று பெருமையாக அவ்வூரார் அவனைக் கூப்பிடத் தொடங்கினுர்கள். நாட்கள் செல்லச் செல்ல, மமதையும் மளமளவென்று அவன் மதியில் ஏறியதை அவன் 'ஷோக்' மைனர் நடை, மரூதியின் டமாரம் போல் முரசொலித்தது. அதன் விளைவாக 'வஸ்தாத்' வேலைகளில் அவன் ஈடுபட்டான். அடிகளும் குத்துகளும் மற்றவர்களுடன் அவன் பரிமாறிக் கொள்வது அவனுக்குச் சர்வ சாதாரண மாகிவிட்டது.

வாலிப 'ஜோஷ்' - முறுக்கு ஏறிய - அந்தச் சமயத்தில் தான் அவன் வாழ்க்கையில் ஒரு முக்கியமான அத்தியாயத்தைத் துவக்கினுன் காலதேவன். 'குழிதோண்டிக் காசீம்' உண்மையிலே ஒரு குழியில் விழும்படி அவன் நிர்ணயித்து விட்டான். அது காதல் குழியாக இருக்க வேண்டுமென்றும், அதில் தவறி வீழ்ந்தால் சம்சாரம் என்ற ஏணியின் உதவியினுல்தான் வெளியேற வேண்டுமென்றும் அவன் அந்த அத்தியாயத்தில் அழுத்தமாகத் தீட்டிவிட்டிருந்தான்!

காசீமின் ஒன்றுவிட்ட மாமன் ஷேக் மீரா ராவுத்தர் பள்ளிவாசல் தெருவின் கோடியில் வசித்து வந்தார். அவர் மகள் கதீஜா அண்டை வீடுகளுக்குத் தண்ணீர் ஊற்றி ஏதோ சில காசுகள் சம்பாதித்து வந்தாள். ஊரில் பல கிணறுகள் இருந்தபோதிலும், தண்ணீர் எடுப்பதற்குக் காசீம் வசிக்கும் அந்த மயானத்திலுள்ள கிணற்றுக்குத்

தான் அவள் போவது வழக்கம். அதற்குக் காரணம் இல்லாமல் இருக்குமா? மெல்லிய மஞ்சள் நிற ஜிமிக்கி தாவணி மார்பழகை எடுத்துக்காட்ட, செவிகளில் வெள்ளி அலுப்புத்துக்கள் ஒன்றோடொன்று உராய்ந்து ரீங்காரம்எழுப்ப, முத்துப் புல்லாக்கு மூக்கில் அசைந்தாட, பூட்டுக் காப்புகள் கரங்களில் ஒலிக்க, செப்புக் குடத்தை இடுப்பில் வைத்துக்கொண்டு உடலை நெளித்துக்கொண்டு ஜிலுஜிலு வென்று அவள் கிணற்றடிக்குச் சென்றுவிட்டால், காசீம் அப்படியே அவள் வனப்பில் சொக்கிப்போய் வாயடைத்து நின்றுவிடுவான். அவளிடமிருந்து குடத்தை வாங்கித் தானே வலுவில் தண்ணீர் இறைத்து, குடத்தை அவள் இடுப்பில் எடுத்து வைப்பான். கதீஜா விழிகளை ஓர் சுழற்றுச் சுழற்றிவிட்டு அவ்விடத்தை விட்டு மறைவாள். அவள் மறுமுறை திரும்பி வரும் வரையில் பீடியைக் குடித்துக்கொண்டு கிணற்றின் சுவர்மீது அவள் வருகையை எதிர்பார்த்தவாறே உட்கார்ந்திருப்பான். இவர்கள் 'கண்ணாமூச்சி' விளையாட்டை அந்தக் கல்லறைகளும் சமாதிகளுந்தாம் மௌனமாக வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தன.

சில சமயங்களில் கதீஜா அச்சுப் பணியாரம், பிராசாப்பம், வட்லப்பம் கொண்டுவந்து அவனுக்குக் கொடுப்பாள். அவற்றை ஆசையுடன் வாங்கிக்கொள்வான் காசீம். அவற்றைச் சாப்பிட்டுக்கொண்டே தன் பஹாதூர்ச் செயல்களையும், அடி, பிடி, உதை முதலிய முப்படலங்களில் காண்பித்த சூரத்தனத்தையும் வழவழவென்று அவளிடம் சொல்லுவான். கதீஜா பூரிப்படைந்த போதிலும், அவன் பேச்சில் மமதை பிரதிபலிப்பதை அறிந்து சற்று அருவருப்புக் கொள்வாள். முகத்தைச் சுளித்துக் கொண்டு பல கோணங்களில் தன் வெறுப்பைக் காட்டுவாள். காசீம் அதைத் துளிகூடச் சட்டை பண்ணாமல் தன் பிரதாபங்களை அளந்துகொண் டிருப்பான். அவனுக்கு நல்ல புத்தி கற்பித்து அவன் கர்வத்தை ஒடுக்கத் திட்டமிட்டாள் கதீஜா!

அதற்கு ஒரு தருணம் வாய்த்தது.

''என்னுங்க! இது நெசமான்னு கேக்கிறேன். நீங்க பெரிய 'வஸ்தாத்'னு ஊரே கிடுகிடுக்குதே'' என்று நாஸுக்காகப் பேச்சைத் தொடங்கினாள் கதீஜா. அச் சமயத்தில் காசீம் மளமளவென்று கயிற்றை இழுத்துக் கொண்டிருந்தான்.

''இரு, வந்து பதில் சொல்றேன்'' என்று குடத்தைப் பிடித்துக் கிணற்றுச் சுவரின் மேல் வைத்தான். ''இப்போ தான் உனக்குத் தெரிஞ்சுச்சா என் சமாசாரம்?'' என்றான் சற்று இறுமாப்புடன்.

''உங்க 'பிரதாபத்'தை உங்க வாயாலேயே அடிக்கடி கேட்டு என் காது புளிச்சாறு மாதிரி புளிச்சுப் போச்சு. ஊராரு சொல்லிக்கிட்டப்புறந்தான், நான் நம்பினேன்'' என்றாள் கதீஜா, புகையிலையை வலக் கன்னத்தில் புரட்டி விட்டு.

''இந்தாம் புள்ளே என்னே நல்லாப் பாரு'' என்று தோளைக் குலுக்கிவிட்டுத் தன் மீசையின் விளிம்பை முறுக்கிக்கொண்டான். ''குழிதோண்டிக் காசீம் எப்படிப் பட்டவன்னு இப்போதாவது தெரிஞ்சுச்சா? என் பெயரைச் சொன்னாலே, ஊரு கப்சிப் ஆயிடும். ஆமா!'' என்றான்.

''யா அல்லா! ஹூம்!''

''யாராவது கைவரிசே என்கிட்டே காட்டினா, அப்படியே அவனைக் குழிதோண்டி உசுரோட பொதச்சுட மாட்டேன்!''

''சரிதான்'' என்று சொல்லி, கதீஜா சட்டென்று கிணற்றுக்குள் எட்டிப் பார்த்து மேலெழுந்த சிரிப்பை அடக்கிக்கொண்டாள். பாக்கு அவ்வளவு லகுவில் பாக்கு வெட்டியில் மாட்டிக்கொண்டது அவளுக்கு வியப்பாக இருந்தது.

''என்னும் புள்ளே, சரிதான்னு சொல்லிட்டே! என்னை எதிர்த்து நிற்க இந்தச் சீமையிலே எவனாவது

இருக்காணு, சொல்லு. என்னைக் கண்டாக் கெளுத்தி மீன் மாதிரி குதிச்சுட்டு ஓடிடுவானே!''

''அவன் ஓடிட்டாலும், நீங்க கொக்கு மாதிரி அவனைப் புடிச்சுடுவீங்களே!'' என்று புகழ்ந்து அவன் 'ஜோரை' மேலும் கிளப்பிவிட்டாள் கதீஜா.

''கதீஜா, என்னை ஒரு பயலும் எதிர்க்கவும் முடியாது; ஏமாத்தவும் முடியாது.''

''ஏமாத்தக்கூட?''

''அட போம் புள்ளே! நீயும் உன் வெட்டிப் பேச்சும்! நாறு ஏமார்றவன்? என்னை ஏமாத்த உன்னுலேயும் முடியாது, உன் வாப்பாவாலேயும் முடியாது'' என்று சொல்லிக் கலகல வென்று உரக்கச் சிரித்தான் காசீம். அவள் வாப்பாவின் ஞாபகம் வந்ததும். ''இதை வுட்டுத் தள்ளு, கதீஜா! நம்ப சங்கதி உன் வாப்பா காதுலே போட்டு வச்சியா?'' என்று குரலைத் தாழ்த்திக் கேட்டான்.

''அது என்னுங்க தலைபோற சங்கதி?'' என்றுள், வெடுக்கென்று உதடுகளைப் பிதுக்கியவண்ணம்.

''பாத்தியா, குணத்தைக் காட்றியெ! இந்தாம் புள்ளே நீயே சொல்லு. எத்தனை நாளு ஊருக்குப் பயந்து ஓடி ஒளிஞ்சு, தவக்களே மாதிரி இப்படியே காலத்தைத் தள்ளணும்? ரம்ஜான் போய் ரம்ஜான் வந்துடுச்சு. ஷவ்வால் மாசத்திலேயாவது காரியத்தெ முடிச்சுடச் சொல்லி உன் வாப்பா காதுலே ஒரு வார்த்தை போட்டு வையேன். நிக்காஹ் ஆயி, உன் களுத்துலே ஒரு கருவமணி வுளுந்துட்டா அப்புறம் நம்ப பாடு ஜல்ஸாதான்'' என்று காசீம் சொல்லி முடித்தான் மிக்க உணர்ச்சியுடன்.

வெட்கம் உடலை வருத்த மௌனமாக நின்றுகொண்டிருந்தாள் கதீஜா. தாவணியின் தலைப்பைச் சுற்றிக் கொண்டு விஷமம் செய்துகொண் டிருந்தது அவள் சுண்டு விரல்.

''கதீஜா, சொல்லேன் மனசில் இருக்கிறதை'' என்றுன் காசீம், சற்றுப் பொறுமை இழந்தவனுய்.

"ஏன் இப்படிச் சண்டிக்குருதே மாதிரி குதிக்கி றீங்க?"

"என் மனசு துடிக்குது!" தீ மிதித்தவன்போல் காணப்பட்டான் அவன்.

"உங்களைப் பாக்கவே எனக்கு 'காப்ரா' வா இருக்கு. குஷ்திப் பயில்வான் மாதிரி இருக்கீங்க. உங்களைக் கட்டிக் கிட்டா...என் குலையே நடுங்குது!"

"ஏன் இந்த வெட்டிப் பேச்சு? நான் வேணுமா, வேணுமா? ஒரே பேச்சுலே சொல்லிடு."

"அட அல்லாவே! இப்படி ஜல்தி பண்ணு நான் என்ன செய்வேன்! உங்களுக்கு ஒண்ணு குடுத்துட்டு அப் புறம் ஜவாப் சொல்ல இருக்கேன்."

"கொடுக்கிறதை இப்பவே குடுத்துடு."

"என்ன கொடுக்கப் போறேன் தெரியுமா? சூடு!"

"சூடா! நான் மாடுன்னு நெனைச்சுக்கிட்டியா? என் னும் புள்ளே பேத்தறே?"

"உங்களை நல்லா ஏமாத்தி, உங்க கர்வத்தைக் கப்பல் கவுர்ருப்பலே கவுக்கப்போறேன். பாருங்களேன், உங்க கண்ணுலே" என்று சொல்லிவிட்டுச் செப்புக் குடத்தை இடுப்பில் வைத்துக்கொண்டு ஒரு 'தளுக்கு'க் காட்டி விட்டு மடமடவென்று சென்ருள் கதீஜா. காசீமுக்கு ஒன்றும் புரியவில்லை. ஏன் அப்படி அவள் பேசிஞள் என்று புரியாது கலங்கி நின்ருன். செவியில் செருகியிருந்த துண்டுப் பீடியை எடுத்துப் பற்றவைத்துக் காரமான புகையை நெஞ்சு எரியும்படி உள்ளே இழுத்தான்.

மறுநாள் மருண்ட விழிகளுடன் கிணற்றடியில் நின்ற கதீஜாவைக் கண்ட காசீம் கலகலத்துப் போஞன்.

"கதீஜா, என்ன, இன்னைக்கு ஒரு மாதிரியா இருக்கே?" என்று பேச்சைத் தொடங்கிஞன் சஞ்சல உள்ளத்துடன்.

"சொல்லிட்டா உடனே கிளிச்சுடுவீங்க" என்று சள்ளென்று வீழ்ந்தாள் கதீஜா.

"விசயத்தைச் சொல்லேன்" என்றான் தணிந்த குரலில், அவளது திடீர்த் தாக்குதலைச் சமாளித்துக்கொண்டு.

"நேத்து ராத்திரி, பெரிய கூத்து நடந்திடுச்சு. என் உசுரே போயிருக்கணும்! நாகூர் ஆண்டவர்தான் கைகொடுத்தாரு."

"என்ன நடந்திச்சு? அதை முதல்லே சொல்லேன்."

"ராவு எட்டு மணி இருக்கும். நிலா பால் போலக் காஞ்சுச்சு. விராலு மீனு இரண்டு வாப்பா கொண்டாந்திருந்தாரு. அதைக் கழுவத் தண்ணியில்லேன்னு குடத்தை எடுத்துக்கிட்டுத் தன்னந் தனியா இங்கே வந்தேன். நீங்க அப்போ இல்லே. அந்தக் கொய்யா மரத்துக்கிட்ட வந்துட்டு இருந்தேன். "ஏ குட்டி, எங்கே போறே?'ன்னு மரத்துமேலேந்து ஏதோ கூப்பிட்டுச்சு. அங்கே திரும்பிப் பார்த்தா, என்ன சொல்லுவேன்! ஒரு குட்டிச் சைத்தான் கால்மேலே காலு போட்டுக்கிட்டு அந்தக் கிளையிலே உக்காந்திருந்துச்சு!"

"அப்புறம்!" காசீம் வாயைப் பிளந்தவண்ணம் அசைவற்று நின்றான்.

"அது தாடியை உருவிக்கிட்டு என்னைப் பார்த்துச் சிரிச்சுச்சு. குடத்தைத் தொபக்குன்னு கீழே போட்டுட்டு, அல்லா அல்லான்னு உசுரைப் புடிச்சுக்கிட்டு ஓடிட்டேன்!" என்று சொல்லி முடித்துக் கைகளை உதறிக்கொண்டாள் கதீஜா.

"நீ சொல்றது தமாஷாவா இருக்கு. குட்டிச் சைத்தான், தாடி உருவுச்சு, உன்னைக் கூப்பிட்டுச்சு! நானும் பொறந்த மூத இங்கேதான் இருக்கேன். அப்படி ஒண்ணும் நான் பாக்கவுமில்லே; கேட்கவுமில்லே" என்றான் காசீம், வியப்பும் சந்தேகமும் கலந்த தொனியில்.

"நான் சொல்றது பொய்யினு நினைச்சுட்டீங்களா? இதோ பாருங்களேன், குடங்கூட நசுங்கியிருக்கு!" என்று சொல்லி, குடத்தில் இருந்த சொட்டையைச் சுட்டிக் காட்டிவிட்டு, "அந்தக் கொய்யாமரங் கிட்டக்கூடப் போவாதீங்க, சொல்லிட்டேன்!" என்று எச்சரித்தாள். ஏதாவது குரங்கையோ கோட்டானையோ கண்டு கதீஜா பயந்திருக்க வேண்டுமென்று எண்ணினான் காசீம். கொய்யா மரத்திடம் சென்று அவள் சுட்டிக் காட்டிய கிளையின்மீது ஏறி, இரண்டு கொய்யாக் கனிகளைப் பறித்து வந்து அவள் வாயில் திணிகக வேண்டுமென்று உள்ளூறத் தீர்மானித்து லேசாகச் சிரித்துக்கொண்டான்.

"சரி, நீ இங்கேயே இரு. அந்தக் குட்டிச் சைத்தானைப் பிடித்துத் தரதரன்னு இளுத்துக்கிட்டு உன் முன்னாலே கொண்டு வர்றேன்" என்று சொல்லிக் கொய்யா மரத்தை நோக்கி வீறுப்புடன் நடந்தான். மரத்தை நெருங்கியவுடன் எதிர்பாராத விதமாக, வாதுமை இலைகளினால் நேர்த்தியாக மூடி வைக்கப்பட்ட பள்ளத் தில் தடாலென்று வீழ்ந்தான். கலகலவென்று உரக்கச் சிரித்த கதீஜாவைக் கண்டதும் அவன் முகம் குபீ ரென்று அவமானத்தினால் வெளுத்துவிட்டது. ஒருவாறு சமாளித்துக்கொண்டு எழுந்து கதீஜாவை நோக்கி வேக மாகச் சென்றான். கதீஜா அவ்விடத்தை விட்டு ஓட, அவன் துரத்த, இறுதியில் கதீஜாவின் தாவணியின் தலைப்பு அவன் கையில் சிக்கிக்கொண்டது. மறுகணத் தில் அவன் அணைப்பில் சிக்கிக்கொண்டு தத்தளித்தாள் கதீஜா.

"வேடிக்கையா பண்றே?" என்று சொல்லி அவள் கன்னங்களையும் காதுகளையும் மனங்குளிர நன்றாகத் திருகினான்.

"குளிதோண்டி வஸ்தாத் இந்தக் குட்டியிடம் ஏமாந் துட்டாரா இல்லையா?" என்று இடித்துக் கூறி உரக்கச் சிரித்தாள் கதீஜா.

"நீ செஞ்ச வேலேதானு இது?" என்று சொல்லிக் கொண்டே பிடியைச் சற்று இறுக்கினுன். வலி பொறுக் காமல் கதறினுள் கதீஜா.

"அதெல்லாம் நடக்காது. நீ என்னேக் கட்டிக்கி றேன்னு சொன்னுத்தான் நான் வுடுவேன். சொல்லு, சொல்லு" என்று சொல்லிக்கொண்டே அணைப்பை ஆலிங்கனமாக மாற்றிவிட்டான் காசீம்.

"கட்டிக்கிறேன்; கட்டிக்கிறேன்; சம்மதம்" என்று லஜ்ஜையும் வலியும் தாங்காமல் கதீஜா சொன்ன பிறகு தான் அந்தப் புலியிடமிருந்து அந்த ஆட்டுக்குட்டி பிழைத் தது.

* * *

அந்த ஒரு சம்பவம் அவன் இருதயத்தில் நிலேத்து நின்றது. நெடுமூச்சு உடலே உலுக்கிக்கொண்டு வெளிக் கிளம்பியது. கண்களே மெல்லத் திறந்தாள் அவள். சுற் றிலும் பார்வையைச் செலுத்திவிட்டுச் சோகமே உரு வெடுத்தாற்போல் வீற்றிருந்த தன் கணவனே அன்புடன் பார்த்தாள்.

"நீங்க இங்கேதான் இருக்கிறீங்களா?" என்றுள் நீண்ட பெருமூச்சு விட்டுக்கொண்டு.

"ஆமாம், கதீஜா. நீ பேசி உடம்பை அலட்டிக் காதே" என்று பதிலளித்துவிட்டுக் கண் இமைகளே மூடிக் கொண்டான்.

"எப்பவோ நடந்த சங்கதி. ஒண்ணு வுடாமே கனுப்போல என் நினேவுக்கு வந்திச்சு" என்றுள் கதீஜா, அவனே உற்றுப் பார்த்துக்கொண்டு.

காசீம் மௌனம் சாதித்தான்.

மேலும் தொடர்ந்தாள் கதீஜா: "குளியிலே தள்ளி உங்களே ஏமாத்தினேனே அந்தக் காலத்திலே, ஞாபகம்

இருக்கா? அப்போ நடந்த அந்தக் கதை இப்போ நடக்கிருப்பலே என் மனசுலே தெரிஞ்சுச்சு.''

இதைக் கேட்டதும் காசிமுக்குத் தூக்கி வாரிப்போட்டது. அவன் தன் செவிகளை நம்ப முடியவில்லை.

''அட! கொய்யா மரத்துக் குளியைப் பத்தியா பேசுறே நீ?'' என்றான் விழிகள் வெளியே வந்துவிடும்படி.

''ஆமாங்க. அதுதான்'' என்றாள் அவள் சாந்தமாக, லேசான புன்முறுவல் அதரங்களில் தவழ.

''கதீஜா, அதைத்தான் இப்போது நான் நினைச்சுட்டிருந்தேன். நீயுமா......!''

''உங்க மனசும் என் மனசும் ஒண்ணு இல்லியா? இத்தனை வருசம் கூடியிருந்து இது உங்களுக்குத் தெரியல்லே?''

'எத்தகைய உண்மை அது!' என்று எண்ணினான் காசீம். அவன் கன்னங்களை ஆசையுடன் வருடினாள் கதீஜா.

''உங்க கிட்ட ரொம்ப நாளா ஒண்ணு சொல்லணும்னு ஆசை இருக்கு.''

''சொல்லு, கதீஜா'' என்றான் பாசம் பொங்க.

''அந்த ஆசையை நீங்க பூர்த்தி செஞ்சுடணும்; செய்றீங்களா?'' என்றாள் ஆவல் நிறைந்தவளாய்.

''கட்டாயம் செய்வேன். எப்பனாச்சும் மறுத்தேனா?''

''நான் என் மனசுலே இருக்கிறதைச் சொன்னா உங்களுக்குப் பிடிக்காது. இருந்தாலும் நான் சொல்லத்தான் போறேன். என் நாளு கிட்ட வந்திடுச்சு. இனிமே நான் பொழைக்கமாட்டேன். இது நிசம்.''

''இந்த மாதிரி பேசாதே, கதீஜா!''

''உங்களுக்கு என்னா தெரியும்? என் நேரம் எனக்காக வாசல்லே காத்துக்கிட்டுக் கிடக்கு.''

"சும்மா இப்படிப் பேசி என் மனசை வாட்டாதே. உன் ஆசையைச் சொல்லு."

"இதோ வந்துட்டேன். உங்களை ஏமாத்தி, பள்ளத்திலே தள்ளி, வேடிக்கை பண்ணித்தானே நான் நிக்காஹ் பண்ணிக்கிட்டேன்? இல்லியா?"

"அதுக்கு இப்போ என்னு?"

"சொல்றேன், இருங்க. என்னைப்போலவே நீங்களும் ஒண்ணு செஞ்சுடணும். அது நீங்க பண்ணிட்டா என் உசுரு நிம்மதியாப் போயிடும்."

"சொல்லு, கதீஜா" என்ருன் அவன் தழுதழுத்த குரலில்.

"உங்க கையாலேயே நல்ல குளி ஒண்ணு தோண்டி, அதிலே உங்க கையாலேயே என்னைப் புதைச்சுடுங்க மாட்டேன்னு சொல்லாதீங்க. இந்த ஆசை ரொம்ப நாளா என் மனசிலே இருக்கு."

கதீஜாவின் சொற்கள் காசிமின் இருதயத்தைத் துளைத்துவிட்டன.

"கதீஜா, நான் என்னத்தைச் சொல்லப் போறேன்?" என்று ஜீவனற்ற தொனியில் சொல்லி, "கதீஜா, நீ என்னை விட்டுட்டுப் போயிட்டா என்னை யார் கவனிக்கப் போருங்க? என்னைத் தவிக்க விட்டுட்டுப் போகாதே கதீஜா. என்னையும் உன் கூடவே அழைச்சிட்டுப் போயிடு" என்று அலறினன்.

கதீஜா மிகுந்த கனிவுடன், "நேரத்தைக் கழிக்காதீங்க. சட்டுனு போய் நான் சொன்ன வேலையைப் பாருங்க. இப்பவே நீங்க குழி தோண்ட ஆரம்பிச்சாத்தான் நல்லது. என் உசுரு போன அப்புறம் நீங்க ஒண்ணும் பண்ணமாட்டீங்கன்னு எனக்குத் தெரியும். உங்க மனசு ஒத்துக்காது. சீக்கிரம் கிளம்புங்க. என் ஆசையைப் பூர்த்தி செஞ்சுடுங்க. என்னை இந்தக் கடைசி நேரத்திலே ஏமாத்திடாதீங்க" என்று சற்று ஆவேசத்துடன் அவன் கரங்களைப் பற்றிக்கொண்டு குலுக்கினுள்.

அவள் சிரம் அவன் மடியிலிருந்து நழுவி ஓலைப்பாயில் சறுக்கி வீழ்ந்தது.

எழுந்து நின்றான் காசீம். கதீஜாவின் முகத்தை வெறித்துப் பார்த்தான். பரணில் கிடந்த துண்டை அவள்மீது போர்த்தினான். மண் வெட்டியைத் தோளில் எடுத்து வைத்துக்கொண்டான். குடிசையை விட்டு வெளியே வந்தான். கொய்யா மரத்தை நோக்கித் தள்ளாடியவண்ணம் சென்றான். எந்த இடத்தில் ஒரு காலத்தில் தன் காதலியினால் ஏமாற்றப்பட்டுப் பள்ளத்தில் வீழ்ந்தானோ, எந்த இடத்தில் அவள் உள்ளத்தைக் கவர்ந்து சம்மதத்தைப் பெற்றானோ அதே இடத்தில் அவன் நடை நின்றது. மண் வெட்டியை உயரே தூக்கி, "யா அல்லா!" என்று உரக்கக் கத்தித் தரையில் வீழ்த்தினான். அவன் கரங்களும் கண்களும் அந்தப் பணியில் ஈடுபட, அவன் உள்ளத்தில் சிந்தனை மேகங்கள் திரள ஆரம்பித்தன. 'முப்பது வருஷங்களாக இன்னல்களிலும் இன்பங்களிலும் பங்கெடுத்துக்கொண்டு, கனிமொழிகளுடனும் சிரித்த முகத்துடனும் இல்வாழ்க்கை நடத்திய தன் துணைவியைத் தன் கைகளினாலேயே குழி தோண்டி அடக்கம் செய்யும்படி விதி நிர்ணயித்துவிட்டதே!' என்று அவன் எண்ணியதும் 'ஓ' என்று கதறினான். மண் வெட்டி அவன் பிடியிலிருந்து நழுவித் தரையில் வீழ்ந்தது. நூற்றுக்கணக்கான சவங்களைப் புதைத்த அவனுக்கு அப்பொழுதுதான் மரணத்தின் கொடூரம் புலனாயிற்று. குழி குழியாக வெட்டிப் பிணம் பிணமாகப் புதைத்து வாழ்நாளில் ஒரு தடவையாவது அழாத கண்கள் அந்த ஒரு கணத்தில் அழுதுவிட்டன. அவன் விழிகள் சுழன்றன. பெருத்த ஓசையோடு சண்டமாருதம் தன் முன் உருவாகி அவ்விடத்தைக் காரிருளாகச் செய்வதுபோல் அவனுக்குத் தோன்றிற்று. அங்கு நின்ற மரங்கள், சமாதிகள் கல்லறைகள் யாவும் அந்தச் சண்டமாருதத்தில் நிலை பெயர்ந்து கவிழ்வனபோல் அவனுக்குப் பட்டது. அவன் உடல் முழுவதும் வேர்த்துவிட்டது. படபடக்கும் மார்பைக் கைகளினால் இறுக அழுத்திக்கொண்டு தன் குடிசையை நோக்கினான். ஒளி மிகுந்த சுடரொன்று

குடிசையிலிருந்து வெளிக்கிளம்பி, ஒற்றையடிப் பாதையில் நெளிந்து சென்று, கிணற்றைச் சுற்றிவிட்டுச் செல்வதைக் காண்பதுபோல் ஒரு பிரமை அவனுக்கு ஏற்பட்டது. அதைத் தொடர்ந்து செல்ல அவன் யத்தனித்ததும் அவன் கால்கள் தடுமாறின. தரையில் வீழ்ந்தான். மண்ணில் சாய்ந்த அவன் அதற்கே உரியவனுகி, 'மௌத்' என்ற மீளா நித்திரையில் ஆழ்ந்துவிட்டான்.

லைலா மஜ்னூ, ஷீரீன் பர்ஹாத் கவிஞர்களின் கற்பனைக்குக் கருவூலங்களாக அமைந்துவிட்டார்கள். அதே பிரிவில் கலந்த இந்தக் காதலர்களின் கரடுமுரடான இரண்டு கல்லறைகள் எவரும் கேட்பாரற்றுக்காலத்தைக் கடந்து நின்றன!

# நஜ்மா நாடிய பாதை

"நான் என்ன பண்ணுவேன் மஸ்தான்? தலையை முட்டிக்கிட்டு அண்ணனிடம் எவ்வளவோ மாரடிச்சுப் பார்த்துட்டேன். தலையெழுத்து இப்படிக் குதியாட்டம் போட்டுடுச்சே!" என்று அங்கலாய்த்தாள் பாத்திமா. நீர் முட்டி நின்ற விழிகளை மைந்தனின் சாந்தம் பொலியும் வதனத்தின்மீது ஓட்டியதும், நீர்த் திவலைகள் சிதறி, சுருக்கங்கள் படிந்த கன்னங்களில் உருண்டோடின.

"இது விதி செஞ்ச தமாஷா என்று நினைக்காதே, அம்மா. பெண்ணாகப் பிறந்த ஜீவன்களைச் சொக்கட்டான் காய்களாக மாற்றி இந்தத் துனியாவில் மனித குலம் ஆடும் சூதாட்டம், அம்மா!" என்றான் மஸ்தான் மனமொடிந்தவனாய். தலையை இறுகப் பிடித்துக்கொண்டு அவ்விடத்தை விட்டு நீங்கி வெளிவாசலுக்குச் சென்றான். திண்ணையில் அமர்ந்துகொண்டு ஜலப்பிரளயம்போல் கண்ணீர் வடித்தான்.

சுருட்டு வியாபாரியான யூசுப் ராவுத்தர் பெற்றெடுத்த பொற்கொடியைத் தாங்கிக்கொள்ள இரு கொழு கொம்புகள் வாட்ட சாட்டமாக வளர்ந்து நின்றதைக் கொடிக்கால் பாளையத்து வாசிகள் கவனித்து வந்தார்கள். ஒருவன் மஸ்தான். மற்றவன் ரஹமத்துல்லா.

ராவுத்தரின் தங்கை மகன் மஸ்தான். நற்குணங்கள் வாய்ந்த நல்ல திடகாத்திரமான ஜவான். மூன்றும் படிவம் வரை படித்தவன். பீடியோ, சுருட்டோ, ரேக்கோ

அவன் சுருள் விட்டதை யாரும் பார்த்ததில்லை. இவனுக்கு முற்றும் மாறுபட்டவன் யூசுப் ராவுத்தரின் மைத்துனன் மகன் ரஹமத்துல்லா. உள்ளூர் மாத்திரமல்ல; சுற்று வட்டாரங்களில்கூட ஏதாவது கலாட்டாவும் சச்சரவும் நிகழுமானால், அங்கே ரஹமத்துல்லா தரிசனமளிப்பான் என்பது எல்லாரும் அறிந்த விஷயமாகும்.

நஜ்மாவின் தளிர்க் கரத்தைக் கைப்பற்ற ரஹமத்துல்லாவுக்குத் துணிச்சல் உண்டானதற்கு ஒரே காரணம் தன் அத்தையிடம் அவன் செலுத்திய செல்வாக்குத்தான். குடும்ப விவகாரங்களில் யூசுப் ராவுத்தர் தஞ்சாவூர்த் தலையாட்டிப் பொம்மை என்றும், தர்பார் நடத்திச் 'சட்டங்'களை அமலாக்குவது அத்தை ஒருத்திதான் என்றும் அவன் பல வருஷங்களுக்கு முன்பே தெரிந்துகொண்டான். அத்தைக்குப் பிரியமான பன்னீர்க் கொய்யாப் பழங்களையும், கும்பகோணம் வெற்றிலையையும் வீட்டிற்கு விஜயம் செய்யும்போதெல்லாம் கொண்டுவந்து அன்புக் காணிக்கைகளாக அளித்து, காத்தூன் பீயின் அபிமானத்தையும் நம்பிக்கையையும் அடைவதில் 'பிறைக்கொடி' நாட்டிவிட்டான் அந்தக் கில்லாடிப் பயல்!

"என்னுங்க, பாக்கு வெட்டி வேணுமா?" என்று காத்தூன் பீ மிக்க பரிவுடன் பீடிகை போட்டாள். அந்தச் சமயத்தில் யூசுப் ராவுத்தரின் மிஞ்சிப் போன கடைப் பற்கள் கொட்டைப் பாக்குடன் யுத்தத்தில் ஈடுபட்டு அதைத் துவம்சம் செய்துவிடக் குஸ்தி போட்டுக் கொண்டிருந்தன.

"வேணும். சுண்ணும்புக் குவளையை எடுத்துவை" என்றார் ராவுத்தர்.

வெற்றிலைக் காம்பை ஒழுங்காகக் கிள்ளி, அதை மடித்து நாக்கில் லாகவமாகக் கொடுத்து உள்ளுக்குள் தள்ளி, ராவுத்தர் சப்புக் கொட்டிய அந்தச் சிறந்த சுப வேளையில், "என்னுங்க இது, உங்க தமாஷா! நீங்க பாட்டுக்குக் காசுக்கு உதவாத கூட்டாளிங்களோடு திரிஞ்சுட்டு இருந்தா, பனைமரம் மாதிரி வளர்ந்த நம்ம நஜ்மாவை

என்னதான் செய்ய நினைச்சிருக்கீங்க?" என்று காத்தூன் பீ கறுவியதும், ராவுத்தருக்குத் திக்கென்றது.

"நான் சும்மாஞச்சும் நேரத்தை வெட்டிக்குக் கழிக்கிறேன்னு நினைச்சுக்காதே. நல்ல இடமாப் பாத்துத்தான் வெயில்லே அலையறேன்."

"கையிலே கெளுத்தி மீன் வச்சுக்கிட்டு ஆணத்திற்குக் கத்திரிக்காயைத் தேடி அலைஞ்சாளாம். அப்படித்தான் இருக்கு உங்க கதை."

ராவுத்தரின் உதடுகள் விரிவதற்குள் மேலும் தொடர்ந்தாள்: "உங்க சோம்பலைப் பார்த்து அலுத்துப் போய் நானே இந்த விஷயத்திலே குதிச்சுட்டேன். பேச்சு வார்த்தையும் நடத்தி முடிச்சுட்டேன்!"

"என்ன சொன்னே?" – ராவுத்தரின் தலை கிறுகிறுத்தது.

"நீங்க 'பொவிலே' வாங்க அறந்தாங்கிக்குப் போன வேளையிலே என் அண்ணன் இங்கே ஒரு நாள் வந்துட்டுப் போச்சு."

"அப்படியா?"

"ஆமாங்க. மெத்தைப் பாய், அஞ்சறைப் பெட்டி, தாழாம் பெட்டி நிறைய அச்சுப் பணியாரமும் கொய்யாப் பழமும், வாத்து முட்டையும் கொண்டு வந்து கொடுத்துச்சு."

"அப்புறம்?"

"நம்ம நஜ்மாவைப் பத்தி அதுக்குச் சொல்ல முடியாத கவலை. உங்களுக்குக்கூட அவ்வளவு இல்லைன்னு சொல்வேன். மேல் விசயத்தை யெல்லாம் பேசி முடிச்சுட்டு, 'புள்ளேயின் நிக்காஹ்வை சட்டுப்புட்னு முடிச்சுடு, காத்தூன்' என்று தாக்கீது கொடுத்துப் போச்சு."

"மாப்பிள்ளை யாராம்?"

"இது என்னுங்க புதுசாக் கேக்கிறீங்க? நம்ம ரஹமத்துல்லாதான்!"

"உன் அண்ணன் மவனு!" - ராவுத்தருக்குத் தூக்கி வாரிப் போட்டது.

"அந்த உறவுகூட அதுக்குள்ளாற மறந்துட்டீங்களே!"

"அந்தக் கேப்மாரி, பேமானி, ஹராமியா உன் மகளைக் கட்டப் போகிறவன்?"—குமுறினார் யூசுப் ராவுத்தார்.

"ஏங்க தாறுமாறாக வாய் போனபடி உதட்டைச் சுளிச்சுச் சுளிச்சுப் பேசுறீங்க? நாம் சுகமாயிருக்கோம்னு உங்க சொந்தக்காரங்களுக்குப் பொறுக்கமாட்டேன் கிறது. அதுவும் உங்க தங்கச்சி இருக்கே, உம்மாடீ! என் மேலேயும் சரி, என் அண்ணன் மேலேயும் சரி, என் குடும்பத்து மேலும் சரி, பொறுமையாலே வயிறு எரிஞ்சு என்ன என்னமோ கதையெல்லாம் கட்டி எங் கெங்கேயோ பேசிக்கிட்டுத் திரியுது. நம்ம ரஹமத்துல்லா வுக்கு என்ன குறைச்சலாம்? ஆறுவேலி நிலம் இல்லையா? தோப்பிலிருந்து முந்நூறு தேங்காய் வரலியா? குளம் குட்டை குத்தகைக்கு எடுத்து மீன் பிடிச்சு லாபம் அடிக்கிலியா?"

"காத்தூன், போதும் புள்ளே. அந்தப் பேச்சு வேணும்" என்றார் ராவுத்தர் பொறுமை இழந்தவராய்.

"எனக்குத் தெரியுமே உங்க பகல் வேஷம்! அந்தத் தடிப்புள்ளே உங்க தங்கச்சி மவனை மனசிலே வச்சிக் கிட்டு, சைத்தான் மாதிரி பேயாட்டம் ஆடுறிங்க."

"அவனும் வேணும், இவனும் வேணும்!"—ராவுத்தர் எரிச்சலுடன் சீறிவிட்டு இடியாப்பத் தட்டைப் போன்ற வெண்மை நிற வலைத் தொப்பியைத் தரையில் ஓங்கி அடித்தார்.

வழக்கம்போல் எதிர்த் தாக்குதலை ஆரம்பிக்கக் காத்தூன் பீ தயங்கவில்லை.

"சரிங்க. சொல்லிப்புட்டேன். அந்த ரஹமத்துல்லா வுக்கு நஜ்மாவைக் கொடுக்காட்டிப்போனா நானே அந்தக்

குட்டியைத் தரதரன்னு இளுத்துட்டுப் போய்க் குட்டையிலே தள்ளிடப் போறேன். அப்புறம் உங்களுக்கும் எனக்கும் அறுந்துபோச்சுன்னுநினைச்சுக்குங்கோ''–கர்ஜித்தாள் அந்த அடங்காப் பிடாரி!

தம் அருமைத் துணைவியின் எண்ணத்தை மாற்ற முடியாத துடைநடுங்கி யூசுப் ராவுத்தர் இந்தக் கிடுக்கித் தாக்குதலுக்குப் பின் உடல் நடுங்கிக் 'குடாக்'காக மாறி விட்டார்!

புழைக்கடைப் பக்கம் நீர் முட்டி நின்ற நயனங்களுடன் சகடையில் தாம்புக் கயிற்றைத் திணித்த வண்ணம் கிணற்றிடம் நின்றுகொண் டிருந்தாள் நஜ்மா.

''நஜ்மா!'' என்ற ஜீவனற்ற ஹீனக் குரலைச் செவிமடுத்துச் சிரத்தையின்றிக் கழுத்தைத் திருப்பினாள். தன் மருங்கிலே மஸ்தான் நிற்பதைக் கண்டதும் அவள் உடலின் உதிர ஓட்டம் உறைந்துவிட்டது.

''விஷயம் காதில் விழுந்தது, நஜ்மா'' என்று மஸ்தான் நடுங்கிய குரலில் நவின்றவுடன் அந்தக் காரிகையின் கயல்விழிகளில் தத்தளித்த நீர் கன்னங்களில் சிந்தி உருண்டோடியது.

''நான் என்ன செய்வேன்? பெண்ணாக இந்த உலகத்திலே தலை காட்டிவிட்டால் இரண்டு உதடுகளையும் ஒன்று சேர்த்துத் தைச்சுடுறாங்களே இந்த மனித சாதி!''–விம்மலுக்கிடையே மேலும் ஆர்ப்பரித்தாள் ; ''இத்தனை நாளா ராவும் பகலும் அழுது அழுது என் கண்கள் அவிஞ்சு போச்சு, மஸ்தான். என் நெஞ்சிலே கொழுந்து விட்டெரிந்த பிரேமையை அம்மாவின் காதிலே நான் போட்டதன் பலன் என் கன்னங்கள் தடிச்சுப் போச்சு. என் எண்ணமும் எரிஞ்சு சாம்பலாயிடுச்சு.?'' இருதயத்தைக் கீறிக்கொண்டு எழுந்த அவள் ஓலம் மஸ்தானை ஆட்டிவிட்டது.

''மனத்தை அலட்டிக்காதே, நஜ்மா. வாழ்க்கையைத் தன் இஷ்டம்போல் ஆட்டி வைக்கும் விதிக்கு முன் நீயும்

நானும் என்ன செய்ய முடியும்? எனக்கு ஒன்றும் கவலை இல்லை. ஆனால் உனக்கு வரப் போகிறவனை நினைத்தால் ஏக்கம் என் இருதயத்தை ரம்பம்போல் அறுக்குது, நஜ்மா. ஜவந்திப் பூப்போன்ற உன்னை ஒரு முரடனிடம் ஏன் உன் வாப்பா ஒப்படைக்கப் போருரோ? இந்த ஏழையால் என்ன உதவி செய்ய முடியும்? நஜ்மா! என் ஆசை நஜ்மா!'' என்று மிக்க உணர்ச்சியுடன் சொல்லி, தன் முன் நிற்பவளின் தோள்களின்மீது கைகளை வீசி இறுக அணைத்துக்கொண்டு கண்ணீர், சாரல் சாரலாகப் பொழிந்தான் மனமொடிந்த அத்தை மகன்.

''எல்லாம் குழப்பமாயிருக்கு. எனக்கு ஒன்றுமே புரியவில்லை.''—கைகளைப் பிசைந்துகொண்டு விசித்து விசித்து விம்மினுள் நஜ்மா.

''இதுதான் நம் கடைசிச் சந்திப்பு! இத்தனை வருஷங்களாக நமக்குள் வளர்ந்த அன்பையும் காதலையும் சாட்சிகளாகக் கவனித்த இந்தக் கிணற்றுச் சுவர் இனிமேல் இடிந்து விழுந்துவிடும்; அந்தப் பூவரச மரம் ஒடிந்து மடிந்துவிடும்; உன் மனசிலே நிலைத்து நின்ற என் உருவங்கூட உருக் குலைந்து அழிந்துவிடும், நஜ்மா!'' - நாத் தழுதழுக்கச் சொல்லி, காதலியின் கொய்யாக் கன்னங்களை ஆசையுடன் தடவினுன் மஸ்தான்.

''நான் சொல்வதைக் கேட்பீங்களா?'' என்ருள் நஜ்மா கம்மிய குரலில்.

''சொல், என் ஆசைக் கிளியே! எது வேண்டுமானுலும்; இந்த அடிமைக்கு உத்தரவு கொடு.''

''உங்கள் வேதனை என்னை வாட்டுது. உங்கள் நிலைமை என்னைப் பைத்தியமாக்குது. என்னை எங்கேயாவது அழைத்துக்கொண்டு போய்விடுங்கள்'' என்று நஜ்மா அவன் கைகளை இறுகப் பற்றிக்கொண்டு மன்ருடியதும், மஸ்தான் மேலும் கலங்கிவிட்டான்.

''உன்னைப் பெற்றவர்களின் ஆசையிலே மண்ணைப் போட்டுவிட்டு என்னுடன் கிளம்பவா போறே, நஜ்மா?

அதைவிடப் பெரிய பாவமும் துரோகமும் இந்த உலகத்தில் இல்லை. வேண்டாம் இந்த எண்ணம்."

நஜ்மா குலுங்கிக் குலுங்கி அழலானாள்.

"ஒன்று மாத்திரம் நிச்சயம், நஜ்மா. என் பாக்கி நாட்களை இப்படியே 'ஒண்டாங்கட்டி'யாகக் கழித்துவிடத் தீர்மானித்து விட்டேன்."

"ஹா!"-வாயை இறுகப் பொத்திக்கொண்டு பேந்தப் பேந்த விழித்தாள் நஜ்மா.

"நீ குடி புகுந்த என் நெஞ்சிலே வேறு எவளுக்கும் இடம் இல்லை. இது நிச்சயம்."

'மஜ்னூ', தன் 'லைலா'விடம் விடை பெற்றுக் கொண்டு நேத்திரங்களிலே நீர் கொப்பளிக்க, நெஞ்சிலே நெருப்புக் கொழுந்துவிட்டெரிய மறைந்தபின் ஒரு மாதம் சோகத்துடன் மாண்டுவிட்டது.

தஞ்சாவூர் ஞானமணி பாண்டு ஜாம் ஜாமென்று முழங்க, மாலையில் நாகூர் 'இசைத்தேனீ' மஜீதின் இஸ்லாமிய 'கவ்வாலி' கீதங்கள் சக்கைபோடு போட யூசுப் ராவுத்தரின் செல்வி நஜ்மாவுக்கும் விற்கொடி ஜனுப் க.த. த.ப. ரஹமத்துல்லாவுக்கும் அல்லாஹு-த்தாலாவின் பேரருளால் நிக்காஹ் நிறைவேறியது.

திருமணம் ஆகி இரண்டு வாரங்களுக்குள் யாதொரு முன்னறிவிப்புமின்றித் திடீரென்று தன் இல்லத்திற்கு மணமகள் திரும்பி வந்ததைக் கண்டதும் யூசுப் ராவுத்தருக்குச் சொரேலென்றது.

"என்னம்மா, நஜ்மா? இப்படித் திடுதிப்புனு சொல்லிக்கொள்ளாமல் வந்துட்டே? கன்னம் ஏன் அப்படி உப்பியிருக்கு? பொன்னுக்கு வீங்கிபோல் இருக்கு" என்று மகளின் கன்னங்களைப் பாசத்துடன் ராவுத்தர் தடவிக் கொடுத்ததும், தாவணியின் தலைப்பினால் தன் முகத்தை மறைத்துக்கொண்டு விம்மினாள் நஜ்மா.

''கன்னம் மாத்திரமல்ல, வாப்பா. இரண்டு பல்லை யும் தட்டி எடுத்துக்கிட்டுத்தான் என்னை அவர் அனுப்பி ஞரு'' என்று நாத் தழுதழுக்க நஜ்மா சொன்னதும் தந் தையின் கண்கள் குளங்களாக மாறின. நெற்றியை இறு கப் பிடித்துக்கொண்டு வெளித் திண்ணையில் அசந்து உட் கார்ந்துவிட்டார்.

இந்தச் சம்பவம் நடந்த மூன்று மாதங்களுக்குப் பிறகு மறுமுறை நஜ்மா விஜயம் செய்தபோது, அவள் தோற் றத்தைக் கண்டு பெற்ரோர் வெலவெலத்துப் போனார்கள். மகளின் செவிகளைச் சிங்காரித்திருந்த அரச இலை வாளி கள் காணவில்லை. கழுத்தில் மின்னிக்கொண் டிருந்த அகத்திக்காய்ச்சுவடி மாலையும், காசுமாலையும் மறைந்து விட்டதைக் கண்டதும் காத்தூன் பீயின் நெஞ்சு பகீ ரென்றது.

''அம்மா, என்னை ஒரு பாறுங்கல்லோடு கட்டிப் பாழுங் கிணற்றிலாவது நீங்க தள்ளியிருக்கக் கூடாதா?'' என்ற ஆவேசத்துடன் ஆர்ப்பரித்துத் தாயை இறுகக் கட்டிக்கொண்டு கதறினாள் நஜ்மா.

ஒரு வருஷம் கழிந்தபின் நஜ்மா திரும்பியபோது ஓர் பயங்கரச் செய்தியுடன் வந்து சேர்ந்தாள்.

''அவர் அக்கரைக்குப் போறாராம்'' என்ருள் நஜ்மா. தலையைக் கவிழ்த்துக்கொண்டு.

''போய்த் தொலையட்டும்'' என்ருர் யூசுப் ராவுத்தர். எரிச்சலும் வெறுப்பும் அவர் தொனியில் தாண்டவ மாடின.

''நானும் கூட வரணுமாம்; அவர் தாக்கீது கொடுத்து விட்டார்.''

இதைக் கேட்டதும் ராவுத்தருக்குத் தூக்கி வாரிப் போட்டது.

''நீ எதற்காம்?''

''அவருக்குச் சோறு ஆக்கிப்போட.''

"போட்ட நகைநட்டுகளை நாசமாக்கிவிட்டு, கொடுத்த சீர் வரிசைகளை அடகு வச்சு, 'பஞ'வாக்கிவிட்டு, இப்போ இந்தச் சீமையிலே செஞ்ச அக்கிரமம் போதாதுன்னு அங்கே அழைத்துப் போய் அறைகளும் உதைகளும் கொடுக்க அந்தப் படுபாவி உன்னைக் கூப்பிடுகிறானா?"

"அவர் குணத்தைப் பார்த்து என் நாக்குப் புரளக்கூட மாட்டேங்குது. நான் அவரோடு ஒரு நிமிசம் இல்லாட்டிப் போனால் அவர் நிலைமை இன்னும் படுமோசமாகி விடும். தலைவிதி காட்டிய வழியிலே நான் போயிடுறேன், வாப்பா. அல்லாவின் அருளினால் திரும்பி ஒருநாள் வராமலா போவேன்?"

மகளை இறுகத் தழுவிக்கொண்டு தாரை தாரையாகக் கண்ணீர் வடித்தார் ராவுத்தர்.

நான்கு வருஷங்கள் உருண்டோடின.

மகளின் பிரிவையும் அவளுடைய கேவலமான இல்லற வாழ்க்கையையும் நினைந்து நினைந்து ஏங்கிய யூசுப் ராவுத்தர் வெகுநாட்கள் இக்குவலயத்தில் இருக்கவில்லை. இறுதி யாத்திரை செய்துவிட்டார்.

கயிற்றுக் கட்டிலில் புற்றுநோயினால் அவதிப்பட்டுப் படுத்த படுக்கையாகக் கிடந்த காத்தூன் பீயின் பஞ்சடைந்த விழிகள் யாரோ ஒருவனை எதிர்பார்த்துக் கொண்டு வாசற் கதவை நோக்கியவண்ணம் சுழன்று கொண்டிருந்தன.

கதவை மெதுவாகத் திறந்துகொண்டே உள்ளே நுழைந்தான் மஸ்தான்.

"வந்தூட்டியா மஸ்தான்!"—அனல்போன்ற நெடுமூச்சு, காத்தூன் பீயின் உடலை உலுக்கிவிட்டு வெளிக் கிளம்பியது.

"தந்தி கிடைச்சவுடனே புறப்பட முடியாமே போச்சு, மாமி. ரெயில் தவறிப்போச்சு. பஸ்ஸிலும் மாட்டு வண்டியிலும் மாறி மாறி ஏறி வந்து சேர்ந்தேன்."

தன் இடுப்பில் செருகியிருந்த கடிதத்தை எடுத்து நீட்டினாள் காத்தூன் பீ. லிகிதத்தின் மடிப்பை மஸ்தான் பிரித்ததைக் கண்ட பிறகு கழுத்தை வேறுபக்கம் திருப்பிப் புரண்டு படுத்தாள்.

கடிதம் பின்வருமாறு :

அன்பார்ந்த அம்மாவுக்கு வணக்கம்.

அல்லாஹுதாலாவின் அருளால் நான் சுகமாயிருக்கிறேன். எவ்வளவோ பாடுபட்டு, பணமென்று பார்க்காமல் தண்ணீர்போல் வாரி இறைத்து என் வாழ்க்கையை மலரச் செய்ய நீங்கள் எடுத்துக்கொண்ட சிரமங்களுக்கு நான் எந்த விதத்தில் நன்றி செலுத்தமுடியும்?

கடல்கடந்து இங்கே வந்து நான்கு வருஷங்களாகியும் அவர் பழைய மனிதராகவே இருந்தார்! வேலைசெய்யும் ரப்பர்த் தோட்டத்திலேயும் தம் தீய வேலைகளைக் காட்ட அவர் தயங்கவில்லை. எப்போது பார்த்தாலும் சீனுக்காரனோடும் மலாய்க்காரனோடும் சண்டைதான். யாரோ ஒரு பாவி அவரைக் குத்தி, உயிரைக் குடித்துவிட்டு, உடலைப் புதருக்குள்ளே மறைத்துவிட்டான். அவரை அடக்கம் செய்து, நாற்பதாவது நாள் பாத்தியாவும் ஓதியாச்சு. குழந்தை குட்டி இல்லாத நான் இந்தப் பாழும் வயிற்றுக்குத் தீனிபோட இங்கேயே தங்கிவிடத் தீர்மானித்துவிட்டேன். உங்களுக்கு நான் எந்த விதத்திலும் தொந்தரவு கொடுக்கமாட்டேன்.

தங்கள்,

நஜ்மா.

(இந்தக் கடிதம் நஜ்மா பீ சொன்னபடியே கெலாங் எஸ்டேட் மானேஜர் க. கா. ச. சா. ஷேக் தம்பி மரக்காயரால் எழுதப்பட்டது.)

கடிதத்தைப் படித்து முடித்ததும் திக்பிரமையுடன் நின்றுவிட்டான் மஸ்தான். கூடத்தில் பரவி நின்ற மயானத்தின் நிச்சப்தத்தை ஊடுருவிக்கொண்டு கிளம்பியது காத்தூன் பீயின் ஹீனக் குரல்.

"நான் பாவி மஸ்தான்! நேருக்கு நேராகப் பார்க்க ஆண்டவன் கண்ணிரண்டும் கொடுத்தும், குருடாகிவிட்டேன். பெற்ற மகளையே சகதியில் தள்ளிய மிருகமான நான் ராவுத்தரையும் நரகத்துக்குச் சீக்கிரம் அனுப்பி விட்டேன்" என்று மிக்க வேதனையுடன் சொல்லிவிட்டு, சப்பியெறிந்த மாங்கொட்டை போன்ற வாடி வதங்கிய தன் முகத்தைப் படார் படாரென்று அடித்துக்கொண்டாள் காத்தூன் பீ. குச்சிபோன்ற அவள் கரங்களை இறுகப் பிடித்துக்கொண்டான் மஸ்தான்.

"நான் இப்போ சொல்லப்போவதை நீ கேப்பியா, மஸ்தான்?"

"சொல்லுங்கோ, மாமி."

"இந்தப் பாவியின் முகத்தில் முழிக்கக் கூடாதுன்னு அந்த அறியாப் பொண்ணு அக்கரையிலே தங்கிடுச்சு. நீ கப்பலேறி அவளை அழைச்சுட்டு வந்துடு."

ஒரு விநாடி மௌனம் சாதித்தான் மஸ்தான்.

"என்ன, சட்டுனு சொல்லேன்."—காத்தூன் பீயின் நெஞ்சு படபடத்தது.

"அப்படியே செய்கிறேன், மாமி."

"அப்படி அந்தக் குட்டி வர இடக்குப் பண்ணினா, கொழுநனைப் பறிகொடுத்த அந்த அபலையை நிக்காஹ் செய்துகொண்டு அங்கேயே தங்கிவிடு, என் கண்ணு!"

மஸ்தான் மலைத்துவிட்டான்.

"சரின்னு சொல்லேன், மஸ்தான்! இந்தக் காதாலே நான் கேட்டுடுறேன்." ஹீனக் குரலில் கெஞ்சினாள் காத்தூன் பீ.

தன் சம்மதத்தின் அறிகுறியாக மஸ்தான் லேசாகத் தன் சிரத்தை அசைத்தவுடன், காத்தூன் பீயின் தலையும் இறுதி அசைவுடன் சாய்ந்துவிட்டது!

**வா**ளி போன்ற தகர டப்பா இடது கரத்தில் தொங்கிக்கொண்டிருக்க, சிறு கத்தியினால் ரப்பர் மரத்தின் பட்டையைச் செதுக்கிக்கொண்டிருந்த நஜ்மாவை எலும்பும் தோலுமாகக் கண்டதும் மஸ்தானின் நாடித் துடிப்பு ஒரு விநாடி நின்றுவிட்டு, மறுபடி அடிக்கத் தொடங்கிற்று. "நஜ்மா" என்று அவளை அழைக்கக்கூட அவனுக்குத் தைரியமில்லாமற் போயிற்று.

"நீங்க எப்படி இவ்வளவு தூரம் வந்துட்டீங்க!" என்றாள் நஜ்மா நிதானத்துடன்.

"நீ நஜ்மாதானா என்று கண்களை நம்பாமல் அப்படியே நின்றுவிட்டேன்!" என்றான் மஸ்தான் தழுதழுத்த குரலில்.

"ஏன், நான் நல்லாத்தானே இருக்கேன்?"—வறட்டுச் சிரிப்பு அவள் அதரங்களில் கிளர்ந்து மறைந்தது.

"உன் நிலைமை எனக்குத் தெரியாதா, நஜ்மா? வாழ்விலே உன்னைப்போல் வரம்பில்லா வேதனைகளையும் சோதனைகளையும் அநுபவித்தவர் வேறு யார் இருக்கப் போகிறார்கள்? உன்னைப் பாழ்படுத்தியவர்கள் வந்த வழியே திரும்பி விட்டார்கள். நீ சந்தோஷமாக நல்ல முறையில் வாழவேண்டுமென்ற ஒரே திடமான எண்ணத்துடன் காலத்தையும் கடலையும் கடந்து வந்த நான் நீட்டிய கரங்களுடன் உன் முன்னால் நிற்கிறேன்."

"அதற்காகவா வந்தீர்கள்?"—பஞ்சடைந்த அவள் விழிகள் சுழன்றன. சிரம் கவிழ்ந்தது.

"ஆமாம், படுகுழியில் வீழ்ந்து தத்தளிக்கும் உன்னைக் கைகொடுத்து மீட்பது என் கடமை அல்லவா நஜ்மா."

"வீணான எண்ணம்!"

"தஞ்சைச் சீமையிலே பிறந்த பெண்ணொருத்தி அயல் நாட்டில் உற்றார் உறவினரின்றித் தனித்து வாழ்வது உகந்ததல்ல. என்னுடன் புறப்படு. வாதாடாதே!"

"என் உடல் இந்த ஊர் மண்ணோடு மண்ணாகப் போகுமே தவிர, இவ்விடத்தை விட்டு நகர எனக்கு உத்தேசமே இல்லை!"—நஜ்மாவின் குரலில் கண்டிப்புத் தொனித்தது.

"எல்லாம் வல்ல இறைவனின் தீர்ப்பை யாரால் மாற்றமுடியும்? சரி, நீ வரவேண்டாம். இதையாவது கேள். உன்னை இழந்ததனால் உள்ளம் இரு கூறுகளாகப் பிளந்தும், உயிரை எப்படியோ சமாளித்து வந்த நான் உன்னை நிக்காஹ் செய்துகொண்டு நீ இழந்த இல்லறச் செல்வத்தை மீட்டு உனக்கு அளிக்கப்போகிறேன், நஜ்மா. இது உன் தாய் இறக்கும்போது கொண்ட விருப்பங்கூட; நான் வந்ததன் நோக்கம் இதுவே."

"நிக்காஹ்வா!" உன்மத்தம் பிடித்தவள்போல் அந்த அடவியே எதிரொலிக்கும்படி உரக்கச் சிரித்தாள் நஜ்மா.

"கணவனை இழந்த உன்போன்ற இளம் பெண் மறு விவாகம் செய்துகொள்வது ஓர் உத்தமமான காரியமாகும். நீ இஸ்லாத்தில் பிறந்தவள் என்பதை ஞாபகம் வை."

கோடையிடிபோல் குமுறிக்கொண்டு கடகடவென்று பேய்ச்சிரிப்பை எழுப்பினாள் நஜ்மா.

"என் கழுத்துக் கருவமணி அறுந்தாலென்ன, மஸ்தான்? என்னை அன்புடன் பீவியாக ஏற்றுக்கொண்டு நாலு வருஷங்கள் ஆசையுடன் அணைத்துக்கொண்டு வாழ்ந்த என் எசமானர் இங்கே யல்லவா தங்கிவிட்டார்? அவரின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனிடம் 'பாத்தியா' ஓதிவிட்டு அவர் சமாதியில் ஒவ்வொரு நாளும் ஊதுவத்திகளை ஏற்றிவைக்கிறேன்."

"அநியாயங்களும் அக்கிரமங்களும் புரிந்து ஒரு பாவமுமறியாத பெண்ணின் வாழ்வைக் குலைத்த ஒரு பாவிக்கா இந்தத் தொண்டை நீ செய்கிறாய், நஜ்மா?"

"கணவனிடம் 'தலாக்' வாங்கிக்கொள்ளும்படி என்னைப் பெற்றவர்களே எவ்வளவோ முறை வற்புறுத்தியும் என் கையை ஆசையுடன் பிடித்தவரின் சுண்டு விரலைக்

கூட நான் நழுவவிடவில்லை. ஏதோ அவர் போதாத காலம், என்னோடு நேர்மையான வாழ்க்கையை நடத்தக் கொடுத்துவைக்கவில்லை. என் வயிற்றுக்குக் கஞ்சி ஊற்றிய அந்த அமீர் எனக்குத் தப்பித் தவறிச் செஞ்ச தீங்குகளை மன்னித்துவிடும்படி அந்த ரஹ்மானிடம் ஐந்து வேளைத் தொழுகையிலும் கெஞ்சிக் கேட்கிறேன். என் நாளை இப்படியே போக்கிவிட்டால், என் நொந்த நெஞ்சு ஆறுமலா போயிடும், மஸ்தான்?''—குபுகுபுவென்று பீறிட்டெழுந்த கண்ணீர் அவளது அங்கியாவையும் தாவணியையும் நனைத்துவிட்டது.

''நஜ்மா, என்னென்னமோ கனவுகளுடன் வந்து சேர்ந்தேன் நான்.''—கைகளைப் பிசைந்துகொண்டு திருதிருவென்று விழித்துக்கொண்டு வெடவெடவென்று நடுங்கிய துடைகளுடன் மஸ்தான் நின்றிருந்த கோலம் பார்க்கப் பரிதாபமாக இருந்தது.

''அட, கனவுகள்தானே! பொழுது விடிஞ்சுபோச்சே! உங்கள் உபதேசங்களுக்கு என் மனமார்ந்த நன்றி. பெட்டி படுக்கையை எடுத்துக்கொண்டு வந்த வழியே தயவுசெஞ்சு திரும்பிப் போங்கள்'' என்று தலை குவித்துச் சலாம் போட்டுவிட்டுத் தான் நாடிய நாட்டத்தை நிரூபிப்பதுபோல் மாரியாகக் கண்ணீரைப் பொழிந்த கண்களைத் தாவணியின் தலைப்பினால் கசக்கிக்கொண்டே நடைபாதையில் விறுவிறுவென்று நடந்து, மேடு பள்ளங்களைக் கடந்து, புதர்களிடையே மறைந்தாள் நஜ்மா.

# தமையன் அளித்த—

# —காணிக்கை

பல மாதங்களாகத் திறவாத தன் பச்சை நிற டிரங் பெட்டியை இடுப்பு ஒடிய எடுத்து வந்து ஓலைப்பாயின் மீது வைத்தபோது சலீமா பேகத்துக்கு நெடுமூச்சு வாங்கியது. 'அல்லாவே!' என்று அலுப்புடன் கூறிக்கொண்டு அதன் அருகில் சோர்வுடன் அமர்ந்தாள். பூட்டைக் கழற்றிவிட்டுப் பெட்டியைத் திறந்தாள். தன் கல்யாண தினத்தன்று தான் உடுத்திருந்த பொன்னிறப் பூக்கள் போட்ட கொடுக்காப்புளி வர்ண ஜிமிக்கித் தாவணியைக் கண்டதும் அவ்வணங்கின் செம்பவழ இதழ்களில் மந்தஹாஸம் உலாவியது. கீழ் உதட்டைக் கடித்துக் கொண்டு, வெகு ஜாக்கிரதையாக அந்த 'மடி'யை எடுத்துத் தன் மடிமீது வைத்துக்கொண்டாள்.

அந்த நங்கையின் தளிர்மேனி உவகையினால் துள்ளியது. அந்த அணியை மடி கலையாது வெகு நாசுக்காக அகற்றியபோது அதற்கடியில் காட்சியளித்த சிறு பெட்டியின்மீது அவள் பார்வை விழுந்ததும் சலீமா பேகம் சற்றுக் கலக்கமடைந்தாள். அதைத் திறப்பதற்கு முயன்றபோது அந்த எழிலரசியின் காந்தள் விரல்களில் நடுக்கம் ஊர்ந்தது. பெட்டிக்குள்ளிருந்த கணையாழியை நோக்கியதும் அக்காரிகையின் கருவிள மலர்போன்ற விழிகள் சுழன்றன. நெடுமூச்சு அவள் மார்பகத்தை மேலும் கீழும் அழுத்தியது. நினைவு நாகங்கள் அவள் நெஞ்சில் படமெடுத்தாடின.

சலீமா பேகத்தின் மருதாணியிட்ட விரல்களுக்கிடையில் சிக்கித் தத்தளித்த பச்சைக்கல் பதித்த அந்த மோதிரம் அந்த ஏந்திழையாளுக்குக் காணிக்கையாகக் கிடைத்த கதை ஒரு வேடிக்கையாகும்!

உருது மொழியைத் தாய் பாஷையாகக் கொண்ட 'தக்கனி'ப் பிரிவைச் சேர்ந்த வடஆர்க்காடு ஜில்லா, மஞ்சம்பேட்டை ஆதம்சா சாஹேப் மூன்று புத்திரர்களுக்கும் ஓரே ஒரு செல்விக்கும் தகப்பனாராக இருந்தார். அவருடைய முதல் 'பீபி'யான பாத்திமா பேகம் ரஹ்மானை ஈன்றெடுத்துத் தன் நாயகனிடம் ஒப்படைத்து விட்டு இந்த 'உலகத்துக்கு' இறுதி சலாம் வைத்துவிட்டு மறைந்துவிட்டாள். இந்த அதிர்ச்சியிலிருந்து பல மாதங்களாக மீள முடியாத வேதனை வெள்ளத்தில் மூழ்கிவிட்ட ஆதம்சா, உற்றூர் உறவினர்களின் பிடுங்கலைத் தாளாது குல்ஸும் பேகத்தைத் துணைவியாக ஏற்றுக் கொண்டு விட்டார். இளையவளின் மூலம் இரு குமாரர்களையும் ஒரு புத்திரியையும் தாம் அடையும்படியான பாக்கியத்தையும் பெற்றுவிட்டார்!

தாயை இழந்த மூத்த மகன் ரஹ்மானைச் செல்லமாக ஆதம்சா வளர்த்து வந்ததன் பலன் அந்த இளைஞன் ஒரு தம்பிடிக்கும் பிரயோசனமில்லாமல் போனதுதான்! கெட்டவர்களின் சகவாசத்திஞல் குடியாத்தம் தாலூக்காவில் 'கேப்மாரி' என்ற விருதைப் பெறுவதில் ரஹ்மான் 'பிறைக்கொடி' நாட்டி விட்டான். இந்தச் செய்தியைச் செவி மடுத்ததும் ஆதம்சாவின் தலைமீது பேரிடி விழுந்ததுபோல் ஆகிவிட்டது.

சோதாக்களின் கும்பலில் கும்மாளம் அடித்துக்கொண்டும், காலாடிகளின் கோதாவில் தன் வஸ்தாத் வேலைகளைக் காட்டியும் வந்த மூத்த மகன் யாரோ ஒரு பெண் வீசிய வலையில் மாட்டிக்கொண்டு ஊரை விட்டு விலகி ஏதோ ஒரு குக்கிராமத்தில் குடியேறிவிட்டதாகத் தெரிய வந்ததும் கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்த ஆதம்சா வெலவெலத்துப் போனர். அவமானம் அவர் மாசற்ற நெஞ்

சைத் துண்டு துண்டாக நறுக்கித் தள்ளியது. துயரம் அவர் இதயத்தைக் கௌவியதும் அவர் உடல் காந்தியது. ரஹ்மான் தன் வீட்டின் வாசற்படிக்குள் காலடி எடுத்து வைக்கக் கூடாதென்று வீட்டில் உள்ளவர்களுக்குக் கடுமையான உத்தரவு போட்டார். தமக்கும் தம் மூத்த மகனுக்கும் யாதொரு தொடர்பும் இல்லையென்று ஊரில் நகாரா அடிக்கச் செய்தார்.

அவர் செய்துவிட்ட இந்த விபரீத முடிவு ஊரில் ஓர் சிறிய பூகம்பத்தை உண்டாக்கி விட்டது. தந்தையின் 'ஜபர்தஸ்த்' கட்டளையைக் கேட்டுத் திகிலடைந்த தனயன், தான் பிறந்து வளர்ந்த இல்லத்தைவிட்டு எவருடைய கண்களுக்கும் தென்படாமல் இரவோடு இரவாக மறைந்து விட்டான்.

தந்தை அயலூருக்குப் போயிருந்த சமயங்களில் யாரும் அறியாத வண்ணம் தன் மனைக்குச் சென்று வருவது ரஹ்மானுக்குச் சிறிது காலம் வழக்கமாக இருந்தது. இந்த வழக்கத்தை மாத்திரம் ரஹ்மானால் நிறுத்திக் கொள்ள முடியாததற்கு முக்கிய காரணமாக இருந்தவள் சலீமா பேகந்தான்! அந்த மாற்றாந்தாய் குழந்தைக்கு ரஹ்மான் என்றால் உயிர்! இளம் பிராயத்தில் வெளியே சென்று திரும்பி வரும்போதெல்லாம் பஞ்ச வர்ண அஞ்சறைப் பெட்டியையாவது, பட்டு நூல் உருண்டையையாவது, வண்ண ரிப்பன்களையாவது வாங்கிக் கொண்டு வந்து தன் தங்கைக்குக் கொடுக்காமல் இருக்கமாட்டான் ரஹ்மான். இப்பொருள்களைத் தன் சகோதரனிடமிருந்து பெற்றுக்கொள்வதற்காக வழிமேல் விழிவைத்து வாசற் கதவுக்கருகில் மணிக்கணக்காக அவன் வரவுக்குக் காத்திருக்கும் அப்பேதை, அண்ணன் தென்பட்டவுடன் அவன் கையிலுள்ள சாமான்களை 'லபக்' என்று பிடுங்கிக் கொண்டு மான் குட்டிபோல் துள்ளிக் குதித்து வீட்டுக்குள் ஓடிவிடுவாள்.

தகாத சகவாசத்தினால் ரஹ்மானின் நடத்தை சீரழிந்து கொண்டிருந்த நாட்களிலும் சலீமா பேகத்துக்கு அண்ணனிடமிருந்த வாஞ்சை ஓர் அணுக்கூடக் குறைந்து

போய்விட வில்லை. அவனைச் சந்தித்து ஓர் அன்புச் சொல்லை உதிர்க்காது போனால் அவளுக்கு ஒரு வேலையும் ஓடாது!

முன் கோபியான தன்னுடைய தந்தை, பாசத்தையும் பந்தத்தையும் ஆசையையும் ஆதங்கத்தையும் உதறிவிட்டுத் தன் அண்ணனை வீட்டை விட்டுத் துரத்தி விட்டார் என்ற கொடூரச் செய்தி சலீமாவின் செவிகளை மோதியதும் அந்தப் பேதையின் மனம் படீரென்று வெடித்து விட்டது. விதிர் விதிர்த்துப்போன அவளுடைய நயனங்களிலிருந்து வழிந்தோடியது சோகம் தோய்ந்த கண்ணீர்.

தம் மகனின் இழிவான வாழ்க்கையினால் மனம் ஒடிந்துபோன ஆதம்சா நடைப்பிணம்போல் நாட்களைப் போக்கிவந்த வேளையில் மற்றொரு மின்னல் அவரைத் தாக்கியது. குடியாத்தத்தில் நடந்து வந்த தம்முடைய வியாபாரம் திடீரென்று முறிந்துவிட்டதாகவும், கிடைத்ததைச் சுருட்டிக்கொண்டு கணக்குப்பிள்ளை கம்பி நீட்டி விட்டதாகவும் கேள்விப்பட்டவுடன் ஏற்கனவே புண்பட்ட அவர் இதயம் இரு கூறுகள் ஆகிவிட்டது.

எஞ்சி நின்ற சொத்தில் தம் மகளின் திருமணத்தை விரைவில் நடத்திவிடத் தீர்மானித்தார் ஆதம்சா. வாணிபம் தமக்குக் கற்பித்த படிப்பினையை உணர்ந்த அவர், அரசாங்க உத்தியோகத்தில் மாதம் மாதம் 'சுளையாக' ஊதியம் பெறும் வாலிபனைத் தம் அருமை மகளுக்காகத் தேடி அலைந்தார்.

மரம் வைத்தவன் அதற்கு நீர் ஊற்றத் தவறுதது போல அந்த வடிவழகி சலீமா பேகத்தைச் சிருஷ்டித்த அல்லாஹுத்தாலா அந்தத் தளிர்க் கொடியைத் தாங்கிக் கொள்வதற்கு அதே சீமையில் ஒரு கொழுகொம்பை வளர்த்து வைக்க மறக்கவில்லை. சடாவா செருப்புகள் தரையோடு தரையாகத் தேய்ந்துவிட எங்கெங்கேயோ திரிந்து உறவினர்களை அணுகாது, அயலார்களிடம் கடன் வாங்கித் தம் புனிதக் கடமையை ஒருவாறு செய்து முடித்தார் ஆதம்சா. வளத்தூர் சத்தார் சாஹேபுக்கும் சலீமா பேகத்துக்கும் நடந்த நிக்காஹ் பந்தலில் பெரிய பெரிய

'சஹன்' பாத்திரங்களில் பரிமாறப்பட்ட நறுமணம் வாய்ந்த 'பிரியாணி' சோற்றை வயிறு புடைக்க உண்டு, மணத் தம்பதிகளை வாயார வாழ்த்திச் சென்றனர் கிராம மக்கள்.

இந்த மங்களகரமான நிகழ்ச்சி நிரலின் துயரம் கசிந்த அத்தியாயம் என்னவென்றால், ஆதம்சாவின் மூத்த குமாரனான ரஹ்மான் தன் உயிருக்கு உயிரான தங்கையின் திருமண வைபவத்தில் கலந்துகொள்ளாததுதான்! உடனே கிளம்பி வரும்படி தந்தையிடமிருந்து வந்த கடிதத்தைப் பெற்றுக்கொண்டபோது ரஹ்மான் தடுமாறிப் போனான்.

அந்தச் சுப வைபவத்தில் தன் தலையைக் காட்டுவதற்கு அவன் மனச்சாட்சி தடையாக நின்றது. தன் கேவலமான வாழ்க்கையை நன்றாக அறிந்த சில கிழங்கள் கல்யாண வீட்டில் தன்னைப்பற்றி இழிவாகப் பேசி எக்களிக்கத் தயங்க மாட்டார்கள் என்ற பீதி ரஹ்மானின் உள்ளக் குகையில் பூதாகாரமாகச் சிரிப்பை எழுப்பியது.

ஆனால் தங்கையின் இன்முகம் மனக்கண்முன் வட்டமிட்டு வதைக்கத் தொடங்கியவுடன், பாசம், அன்பு ஆகிய இத்தளைகளை உடைத்தெறிய முடியாது தத்தளித்தான் ரஹ்மான். வெறிபிடித்தவன்போல் எழுந்தான். அன்று காலையில் துவைத்து உலர வைத்த உடைகளைத் தரித்துக் கொண்டான். தன் தங்கைக்கு ஏதாவது பரிசை வாங்கிச் செல்ல அவன் உள்ளம் ஏங்கித் துடித்தபோதிலும், அவனுடைய பரிதாபகரமான பொருளாதார நிலை அதற்கு இடம் கொடுக்கவில்லை. வெளி மாடத்திலிருந்த சில அணுக்களை எடுத்துக்கொண்டு மஞ்சம்பேட்டையை நோக்கி அவன் விறுவிறுவென்று நடந்துகொண்டிருக்கையில் பகலவன் தன் பணியை முடித்துக்கொண்டு குடவாயிலில் பதுங்கிக்கொண்டிருந்தான்.

நிக்காஹ் நடந்த அன்று, மாதர் குழாம் மணமக்களைக் குதர்க்கமாகவும் வேடிக்கையாகவும் பேசி 'மஜாக்'-கேலி-பண்ணிக் கொண்டு கொல் என்ற சிரிப்பொலியைக் கிளப்

பிய வண்ணம் இருந்தது. மணமக்களுக்குப் பரிசுகள் அளிக்கவேண்டிய நேரம் வந்துவிடவே, அந்த இடத்தில் கூட்டம் நிரம்பிவிட்டது. பன்னீர்ச் செம்பு, சந்தனப் பியாலா, சில்க்-உருமால், பெட்டகம், கடிகாரம், வெள்ளிச் சாமான்கள் ஆகியவைகளைத் தங்கள் தங்கள் பரிசுக ளாகத் தம்பதிகளுக்கு உற்றார் உறவினர்கள் அளித்தார் கள். சிரிப்பொலியும் கூக்குரலும் செவிகளைத் துளைக்கும் படி ஆர்ப்பரித்துக் கொண்டிருந்த அந்த மண்டபத்தில் அழுக்கேறிய உடைகளுடனும், சோகம் கப்பிய வதனத் துடனும் தன் முன்னால் சிரம் கவிழ்த்து நின்ற ரஹ்மானைக் கண்டதும் சலீமா பேகம் அசந்துவிட்டாள். பல நாட் களாகக் காணாத தன் சகோதரனைப் பார்க்கப் பார்க்க அவ்வனிதையின் உள்ளம் ஊசலாடிற்று.

தன் இடுப்பைச் சுற்றியிருந்த பச்சைநிறச் சிங்கப்பூர்ப் பெல்டின் தோல் பையை மெல்லத் திறந்தான் ரஹ்மான். அதிலிருந்த மோதிரத்தை எடுத்தபோது அவன் மேனி சிலிர்த்தது. தங்கையின் கரத்தை ஆசையுடன் பற்றித் தன் காணிக்கையாக அந்தக் கணையாழியை அவள் விரலில் அன்போடு பொருத்தியபோது அவன் இதயம் படக் படக் என்று அடித்துக்கொண்டது. நுதலில் கசிந்து வழிந்தோடிய வியர்வையைச் சுண்டு விரலால் நீக்கிவிட்டு ஒரு வார்த்தையும் பேசாது வெறிச்சோடிய விழிகளுடன் அவ்விடத்தை விட்டு மறைந்தான் ரஹ்மான்.

இந்த ஒரு நிகழ்ச்சி சலீமா பேகத்தின் நினைவில் சுழன்றபோது அவள் திக்பிரமையுடன் ஓலைப் பாயில் தன் பெட்டிக்கு முன்னால் உட்கார்ந்திருந்ததை முன்பே சொன்னோம்! அந்தச் சம்பவம் நடந்து எத்தனையோ மாதங் கள் உருண்டோடிய போதிலும் ஏதோ நேற்று நடந்தது போல் சலீமாவுக்குப் பட்டது.

அண்ணன் அளித்த காணிக்கையை நீர்சுரந்த தன் கண்களில் ஒற்றிக்கொண் டிருக்கையில் வாசல் கதவை யாரோ இடிக்கும் ஓசையைக் கேட்டுச் சுய உணர்வு பெற்றாள். தாவணியின் தலைப்பினால் நயனங்களைத் துடைத்துக்கொண்டாள். சலீமா, வாசற் கதவைத் திறந்த

போது, அங்கு அவள் கண்ட காட்சி அவளை அதிர வைத்துவிட்டது. எந்தச் சகோதரனை நினைந்து குடம் குடமாகக் கண்ணீர் வடித்தாளோ, அவன் பரிதாபக் கோலத்தில் வாசற்படியில் நின்றுகொண் டிருந்ததைப் பார்த்ததும் சலீமா மலைத்துப்போனாள்.

"வாங்கோ பாய்...உள்ளே வாங்கோ!" என்று தழுதழுத்த தொனியில் பரிவுடன் வரவேற்றுத் தன் அண்ணனைக் கூடத்துக்கு அழைத்துச் சென்றாள் சலீமா பேகம்.

"பாய்! சொக்காயைக் கழற்றிவிட்டு முக்காலியில் உட்காருங்கோ. பசியாற ஏதாச்சும் கொண்டு வாரேன்" என்று கனிவுடன் பகர்ந்தாள் சலீமா. மாடத்திலிருந்த கோழி முட்டைகளையும் வாணலிச் சட்டியையும் எடுத்துக் கொண்டு கொவ்வை அதரங்களில் குறுநகை தவழ, குவளைக் கண்களில் களிப்பு நீர் ததும்ப அடுக்களைக்கு ஓடினாள். பத்து நிமிஷம் கழித்து, "பாய் நாஸ்த்தா (சிற்றுண்டி) தயாராயிடுச்சு. கை கால் கழுவிவிட்டுப் பாயில் வந்து உட்காருங்கோ" என்ற தங்கையின் பாசம் நிறைந்த குரலைக் கேட்டு எழுந்தான் ரஹ்மான்.

தரையில் நேர்த்தியாக விரிக்கப்பட்டிருந்த 'தஸ்தரில்' (விரிப்பு) அமர்ந்தான். தன் சகோதரியின் கைகளினாலே பரிமாறப்பட்ட பணியாரங்களைச் சாப்பிட்டபோது தங்கையின் வாஞ்சை ரஹ்மானை ஓர் உலுக்கு உலுக்கி விட்டது.

திண்ணையில் ஏதோ ஆரவாரம் கேட்டு வாசற் கதவைச் சாத்துவதற்கு விரைந்தாள் சலீமா. கூடத்தில் தாறுமாறாகத் தரையில் பெட்டியைச் சுற்றிச் சிதறிக் கிடந்த ஆடைகளின்மீது பார்வை வீழ்ந்ததும் அவள் நெஞ்சு திக்கென்றது. அவைகளைப் பொறுக்கி யெடுத்துப் பெட்டிக்குள் திணித்தாள். மோதிரத்தை வைக்கும் பெட்டகத்தை எடுத்துத் திறந்தாள். ஓலைப்பாயில் தான் வைத்துச் சென்ற கணையாழியைக் காணாததும் அவள் நெஞ்சு பகீரென்றது! பெட்டிக்குள் திணித்த துணிமணிகளை எடுத்து உதறிப் பார்த்தாள். ஓலைப்பாயை எடுத்து

உதறினாள். மூலை முடுக்கெல்லாம் துழாவிப் பார்த்தும் அந்த மோதிரம் தென்படவில்லை! நாகூர் 'மினுரா'-ஸ்தூபி-போல் ஸ்தம்பித்து நின்றுவிட்டாள் சலீமா.

யார் அதை எடுத்திருப்பார்கள்? அந்தச் சமயத்தில் கூடத்தில் தன்னையும் தன் சகோதரனையும் தவிர வேறு யாரும் இல்லையே! 'வாசற் கதவு திறந்துகிடந்தபோது,எதிர் வீட்டுப் பித்துக்குளி மூஸாவோ அல்லது அடுத்த வீட்டு அந்தப் பொல்லாத கிழவி ஜைனப்பீவியோ வீட்டுக்குள் புகுந்து அதைத் திருடிக்கொண்டு போய்விட்டார்களா? 'அட, அல்லாவே! இது என்ன சோதனை?' என்று ஈனக்குரலில் புலம்பிக்கொண்டு மனமொடிந்து விரல்களை அவள் நொடித்துக்கொண் டிருந்த வேளையில், "சலீமா! குடிக்கக் கொஞ்சம் தண்ணீர் கொடு" என்று தமையன் எழுப்பிய குரலைக் கேட்டு ஒருவாறு தன்னைச் சுதாரித்துக் கொண்டாள். மனப் பதற்றத்தை வெளியே காட்டாது உள்ளே சென்றாள். "சலீமா! போன பக்ரீத் பண்டிகையில் உன்னைப் பார்த்தவன்தான்! சரி, மச்சான் எங்கே?" என்றான் ரஹ்மான்.

"அவர் பீமாபுரத்துக்கு 'டியூட்டியில்' போய் இருக்கிறார். 'நாளைக் கருக்கல்லே வந்துடுவேன்' என்று சொல்லித்தான் போனார்" என்றாள் சலீமா, சிரத்திலிருந்து நழுவிய தாவணியைச் சரிப்படுத்திக்கொண்டு.

"நீ செய்த பணியாரம் ஒன்றையும் மீத்துவைக்கவில்லை" என்று சொல்லி, கலகலவென்று உரக்கச் சிரித்துவிட்டு, "சலீமா, ஒரு சின்ன விஷயமாகத்தான் நான் இங்கே வந்து சேர்ந்தேன்" என்றான் கம்மிய குரலில்.

சலீமா மௌனம் சாதித்தாள். "உன் நிக்காஹின் போது காலையில் வந்து புலவுச்சோற்றைச் சாப்பிடுவதற்குப் பதிலாக இரவு அங்கே வந்தது உனக்கு நினைவு இருக்கலாம்" என்று பீடிகை போட்டான் ரஹ்மான்.

"ஆமாம்...ஞாபகம் இருக்கு" என்று கூறி அண்ணனை அன்புடன் பார்த்தாள் சலீமா.

"பெற்றெடுத்த தகப்பனாரே என்னை வீட்டைவிட்டுத் துரத்திவிட்டார். ஊர்க்காரர்களும் என்னென்னவோ என்னைப்பற்றிக் கேவலமாகப் பேசிக்கிட்டார்களாம். அமீராக வாழ்ந்த நான் எதோ வழிதவறிப் பக்கிரியாகப் போய்விட்டேன். ஏழையாகிக் கஷ்டப்பட்ட நான் என்னிடமிருந்த சில காசுகளைப் போட்டு மோதிரம் ஒன்று வாங்கி உனக்கு என் கல்யாணப்பரிசாகக் கொடுத்து என் கடமையைத் தீர்த்துக்கொண்டேன்" என்றான் ரஹ்மான்.

"பாய்! அப்போது நான் எவ்வளவு சந்தோஷப்பட்டேன், தெரியுமா!" சலீமாவின் வதனத்தில் களிப்பு மிதந்தது.

"நான் இப்போது இங்கே வந்த விஷயமும் அதைப் பற்றித்தான் சலீமா!"

"சொல்லுங்கோ பாய்" என்றாள். சலீமாவின் தொனியில் ஆவல் பிரதிபலித்தது.

"நான் எந்தப் பொருளை என் பரிசாக உனக்குக் கொடுத்தேனோ, அந்த மோதிரத்தை எடுத்து வா. ஒரு முறை பார்த்துவிட்டு நான் போய்விடுகிறேன்" என்று ரஹ்மான் கூறியதும் சலீமாவுக்குத் தூக்கிவாரிப் போட்டது! ஆயிரம் கருந்தேள்கள் ஒரே சமயத்தில் கொட்டினாற்போல் வேதனை உண்டாயிற்று.

சற்று முன் காணாமல் போன அந்தக் கணையாழியைப்பற்றித் தன் சகோதரனிடம் ஏதாவது காரணம் கூறி மழுப்பிவிட வேண்டும் என்று அப்பேதை நினைத்தாள்.

"பெரிய பாய்! நீங்கள் அளித்த அந்தக் கணையாழியை அழித்துக் காதுக்கு மாட்டல் செய்து போட்டுக்கிட்டேன்." தட்டுத் தடுமாறிக்கொண்டு சொல்லி மழுப்பினாள் சலீமா.

"அப்படியா செஞ்சுட்டே! நல்லதாகப் போச்சுப் போ" என்று சாவதானமாக உரைத்துவிட்டுக் கை கழுவ எழுந்தான் ரஹ்மான். நீர் நிறைந்த செப்பு லோட்டாவை

எடுத்துக்கொண்டு சகோதரனைத் தொடர்ந்து சென்றாள் சலீமா.

''சலீமா...உள்ளூரில் கொஞ்சம் வேலை இருக்கு. மத்தியானம் சூரியன் சாய்ந்த பிறகுதான் வருவேன். எனக்காக ஒன்றும் சமைத்து வைக்காதே'' என்று கூறி விட்டு ரஹ்மான் புறப்பட்டு விட்டான்.

அண்ணன் சந்தின் முனையைக் கடந்த பின் வாசல் கதவைச் சாத்தினாள் சலீமா. துடைப்பத்தை எடுத்துக் கொண்டு வீடு முழுவதையும் பெருக்கிக் குப்பையை ஒரு மூலையில் குவித்தாள். அதைச் சல்லடை போட்டு அலசிப் பார்த்தும் மோதிரம் கிடைக்கவே இல்லை!

மாலை ஐந்து மணிக்கு ரஹ்மான் திரும்பினான். வாழைப் பழங்களையும் கொய்யாக் கனிகளையும் நுங்கு களையும் கொண்ட கூடையுடன் சகோதரன் வீடு வந்து சேர்ந்ததும் சலீமாவுக்குப் பேரானந்தம் உண்டாயிற்று.

''சலீமா! இன்னும் கால்மணி நேரத்தில் பஸ் வந்து விடும். நான் அதற்குள் கிளம்பியாக வேண்டும்'' என்றான் ரஹ்மான்.

''ராத்திரி ஆற அமர இருந்துதான் போங்களேன் பாய். எந்த ஹிஜ்ரி வருஷமோ உங்களைப் பார்த்தது!''

''இருக்கட்டும். இன்னொரு நாள் வந்து சாவதான மாக மச்சானோடு சேர்ந்து உட்கார்ந்து பசியாறிப் போகி றேன்'' என்று சொல்லிவிட்டுப் பிறகு தொடர்ந்தான்:

''சலீமா! நான் உனக்குத் திருமணப் பரிசாகக் கொடுத்த மோதிரத்தை நீ அழித்துவிட்டதாகச் சொன்ன போது எனக்கு என்னமோபோல் இருந்தது. அதற்காக மற்றொரு கணையாழியை வாங்கி வந்திருக்கிறேன். இதை வாங்கிக்கொள்'' என்று தன் மடியிலிருந்த கணையாழியை ரஹ்மான் எடுத்துக் கொடுத்ததும் சலீமா திகைத்துப் போய்விட்டாள்.

"அண்ணே!...ஏன் இதை வாங்கினீங்கள்?" என்றாள் சலீமா உணர்ச்சி வசப்பட்டு.

"சலீமா, நான் அளித்த அந்த மோதிரத்தை அழித்து, மாட்டலாகச் செய்து போட்டுக்கொண்டாய் என்று நீ சொன்னது பொய்தானே! மறைக்காதே!" என்று சொல்லிச் சிரித்தான். சலீமா திடுக்கிட்டாள்.

"நான் உன் அண்ணன் என்பதை மறந்துவிடாதே, சலீமா! நிகழ்ந்து மறைந்த ஒரு கதையை உனக்கு நான் சொல்லும்படியான தருணம் வந்துவிட்டது."

"கதையா?"

"ஆம்! இத்தனை நாட்களாக என் நெஞ்சில் புகைந்து கொண்டிருந்த கதைதான், சலீமா! உன் முகத்தில் தைரியத்துடன் விழிப்பதற்கு ஓர் ஏற்பாடு செய்துகொண்டு வந்தேன்."

"என்ன சொல்றீங்க, பாய்!"

"கேள் சலீமா, கேள். நான் வீட்டில் நுழைந்தபோது களைப்பாறும் பொருட்டு என்னை நீ கூடத்தில் உட்காரச் செய்தாய் அல்லவா? அப்போது ஓலைப்பாயிலிருந்த பெட்டியைச் சுற்றிக் கிடந்த சாமான்களின்மீது என் பார்வை விழுந்தது. எந்தப் பொருளை நாடி இங்கே வந்தேனோ, அதை இங்கே கண்டதும் எனக்குக் கட்டுக்கடங்காத குஷி உண்டாயிற்று. நான் உனக்குப் பரிசாக அளித்த அந்த மோதிரம்...ஆம்...பச்சைக்கல் பதித்த அதே மோதிரம், பெட்டியருகில் கிடந்ததைப் பார்த்ததும் அதை எடுத்து என் பைக்குள் போட்டுக்கொண்டேன்!"

"நீங்களா!"

"ஆமாம்...உன் அண்ணன்தான்! அது என் பிடிக்குள் வந்த பிறகுதான் என் மனத்தில் அமைதி ஏற்பட்டது.

"என்ன!..."

"அந்த மோதிரத்தை ஏதாவது ஒரு குட்டையில் எறிந்துவிடத்தான் நான் வெளியே புறப்பட்டேன்."

"அப்படியே செஞ்சுட்டீங்களா பாய்?" வாய்விட்டுக் கதறிவிட்டாள் சலீமா.

"தூக்கி எறிந்தும் விட்டேன். அதற்குப் பதிலாக இந்தக் கணையாழியை வாங்கி வந்தேன். இதை நீ உன் கைகளினாலே பெற்றுக்கொண்ட பிறகுதான் என் இதயப் படபடப்பு அடங்கியது" என்றான். கற்சிலையைப்போல் செயலற்று நின்றுகொண் டிருந்த தன் தங்கையை நீர் மல்கிய நேத்திரங்களால் பாசம் பொங்கப் பார்த்தான்.

"சலீமா! இனி இந்தப் பாவியை நீ மன்னித்துவிட வேண்டும்" என்று ரஹ்மான் கூறியதும் சலீமா அதிர்ந்து போய்விட்டாள்.

"நான் மன்னிப்பதா! உங்களையா! மோதிரத்தை எடுத்துச் சென்றதற்காகவா?" என்றாள். அவள் நெஞ்சு படபடத்தது.

"அது மாத்திரமல்ல. உனக்கு நான் இழைத்துவிட்ட மற்றொரு குற்றமும் இருக்கிறது!" என்றான் ரஹ்மான்.

இதைக் கேட்டதும் சலீமாவுக்குத் தூக்கிவாரிப் போட்டது. கண்களில் அந்தகாரம் சூழ்ந்துகொண்டது.

"சலீமா! இத்தனை நாட்களாக அதை வெளிப்படுத்த என் நாக்குப் புரள மறுத்துவிட்டது, இனி எனக்குப் பயமில்லை. தங்கையாகிய உன்னிடம் மானத்தையும் வெட்கத்தையும் காற்றில் பறக்கவிட்டுத் திடமனத்துடன் சொல்லிவிடத் துணிந்துவிட்டேன். கடந்த காலத்தில் நான் அநுபவித்த ஏழைமையான நிலை உனக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை. பெற்ற தகப்பனாரே என் காலை வாரிவிட்ட காலம் சலீமா! அந்தச் சமயத்தில்தான் உன் நிக்காஹ் பத்திரிகை என்னைத் தேடி வந்து சேர்ந்தது. என் உயிருக்கு உயிரான தங்கைக்கு அண்ணனான நான் ஒரு கல்யாணப் பரிசு கொடுக்காமல் இருந்தால் இந்த மனித ஜன்மம் எடுத்துத்தான் என்ன பிரயோசனம்? இந்த எண்ணந்தான் என்னைச் சைத்தான் மாதிரி பிடித்து ஆட்டிவிட்டது. ஏதோ என்னிடம் மீந்திருந்ததே நாலைந்து அணுக்கள்! அவற்றை

எடுத்துக்கொண்டேன்; கிளம்பினேன். ஒரு கணையாழியை வாங்கிக்கொண்டேன். இரவு வேளையாகப் பார்த்து உன் மணப்பந்தலில் நுழைந்தேன். கூட்டத்தின் சந்தடியிலே உன் விரலில் அந்த மோதிரத்தை ஆசையுடன் பொருத்தி விட்டு, உடனே அவ்விடத்தை விட்டு ஓசைப்படாது நான் நீங்கியது உனக்கு நினைவு இருக்கும். அப்படி நான் செய்த அந்த ஒரு காரியந்தான் இன்று வரை என் நெஞ்சைச் சித்திரவதை செய்து வந்தது. சலீமா! எந்தக் கணையாழியை என் காணிக்கையாக உனக்கு அளித்தேனோ அதன் தரத்தை மாத்திரம் நீ அறிந்திருப்பாயானால் இந்தப் பாவி அண்ணன் முகத்தில்கூட நீ விழித்திருக்க மாட்டாய்! நான் செய்துவிட்ட இந்தச் செயலுக்குப் பிராயச்சித்தமாக ஒரு வழியைத் தேடினேன். மாதம் மாதம் ஐந்து ரூபாயாக ஒரு வருஷகாலமாகச் சேர்க்கலானேன். அந்தத் தொகையைக் கொண்டு ஒரு நல்ல தங்கமோதிரத்தை வாங்கினேன். அதை உன் விரலில் பொருத்தியும் விட்டேன். இப்போது என் மனத்திலும் சாந்தி நிரம்பிவிட்டது'' என்று கூறி முடித்தான் ரஹ்மான்.

''அட என் அருமை அண்ணாவே! இதற்காகத்தான் இவ்வளவு மனவேதனைப் பட்டாயா? எந்த நிமிஷத்தில் உன் காணிக்கையை நான் மகிழ்வுடன் பெற்றுக்கொண்டேனோ, அதே கணத்தில் அந்தக் கணையாழி ஒரு பித்தளை மோதிரம் என்று நான் அறிந்துகொள்ளாமல் போகவில்லை. என் அண்ணன் அளித்த பரிசு, பித்தளையாக இருந்தாலென்ன? அல்லது ஓட்டாஞ்சல்லியாகத்தான் இருந்தாலென்ன? எனக்குப் போட்ட தங்க நகைகளைவிட அது மிக மிக உயர்ந்தது. இத்தனை மாதங்களாக அதை என் உயிர்போல் காப்பாற்றி வந்தேன் என்பதைத் தெரிந்துகொள். நீ என் பெரிய பாய்! உன் அன்பு ஒன்றே எனக்குப் போதும்'' நீ நல்லா இரு என்று இதமாகக் கூறிக்கொண்டே சகோதரனின் சீரடிகளைக் குனிந்து வணங்கினாள் சலீமா.

ரஹ்மானின் இதயம் பாகாய் உருகிவிட்டது. வாயடைத்துவிட்டது. நயனங்களில் பாசம் மிதக்க, நெஞ்சில் அன்பு சுரக்க அவ்விடத்தைவிட்டு அகன்றான் தமையன்.

# வெள்ளிக்கிழமை

'லுஹர்' நேரம் ஆரம்பித்ததும் குஞ்சாலி மரக்காயர் சந்திலிருந்து மசூதியின் முஅத்தினர் மினுராவின் படிக ளில் ஏறத் தொடங்கினர். உச்சியை அடைந்து இரு 'கலிமா' விரல்களைச் செவிகளின்பால் வைத்துக்கொண்டு மேற்குத் திசையை நோக்கி நின்றுகொண்டு, 'அல்லாஹு அக்பர்... அல்லாஹு அக்பர்!' என்று உரத்த குரலில் பாங்கொலியை எழுப்பி அன்றைய வெள்ளிக்கிழமை நமாஸை அறிவித்ததுதான் தாமதம், ஊரிலே ஓர் சலசலப்பு உண்டாயிற்று. பளபளப்பான குல்லாக் களையும் பஞ்சவர்ணக் கயிலிகளையும் தரித்த சாயபு மார்கள் பல்வேறு சந்துகளிலிருந்து புற்றீசல்கள் போல் கிளம்பிப் பள்ளிவாசலை நோக்கிப் புறப்பட் டார்கள். ஆலயத்தில் கூட்டம் நிரம்பியவுடன் மண்ட பத்திலே அருளொளி வீசும் அமைதி தவழ்ந்தது. 'கத்தீப்' என்று அழைக்கப்படும் இமாம் சாஹேப் 'குத்பா' உபந் நியாசத்தை முடித்தபின் தொழுகை செய்வதற்குக் கூட்டத்தினர் ஒருமுகமாக எழுந்து, வரிசை வரிசையாக ஒழுங்குடன் நின்றனர். இஸ்லாமிய சமூகத்தின் கட்டுப் பாட்டையும் ஒழுக்கத்தையும் சம அந்தஸ்துக் கொள்கை யையும் அங்கு நிலவிய சூழ்நிலை பறை சாற்றியது.

'ஜும்மா'- வெள்ளிக்கிழமை - நமாஸ் நிறைவேறியது.

சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் இந்தத் தொழுகை முடிந்த பின் இமாம் தலைமையில் ஒரு 'ஜமாத்' கூடுவது அந்த ஊரில் வழக்கமாக இருந்தது. ஊரிலே நடந்த 'லடாய்'களையும், இஸ்லாம் மார்க்கச் சட்டமான

'ஷரிஅத்'துக்குப் புறம்பாக நிகழ்ந்த நிகழ்ச்சிகளையும் விவாக சம்பந்தமான தலாக், மஹர் போன்ற விவாக ரத்து, 'கட்டணப் பணம்' ஆகிய சிக்கலான விஷயங்களையும் விசாரித்துப் பைஸல் காண்பது அந்த ஜமாத்தின் வேலையாக இருந்தது. 'சோட்டா' நியாயஸ்தலமாகவும் குட்டிப் பஞ்சாயத்தாகவும் அது பணியாற்றி வந்தது என்று சொல்லிவிடலாம்.

இந்த நல்ல முறையை ஏற்படுத்தியவர் மசூதியின் இமாம் சாஹேபாக இருந்த ஹூசேன் பாவா. அவர் வாழ்க்கையே ஒரு விநோதம். அவருடைய பூர்விகம் மர்மமாகவே இருந்தது. தம்மைப்பற்றி ஒரு தகவலையும் அவர் யாரிடமும் வெளியிட்டதில்லை. வாழ்விலே உண்டான ஏதோ அதிர்ச்சி காரணமாக யாவற்றையும் துறந்து மஸ்தானாக மாறி அவர் அங்கே வந்தாரென்று பேசிக் கொள்வார்கள். ஹூசேன் பாவா என்ற பெயர் அவர் சுயப் பெயரோ அன்றி அவருக்கு ஊரார் அளித்த நாமகரணமோ என்றுகூடப் பலருக்குத் தெரியாது. இருபது வருஷங்களுக்கு முன்பு அந்த ஊரிலே காலடி வைத்த அவர், கேட்பாரற்றுப் பாழடைந்து கிடந்த வாலாஜாபாத் நவாப் காலத்து மசூதியை யாருடைய தயவுமின்றிச் சுய முயற்சியால் செப்பனிட்டு மக்கள் பயன்படுத்தும்படி செய்த மகத்தான பணியை ஊரிலுள்ள ஒவ்வோர் ஓட்டு வீடும் புகழ்பாடும். தாம் உண்டு, தம் பள்ளி வாசல் உண்டு என்று திருப்தியுடன் எளிய வாழ்க்கை நடத்தி வந்தார் ஹூசேன் பாவா. அத்தகைய சீலரை மசூதியின் நிரந்தர இமாமாக ஊரார் ஏற்றுக்கொண்டதில் வியப்பொன்றும் இல்லை.

ஜூம்மா தொழுகை முடிந்தபின் கூட்டம் கலைந்து கொண்டிருந்த வேளையில், "பாய்மார்களே! ஒரு விண்ணப்பம்" என்று ஒரு குரல் எழுந்தது. அது வந்த திக்கை நோக்கி எல்லாருடைய கழுத்துக்களும் திரும்பின. "இன்று விடியற்காலை ஹைதர் அலி சந்தில் வசித்து வந்த நயினு முகம்மது திடீரென்று மாரடைப்பால் 'மௌத்'தாகி விட்டார். அவருடைய சவப் பெட்டியை வெளியே வைத்திருக்கிறார்கள். 'மய்யத்'துடைய (சவத்தின்) ஆத்மா விசிராந்தி

அடைய 'ஜனுஸா' தொழுகையை நடத்திச் சவத்தை நாம் அடக்கம் செய்துவிடுவோம்'' என்று சொல்லி முடித்தார் வேண்டுகோள் விடுத்தவர்.

மண்டபத்திலே நிலவி நின்ற கலகலப்புக் கரைந்தது. ஒரு பயங்கர நிச்சப்தம் அங்கே குடியேறியது. அதை ஊடுருவிக் கொண்டு பாய்ந்தது ஒரு வயோதிகக் குரல்.

''வந்திருக்கும் சவத்தை எங்கே அடக்கம் செய்வதாக உத்தேசிக்கிறீர்கள்?'' என்று பஞ்சாயத்துப் போர்டுத் தலைவரும், ஊராரின் அபிமானத்தைப் பெற்றவருமான மௌலிசாஹேப் சாவதானமாக வினவியதும் அங்கிருந்தோர் திடுக்கிட்டனர். ஒவ்வொருவருடைய இருதயத்தையும் திக் திக்கென்று கௌளி அடிக்கச் செய்துவிட்டது அந்த அசம்பாவிதக் கேள்வி.

''என்ன இப்படிக் கேட்கிறீர்கள்? எல்லாரும் அடைக்கலம் புகும் நம் மசூதிக்குப் பின்புற மிருக்கும் 'கபரஸ்தானி'ல்தான் அடக்கம் செய்யவேண்டும்'' என்றார் ஹுசேன் பாவா கலவரமடைந்தவராய்.

''இஸ்லாம் மதத்திற்கு இழிவு தேடித்தரும் ஆத்மாக்களுக்கு மசூதி மயானம் ஒதுக்கி வைக்கப்படவில்லையே, ஹுசேன் பாவா!'' என்று மௌலி சாஹேப் திருப்பிக் கூறியதும், கூட்டத்தினரிடம் உண்டான திகில் கட்டுக் கடங்காமல் போய்விட்டது.

''இந்த நயினா முகம்மது நடத்தி வந்த வாழ்க்கையை நான் நன்கு அறிவேன். நம் சமூகத்திற்குக் கேடு விளைவித்த துரோகி இவர். படுபாவி!'' என்று மண்டபமே அதிரும்படி கர்ஜித்தார் மௌலி சாஹேப். மேலும் தொடர்ந்தார், ''பாய்மார்களே! நம் இஸ்லாம் வகுத்த கோட்பாடுகளை நீங்கள் நன்முக அறிந்திருப்பீர்கள். முக்கியமாக 'நிக்காஹ்' விஷயத்தில் நம் 'ஷரிஅத்' எவ்வளவோ சலுகைகளும் உரிமைகளும் அளித்திருக்கிறது. ஒருவன் தன் மாமன் மகளையோ அத்தை மகளையோ தன் தந்தையின் சகோதரன் மகளையோ அதைப்போலவே தன் தாயின் சகோதரியின் மகளையோ கல்யாணம் செய்து

கொள்ளலாம் என்ற விதிகள் நமக்கு இருக்கின்றன அல்லவா?"

அவர் சொன்னதை ஆமோதிப்பதுபோல், நின்றிருந்தோர் சிரங்களை மேலும் கீழும் ஆட்டினார்கள்.

"இந்த 'மர்ஹூம்' (உயிர் நீத்தவர்) நயினா முகம்மது இந்த உரிமைகளை யெல்லாம் உதறித் தள்ளிவிட்டு ஒரு பைத்தியக்காரக் காரியத்தைச் செய்துவிட்டார். அவர் செய்த பாவச்செயலைச் சொல்ல என் நாக்குப் புரளக்கூட மறுக்கிறது தம் ரத்தமே நரம்புகளில் பாய்ந்தோடும் உடன் பிறந்த அண்ணன் மகளையே இவர் மணம் செய்து கொண்டார். என்ன கேவலம்! என்ன மானக்கேடு!"

"தோபா தோபா!" என்று சொல்லிக் கன்னங்களில் அடித்துக்கொண்டு தங்கள் வெறுப்பைக் காட்டினர் குழுமி நின்றோர்.

"பதற்றம் வேண்டாம், மௌலவி சாஹேப். விஷயம் சாதாரணமானதல்ல. தீர விசாரிக்க வேண்டும். நடந்ததை விளங்கச் சொல்லுங்கள்" என்று ஹுசேன் பாவா வேண்டினார்.

"நயினா முகம்மதும் அவருடைய சகோதரர் மஸ்தான் ஷெரீபும் என் ஊர்க்காரர்கள்தாம். மஸ்தான் ஷெரீப் கல்யாணப் பந்தலில் 'புலவு'ச் சோறு சாப்பிட்டவன் நான். நல்ல செல்வாக்குள்ள பிரமுகரின் மகள்தான் அவருக்குப் பீவியாகக் கிடைத்தாள். தம்பதிகள் சந்தோஷமாக வாழ்ந்து வந்ததும் எனக்குத் தெரியும். நிக்காஹ் ஆன அதே வருஷக் கடைசியில் மஸ்தான் ஷெரீப் அக்கரைக்குச் சென்றுவிட்டார். அப்போது அவர் பீவிக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. ஆறு வருஷங்கள் கழிந்தபின் மஸ்தான் ஷெரீப் ஊர் திரும்பினார். பலசரக்குக் கடையை உள்ளூரிலே ஆரம்பித்து, பத்தாவது வருஷத்தைத் தள்ளிக் கொண்டிருந்த சமயத்திலே, நயினா முகம்மது ஊரிலே தலையைக் காட்டினார். தம்பியைத் தம் வீட்டிலே இருக்கச் செய்தார் மஸ்தான் ஷெரீப். கேட்டதெல்லாம் கொடுத்து அன்போடு நடத்தினார். அப்படிப்பட்ட உத்தமரான

அண்ணன் முகத்திலே கொதிக்கிற தாரைப் பூசிவிட்டார் நயினு முகம்மது. தம் அண்ணனின் மகளேயே கடத்திச் சென்றுவிட்டார். முதலில் விஷயம் விளங்கவில்லை. ஆனால் அதன்பின் அவர் அவளேயே நிக்காஹ் செய்துகொண்டு மஞ்சத்திற்குத் தம் துணைவியாக மாற்றியதைக் கேட்டு ஊர் திடுக்கிட்டது. தம்பி பாய்ச்சிய கோடாலி அண்ணன் நெஞ்சைப் பிளந்துவிட்டது. அவமானத்தையும் ஏளனத்தையும் தாள முடியாமல் மஸ்தான் ஷெரீப் மனமொடிந்து மௌத்தாகிவிட்டார். இது நிகழ்ந்து பல வருஷங்களுக்குப் பிறகு இரண்டு வாரத்திற்கு முன்னால்தான் அதே நயினு முகம்மதை இந்த ஊரிலே பார்த்தேன். ஹைதர் அலி சந்திலே தையற்கடை வைத்திருந்ததைக் கண்டேன். அவர் மாரடைப்பால் மாண்டதற்கு அல்லாஹுத்தாலாவின் தண்டனேயே காரணம்'' என்று முடித்தார் மௌலவி சாஹேப்.

''மௌலவி சாஹேப்! ரம்ஜான் பிறையை ஒருவர் கண்ணாரக் கண்டும், அதைப் பார்த்ததாகக் கூறும் மற்ற இரு சாட்சியங்கள் வேண்டும் என்று நம்'ஷரிஅத்' வற்புறுத்துகின்றதல்லவா? தங்களேத் தவிர வேறு சாட்சி ஏதாவது உண்டா?'' என்றார் ஹுசேன் பாவா.

''தற்சமயம் இல்லை. ஆனால் நான் சொல்வது உண்மையென்று ஆண்டவனின் இந்த இருப்பிடத்திலே, ஜமாத் எதிரிலே, திருக்குரானைக் கையிலே எடுத்துச் சொல்லத் தயார்'' என்று குமுறினார் மௌலவி சாஹேப்.

மௌனமாக ஸ்தம்பித்து நின்றுகொண்டிருந்த கூட்டத்தின்மீது பார்வையைத் திருப்பினார் ஹுசேன் பாவா.

''நானே மரூதி இமாம். கடமையைச் சரிவர நிறைவேற்றுவது என் பொறுப்பாகும். நயினு முகம்மதின் வீட்டிற்குச் சென்று விசாரித்து வருகிறேன். யாரும் என்னைப் பின்தொடர வேண்டாம்'' என்று இதமாக நவின்று நகர்ந்தார்.

சோகக் கடலிலே மூழ்கிக் கிடந்த நயினுமுகம்மதின் வீட்டின் வாசற் கதவை மெதுவாகத் தட்டினார் ஹுசேன் பாவா. நெஞ்சை உலுக்கிவிடும் வேதனைக்குரல் உள்ளிருந்து வெளிக் கிளம்பியது. அதைத் தொடர்ந்து, தாழ்ப்பாளின் ஒலி எழுந்தது. கதவைப் பாதியாகத் திறந்து கொண்டு சோகமே உருவெடுத்தாற்போல் அலங்கோலமாகக் காட்சி அளித்த பெண்ணின் துயர ரேகைகள் படர்ந்த முகத்தை ஹுசேன் பாவா தற்செயலாகக் கண்டதும், ஏதோ ஒரு பளுவான வஸ்து தம் உடலை ஊடுருவிக் கொண்டு உள்ளத்தைத் தாக்கியதுபோல் பிரமைகொண்டு செயலற்று நின்றுவிட்டார்.

"அம்மா, நான் உள்ளூர் இமாம். தங்களுக்கு நேர்ந்த துக்கத்தை அறிந்தேன். என் அநுதாபம். ஒரு முக்கியமான விஷயத்தைப்பற்றிப் பேச வந்தேன்" என்றார் ஹுசேன் பாவா.

"ஹஸரத்! என் கருவமணி அறுந்து போச்சு. ஏதாவது கேட்க வேண்டுமானால் என் தாயிடம் பேசிக்கொள்ளுங்கள்" என்று சொல்லிக் குலுங்கக் குலுங்க அழுதாள் அந்தப் பெண். இளநெஞ்சிலுள்ள துயரப் பிழம்பை உருவாக்கிக் காட்டிய அந்தச் சொற்கள் ஹுசேன் பாவாவின் இருதயத்தில் சுரீலென்று தைத்தன.

"தங்கள் தாயார்...இங்கேதான்...?' என்று தயங்கித் தயங்கிக் கேட்டார் அவர்.

"உள்ளே படுத்த படுக்கையாக இருக்கிறார்கள். போய்ப் பேசுங்கள்" என்று சொல்லி இரு கதவுகளையும் நன்றாகத் திறந்து உள்ளே மறைந்தாள் அந்த விதவை.

திரைச்சீலையாகத் தொங்கிக்கொண்டிருந்த கோணிப் படுதாவை விலக்கிக்கொண்டு பிரவேசித்தார் ஹுசேன் பாவா. கறையான்மண் படிந்த பனைமரத்தூணை ஒட்டினாற்போல் கிடந்த கயிற்றுக் கட்டிலில் எலும்பும் தோலுமாகக் காட்சி அளித்தாள் ஒரு கிழவி.

"அம்மா, நான் உள்ளூர் மசூதி இமாம். தங்கள் மாப்பிள்ளையின் 'மய்யத்' மயானத்திற்குச் சற்று முன்தான்

வந்தது. அங்கே அதை அடக்கம் செய்யச் சிலர் தடையாக நிற்கிறார்கள். தன் அண்ணன் மகளையே நயினா முகம்மது 'நிக்காஹ்' செய்ததாக உங்கள் ஊர்வாசியே பலமாகச் சாதிக்கிறார். உண்மையை அறிந்துபோக வந்தேன்'' என்றார் ஹுசேன் பாவா.

ஆடாதோடைக் குச்சிபோன்ற திராணியற்ற கரங்களினால் கட்டிலின் ஓரச் சட்டங்களைப் பிடித்துக் கொண்டு முதுகை நிமிர்த்து உட்கார்ந்தாள் கிழவி. அவள் குறுநுதலில் ஆழ்ந்து பதிந்திருந்த சுருக்கங்கள் நெளிந்தன.

''ஹஸரத்! நடந்ததைக் கேளுங்கள். ஊருக்கு நாட்டாண்மைக்காரராக இருந்தார் என் வாப்பா. அவர் செய்த மணிலாக்கொட்டை வியாபாரத்திலே ஏஜண்டாக வேலை செய்து வந்தார் மஸ்தான் ஷெரீப். அவரை எனக்கு நிக்காஹ் செய்து வைத்தார்கள். கல்யாணமாகி அதே வருஷக் கடைசியில் வியாபார சம்பந்தமாக அவரை அக்கரைக்கு என் வாப்பா அனுப்பும்படியாகிவிட்டது. அப்போது நான் கர்ப்பவதி. அவர் மலாய் நாட்டிலே இருந்தபோது எனக்கு ஒரு பெண் பிறந்தாள். ஆறு வருஷத்திற்கப்புறம் அவர் இந்தச் சீமைக்குத் திரும்பினார். ஊரிலே பலசரக்குக் கடையைத் திறந்தார். பத்தாவது வருஷம் ஓடுகிற சமயத்திலே எங்கேங்கேயோ போய் அலைந்துவந்த தம் தம்பி நயினா முகம்மதைத் தம் கடைக்கு ஒத்தாசையாக இருப்பாரென்று எண்ணி வீட்டிலே வைத்துக்கொண்டார். நயினா முகம்மதுடன் நேரில் பழகிய பிறகுதான் அவர் தங்கமானவர் என்று நான் தெரிந்துகொண்டேன். ஒரு பொய் சொல்லமாட்டார். யார் மனசையும் நோக வைக்கமாட்டார். அப்படிப்பட்டவர் ஆயிரத்தில் ஒருவர் தாம் இருப்பார். ஹஸரத்! அவருடன் இன்னும் நெருங்கிய பிணைப்பு உண்டாக்கிவிட நான் நினைத்தபோது, தம்பிக்கு நல்ல இடத்தில் முடிச்சுப்போட்டுத் தனிக் குடித்தனம் அவர் நடத்துவதற்கு அண்ணன் ஏற்பாடுகள் செய்தார். அதைக் கண்டு என் மனம் சஞ்சலித்தது. அந்த நேரத்திலேதான் நான் ஒரு காரியம் துணிவாகச் செய்துவிட்

டேன். பதினாறு வருஷங்களாக என் நெஞ்சிலே தீப் பொறிகளைத் தெறித்துக்கொண்டிருந்த விஷயத்தை நயினா முகம்மது காதிலே போட்டேன். என் அந்தரங்க விருப்பத்தையும் சொன்னேன். அந்த உத்தமர் சம்மதித்துவிட்டார். என் பெண்ணை அழைத்துச் செல்வதற்கும் அவளை அவர் நிக்காஹ் செய்துகொள்வதற்கும் நான் உடந்தையாக இருந்தேன். இது நிசந்தான். ஹஸரத்!'' என்று சொல்லிக் கழுத்தை வெடுக் வெடுக்கென்று நெரித்து ஆழ்ந்த யோசனையில் மூழ்கிவிட்டாள் கிழவி.

''அம்மா! இதுதான் நான் வேண்டியது. நான் வருகிறேன்'' என்று விடை பெற்றுக்கொண்டு, குல்லாவை எடுத்து வழுக்கைத் தலையை மேல்துண்டினால் துடைத்தார் ஹுசேன் பாவா.

''பாதிக் கதையைத்தான் நீங்கள் கேட்டீர்கள், ஹஸரத்!' என்று கிழவி சொன்னதும் ஹுசேன் பாவா திடுக்கிட்டார்.

''நயினா முகம்மது செய்த காரியத்துக்கு நான் ஏன் ஊதுவத்தி கொளுத்தி வைத்தேன் என்று நீங்கள் கேட்பதில் நியாயமுண்டு'' என்று சொல்லித் தொடர்ந்தாள் கிழவி: ''என் புருஷர் மலேயாவில் தங்கியிருந்த சமயத்தில் நான் கர்ப்பவதியாக இருந்தேன் என்று உங்களுக்கு முன்பே சொன்னேன் அல்லவா? அந்தச் சந்தோஷச் செய்தியைக் கேட்ட அவர் வாரந்தோறும் கடிதம் எழுதத் தவறமாட்டார். என் உடம்பைப்பற்றிக் கவலையையும், பிறக்கப் போகும் குழந்தையைக் குறித்து மகிழ்ச்சியையும் ஒவ்வொரு கடிதமும் சொல்லிற்று. குழந்தை பிறப்பதற்கு முன்பே ஜப்பான் விளையாட்டுச் சாமான்களையும், சீனா சில்க் துணிமணிகளையும் வாரி வாரி அனுப்பிக்கொண்டிருந்தார். எவ்வளவு ஆசை இருந்தது, பாருங்கள்!

என் முதல் பிரசவமாதலால், அதை நல்ல முறையில் நடத்த என்னை வேலூருக்கு அழைத்துச் சென்று ஆஸ்பத்திரியில் சேர்த்தார் என் வாப்பா. கடையைக் கவனிக்க ஆள் இல்லாததால் அம்மாவை என்னிடம் விட்டு அவர்

உடனே ஊருக்குத் திரும்பினார். அப்புறம் நடந்த விபரீதத்தைக் கேளுங்கள், ஹஸரத்!

பிரசவம் என் உயிருக்கே உலை வைக்க இருந்தது வயிற்றைக் கீறிக் குழந்தையை எடுக்கும்படி நேர்ந்தது' பெண் குழந்தையும் செத்துப் பிறந்தது.

"'நீ உயிர் தப்பினது ஆச்சரியம். ஆபரேஷன் செய்திருக்காவிட்டால் நிலைமை மோசமாகப் போயிருக்கும். அது செய்தபோது துரதிருஷ்டவசமாக ஏதோ கோளாறு நடந்துவிட்டது. இனிமேல் நீ கர்ப்பம் தரிக்கமாட்டாய்' என்று டாக்டர் சொன்னதும் என் தலையில் ஆஸ்பத்திரியே இடிந்து விழுந்துவிட்டது. பிறந்த குழந்தையும் மாண்டது. இப்போது என் தாய்மையும் நசுங்கியது. இந்தச் சமாசாரம் அவர் காதுக்கு எட்டினால், மூர்க்கராகிய அவர் என்னைக் கைவிடத் தயங்கமாட்டார். அப்படித் 'தலாக்'(விவாகரத்து) கொடுக்காவிட்டாலும், சக்களத்தி ஒருத்தியை என் வீட்டில் கும்மாளம் போட வைத்துவிடுவார். இந்த மாதிரி எண்ணமெல்லாம் என் குலையை நடுங்கச் செய்தன. என் அம்மாவைக் கட்டிக்கொண்டு ஓவென்று கதறி அழுதேன். அந்தச் சமயத்திலே ஓர் அதிசயம் நடந்தது, ஹஸ்ரத்! 'குழந்தை போனதை எண்ணி நீ அழுகிறாய். என் குழந்தை ஏன் உயிரோடிருக்கிறது என்று நான் கண்ணீர் சிந்துகிறேன். என் கதையைக் கேள்' என்று என் பக்கத்துக் கட்டிலில் கிடந்தவள் சொன்னதும் என் நெஞ்சு திக்கென்றது.

அந்த அபலையின் கதை இதுதான். 'பாலக்' (புஷ்பவதியாகி) ஆகிப் பூப் போட்டவுடன் கௌரவமான குடும்பத்துப் பையனை தேடி அலைந்தார் அவள் வாப்பா. நல்ல இடங்கள் சில வந்தும் அவர் சிரத்தை காட்டவில்லை. இப்படியே இரண்டு வருஷங்கள் வீணாயின. அந்தச் சமயத்தில் ஒரு வாலிபன் மூட்டை முடிச்சுடன் அவள் வீட்டிற்கு வந்து சேர்ந்தான். 'இந்தப் பையன் பெரிய இடத்துப் பிள்ளை. நம் உறவுகூட. என் மானம் கப்பலேறும் போதெல்லாம் இவன் அப்பன் எனக்கு உதவி செய்திருக்கிறான். வந்தவனை நன்றாக நடத்தி அனுப்பவேண்டும்' என்றார் வாப்பா.

ஒரு மாதத்திற்குள்ளே அந்த வாலிபன் அவள் பெற்ரோரின் அன்பைப் பெற்றுவிட்டான். வீட்டில் இருந்த வயது வந்த பெண்ணுடன் நெருங்கிப் பழகுவதைக்கூட அவர்கள் கண்டிக்காதபடி நாஸூக்காகப் பழகிவிட்டான். அவன் குஷிப்பேர்வழி. சதாகாலமும் கலகலப்பாக இருப்பான். கண்டம் வந்தது ஓர் நாள்! அவள் தாய் அடுத்த தெருவிற்குப் போயிருந்தாள். தந்தை கடையில் இருந்தார். தடதடவென்று யாரோ கதவை இடித்தார்கள். அன்னை திரும்பி வந்து விட்டாள் என்று எண்ணி அந்தப் பேதை கதவைத் திறந்தாள். அங்கே அந்த வாலிபன் நிற்பதைக் கண்டதும் அவளுக்கு என்னவோபோல் இருந்தது. அவனிடமிருந்து 'பக்' கென்று வந்த அத்தரின் சுகந்தம் அவளை மயக்கமடையச் செய்தது. புழைக்கடைப் பக்கம் நழுவி விட முயன்ருள்.

"உனக்கு ஒரு ஜோரான பரிசு கொண்டு வந்திருக்கிறேன். வாங்கிக்கொள்" என்று சிரித்துக்கொண்டே அவள் தளிர்க் கரங்களை வெடுக்கென்று பிடித்தான் அவன். வளையல்களை மாட்டினன். வனிதையின் உடல் பதறியது. திணறினுள். பெரியவர்கள் இல்லத்தில் இல்லாத வேளையில் அந்நிய புருஷனுடன் பேசுவதே தப்பு. அதிலும், அந்த ஆண்மகன் தாறுமாருக நடந்துகொண்ட விதம் அவள் இருதயத்தைப் படபடக்கச் செய்தது. தலை கிறுகிறுத்தது. யாவும் சுழல்வதுபோல் பிரமை உண்டாயிற்று. தடுமாறிச் சாய்ந்த அவளை மார்போடு தாங்கிக் கொண்டான் அந்தப் பொல்லாத போக்கிரி! 'நாம் இரண்டு பேரும் இப்படி ஆனந்தமாகக் கழிக்க இந்த நேரம் நமக்காக ஒதுங்கி நின்றதைப் பார்த்தாயா? நீ அதிருஷ்டக்காரி!" என்று கூறிக்கொண்டே அணைப்பை இறுக்கினன். அவள் செவிகளைத் திருகித் திருகி வேடிக்கை பார்த்தன அவன் விரல்கள். கூந்தல் சரிவிலே கன்னங்கள் ஈரமாயின. உதடுகள் உறவாடின. பிறந்த நாள்முதல் அநுபவித்தறியாத ஓர் போதை தரும் உணர்ச்சி அந்தப் பேதையிடம் குபீரென்று எழுந்தது. குருதி ஓட்டத்தின் பீறிட்டெழுச்சியினுல் ஒவ்வொரு நரம்பும் வெடித்துவிடும் போல் இருந்தது. கால்கள் மரத்துவிட்டன. கண்களில் அந்த

காரம் சூழ்ந்தது. காலம் சென்றது. கனவுபோல் ஆகியது. மங்கிய அவள் பார்வைக்கு, சுற்றி நின்ற பொருள்கள் கலங்கித் தென்பட்டன. பிடியை உதறிக்கொண்டு துள்ளிக் குதித்தாள். தன்முன் நிற்பவனின் கழுத்தை நெரித்துவிட அவள் கரங்கள் துடித்தன. "அட மானங் கெட்டவனே! நயவஞ்சக பத்மாஷ்! சீ, போ வெளியே!" என்று ஆவேசத்துடன் கதறி, அவன் முகத்திலே காறி உமிழ்ந்தாள். "அட பைத்தியக்காரப் பெண்ணே! இந்த மாதிரி ஏசினதும் துப்பினதும் நீ ஏழாவது குட்டி" என்று சொல்லி, நச்சுச் சிரிப்பை எழுப்பி மறைந்தான் அவன். அறைக்குள் ஓடினுள் அந்தப் பேதை. வறுநிலத்தில் வீழ்ந்த இடிபோல் தொப்பென்று கட்டிலில் சாய்ந்தாள். ஓவென்று நெஞ்சு உடைந்துவிடும்படி விக்கி விக்கி அழுதாள். ஆறு மாதங்களுக்குப் பிறகு ஆறடித் தாம்புக் கயிற்றையும் ஆணித்தரமான உத்தரத்தையும் தேடி அலைந்தாள். ஒரு பாவமும் புரியாததும், இந்த உலகத்திலே தலைகாட்டாததுமான ஜீவனையும் தன்னோடு சேர்த்துப் பலியாக்க அவள் மனச்சாட்சி தடையாக நின்றது. இர வோடு இரவாக வீட்டையும் ஊரையும் விட்டு ஓடினுள். ஒளிந்து ஒளிந்து வாழ்ந்தாள். ஒண்ணுபுரத்தில் ஓலைப் பாய்களை முடைந்தாள் ஒரு மாதம். போளூரில் பீடிகளைச் சுருட்டிப் பிழைத்தாள் பல நாட்கள்.

"கடைசியிலே நான் இங்கே தஞ்சமடைந்தேன். மூன்று நாட்களுக்கு முன் இந்தப் பாவி பெற்ற பெண் குழந்தையின் குவா குவா சிரிப்பை நீங்கள் கேட்டிருப் பீர்கள். தத்தி விளையாடும் இந்தக் கிளிக் குஞ்சு என் பொருள்தான். ஆனுல் உலகத்துக்கும் சமூகத்துக்கும் இது கருடன்தானே, அக்கா. உங்களுக்கு வேண்டுமானுல் இந்தக் கொழுந்தை என்னிடமிருந்து பறித்துக்கொள் ளுங்கள்" என்று சொல்லி என் காலடிகளைப் பிடித்துக் கெஞ்சினுள். வெகு நேரம் யோசித்தபின் என் தாய் சம்மதித்துவிட்டாள்" என்று கூறிக் கிழவி நெடுமூச் செறிந்தாள்.

நெறிகெட்டு வாழ்ந்தவளின் துயரக் கதை ஹுசேன் பாவாவின் நெஞ்சின் கனத்தை அதிகப்படுத்தியது.

''குழந்தையை எடுத்துக்கொண்டு ஊருக்குத் திரும்பினோம். நடந்ததை யாருக்கும் தெரியாமல் மறைத்துவிட்டோம். ஆறு வருஷங்களுக்குப் பிறகு திரும்பிய அவரையும் சந்தேகிக்காத வண்ணம் பசப்புப் பேச்சால் மயக்கிவிட்டேன். பத்து வருஷங்களுக்குப் பிறகு நயினா முகம்மதுடன் அந்தப் பெண் சென்ற பிறகும், உண்மையை அவரிடமிருந்து மறைத்துத்தான் வைத்தேன். கடைசி நாட்களிலே சுழலைக் கிளப்பி, எனக்கும் அவருக்கும் மனஸ்தாபம் உண்டாக்கி, ஊரார் பழிக்கவும் ஏளனம் செய்யவும் குடும்பத்தைச் சீரழிக்கவும் நான் துணியவில்லை, ஹஸரத்'' என்று சொல்லி முடித்தாள் கிழவி.

ஹுசேன் பாவாவின் சிந்தனையில் எண்ணிறந்த நிகழ்ச்சிகள் மின்னித் தெறித்தன.

''அம்மா, தாங்கள் எல்லாவற்றையும் சொன்னீர்கள். அந்தப் பெண் தங்கள் கணவரின் மகள்தான் என்று மக்களின் மன்றம் வாதாடினால் என்ன செய்வது?'' என்றார் ஹுசேன் பாவா, கைகளைப் பிசைந்துகொண்டு.

கிழவி சிறிது நேரம் மௌனம் சாதித்தாள்.

''ஹஸீனா, ஹஸீனா!'' என்று கூப்பிட்டாள்.

அந்தப் பெயரைச் செவிமடுத்த ஹுசேன் பாவா கருந்தேள் கொட்டினவர்போல் திணறிப்போனார். ''ஹஸீனா! நீங்கள் யாரைக் கூப்பிடுகிறீர்கள்?'' என்று தம்மையும் அறியாது சொற்களைக் கொட்டிவிட்டார்!

''ஹஸரத்! அந்தப் பெண்ணுக்கு அவள் தாயின் பெயரைத்தான் வைத்தோம்'' என்று சொல்லிவிட்டு, ''பரண்மேல் இருக்கும் அந்தப் பெட்டியை எடுத்துக் கொடு, ஹஸீனா'' என்றாள் கிழவி.

பெட்டியைத் திறந்து அதில் இருந்த தாவணிகளை அகற்றி அடியில் கசங்கிக் கிடந்த அட்டை யொன்றை வெளியே எடுத்தாள் கிழவி.

''ஹஸரத்! ஆஸ்பத்திரியிலே குழந்தையை எனக்குக் கொடுத்துவிட்டு அந்த அபாக்கியவதி மறைந்தவுடனே,

அவள் கட்டிலுக்கு மேலே சுவரில் தொங்கிக்கொண் டிருந்தது இந்த அட்டை. இதிலேதான் டாக்டரும் மருத்துவச்சிகளும் தினமும் வந்து ஏதோ எழுதுவார்கள். எனக்கு நல்ல ஞாபகம் இருக்கிறது. என்ன காரணத்திற்கோ எனக்குத் தெரியாது. யாரும் இல்லாத நேரத்திலே இந்த அட்டையை எடுத்து ஒளித்துவைத்தாள் என் தாய். 'பிற்காலத்திலே இது உனக்கு உதவினாலும் உதவலாம். எதற்கும் பத்திரமாக வைத்துக்கொள்' என்றாள், படிப்பு வாசனை இல்லாத அவள். ஆனால் கெட்டிக்காரி, உலக மறிந்தவள். ஹஸரத்!'' என்று கூறி அந்த அட்டையை ஹுசேன் பாவாவிடம் கொடுத்தாள் அந்தக் கிழவி.

அதை வாங்கிக்கொள்ளும்போதே ஹுசேன் பாவாவின் கைகள் நடுங்கின. களம்பூர் என்ற ஊரின் பெயரை அதில் கண்டதும் அவர் நெஞ்சு படபடத்தது. அதற்குக் கீழே 'ஹஸீனாபீ-பதினாறு வயசு-முதல் பிரசவ கேஸ்' என்று குறிப்பிட்டிருந்ததைப் பார்த்ததும் அவர் முக பாவம் அடியோடு மாறிவிட்டது. நினைவு நாகங்கள் படமெடுத்து ஆடின. இருதயப் படப்படப்பு ஓங்காரமிட்டது. இமைகளை இறுக மூடிக்கொண்டார். இறுதி விடைபெற்று உடனே நகர்ந்தார்.

''பாய்மார்களே! போய்வந்தேன். இங்கே வந்துள்ள சவத்தை நம் கபரஸ்தானிலே அடக்கம் செய்வதுதான் என் முடிவாகும். நயினா முகம்மது நிக்காஹ் செய்துகொண்டது அவர் அண்ணன் மகளையும் அல்ல. அண்ணியின் மகளையும் அல்ல'' என்று ஹுசேன் பாவா சொன்னதும் கூட்டத்தினர் வாயடைத்து நின்றனர்.

''பின் எவன் மகளாம்?'' என்று சீறினார் மௌலவி சாஹேப்.

''அந்தக் கதையைச் சொல்லமுடியாத நிலைமையில் இருக்கிறேன்.''

''இமாம் சாஹேப்! இஸ்லாமிய ஷரிஅத்துகளைத் தூஷித்துத் தங்கள் இஷ்டம்போல் நடக்கப் பார்க்கிறீர்கள். தாங்கள் ஜமாத் முன் நின்று ஜவாப் சொல்லுகிறீர்கள் என்பதை மறந்துவிடாதீர்கள்!''

மருட்சி தோய்ந்த கண்களைச் சுற்றுமுற்றும் திருப்பினார் ஹுசேன் பாவா. "பாய்மார்களே! கடந்த இருபது வருஷகாலமாக என் தீர்ப்பைக் கேட்டு நடந்து வந்த நீங்கள் இந்த ஒரு விஷயத்திலும் என் முடிவை ஏற்றுக் கொள்ளுங்கள். இதுவே என் கடைசி வேண்டுகோள்" என்று கெஞ்சினார் மனமொடிந்தவராய். அவர் தோற்றம் பார்ப்பதற்குப் பரிதாபமாக இருந்தது.

"இது நடக்காத காரியம். இவ்வளவு நாங்கள் சொல்லியும் 'ஹராம்' செய்தவனை இந்தப் புனித இடத்தில் புதைப்பீர்களானால் நாங்கள் எல்லாரும் இப்போதே வெளியேறி விடுகிறோம். இனி நீங்கள் எங்கள் தலைவரும் அல்ல, இமாமும் அல்ல, முஸல்மானும் அல்ல" என்று ரௌத்திராகாரமாய்க் கர்ஜித்தார் மௌல்வி சாஹேப். அவர் அவ்விடத்தை விட்டு அகன்றவுடன், சவப் பெட்டியைத் தூக்கி வந்த நால்வரைத் தவிர, மற்ற எல்லாரும் அவரைத் தொடர்ந்து சென்றுவிட்டார்கள்.

மிக்க சோர்வடைந்தவர்போல் காணப்பட்டார் ஹுசேன் பாவா. கவலையின் கோர நிழல் அவர் வதனத்தில் தாண்டவமாடியது. நெற்றியின் வேர்வை கண் இமைகளில் சொட்டியது. மசூதிக்குள் நுழைந்தார். மண்டியிட்டு உட்கார்ந்து, கைகளை மேலே தூக்கி, "யா அல்லாஹ்! யா அல்லாஹ்! நான் புரிந்த சாகச லீலைகளுக்கு ஆண்மையை இழக்கும்படி முன்பே தண்டித்துவிட்டாய். இப்போது, பெற்ற மகளை இந்தப் பாவக் கண்களாலே பார்க்கச் செய்துவிட்டாய். எந்தக் கரங்களினால் பாவையர்களைத் தீண்டிப் பாதகங்கள் புரிந்தேனோ, அதே கைகளால் என் மருமகன்மீது மண்ணைப்போடச் செய்துவிட்டாய். நன்றி. இருபது வருஷங்களாக உன்னிடம் அடைக்கலம் புகுந்த இந்தப் பாவியை இனியாவது மன்னித்துவிடு" என்றார் உணர்ச்சியோடு. நாத் தழுதழுத்தது. பீறிட்டெழுந்த கண்ணீர் பொலபொலவென்று கன்னங்களில் சிதறி ஓடியது. கண்கள் இருண்டன. கால்கள் தள்ளாடின. தலை தொங்கித் தொங்கி வீழ்ந்தது.

சவப்பெட்டியைத் தூக்கிக்கொண்டார்கள், எஞ்சி நின்ற நால்வர்.

"பாய்மார்களே! பெரும்பாலோர் விரும்பாததை எதிர்த்துச் செய்வது உசிதமல்ல. இந்தக் கபரஸ்தான் (மயானம்) வேண்டாம். பாலாற்றங்கரை இருக்கவே இருக்கிறது; புறப்படுங்கள்" என்றார் அவர், ஜீவனற்ற குரலில்.

சவப்பெட்டி முன்செல்ல, கவிழ்ந்த தலையுடன் அதன் பின்னால் தள்ளாடிய வண்ணம் சென்றுகொண்டிருந்தார் ஹுசேன் பாவா.

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
அவ்வை
தி.க. சண்முகம் நூலகம்.
தமிழியல் துறை

## ஆசிரியர்

முஸ்லிம் குடும்பங்களில் நிகழும் பல சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டு உள்ளத்தைத் தொடும் வகையில் கதைகளைப் படைத்துப் புகழ் பெற்றுவிட்டார் 'ஜமீலா'. தமிழ் நாட்டுப் பிரபல பத்திரிகைகளில் அடிக்கடி இவருடைய கதைகள் வெளியாகின்றன. கலைமகள், கல்கி பத்திரிகைகள் நடத்திய சிறுகதைப் போட்டிகளில் பரிசு பெற்றவர். சரளமான தமிழ் நடையும் சம்பவங்களை அடுக்கிச் செல்லும் திறனும் பாத்திரங்களின் குணசித்திரமும் இவருடைய கதைகளுக்குச் சிறப்பைத் தருகின்றன.

# இலக்கியச் சோலையில் பூத்த நறுமலர்கள்

**காஞ்சனை** - புதுமைப்பித்தன் ரூ. 2 00

புதுமைப்பித்தன் தம் கதைகளின் மூலம் சிரஞ்சீவி யாகிவிட்டவர். அவருடைய கதைகளிலே கல் உயிர்பெற்று மனிதத் தன்மை அடைந்துவிடும். மூட்டைப் பூச்சிகள், 'அபிவாதயே' சொல்லும். பேய்கள் வந்து உறவாடும். கடவுளே நாட்டியம் பார்க்க மாறு வேஷத்தில் வருவார். உலக சிருஷ்டி எவ்வளவு விரிந்ததோ அத்தனை மன விரிவும் உரமும் படைத்தவர் இவர். இவருடைய கதைத் தொகுதி தான் இது.

**புனர் ஜன்மம்** - கு. ப. ரா. ரூ. 2 00

நாசுக்கான நடை, லலிதமான நோக்கு, ரஞ்சக மான கதை—இவற்றையெல்லாம் கலந்து வாசகர் களின் உள்ளத்தை மயக்குவதில் வல்லவர் கு. ப. ரா. அவருடைய அருமையான 26 கதைகள் அடங்கிய தொகுதி.

**ஸரஸாவின் பொம்மை** -
சி. சு. செல்லப்பா ரூ. 2 00

சிறுகதையே ஒரு ரஸத் துணுக்கு. அதை எவ் வளவு தீவிரமாகவும் எவ்வளவு சக்தியுள்ளதாகவும் எழுத முடிகிறதோ அதில்தான் வெற்றி இருக்கிறது. சிறிதைப் பெரிதாக்குவதும் நிமிஷத்தை நித்திய மாக்குவதுந்தான் சிறுகதையின் வேலை. அத்தகைய உயர்ந்த சிறுகதைகள் அடங்கிய தொகுதிதான் இது.

**மோகினி** - ந. பிச்சமூர்த்தி ரூ. 2 00

காவியச் சுவை, கற்பனை வளம், கதைப் போக்குடன் செல்லும் அழகிய வர்ணனைகள் எல்லாம் நிறைந்த பதினெட்டு அற்புதமான சிறுகதைகள்.

**கலைமகள் காரியாலயம், மயிலாப்பூர், சென்னை-4.**